
பூந்தென்றலே
பூமாலையாக வா!
என்.சீதாலெட்சுமி
பூந்தென்றலே
பூமாலையாக வா
என்.சீதாலெட்

## முன்னுரை

என் இனிய வாசகர்களே,

''கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றும் கொல்லோ உலகு.''

எனும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, எந்தவொரு பிரதிபலனும் எதிர்பாராது, என் போன்ற வளரும் எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் புத்தக வடிவமாக்கி ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கும் 'அருணோதயம்' திரு. அருணன் ஐயா அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என் கண் முன்னே நடக்கும் சில சம்பவங்களை எழுத்து வடிவமாக்க ஆசைப்பட்டு எழுதத் தொடங்கிய நான், வாசகர்களாகிய உங்களின் பேராதரவினால் தொடர்ந்து எழுத, உந்தப்பட்டு, இதோ எனது பத்தாவது நாவல் உங்களின் கைகளில் தவழ்கிறது. நீங்கள் எனக்கு அளித்து வரும் ஆதரவிற்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

என் எழுத்துக்களை மேலும் மெருகூட்ட, அதில் உள்ள குறை/ நிறைகளை அருணோதயம் முகவரிக்கு அனுப்புமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

என்றும் அன்புடன்
**- என்.சீதாலெட்சுமி**

# பூந்தென்றலே பூமாலையாக வா!



## 1

* வெள்ளகவி *

''வந்து உதித்தாய் ராமா நீ, கௌசலை தன் திரு மகனாய்,
சிந்துமொழி சிறுகாலை, திசை எங்கும் புலர்கிறது!
மந்திரங்கள் வாய் மொழிந்து, வந்தனைகள் புரிந்து அருள,
செந்திரு கண் அருள் பொழிய, வேங்கடவா எழுந்தருள்வாய்!''

உலகை வழிநடத்தும் வேங்கடவனின் அருளைப் பெற, உலகம் அவனைப் பாடலால் எழுப்பிக் கொண்டிருந்த காலை வேளையில், அந்த கீதம் ஊட்டிய பக்தியை நுகர்ந்தபடி, வெள்ளகவியில் (கொடைக்கானல்

அருகே இருக்கும் சிறு மலை கிராமம்) வாசம் செய்யும் வேங்கடவனின் திரு அகத்தின் வாயிலை, சுத்தமாக பெருக்கிக் கொண்டிருந்தாள் தென்றல்.

''அம்மா, தென்றல்! பெருமாளுக்கு அபிஷேகம் ஆரம்பிக்கும் முன்னர் வாசலில் ஒரு கோலம் போட்டு விடுமா'' என அர்ச்சகர் கூற, அதன் அவசரத்தை உணர்ந்து ''இதோ, ரெண்டே நிமிஷத்தில போட்டுடுறேன், சாமி'' என்ற தென்றல் வேலையில் கவனமானாள்.

ஐந்து நிமிடங்களில், குப்பைகளைத் திரட்டி குப்பைக் கூடையில் போட்டவள், சாணம் கரைத்த நீர் தெளித்து வாசலை மொழுகி, திருத்தமாய் ஓர் கோலத்தைப் பச்சரிசி மாவில் போட்டு முடித்தாள்.

''போட்டுட்டேனுங்க சாமி!'' என்ற தென்றலின் வேலை அத்துடன் முடிந்துவிடவில்லை. அதன் பின்னர், திருமாலை அர்ச்சகர் துதித்த வேளை முழுதும், தென்றல் அப்பெருமானின் பிரகாரத்தை தூசி, தும்பின்றி சுத்தம் செய்தாள். சுத்தம் செய்ததுடன், துப்புரவு தொழில் செய்யும் தனது பணி முடிந்தது என்றெண்ணாமல், பிரகாரப் பாதை முழுதும் நீர் தெளித்து, சிறு சிறு இடைவேளைகளில் அழகிய மா கோலங்களை இட்டு வந்தாள்.

அவளது கடைசி கோலம் முடிவதற்கும், அர்ச்சகரின் ''தென்றல்'' என்ற அழைப்பு வருவதற்கும் சரியாக இருக்க, ''வந்துட்டேனுங்க சாமி!'' என அவரிடம் ஓடினாள், அந்தப் பதின் வயது பாவை.

''இந்தா பிரசாதம் வாங்கிக்கோ!'' என்றவர், வேங்கடேசனுக்குப் படைத்த வெண்பொங்கலை, ஓர் இலையில் இட்டு அவளிடம் நீட்டினார்.



''இன்னும் மேலுக்குத் தண்ணி ஊத்தலை சாமி...'' என அவள் தயங்க, ''பரவாயில்லைமா. வாங்கிக்கோ! மனசு சுத்தமா இருந்தா போதும்!'' என்ற அர்ச்சகர், நிறைந்த மனதுடன் தென்றலின் கையில் பிரசாதத்தை வைத்தார்.

ஆனால் அவரது எண்ணப்படி, தென்றல் வெண் பொங்கலை உண்ணாமல், மற்றொரு தையல் இலையால் அதை மூடி, தன் சிறு கூடையினுள் வைக்கவும் ''சாப்பிடலையா?'' என்றார் அவர்.

''இல்லைங்க சாமி! அய்யாவுக்கு கொண்டு போறேன். அவருக்கு இப்படி சோறுன்னா ரொம்ப இஸ்டம்...'' என வெள்ளையாய் சிரித்தாள் இளையவள்.

''ம்ம் சரி. கேட்கணும்ன்னு நினைச்சேன்... இன்னைக்கும் நீயே வேலைக்கு வந்திருக்கியே... உங்க ஆயாவுக்கு உடம்பு இன்னும் குணமாகலையா?'' என விசாரித்தார்.

''இல்லைங்க சாமி. இன்னும் மூச்சுக்கு சிரமப்படுது.. இனிமேல் அதால ஓடியாடி வேலை செய்ய முடியாது போல.. அதனால நான் தான் வருவேனுங்க..! உங்களுக்கு ஒண்ணும் இடக்கில்லையே?'' என்ற தென்றலின் குரல், கவலையில் தோய்ந்திருந்தது.

''நீ வருவதில் எனக்கு எந்த கஷ்டமுமில்லை. சொல்லப்போனா, வயசான காலத்தில் உங்க ஆயா... இந்த பனியிலும், மழையிலும் வேலை செய்றதை பார்த்து எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கும். இப்போ, அந்த கவலை இல்லாம நிம்மதியா இருக்கு!'' என்றார் அந்த அர்ச்சகர் வாஞ்சையாக.

''நன்றிங்க சாமி. நான் வாரேன். எஸ்டேட்டுக்குப் போவணும்.. சுணங்கினா சுகுணா அக்கா வைவாக'' என அவள்

பறக்க, ''சரிம்மா. உன்னோட வேலை தெரியாம நான் பாட்டுக்குப் பேசிட்டே இருந்துட்டேன்'' எனக் கூறி, விடை கொடுத்தார் பெரியவர்.

''அதனால பரவாயில்லைங்க சாமி. வரேன்'' என்ற தென்றலுக்கு,

* வயது - பதினேழு முடிய ஒரே நாள்,
* படிப்பு - சொல்லிக் கொள்ளும்படி இல்லை (பத்தாவது ஃபெயில்),
* பெற்றோர் - இருவரும் இறைவனடி சேர்ந்து மூன்றாண்டுகள் ஓடிவிட்டன,
* சொந்தம் - எண்ணி மூன்று பேர், ஆயா - பாண்டியம்மாள், அய்யா - நெட்டுரு, மாமன் என்றும் சொல்ல முடியாத நண்பன் என்றும் வரையறுக்க முடியாத ''சோழன்'',
* வேலை - இதன் பட்டியல் தான் மிக நீளம் - காலையில் கோவிலில் சுத்தம் செய்வது, அதன் பின்னர் ரோஜா எஸ்டேட்-டில் ரோஜா பறிக்கும்/பதனிடும் வேலை, மாலையில் வீட்டின் பின்புறமிருக்கும் தோட்டத்தைப் பராமரிக்கும் வேலை, இரவு கனிந்து வீட்டினுள் முடங்கியதும் மகளிர் சுய உதவி குழுவின் மூலம் அளிக்கப்படும் வேலை என அவளது ஓர் நாள் முழுதும் வேலையின் ஆதிக்கம் நிறையவே இருக்கும்!

செய்யும் வேலையை சுமையாய் நினைக்காமல், சுகமாய் எண்ணி... இல்லையில்லை தவமாய் எண்ணி, முகத்தில் மலர்ச்சியுடனே தனது கூரை வீட்டிற்குள் நுழைந்தாள் தென்றல்.



அவளது அரவம் கேட்டதும் ''வந்துட்டியா...'' என ஈன சுவரத்தில் முணங்கியவாறே, நெட்டுரு எழுந்து கொண்டார்.

''நீ எதுக்கு இப்ப எழுந்துக்கிற.. பேசாம படு. ஆயா எழுந்தா.. அதுக்கு வேற ராவிப்புடும்'' எனத் தென்றல், கடிந்து கொள்ளும் போதே ''என்னடியாத்தா? நா எதுக்கு ராவப் போறேன்?! என் மனசு தாங்காம.. ரெண்டொரு வார்த்தை பேசினா... உனக்குப் பொறுக்காதே! அதுவும் அந்த பொசக்கெட்டப் பைய பேச்சை எடுத்தாலே எனக்கு ரவுசுக்காரி பட்டத்தைத் தூக்கிக் கொடுத்திருவியே?'' எனப் பாம்பு செவியாளாய் பாண்டியம்மாள் ராகம் படிக்க, ''மாமனைப் பத்திப் பேசாதே... ஆயா!'' எனப் பல்லைக் கடித்தாள் தென்றல்.

''மாமனாமே.. மாமன். என் வயித்தில பிறந்த உங்க அயித்தைக்குப் பிறந்தானா? இல்ல... உன் ஆத்தாக்காரியோட பிறந்தவைங்களுக்குப் பிறந்தானா? மாமனாம்.. பல்லைத் தட்டிடுவேன் பொட்டக்கழுத!'' எனப் பாண்டியம்மாள் கையை ஓங்க,

''விடியும் போதே... புள்ளையை ஏன் வையுதே! விடு பாண்டியம்மா!'' என நடுவே புகுந்தார் நெட்டுரு.

''நீர் சும்மா இரும்மய்யா. நாலு கழுதை வயசாகிப் போச்சு... இவ சோட்டு புள்ளைங்க எல்லாம் இடுப்பில ஒண்ணும், வயித்துல ஒண்ணுமா திரியுதுங்க. இது என்னடான்னா.. கோவேரி கழுத மாதிரி ஊரைச் சுத்தி வருது!'' என மேலும் பேசினாள் பாண்டியம்மாள்.

''நா ஒண்ணும் ஊரைச் சுத்தலை. வேலைக்குத்தான் போயிட்டு வாரேன்'' எனத் தென்றல் சிலிர்க்க, ''அதைத்

தான் சொல்லுறேன்.. நம்ம மூணு பேருக்கும் இந்த தோட்டத்தில விளையறதும், கோவில் காசுமே நிரம்பி வருமில்ல... அந்தப் பயலுக்குப் போட்டுக் கட்டத் தானே இந்த நாய் பாடு பட வேண்டியிருக்கு...'' எனத் தன் ஆதங்கத்தைக் கோபமாய் வெளியிட்டார் அந்த கிராமத்து மனுஷி.

தன் பாட்டியின் கோபத்திற்கு ஏற்ற பதிலைத் தென்றல் தேடிக் கொண்டிருக்க, ''ஆத்தா, எஸ்டேட்-டுக்கு லேட் ஆகலையா? வெருசா கிளம்பு'' என அவளைத் திசை திருப்பிய நெட்டிரு, தன் மனைவியிடம் ''அவ வயுத்தை நிரப்பி அனுப்பு.. பாண்டியம்மா'' என்றார் இருமலின் ஊடே.

''இப்புடி இருமுதே!? ஆஸ்பத்திரிக்குப் போயாந்திருவோமா?''எனத் தென்றல், நெட்டிருவின் நெஞ்சை நீவி விட, ''போய்... என்னாத்தா செய்றது? அதே சிவப்பு மாத்திரையைத் தான் எழுதுவாக. நீ, எஸ்டேட்-லிருந்து வரும்போது ரெண்டு துளசி பறிச்சா... போதும்'' என்றார் அவளது தந்தையைப் பெற்றவர் மெதுவாக.

அதற்குள், ''இந்தாத்தா, பழைய சோறு. தின்னுட்டு கலெக்டர் வேலை பார்க்க போ'' என்ற பாண்டியம்மா, தன் முகத்தை இடத் தோளில் இடித்தவாறே, பின்புறம் சென்றார்.

அவரைச் சமாதானம் செய்வதால் பெரிதாய் ஓர் மாற்றமும் நிகழ்ந்துவிடப் போவதில்லை என்பதை உணர்ந்தவள் போல், தன் முன்பிருந்த பழைய சோறை உண்டாள். இரண்டே நிமிடத்தில், உணவை முடித்தவள் ''அய்யா, நீ பழைய சோறு திங்காதே! இன்னும் சளியை



இழுத்து விட்டுரும்... என்ன சரியா? பெருமாள் கோவில் சாமி.. பொங்கல் கொடுத்தாரு. அதை தின்னு. சரியா? இன்னும் ஒரு மாசத்துக்கு கோவில்ல பிரசாதம் தருவாக... அதனால கவலையில்ல'' எனத் தன் பாட்டனிடம் விடைபெற்று, பின்புறம் சென்றாள் தென்றல்.

அங்கே, முட்டைக்கோஸ் செடியின் அருகே அமர்ந்து அதன் வளர்ச்சியை ஆராய்ந்து கொண்டிருந்தார் பாண்டியம்மாள். அவரது முதுகு, மூச்சுத் திணறலின் காரணமாக வேகமாய் ஏறி இறங்குவது தெரிந்தது. நெஞ்சம் உருகி விட, ''ஆயா! நான் வேலை முடிஞ்சு வந்ததும், தோட்டத்தைப் பார்த்துக்கிறேன். நீ கஞ்சியைக் குடிச்சிட்டுப் படுத்துக்கோ'' என மொழிந்துவிட்டு, ''என்னை ஏவாதடி கழுதை...'' என்ற அவரது கோபக்குரல் அவளை எட்டுமுன், வேலைக்குப் பறந்திருந்தாள் அவள்.

இரண்டு கிலோமீட்டர் தொலைவிலிருந்த ரோஜா தோட்டத்தை, அதி வேகமான நடையினால் இருபதே நிமிடத்தில் அடைந்தபோதும், வேலை நேரத்தைத் தாண்டி ஐந்து நிமிடங்கள் கடந்திருந்தது.

அந்த ஐந்து நிமிடத்தாமதம் உண்டாக்கப் போகும் திட்டுக்களை எண்ணி மனம் பதைத்தபடி, 'வர்ணஜாலம்' என்ற பலகையை ஏந்திய தோட்டத்தினுள் காலடி எடுத்து வைத்தாள் தென்றல். கண்கள் தாமாக குளம் கட்ட ஆரம்பித்திருந்தன. அவளது அதீத பயத்தை மேலும் பெருக்கும் வண்ணம் - ''வாங்க மேடம்! இது தான் வேலைக்கு வர நேரமா? நீ என்ன மாமியார் வீட்டுக்கா வர... ராகுகாலம், எமகண்டம் பார்த்து வரதுக்கு?'' எனக் கட்டிக் குரலில் ஓர் அதட்டல் விழுந்தது.

''மாப்பு கேட்டுக்கிறேனுங்கக்கா. வீட்டில ஆயாவுக்கு மேலுக்கு முடியல... அதேன்'' என அவள் மன்னிப்பு கோர, அந்த ரோஜா தோட்டத்தின் மேற்பார்வையாள ரான சுகுணாவின் முகம் கோரமாய் மாறியது.

''உங்க அய்யனுக்கு முடியலை... ஆயாவுக்கு முடியலைன்னா அவங்களைப் பார்த்துக்கிட்டு வீட்டுலேயே கிடக்க வேண்டியது தானே? இங்க வந்து என் உயிரை ஏன் வாங்குறீங்க?'' எனப் பல்லைக் கடித்தாள் அவள்.

பாண்டியம்மாளுக்கு உடம்பிற்கு முடியாமல் போன திலிருந்து, பெருமாள் கோவிலைச் சுத்தம் செய்யும் வேலையும் அவள் தலையில் விழுந்துவிட, அதை முடித்துவிட்டு வருவதற்கு உண்டாகும் காலத் தாமதம் சுகுணாவை பெரும் கோபத்திற்கு உள்ளாக்கியிருந்தது. அவளது கோபத்தைக் கண்டு, இது காலம் காலமாய் நடக்கும் ஒன்று என எண்ணிவிட வேண்டாம் - கடந்த சில நாட்களாய், அதுவும் ஐந்து முதல் பத்து நிமிடங்கள் தான் தென்றல் சுணங்குவதே. அதற்கே, அந்தம்மாளுக் குப் பொறுக்கவில்லை!

''ஷிபிட் முடிஞ்சதும் கூட நேரமிருந்து வேலை பார்த் துடுறேனுங்க'' எனத் தென்றல் தயங்க, ''அதெல்லாம் தேவையில்லை. ஒரு நாளுக்கான கூலியை கழித்துக் கொள்கிறேன்'' என்றவளின் முகம், பரிகாசத்தில் பிர காசித்திருந்தது.

அவளது பரிகாசத்தையும், பிரகாசத்தையும் ஒதுக்கி ''ஐயோ யெக்கா, பணத்தை மட்டும் புடுச்சுப்புடாதீக. தயவு பண்ணுங்கக்கா'' எனத் தன் தன்மானத்தை விட்டுக் கெஞ்சினாள் அந்த இளம்பெண் - ஒரு நாளின் மகத்



துவமும், அதற்கு மேலாய் அதற்கு உண்டான பணமும் அவளுக்கு எந்தளவு முக்கியம் என்பதை உணராதவள் போல் சுகுணா பேசியது அவளைப் புரட்டிப் போட் டிருந்தது.

''ஒரு நாள் தயவு பண்ணலாம்.. ரெண்டு நாள் பண்ணலாம். ஓயாம பண்ண முடியுமா? ஆமா, அப்படி என்னடி பணம் பணம்ன்னு பேயா பறக்கிற? ஹோ, ஒருவேளை உனக்கு வரதட்சணைக்கு சேர்க்கிறாய் போல? ஹ்ம்ம் இந்த மூஞ்சியை எவன் கட்டுவான்? பொண்ணு பார்க்க வந்தாலே அவன் வாந்தி தான் எடுத் துட்டுப் போகணும்... இதில குடும்பம் நடத்தினா அவன் தான் உலகத்திலேயே பாவப்பட்ட ஜென்மம்'' எனத் தான் பார்த்திராத ஓர் ஜீவனுக்காக வருத்தம் கொண்ட வளுக்கு, தன் முன்னே வருந்தி நிற்கும் ஓர் உயிரின் வேதனை புரியவில்லை.

அவளது குத்தலில் மனம் நொந்த தென்றல், பதில் பேசாமலிருக்க, அதுவே சுகுணாவிற்கு சாதகமாய் போனது.

''காக்கா கூட உன்னை விட சிவப்பா இருக்குமில் லையா? என்ன கலரு? என்ன கலரு? தொட்டுப் பொட்டு வச்சுக்கலாம் போல... யாரும் தொட்டிருக்காங்களா?'' என்றாள் அப்பாவி போல்.

அந்த கேள்வியில் சிலிர்த்து, ''அசிங்கமா பேசாதீக அக்கா'' என்ற தென்றலின் குரலில் கோபமிருந்தது. இதுவரை வந்த குதர்க்க கேள்விகளுக்குத் தான் தாமத மாய் வந்ததை காரணமாக்கியவளால், சுகுணாவின் கடைசிக் கேள்வியை பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இளையவளின் கோபம் தாளாமல், அதுவும் தன் கீழே வேலை செய்யும் ஒருத்தியின் கோபம் தாளாமல் ''அடச்சீ! நான் எங்கடி அசிங்கமா பேசினேன்?! கொஞ்சம் முன்னாடி தானே, உன்னைக் கட்டிக்கப் போறவன் மேல பரிதாபப்பட்டேன். அப்படியிருக்கும் போது... சை.. சை.. எனக்கு நல்ல மனசுடி. உன் புத்தி தான் அசிங்கமா யோசிக்குது'' என எகிறினாள் பெரியவள்.

'இவளிடம் பேசுவதும், சாக்கடையை வாரித் தன் மேல் இறைத்துக் கொள்வதும் ஒன்று தான்' என்ற எண்ணம் தோன்றிவிட்டப்போதிலும், அவள் முடக்கப் போகும் ஓர் நாள் சம்பளத்திலேயே தென்றலின் மனம் குறியாக இருந்தது.

''யெக்கா, ரெண்டு மணி நேரம் கூடனாலும் வேலை செய்றேனுங்க. கூலியை மட்டும் கொடுத்துடுங்க..'' என அவளது மன்றாடல், தொடர்ந்து ஓர் பத்து நிமிடங்கள் நடக்க, முடிவில் அரை நாள் சம்பளம் தருவதாய் கூறினாள் சுகுணா. இதற்கு மேல் அவளிடம் வாதாடிப் புண்ணியமில்லை என்பது புரிந்துவிட, ஆவியாய் போகும் அரைநாள் சம்பளத்தை எண்ணி நொந்தபடி, ரோஜாக்களைப் பறிக்கச் சென்றாள் தென்றல்.

அரை நாள் சம்பளம் - சோழனின் ஓர் நாள் உணவிற்கு ஆகுமே? பஸ் செலவிற்கேனும் உதவுமே? ஆயாவிற்கு ஓர் ஸ்வெட்டர் வாங்கலாமே? அய்யாவிற்கு இரண்டு நாள் மாத்திரை வாங்கலாமே? மூவருக்கும் ஒரு வாரத்திற்கான அரிசி நொய் வாங்கும் பணமல்லவா போய்விட்டது! கடவுளே! ஐந்து நிமிடத் தாமதத்திற்கு இப்படிப்பட்ட தண்டனையா? என மனம் குமைந்தது.



இவளுக்கு என்ன என் மேல் இப்படியொரு கோபம்? என சுகுணாவின் மேல் திரும்பிய கேள்விக்கு, அவளுக்கு யாரைப் பார்த்து தான் கோபம் வராது? சரசு அக்கா, மீனா, ஆயா, பூங்கொடி, காசி... எல்லாரையும் தான் சுழட்டி வைக்கிறா? தனக்குக் கீழே வேலை பார்க்கும் எல்லோரையும் ஆட்டிவைக்கும் திமிர். வயசானவர்கள், சிறியவர்கள், கர்ப்பிணி என்று எதுவும் கிடையாது... நாக்கில் நரம்பில்லாமல் அடுத்தவரை குதறி எடுத்துவிட வேண்டியது. தன்னைக் குதறுவதற்கு ஏதுவாக தாமதமாய் வந்தது தன் தப்பு தானே? அதற்காக அரை நாள் சம்பளமா? என மீண்டும் இழந்த சம்பளத்திற்கே வந்து நின்றன எண்ணங்கள்.

ஒரு புறம், இழந்த சம்பளத்தை சுற்றிய மனம், மறு புறம், தன் தோற்றத்தைப் பற்றிய சுகுணாவின் பேச்சையே சுற்றிவந்தது. தன் நிறம் பற்றிய அவளது கேலியில் தென்றலுக்கு வருத்தமில்லை என்றாலும், தன்னை மணக்கப் போகிறவன் மேல் அவள் பட்ட பரிதாபம்?! ஹய்யோ, தெற்கத்தி ராஜா போலிருக்கும் சோழனுக்கு தான் சரியான இணையில்லையோ? அன்பும், பாசமும், அக்கறையும் நிரம்பி வழிந்தாலும், நிறம் ஓர் தடையாய் மாறி விடுமோ?! என நெஞ்சம் படபடத்தது.

நெஞ்சின் தடதட ஓட்டம் வெளியே கேட்டு விடாமலிருக்க ''இல்லை, என் சோழன் அப்படியில்லை. என் சோழன் அப்படியில்லை'' என்ற வார்த்தைகளை உருப்போட்டவள், தன்னை மறந்து அதற்கு ஒலி கொடுத்துவிட, அவளது தோள்களில் ஓர் கை விழுந்தது!



# 2

• திருச்சி •

''மித்து, காலேஜ் நேரமச்சு கண்ணா, எழுந்துக்கோ!'' என அருகில் அமர்ந்து தன் பதின் வயது மகளின் தலையை மெல்ல கோதிவிட்டார் சிவசுப்ரமணியம், திருச்சி மாநகரின் புகழ் பெற்ற இதய மருத்துவர்.

''ப்ளீஸ் டாடி! கொஞ்சே கொஞ்ச நேரம். நேத்து நைட் பாருவோட பர்த்டே பார்ட்டிக்குப் போயிட்டு பன்னிரண்டு மணிக்குத் தான் டாடி வந்தேன்... ப்ளீஸ் ப்ளீஸ்.. என் செல்ல டாடி!'' எனத் தூக்கத்தின் ஊடே கொஞ்சிய அவரது செல்ல மகள் மித்ரா, கைகளை உயர்த்தி, தந்தையின் கன்னத்தை வருடி, பின்னர் வலிக்கக் கிள்ளினாள்.

''மித்து, வலிக்குதுடா'' எனச் சிறு பிள்ளை போல் தந்தை மிளற்ற, ஐந்து நிமிடத்திற்குப் பின்னர் எழுந்து உட்கார்ந்த மித்ராவும் அவரும் தலையணை கொண்டு விளையாடினர்.

அந்த நேரம் ''இன்னும் என்ன விளையாட்டு? அப் பாக்கும் பொண்ணுக்கும் யாராவது தார்க்குச்சி போட் டுட்டே இருக்கணும்'' என்ற சொல்லோடு மகளின் அறைக்குள் நுழைபவர் - மகாராணி - திருச்சி மாநகரில் கணவருக்கு நிகராய் புகழ் பெற்ற மகப்பேறு மருத்துவர்.



இரு மருத்துவப் புலிகளுக்கும் பிறந்த இரு புலிகளில் முதலாம் புலி - அதாவது மித்ராவின் அண்ணன் - பிரேம், லண்டனில் இதய மருத்துவப்படிப்பில் ஆழ்ந் திருக்க, மற்றொரு புலியோ ''என்னால டாக்டர் தொழில் எல்லாம் பார்க்க முடியாது. ஒரே டெட்டால் நாத்தம்... ஒவ்வே! அப்புறம் ரத்தம், சதை, புண்... நோ வே!'' என மேனி சிலிர்த்து, பொறியியல் படித்துக் கொண்டிருக் கிறது.

கையில் இரு கோப்பைகளுடன் வந்து சேர்ந்த ராணியின் கையிலிருந்து, காபியிருந்த கோப்பையை பாய்ந்து எடுத்துக் கொண்ட மித்ரா ''டாடி, நீங்க இன் னைக்கு பூஸ்ட் குடிங்க! உங்க பேஷண்ட்ஸ்கிட்ட - பூஸ்ட் இஸ் தி சீக்ரெட் ஆப் மை எனெர்ஜின்னு சொல்லி ஏமாற்றலாம்'' என்றாள் சிரிப்புடன்.

ஆனால் அவளது சிரிப்போ, கோப்பையை வாயில் வைத்ததும் கோபமாய் மாறியது. ''அய்யே, என்னம்மா இது? அப்பாவோட கப்-லேயும் பூஸ்ட்-டே இருக்கு? என்னை ஏமாத்திட்டீங்க!'' என்ற கோப வார்த்தை களுடன், கையிலிருந்த கோப்பையை விசிறியடித்தாள்.

அவளது அச்செய்கையில் அந்த பீங்கான் கோப்பை சுக்கு நூறாய் உடைய, அதிலிருந்த பூஸ்ட் சுவரெங்கும் ஓர் நவீன ஓவியத்தை வரைந்திருந்தது. மகளின் கோபாவேசத்திற்கு அவளைக் கண்டிக்காமல், மனைவி யிடம் பாய்ந்தார் சிவசுப்ரமணியம்.

''என்ன ராணி இது? அவளுக்குப் பிடிச்சதை செய்து கொடுக்க வேண்டியது தானே? அவளுக்குத்தான் பூஸ்ட் பிடிக்கலைன்னு தெரியுதில்ல... அப்போ காபி கொடுக் கிறது தானே? சும்மா... அவளைக் கோபப்படுத்திக்கிட்டு

இருக்கே? அவ குணம் தெரிஞ்சிருந்தும் இப்படி செய்யலாமா?'' என விடாமல் பொரிந்த கணவரை, கையமர்த்தி நிறுத்திய மகாராணி.

''அவ உடம்பிற்கு நல்லதுன்னு தானே பூஸ்ட் கொடுக்கிறேன். இந்த வயசிலேயே காபி குடிச்சு பழகினா உடம்பு கெட்டுடும்... சோகை பிடிச்சுப் போய்டும்'' என்றார் கோபத்துடன்.

''அதெல்லாம் ஒண்ணுமாகாது. அப்படியே ஆனாலும், வீட்டில ஒண்ணுக்கு மூணு டாக்டர் இருக்கீங்க இல்ல... நீங்க சரி பண்ணுங்க! ஒருவேளை, நீங்க போலி டாக்டரா? ஊரை ஏமாத்தி காசு பார்க்கிறீங்களா?'' என்ற கண்சிமிட்டலுடன் இடைப்புகுந்தாள் மகள்.

''பெண் பிள்ளைக்கு இவ்வளவு கோபமாகாது மித்ரா. உனக்குப் பிடிக்கலன்னா... கப்-பை அப்படியே வைக்க வேண்டியது தானே? எதற்கு தூக்கி எறிகிறாய்?'' என மகாராணி கண்டிக்க, ''ப்ச், போங்கம்மா'' எனத் தலை சிலுப்பலுடன் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள் மகள்.

தாயின் கோபம் மகளின் நெஞ்சில் பதிவதற்கு, வாழ்க்கையில் ஒரு முறையாவது ''அதட்டல்'' என்ற ஒன்றை அவள் கேட்டிருக்க வேண்டுமல்லவா? அப்படியே கேட்டிருந்தாலும், அந்த அதட்டல் அழுத்தமாய் ஆழமாய் இருந்தாலன்றி பிள்ளைகள் எப்படி அதை பின்பற்றுவர்? அதட்டல் விழுந்து ஐந்து நிமிடம் கூட, அதன் இறுக்கம் அங்கே நிலவாதபடி பெற்றோர் இருவரும் பெண்ணை தாங்குகையில், அவளது ''ப்ச், போங்கம்மா''வை கேட்டுத் தானே ஆக வேண்டும்?



தந்தையும் சரி, தாயும் சரி, ஏன் உடன் பிறந்த அண்ணனும் சரி மித்ரா எனும் பொக்கிஷத்தை தங்கத் தட்டிலல்லாது வைரம் இழைத்த தங்கத்தட்டில் தாங்கினர் என்றே சொல்லலாம். பெண் குழந்தை வேண்டும் என்ற பெற்றோரின் ஆசையை நிறைவேற்றுவது போல், திருமணம் முடிந்து பதினைந்து வருடங்கள் கழித்துப் பிறந்த மித்ராவின் மீது அவர்கள் பாசமாய் இருப்பதில் என்ன ஆச்சரியம்? தன்னை விட எட்டு ஆண்டுகள் இளையவளாய் பிறந்த மித்ராவின் மீது பிரேமிற்கும் கொள்ளை பிரியம்!

அந்த பாசத்தின் விளைவாய் மித்ராவின் விருப்பங்கள் யாவும் அவள் வாய்மொழியாக சொல்லும் முன்னரே நிறைவேறின. அவள் கண்ணால் கேட்பதை தலையால் செய்து முடித்த குடும்பத்தினர், தங்களை அறியாமல் அவளுள் ஓர் வறட்டுப் பிடிவாதத்தை உண்டு பண்ணி வைத்திருந்தனர் என்பதை அவர்களும் அறிந்தே இருந்தனர். ஆனால், மாற்ற தான் மனம் வரவில்லை!

அதே எண்ணம் தற்போதும் பரவியிருந்தமையால், பெண்ணின் போக்கில் சற்றே எரிச்சல் அடைந்தாலும் மகாராணிக்கு அவள் மீதிருந்த கோபம் வெகு நேரம் நீடிக்கவில்லை என்பது ''சரோஜா, இன்னைக்கு காலையில என்ன டிபன் பண்ணியிருக்கே? இட்லியா? மித்து குட்டிக்குப் பிடிக்காது... கொஞ்சமா ரவா கிச்சடி கிண்டிடு. தொட்டுக்க கெட்டியா தேங்காய் சட்னி போட்டுடு'' என்ற ஆணையில் புலப்பட்டது.

அதேசமயம், ''அம்மா, ரூம் சுத்தம் பண்ணச் சொல்லுங்கம்மா. ஒரே பிசுபிசுன்னு ஒட்டுது'' எனத் தானும் ஓர் ஆணை பிறப்பித்தாள் மகள்.

மேலும் ஓர் அரை மணி நேரம் மித்ராவின் ஒப்பனைகளில் கழிய, எழில் பாவையாய் கீழிறங்கி வந்த மகளை மெய் மறந்து பார்த்திருந்தார் தாயார். பால் வண்ணமும், பவளமென மின்னிய மேனியும், பிரம்மனின் தூரிகை வரைந்திருந்த எழில் வளைவுகளும், சிவப்பிற்கு சிவப்பு சாயமிட்டது போல் தனியே ஜொலித்த கன்னங்களும், சுண்டியிழுக்கும் சுந்தர உதடுகளும், அந்த உதட்டின் மீது மகுடமாய் அமர்ந்திருந்த கடுகளவு மச்சமும் என அழகின் மொத்த குத்தகையாய் இறங்கிவந்த மித்ராவின் உடலை நீல வண்ணத்தில் வெள்ளை நட்சத்திரங்கள் மின்னிய சுடிதார் தழுவியிருக்க, வானுலக தேவதையாய் தெரிந்தாள் அவள்.

கண்ணுக்குள் விழலாமா வேண்டாமா என்ற யோசனையுடன் ஆடிக்களைத்த முடிக்கற்றை ஒன்று, மீண்டும் தன் ஆட்டத்தைத் துவக்க, அதை வாஞ்சையாய் ஒதுக்கி விட்ட மகாராணி ''பொட்டு வச்சுக்கலையா?'' என்றார்.

கண், மூக்கு, வாய் என அனைத்தையும் சுருக்கி, ''ம்ஹூம்'' எனப் பதில் சொன்ன மகளோ, உணவு மேஜை பக்கம் வராமல் வாசலை நோக்கி நடக்கவும் ''மித்து, சாப்பிட வா... காலேஜ்க்கு இன்னும் நேரமிருக்கு... எங்க போறே?'' என வினவினார் தாயார்.

''நான் இன்னைக்கு காலேஜ் போலைம்மா. மாஸ் கட்... பாரு வீட்டிற்குப் போயிட்டு அப்படியே படத்திற்குப் போறோம். அதனால வெளியில சாப்பிட்டுக்கிறேன்... எனக்கு எதுவும் வேண்டாம்'' என்றவள் காலணியை மாட்டவும்,

''உனக்காக ரவா கிச்சடி பண்ணச் சொன்னேன். ப்ச்... காலையிலும் பூஸ்ட் குடிக்கலை... இப்பவும் சாப்பிடல...



காபி கப் தூக்கி எறிகிறாய்... அம்மா சொல்றதை கேட்கவே கூடாதாடா?'' என மகாராணி தன் ஆதங்கத்தை வெளியிட்டார்.

''ஹய்யோ அம்மா, இதுக்குப் போய் இப்படி ஃபீல் பண்றீங்களே... இப்போ என்ன நான் சாப்பிடணும் அவ்வளவுதானே? பண்ணின ரவா கிச்சடியை ஒரு பாக்ஸ்-ல போட்டுத் தாங்க. படம் பார்க்கும் போது சாப்பிட்டுக்கிறோம். அப்புறம் காலையில் நடந்ததுக்கு சாரி... இனிமேல் நீங்களும் என்னை ஏமாத்தாதீங்க... நானும் அப்படி பண்ண மாட்டேன். என்ன டீல் ஓகே-வா? ப்ளீஸ் மா... ஓகே சொல்லுங்க... ஓகே ஓகே ஓகே'' எனத் தாயின் தோளைப் பிடித்துக் குதித்தாள் மகள்.

அவளது சமாதானத்தில் மகிழ்ந்து, அவள் கேட்ட உணவை டப்பாவில் போட்டுக் கொடுத்த மகாராணி ''காலேஜ் கட் பண்ணிட்டு படத்திற்குப் போகணுமா மித்து? சனி, ஞாயிறுல போலாமே?'' எனக் கேட்கவும்,

''வீக்எண்டு-ல போறதில் த்ரில்லே இல்லைமா, காலேஜ் கட் பண்ணிட்டு படம் பார்த்தா தான் படம் பார்த்த மாதிரியே இருக்கும்... அதுவும் இன்னைக்கு மாஸ் கட். செம ஜாலியா இருக்கும்!'' என ரசித்துப் பதில் சொன்னாள் மகள்.

''இருந்தாலும், இது தப்பு...'' என மகாராணி துவங்க,''காலேஜ் டைம்ல என்ஜாய் பண்ணாம... உங்க வயசிலேயா என்ஜாய் பண்ண முடியும். போங்கம்மா'' எனத் தலையை சிலுப்பிய மித்ரா.

மாடியிலிருந்து இறங்கி வந்த தந்தையிடம் ''டாடி, வரவர அம்மா செம ஓல்டி ஆகிட்டாங்க.... கொஞ்சம்

விட்டா ''சிந்தனை செய் மனமே, சிந்தனை செய்''ன்னு பஜனை பாடிடுவாங்க போல. நிலைமை ரொம்ப மோசமாகுறதுக்குள்ள உங்க ஹாஸ்பிட்டல்ல இருக்க நர்ஸ் யாரையாவது கரெக்ட் பண்ற வழியைப் பாருங்க'' என வம்பளந்து விட்டு, தாயிடம் அதற்கான அடியையும்,

தந்தையிடம் ''முடியலியே! அம்மா முடியலியே!'' என்ற சிவாஜி காலத்து வசனத்தையும் பெற்றுகொண்டு தனது ஹோண்டா ஆக்டிவாவில் பறந்தாள்.

திருச்சி - என்.ஐ.ஐ.டியில் மின்னணுவியல் முதலா மாண்டு படிக்கும் மித்ராவின் வண்டி, தன்னுடன் பயிலும் பார்வதியின் வீட்டின் முன்னே நின்றது. சில பல ஹாரன்களின் பின்னே, வெளியே வந்த பார்வதி ''ஹே மித்து, டிரஸ் சூப்பர்டி! அதெப்படி-டி ஒரு தடவை போட்ட டிரஸ் திரும்ப போடவே மாட்டேங்கிறே... எப்போ பார்த் தாலும் புதுசு புதுசா போடறே! கலக்குறே போ'' என வியப்பினூடே வண்டியின் பின்னே ஏறி அமர்ந்தாள்.

தோழியின் கேள்வியில் பெருமை பொங்க ''தெரிய லையே! அம்மாவைத் தான் கேட்கணும். அம்மா ஒரு மாசத்திற்கான டிரஸ் எடுத்து கப்-போர்டுல அடிக்கிடு வாங்க. அதேமாதிரி இந்த மாசமிருந்த கலெக்ஷன் அடுத்த மாசம் வராத மாதிரி திரும்பவும் அடிக்கிடு வாங்க'' எனச் சிரித்தாள் மித்ரா.

''ஹ்ம்ம். லக்கி யா நீ?'' என்ற பார்வதியின் பெருமூச்சு காற்றுடன் கரைய, அவர்களது மற்றொரு தோழியின் வீட்டிற்குப் பறந்தது வண்டி. தொடர்ந்த அரை மணி நேரத்தில், வகுப்பு தோழிகள் அனைவரும் ஒன்று கூடி திருச்சியில் சென்ட்ரல் பேருந்து நிலையம் அருகே அமைந்திருக்கும் 'கலையரங்கம்' என்ற திரையரங்கின் முன்னே நின்றிருந்தனர்.



அவர்களுக்கு முன்னே, அவர்களது வகுப்புத் தோழர்கள் சிலர் குமிந்திருக்கவே ''ஹாய்'' ''ஹே லூசு'', ''மச்சான்'' ''டேய்'', ''குளிச்சியா இல்லையா?'' ''உங்கப் பாக்கு போன் பண்ணி... நீ கிளாஸ் கட் பண்ணதைப் போட்டுக் கொடுக்கிறேன் பாரு...'', ''இன்னைக்கு உங்க எதிர்த்த வீட்டு பஞ்சவர்ணக் கிளி என்ன டிரஸ் போட் டிருந்துச்சு? செம ஜொள்ளு போல? சட்டையெல்லாம் ஒரே கறை கறையா இருக்கு'' போன்ற வசனங்கள் அங்கே படு தாராளமாய் அரங்கேறின.

அதன் நடுவே, அனைவருக்குமான நுழைவுச்சீட்டு பெறுதல் போன்ற பணிகளும் நடைபெற படம் ஆரம் பிப்பதற்கு சற்று முன்னர் அனைவரும் வந்தாகிவிட்டதா என்ற கணக்கு எடுக்கப்பட்டது.

அதை எடுத்த மித்ராவின் முகத்தைக் கடுக்க வைக்க வென்றே, கதிர் வரவில்லை.

அவனுடனே சுற்றும் விக்னேஷிடம் திரும்பி ''ஏய் விக்கி பக்கி, எங்கடா உன்னோட பிரண்ட்? அவனுக் கென்ன பெரிய இவன்னு நினைப்பா? பெரிய படிப் பாளின்னு சீன் போடுறானா? இப்படி சொம்படிச்சு... என்ன சாதிக்கப் போறான்? எதுக்குடா வரலை அவன்?'' எனப் பாய்ந்தாள்.

''ஹே இரு இரு! சும்மா எகிறாதே! வந்திடுவான்'' என்ற விக்னேஷின் குரலில் வேண்டிய அழுத்தமில் லாமல் ஸ்ருதி குறைந்து தான் போயிருந்தது.

''ஆமா, வருவான். சரியான கஞ்சன்டா... அப்படி பணமில்லைன்னா சொல்லித் தொலைக்க வேண்டியது தானே? நாம போட்டுக் கூட்டிட்டுப் போயிருப்போ

மில்ல? பணமில்லைன்னாலும் திமிரில் ஒண்ணும் குறைச்சலில்லை!'' என மித்ரா மீண்டும் துவங்க,

''மித்ரா ப்ளீஸ்! அவனோட ஸ்டேடஸ் பத்திப் பேச வேண்டாம்!'' என்றான் விக்னேஷ் இறுக்கமாக.

''சரிப்பா. அவனோட பணத்தைப் பத்தி பேசலை. இப்போ நாம எல்லோரும் படத்திற்கு வந்தாச்சு... அவன் மட்டும் கிளாஸ்-ல இருந்தா நமக்கு திட்டு விழாதா? அவன் ஒருத்தனால நாம நாற்பது பேரும் திட்டு வாங்கணுமா? நல்ல எண்ணம்டா உங்களுக்கு?'' எனப் பொரிந்துவிட்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

மித்ரா சொல்வதிலிருக்கும் உண்மை உறைக்க, விக்னேஷும் வாளா இருந்தான். நேற்று மாலை முதல், கதிரிடம் தான் கெஞ்சியதற்கு மதிப்பே இல்லாமல் போனதில் லேசான கோபம் கூட உண்டானது.

எத்தனை முறை படித்துப் படித்து சொல்லியிருப்பான்? ''கதிர், நீ மட்டும் படத்திற்கு வராமல் காலேஜ் போனா கிளாஸ்-ல இருக்க எல்லோருமே காண்டாகிடுவாங்க. அதுக்கு அப்புறம் அவங்களை சமாதானப்படுத்துவது ரொம்பவே கஷ்டமாகிடும். ப்ளீஸ்டா வந்திடு, வந்திடு'' என்று அவனது நச்சரிப்பிற்கு, ''சரிடா, பார்க்கலாம்'' என இரண்டே வார்த்தையில் பதில் கூறியவன், இன்று மொத்தமாய் கவுத்தே விட்டானே என எரிச்சலாய் வந்தது.

இப்போது அழைத்துப் பேசலாம் என்றால், கையில் கைப்பேசி இல்லை... ஆயிரம் ரூபாய்க்குக்கூட கைப்பேசி விற்கிறதுடா என்றால் 'எனக்கு அந்த ஆயிரம் ரூபாய் வேறு ரூபத்தில் உதவும், நேரத்தையும் பணத்தையும்



விரயம் செய்யும் கைப்பேசி எனக்கு அவசியமில்லை' என முடித்தே விடுவான். அவனது அக்குரலில் மீண்டும் பேசவே நாவெழாது விக்னேஷிற்கு.

அந்த எரிச்சலையும் மறைத்துக் கொண்டு, கதிருடன் கல்லூரி விடுதியில் தங்கியிருக்கும் மற்றவர்களிடம் விசாரித்ததில், ''அவனைக் காலையிலிருந்து பார்க்கவே இல்லையேடா; பேருக்குத்தான் எங்களோட தங்கியிருக்கான். அவன்கிட்ட இருந்து ஒரு வார்த்தைகூட கறக்க முடிவதில்லை'' என்ற எரிச்சல் அவர்களிடமிருந்தும் வெளிவந்தது.

வேறெப்படியும் அவனை அணுக முடியாமல் போகவே, அன்றைய தினத்தை தன் போக்கில் அனுபவித்தான் விக்னேஷ். ஆனால், மித்ரா தான் குமுறி வெந்து போனாள்!

''ஹே அவனுக்கு ரொம்ப கொழுப்புடி! சத்தியமா நம்ம க்ளியர்கேஸ்கிட்ட (அதாகப்பட்டது அவர்கள் துறை மேலாளருக்கு வழுக்கைத் தலை - அதைத் தான் க்ளியர்கேஸ் என்கின்றனர்) போட்டுத் தறதுக்கு தான் அவன் வரலை.''

''நாளைக்குப் பாரு... நாங்கெல்லாம் ஸ்டுடென்ட்டா இருக்கும்போதுன்னு ஆரம்பிச்சு அது வேற செமையா ப்ளேட் போடும்... சை... இவனுக்கு நல்ல பேர் வாங்கணும்னா அவருக்கு நல்லா கூஜா தூக்கி, அவர் வீட்டிலேயே காவல் நாய்மாதிரி இருக்கவேண்டியது தானே? எதுக்கு நம்மளை மாட்டி விடுறான்?''

''இதெல்லாம் ஒரு பொழப்பு? நாளைக்கு இருக்குடி... அவனுக்கு... நல்லா நாலு கேள்வி கேட்கிறேன். சரியான

சாமியார் சாமியார்... இப்படி மாதிரி இருக்கிறவன் தான்டி இல்லாத ஃபிராட் எல்லாம் செய்வான்'' எனக் கறுவியவளை, இடைவெட்டினாள் சுருதி எனும் தோழி.

''ஹே அவனை சாமியார் சொல்லாதேடி! அப்படியே ஹீரோ மாதிரி இருப்பான்டி... அவன் உயரம், கண்ணு, முடி... சூப்பர் தெரியுமா? ஆளு தான் ஒல்லிப் பாச்சான் மாதிரி இருப்பான்...'' என்றாள் ரசனையுடன்.

''இவ ஒருத்தி. அவன் தான் கிடைச்சானா சைட் அடிக்க? அவனும் அவன் கலரும், மூக்கும்... பிரஷாந்த் நல்லா இருப்பான்டி! ஹான்ட்சம்!'' என பார்வதி உதட்டை சுளிக்க, மித்ரா இருவரையும் முறைத்துவிட்டு, அவனைத் திட்டுவதைத் தொடர்ந்தாள்.

அவர்களின் திட்டையும் சாபத்தையும் மேலும் உறுதி செய்வது போல், அடுத்த நாள் காலையில் கல்லூரி சென்றவர்களை முதல் வகுப்பிற்கு வர வேண்டிய வாழைமட்டை ச்சே... ச்சே... ஆங்கில வாத்தியார் வர வில்லை; மாறாக அவர்கள் துறையின் மேலாளர் அதாவது க்ளியர்கேஸ் கண்களில் கோபாவேசத்துடன் வரவேற்றார்!



# 3

* வெள்ளகவி *

இழந்த அரை நாள் சம்பளத்தின் நினைவிலேயே, ஓஃபேலியா (ophelia) எனப்படும் இளஞ்சிவப்பு



கலப்பின வகை ரோஜாவைப் பறித்துக் கொண்டிருந்த தென்றல், தன்னை யாரோ தொடுவதை உணர்ந்து திரும்பினாள்.

அங்கே நின்றிருந்த சரக அக்கா என்றழைக்கப்படும் சக ஊழியரைக் கண்டதும், ''என்ன அக்கா?'' என்றாள் தென்றல் சோர்வாக.

''டீ குடிக்க வாடி'' என அவர் அழைக்க, குளிருக்கு இதமாய் நாவினில் இறங்கும் சூடான பானத்திற்காக நா ஏங்கியபோதும், நெஞ்சில் தைத்திருந்த சுடு சொற்கள் நாவின் ஏக்கத்தை மட்டுப்படுத்தின.

''இல்லக்கா, நா வரலை. ஏற்கனவே வேலைக்கு கணங்கி வந்தேன்னு கருணா அக்கா வையுறாக. இப்போ டீ குடிக்க வந்தா... ஏதுனா குத்தலா சொல்லிப்புடுவாக'' என்றதோடு, தன் வேலையில் மூழ்க எத்தனித்தாள் அச்சிறு பெண்.

''அடச்சீ வா! அவ ஒரு பொசக்கெட்டவ... அவ சொல்றதையெல்லாம் மனசில வச்சுக்கிட்டு மறுகினா... நானெல்லாம் என்னைக்கோ நாண்டுகிட்டு செத்திருக்கணும். அவ பேசுறது ஒரு பேச்சுன்னு அதுக்கு எதுக்கு இம்புட்டு வெசனப்படுதே? வந்து டீயைக் குடி!'' என்றாள் சரக அதட்டலும் உரிமையுமாக.

ஐந்து நிமிடங்கள் நடந்த அந்த தேநீர் இடைவேளையில், காலையில் கருணாவின் அடாவடித்தனம் விவரமாய் அலசப்பட்டது. முடிவில், ''கருப்புன்னு உன்னை குத்தினாளாக்கும்? அவ மட்டும் அப்படியே கிறிஸ்டல்லின் ரோஜா மாதிரி வெளுத்துக்கிடக்கா பாரு...'' என சகதோழிகள் நொடித்ததில் அங்கே மிதமாய் ஓர் சிரிப்பலை எழுந்து அடங்கியது; கூடவே தென்றலின் இறுக்கமும் மெல்ல தளர்ந்தது.

தேநீர் இடைவேளை முடிந்து தத்தம் வேலை இடங்களுக்கு அவர்கள் திரும்பும் வழியில், ''கருப்பும் அழகு தான்டி... உன் அளவுக்கு அவ முகம் லட்சணமா இல்லைன்னு அவளுக்குப் பொறாமை. என்ன தான் சிவப்பா இருந்தாலும், கண்ணும் மூக்கும் பொருந்தி வந்தா தானே அழகு? அவ பேசுறதை மனசில வச்சுக் காதே, தென்றலு!'' என சரஸ்வதி தேற்றியபோது ''ஆட்டும்க்கா'' என்ற தலையுருட்டலுடன் வேலையில் மூழ்கினாள் தென்றல்.

அதன் பின்னர் வேலை சலனமோ, சத்தமோ இல்லாமல் சென்றது. மாலை நாலு மணிக்கு, வேலை முடிந்து வீட்டிற்குப் போகும் வழியில், தென்றல் அவளது தோழி பூங்கொடியும் அந்த கிராமத்தின் மகளிர் சுய உதவிக் குழுவிற்குச் சென்று, தாங்கள் செய்ய வேண்டிய அலங்காரக் கழுத்தணிகளுக்கான மூலப் பொருட்களை வாங்கிக் கொண்டனர்.

''என்னால இன்னைக்கு மூணு தான் செய்ய முடியும்... தென்றலு! நீ எத்தனை செய்யப் போறே?'' என மற்றவள் வினவ,

''இன்னைக்கு தோட்டத்தில் களை எடுக்கணும்டி. அதை எடுத்து முடிக்க ராவு ஆகிடும்... அப்புறம் முடிஞ்சதை செய்யணும். ஒண்ணு இல்லாங்காட்டி ரெண்டு தான் செய்ய முடியும். வெள்ளென படுத்தா தான்... காலையில வெள்ளென எழுந்து கோவிலுக்குப் போக முடியும்... தினைக்கும் சுணங்கினா எட்டூருக்கு கேட்கிற மாதிரி சுகுணா அக்காவும் வையுமில்ல...'' எனப் பெருமூச்சு விட்டவாறே, தன் வீடு நோக்கித் திரும்பினாள் தென்றல்.



மூன்றாண்டுகளுக்கு முன்னரிருந்த தோழிக்கும், இப்போது இருப்பவளுக்கும் இருக்கும் இமாலய வித்தியாசங்களை கனத்த மனதுடன் அலசியவாறே, அவளுக்கு விடை கொடுத்தாள் பூங்கொடி. தென்றலின் பெற்றோர் உயிருடன் இருந்தவரை, தென்றலின் தலை மீது இத்தனை சுமையிருக்கவில்லை... அப்போதும் தாய் - தந்தைக்கு உதவியாக தோட்டத்தில் வேலை செய்வாள் தான் என்றாலும், நாள் முழுதும் வேலை, வேலை, வேலை என்ற ஓயாத உழைப்பிருக்கவில்லை. ஓயாத உழைப்பும், கவலை நிறைந்த சூழலும் தான் அவளை ஓய்ந்து போகச் செய்து, மனதளவிலும் உடலளவிலும் பலவீனமாக்குகிறது என்ற எண்ணத்துடன் வீடு நோக்கி நடந்த பூங்கொடியின் மனதில், சீக்கிரமே சோழன் தன்னை நிலை நிறுத்திக் கொண்டு, தோழியை மணந்து கொள்ள வேண்டுமே என்ற பிரார்த்தனை மேலோங்கியிருந்தது.

தோழியின் எதிர்காலத்திற்காக வேண்டிக் கொண்ட அவளுக்குக்கூட, நாளைய தினம் தோழியின் பிறந்தநாள் என்பது மறந்து போனது வேதனை!

அன்றைய தினம், தோட்ட வேலை முடிந்து வீட்டிற்குள் நுழைந்த தென்றலுக்கு கால்கள் அற்றுவிடுவது போல் வலித்தபோதும், பல்லைக் கடித்துக் கொண்டு சுய உதவி குழுவிற்கான வேலையில் மூழ்கினாள்.

''ஏய், தென்றலு! இந்த சோறை தின்னிட்டு வேலையைப் பாரு'' என மூச்சிரைப்பிற்கு ஊடே, உணவைக் கொண்டு வந்து அவள் முன்னே வைத்த பாண்டியம்மாளின் வாயிலிருந்து வசவுகள் ஏதும் வராதது தென்றலுக்கு சந்தோஷத்தைத் தருவதற்குப் பதிலாக வருத்தத்தையே கொடுத்தது.

ஆயாவிற்கு உடம்பிற்கு மிகவும் முடியாமல் போன தால் தான் அவர் தன் நிலையிலேயே இல்லை... நாளைய தினம் அவரை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும் என்ற முடிவுடன், பாண்டியம்மாள் கொண்டுவந்து வைத்த சோளச்சோறை உண்டுவிட்டு, வண்ண வண்ணப் பாசிகள் சேர்த்து செய்யும் கழுத் தணிகளைக் கவனத்துடன் கோர்க்க ஆரம்பித்தாள் தென்றல்.

நள்ளிரவு வரை நீடித்த அவ்வேலையின் பின்னர், சற்றே கண்ணயர்ந்த தென்றலின் நினைவும் கனவும் புதிய நாளாய் விடியப் போகும் தனது பிறந்த நாளைப் பற்றியே இருந்தது.

பெற்றோர் இருக்கும் வரை அவளது பிறந்தநாளின் போது நிலைமைக்கு ஏற்றது போல் ஓர் புத்தாடையும், இனிப்பு என்று சக்கரைப்பொங்கல், கோவிலுக்குச் சென்று ஓர் அர்ச்சனையும் என பொழுது விடியும், எளிமை யான வழியே என்றாலும், அன்றைய தினம் அவளை ஓர் ராணி போல் உணர்வாள் தென்றல், அதிலும், தன் பிறந்த நாள் அன்று வீட்டில் செய்யப்படும் சக்கரைப் பொங்கல் என்றால் அவளுக்கு மிக இஷ்டம், அதைவிட வும் அதை செய்யும் தாயின் மீது கொள்ளைப் பிரியம்.

''அம்மா, தினைக்கும் இந்த சக்கரை சோறு செய்து தறியா?'' என ஆசையாய் கேட்கும் மகளின் தலையை வாஞ்சையாய் தடவிக் கொடுக்கும் தாயார் மரகதம்.

ஒரு நாள் கூட ''இல்லை. முடியாது. நம்மளிடம் பண மில்லை. நமக்கு வாய்த்தது இவ்வளவுதான்'' போன்ற சொற்களைக் கூறியதே இல்லை.



மாறாக, ''காய் வித்து நிறைய பணம் வரும்... அந்த பணம் முழுதும் உனக்கு சக்கரைச்சோறு செய்யத் தான். என்ன தென்றலு!'' என நயமாய் பேசுவாள். அதேபோல், சிறிதாய் லாபம் வந்தாலும் தென்றலுக்கு அன்றைய தினம் ஏதாவது இனிப்பு செய்து கொடுப்பாள்.

தன் மேல் அன்பைப் பொழிந்த தாய், தந்தை இருக் கும் வரை சந்தோஷமாய் கழிந்த பிறந்த நாட்கள் முதல், கடந்த இரண்டாண்டுகளாய் சோழனின் வாழ்த்தைத் தாங்கி வரும் ஒற்றை வாழ்த்தட்டையுடன் கழியும் பிறந்தநாட்கள் வரை பயணித்த தென்றலின் எண்ணங் கள், அடுத்த நாள் வரப் போகும் அவனது வாழ்த்திற்காக அவளை ஏங்க வைத்தது.

நாளைக்குப் பிறந்தநாள் என்ற நிலையில், இன்றே வாழ்த்தட்டை அனுப்பியிருப்பானே? ஒருவேளை, அவன் அனுப்பியது என்று தெரிந்ததும் ஆயா கிழித்துப் போட்டுவிட்டார்களோ? ம்ஹ்ம்ம். ஆயாவிற்குத்தான் எழுத படிக்கத் தெரியாதே... அப்புறம் எப்படி கிழிப் பார்கள்? ஹ்ம்ம்... பக்கத்துக் கடை அண்ணாச்சிக் கிட்ட படிச்சு காட்டச் சொல்லி, சோழனின் பெயரைக் கேட்டதும் கிழித்திருப்பார்களோ? ச்சே, ச்சே, ஏன் இப்படி நினைக்கிறோம்... அவன்மேல் என்னதான் கோபமென் றாலும் ஆயா கடிதத்தைக் கிழிக்கும் அளவிற்குச் செல்ல மாட்டார்கள்... இரண்டு ஆண்டுகளாய் வந்த வாழ்த் தட்டையை கிழித்தா போட்டார்கள்? திட்டினாலும், அதை அவளது கையில் கொடுக்கத்தானே செய்தார் கள்? ஆனால், ஏன் சோழன் இன்னும் வாழ்த்தட்டை அனுப்பவில்லை? என திசையெங்கும் பறந்தன எண் ணங்கள்.

அந்த ஏக்கத்தினூடே எழுந்து, தலைக்கு நீர் ஊற்றி, கோவிலைச் சுத்தம் செய்ய சென்ற தென்றலின் மனது, ஓர் வாழ்த்திற்காக மிகவும் எதிர்பார்த்து காத்திருந்தது.

கோவிலில் வேலை முடிந்து வீடு வந்து சேர்ந்தவள், தந்தையை பெற்றவர்களுக்குத்தான் பிறந்த தேதி ஞாபகம் இருக்குமோ? ஒரு வேளை வாழ்த்துவார்களோ? என எண்ணி சற்றே ஏக்கத்துடன் காத்திருந்தாள்... ஆனால், அவள் வேலைக்குக் கிளம்பும் வரை பாட்டனார் இருமலுடனும், பாட்டியார் மூச்சிரைப்புடனும் போராடிக் கொண்டிருந்ததில் அவளது பிறந்த தினம் அவர்களுக்கு ஞாபகம் வந்ததாய் தெரியவில்லை.

எழுந்த ஏமாற்றத்தை அவர்களது உடல்நிலையை மனதில் கொண்டு ஒதுக்கிவைத்தவள், இன்றைய தினம் ஐந்து நிமிடங்கள் முன்னதாகவே ரோஜா தோட்டத்தை அடைந்து, சுகுணாவின் குணமற்ற பேச்சுக்களிலிருந்து தப்பினாள்.

லேசாய் ஏற்பட்ட வருத்தத்தை கூட்டுவது போல், அவளது நெருங்கிய தோழியான பூங்கொடியோ, பல நாள் பழகிய காசியோ அவளைக் கண்டு கொண்டதாய் கூடத் தெரியவில்லை.

வாழ்த்தட்டை தான் அனுப்பவில்லை, ''ஏதாவது முக்கியமான விஷயம்ன்னா எஸ்டேட் ஆபீஸ்க்குக் கூப்பிடுறேன்'' என்ற சோழன் வேலையிடத்திற்காவது அழைப்பான் என்ற அவளது எண்ணமும் நிறைவேறவில்லை.

இப்படியாக நாள் முழுதும் கழிய, நெஞ்சு முழுதும் வேதனையுடன் வேலையிடத்தை விட்டு வெளியே



வந்தவளை ''தென்றல்'' என்ற ஆழ்ந்த அழைப்பு பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது- இன்ப அதிர்ச்சியில்!

அங்கே சோழனைக் கண்டதும், உடனிருந்தவர்கள் சில பல முணுமுணுப்புகளுடன் விலகிச் சென்றனர்.

''மாமா'' என்ற விளிப்புடன், வேகமாய் திரும்பிய தென்றலின் பார்வை வட்டத்தினுள் விழுந்த சோழன் ''மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துக்கள்!'' என்றான் முகத்தில் விரிந்த முறுவலுடன்.

''வந்து... வந்து... தாங்க்சு... நீ... நீங்க... எங்கன... இங்க... பள்ளிக்கூடம் இல்லையா? எந்நேரம் வந்தீக?'' என அவள் தடுமாற, ''அதெல்லாம் அப்புறம் சொல்றேன். இந்த கவர்-ல புது டிரஸ் இருக்கு... போட்டுட்டு வரியா? பக்கத்தில இருக்க பெருமாள் கோவிலுக்குப் போயிட்டு வரலாம். இல்ல... தோட்டத்தில வேலை இருந்தா ரெண்டு பேருமா போய் பார்க்கலாம்!'' என்றான் அவளது சோழன் நிதானமாய்.

அவனது பிற்பாதி கேள்விகள் அனைத்தும் காற்றில் பறக்க ''புது துணியா? எனக்கா?'' என வெட்கமும், ஆசையுமாய் வினவிய தென்றலுக்குப் பதிலாய் சோழனிடமிருந்து ஓர் புன்னகையே வெளிவந்தது.

''வீட்டுக்குப் போனா சுணங்கிடும். இங்கன இருக்க துணி மாத்துற ரூம்-லேயே மாத்திட்டு ஓடியாந்துறேன்'' என்றவள், சிட்டாய் பறந்தாள்.

பச்சை வண்ணத்தில் அவன் வாங்கி வந்திருந்த சுடிதாரை ஆசையாக வருடிக் கொடுத்தவளின் மனதில் நேற்றிருந்த சலனங்கள் இன்றில்லை. நேசம் மிகவுற அதை அணிந்து கொண்டவள், விரிந்த புன்னகையுடன்

வெளியே காத்திருந்த சோழனிடம் ''ரொம்ப அழகா இருக்கு! உசந்த துணி மாதிரி இருக்கு... அதிக விலையோ? எங்க வாங்கினீக? வத்தலக்குண்டு அண்ணாச்சி கடையிலேயா?'' என்றாள் ஆர்வமாக.

''கோவிலுக்குப் போய் பேசலாமா? யாரோ நானும் நீயும் பேசறதை வெறிச்சு பார்க்கிற மாதிரி தெரியுது! சுகுணான்னு நினைக்கிறேன்...'' என்ற சோழனின் பார்வை சென்ற திசையை கண்டதும்,

''ஹய்யோ! ஆமா மாமா. அவுகளாதான் இருக்கும்... எஸ்டேட் ஆபீஸ் ரூம்-லிருந்து பாக்கிறாக போல... நாளைக்கு ஏழரையை கூட்டிடுவா. நேத்தைக்கே வஞ்சு தீர்த்தா...'' என அவள் பயப்பட,

''நடந்துட்டே பேசலாம்'' என்றவன், ''என்ன சொன்னா அவ?'' என்றான் இறுகிய குரலில்.

நேற்று நடந்ததை சுருக்கமாய் கூறியவள், ''அஞ்சு நிமிஷம்னாலும்... சுணக்கம்... சுணக்கம் தானே. அதுக்காக அவுக வஞ்சது கூட பரவாயில்லை மாமா... அரை நாள் சம்பளத்தைப் புடுச்சுப்புட்டா? கூறுகெட்ட மட்ட...'' என்றாள் நியாயமும், கோபமுமாய்.

''அப்படி இந்த வேலைக்குப் போகணுமா? பேசாம வீட்டில இரேன். எனக்கு வேண்டிய பணத்தை நானே சம்பாதிச்சுக்கிறேன். எனக்காக நீ அவகிட்ட பேச்சு வாங்குறது எனக்கு சுத்தமா பிடிக்கலை...'' என்ற சோழனுக்கு, அவளது உடல் மெலிவும், அதற்கும் மேலாய் அரை நாள் சம்பளத்திற்காக அவள் பட்ட வேதனையும் மனதை அறுத்துக் கொண்டிருந்தது.

அவளது உழைப்பைச் சுரண்டி தின்பது போல் தோன்ற, வேலையை விட்டுவிடுமாறு அவன் கூறியது தென்



றலை தேற்றுவதற்கு பதிலாக வருத்தப்படுத்தியது என்பது ''என்னை வேறாளா ஒதுக்கி வைக்கிறீக தானே? என்னைப் பிடிக்கலையா? உமக்காக நான் ஒண்ணு செய்யக் கூடாதா?'' என்ற அவளது அழுகையில் வெளிப்படவே.

''அப்படி இல்ல, தென்றல்!'' என்ற அவனது எந்த சமாதானமும் அங்கே ஒத்துக்கொள்ளப்படவில்லை.

''நீ கஷ்டப்படறதை பார்த்து... அதுவும் எனக்காக கஷ்டப்படறதைப் பார்க்க எனக்கு வருத்தமா இருக்கு. அதனால தான் சொல்றேன்!''

''நா செய்யாம யாரு செய்வா?'' என்ற அவளது ஒற்றை கேள்வியில் அந்த பேச்சிற்கு முற்றுபுள்ளி வந்தது.

பேச்சு முடிவதற்கும் கோவில் வருவதற்கும் சரியாக இருக்க, இருவருமாய் பெருமாளை வேண்டிவிட்டு, சுற்று பிரகாரத்தில் அமர்ந்தனர். தான் கொண்டு வந்திருந்த பையிலிருந்து சிறு இனிப்பு பெட்டியை எடுத்து, சற்றே தள்ளி அமர்ந்திருந்த தென்றலிடம் நீட்டிய சோழன் ''சக்கரைப் பொங்கல் கடையில விக்கமாட்டாங்க. அதான் வேற வேற இனிப்பா வாங்கினேன்'' என்றான்.

அவனது அச்செய்கையில் நீர் நிரம்பிவிட்டது தென்றலுக்கு. நன்றியோ, மறுப்போ இன்றி அதை கைகளில் வாங்கியவள், சின்னதாய் இருந்த ஓர் இனிப்பு துண்டை வாயில் போட்டுக் கொண்டாள்.

பல நிமிடங்கள் அமைதியில் கழிய, தான் உடுத்தியிருந்த உடையை மெல்ல தடவிக் கொடுத்தவள் ''வேலைக்குப் போனீகளோ?'' என்றாள் அதன் மூலத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு.

''ம்ம்'' என அவன் முடித்துவிட, ''என்ன வேலை?'' எனக் கேட்கும் தைரியம் அவளுக்கு ஏனோ வரவில்லை.

அவன் அப்படி ஒற்றை வார்த்தையில் பதிலை முடிக்கும் போது, அது சம்மந்தமாய் மேலும் கேள்விகள் கேட்டால் அதற்கு பதிலே வராது என்பதை அறிந்தவள் என்பதால், ''இனிமே படிப்பில சூதனமா இருங்க. அதுவரைக்கும் நா பார்த்துக்கிடுதேன்'' என்றதோடு முடித்துக் கொண்டாள் அவள்.

அதற்குப் பதிலேதும் இல்லாமல் போனதிலே அவ னுக்கு அதில் உடன்பாடில்லை என்பது புரிந்தது தென்ற லுக்கு.

அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் அவள் தயங்க, ''அய்யா எப்படி இருக்காக?'' எனக்கேட்டு, அவரது நலம் விசாரித்தான்.

''இந்த மருந்தை வெண்ணித் தண்ணில கலந்து கொடு. நெஞ்சு சளி குறையும். என் பிரண்ட்டோட அம்மா தந்தாங்க'' என ஓர் பாட்டிலை நீட்டியவன், ஆஸ்துமாவிற்கு உபயோகப்படுத்தும் காற்றுடன் சேர்த்து மருந்தையும் கொடுக்கும் எந்திரத்தை பாண்டியம் மாளிடம் கொடுக்குமாறு கொடுத்தான். அதை உப யோகிக்கும் முறையையும் செய்து காட்டியவன் ''இதுக்கு மாசாமாசம் மருந்து மாத்தணும். நா வரும் போது வாங்கிட்டு வரேன்'' என மாதாந்திர தேவைக்கும் வழி கூறினான்.

''இதெல்லாம் எம்புட்டு? ரொம்ப கஷ்டமான வேலையா? படிப்பை கெடுக்காதீங்க... உங்க நல்லதுக்குத்தான்...'' எனத் தென்றல் தயங்க,



''லீவ் நாளில தான் வேலை செய்றேன். அதுவும் நீ செய்ற வேலையை விட சிரமம் கம்மி தான்...'' என்றான் ரோஜாவின் முள் குத்தி, அங்கங்கே காய்த்துப் போயிருந்த கைகளைப் பார்த்தவாறே.

அவனது பார்வை சென்ற இடத்தை ஒதுக்கி, ''இந்த துணி எங்க வாங்கினதுன்னு கேட்டேனில்ல? அண் ணாச்சி கடையிலையா? இம்புட்டு உசந்த துணி வாங் கினா... கட்டப்பை தருவாரே...? தரலையா?'' என்றாள் வெள்ளந்தியாய்.

''இது திண்டுக்கல்-ல வாங்கினது'' என்றவனின் முகம் கனிந்திருக்க, ''உனக்கு எடுப்பா இருக்கு'' என்ற வார்த்தைகள் அவனையும் மீறி வெளியே வந்ததில், தென்றலுக்கு வெட்கம் வந்து குமிந்தது!



# 4

தான் வாங்கிக் கொடுத்த உடை - அவள் மீது நன் றாக இருக்கிறது என சோழன் உரைத்ததும், தென்றலின் கன்னங்கள் நாணத்தைப் பூசிக் கொள்ள, அங்கே வார்த்தைகளும் நாணத்தில் கட்டுண்டு வெளிவராமல் ஓர் மோன நிலையை செவ்வனே உருவாக்கியது.

ஏதோ தோன்ற ''சாப்பிட்டீங்களா?'' என வினவினாள் தென்றல்.

''திண்டுக்கல்லில் துணி வாங்கின கடை பக்கத்தி லேயே ஒரு ஹோட்டல் இருந்துச்சு. அங்கேயே

சாப்பிட்டேன்'' என அவனது நீண்ட விளக்கத்தை தென்றலால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

அவன் கண்டிப்பாக மதிய உணவைப் புறக்கணித்திருக்க வேண்டும் என்றே தோன்றியது. அவன் நிஜமாகவே உணவு உண்டிருக்கும் பட்சத்தில் வெறும் ''ம்ம்'' மட்டுமே வந்திருக்கும்... இப்போது என்னவென்றால் அவள் தொடர்ந்து கேட்கவிருக்கும் கேள்விகளையும் தானே யோசித்து அதற்கேற்றாற் போல் பதில் வேறு தருகிறானே எனத் தென்றலின் சந்தேகம் வலுக்க, அவனை ஓரக்கண்ணால் ஆராய்ந்தாள் அவள்.

அவளது அந்த பார்வையில் பக்கென சிரித்த சோழன் ''கைதியை குறுக்கு விசாரணை செய்யப்போற ஏட்டம்மா மாதிரியே லுக்கை விடுறியே? எழுந்திரு... வீட்டுக்குப் போகலாம். காட்டில உனக்குக் கொஞ்சம் ஒத்தாசையா இருந்துட்டு நான் கிளம்பறேன். நாளைக்குக் காலேஜ் போகணும்'' என்றான்.

''அப்போ, நீங்க உங்கலை தானே?'' என அவள் மேலும் குடைய.

''அடடா சாப்பிட்டேன் தென்றல். நீ வா... இருட்டுறதுக்கு முன்னாடி இங்கிருந்து போகணும்'' என்றவன் முன்னே நடந்துவிட்டான்.

அதற்கு மேல் அவனிடம் வாக்குவாதம் செய்வதும், சுவற்றில் முட்டிக் கொள்வதும் ஒன்று தான் என்பது சிறு வயது முதல் அவனுடனே ஒட்டிக் கொண்டு வளர்ந்த தென்றலுக்குத் தெரியாதா என்ன? ஆகையால் அவனைப் பின் தொடர்ந்தாள் மங்கையாள்.

மலையுச்சியிலிருந்த கோவிலிலிருந்து நான்கு கிலோ மீட்டர்கள் தூரத்திலிருந்த தென்றலின் வீட்டிற்கு



அவர்களை இட்டுச் சென்ற பாதை, ஏகத்திற்கு சரிவாக இருந்தபோதும், தாங்கள் வாழ்ந்த காலம் முழுதும் சுற்றி திரிந்த கிராமம் என்பதால் இருவரும் மின்னல் வேகத்துடன், அதே சமயம் லாவகமாக இறங்கினர்.

இறங்கும் வழியில் சரஸ்வதி (உடன் பணிபுரியும் பெண்) எதிர்ப்பட, அவளுடன் சில நிமிடங்கள் நின்று பேசிய தென்றல், உடன் நடந்து வந்த சோழனின் அருகாமையை இழந்தாள் - ஏனென்றால், பெண்களைப் பேசவிட்டு தான் முன்னே நடந்து விட்டிருந்தான் அவன். பல அடிகள் தள்ளியிருந்தவனை, ஓடிப் போய் பிடிப்பது என்பது முடியாது என்றாகிவிட்டதால், தன் வேகத்திலேயே மலை இறங்கினாள் தென்றல்.

இருள் சூழ துவங்கியிருந்த மாலை வேளையில் குளிரும் அதனுடன் ஜோடி போட, ஸ்வெட்டர் போட்டிருந்த தென்றலுக்கே பற்கள் வெடவெடத்தன. நடுங்கிய தாடையை இறுக மூடிக்கொண்டு, கைகளை மார்பிற்கு குறுக்கே கட்டியவாறு அவள் இறங்கியபோது தான், தன் முன்னே சென்று கொண்டிருக்கும் சோழன் குளிர் போக்கும் உடைகள் எதையும் அணியவில்லை என்பது உறைத்தது அவளுக்கு.

''ஹய்யோ, அவனுக்குக் குளிருமே? என்னுடைய ஸ்வெட்டரை சற்று நேரம் போட்டுக் கொள்ளக் கொடுக்கலாம்'' என்ற கரிசனம் மேலிட, ''மாமா'' என உரக்க அழைத்துக் கொண்டே, தன் வேக எட்டுக்களை மேலும் வேகமாய் போட்டு நடந்தாள்.

சரிவான பாதையில் சாதாரணமாய் நடப்பவர்களுக்கே கால்கள் வேகம் எடுக்கும் என்பது ஒரு புறமிருக்க, ஏற்கனவே வேகமாய் வந்த தென்றலின் வேகத்தை மேலும்

அதிகரித்து. அவளது நடையை அவளது கட்டுப்பாட்டை விட்டு அப்புறப்படுத்தியது அச்சரிவு.

அவளது கூவலில் தன் நடையை நிறுத்தியிருந்த சோழன் ''என்ன தென்றல்?'' என்ற கேள்வியுடன் திரும்ப, நடையில் கட்டுப்பாடில்லாமல் வந்த தென்றல் அப்படியே அவன் மீது சரிந்தாள்.

''ஹே பார்த்து... பார்த்து... என்ன அவசரம்?'' என அவளைத் தன் நீண்ட கரங்களால் பிடித்து நிறுத்தியவனுக்குமே கால்கள் தடுமாற; இரண்டெட்டு பின்னால் வைத்தப்பின்னரே ஒரு நிலைக்கு வந்தான்.

''எதுக்கு இப்படி ஓடிவரே? பூச்சி ஏதாவது கடிச்சிடுச்சா? என்னமா? என்னாச்சு?'' என அவன் கேட்டுக்கொண்டே செல்ல, ஓடி வந்த வேகத்தில் தென்றலுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. நெஞ்சம் வேறு ரயில் பெட்டியாய் தடதடத்து, புதுவித சங்கீதம் படைத்தது.

அவளது முகத்தைப் பார்த்த சோழனுக்கு என்ன தோன்றியதோ, அவளைச் சுற்றி பரவியிருந்த அவனது கரங்களை மேலும் இறுக்கி, அவளைத் தன்னுடன் சேர்த்தான்!

தென்றலின் தலை சோழனின் நெஞ்சருகே இருக்க, அவனது இதயத் துடிப்பை தென்றலுக்குத் துல்லியமாக எடுத்துரைக்கும் வண்ணம், இருவரும் கட்டுண்டு இருந்தனர்.

ஆனால், அணைப்பு என்ற பெயரில் நடந்த இந்த இறுக்கம், தொடர்ந்தது பத்தே வினாடிகள் தான். வளர்ந்த சூழலும், சுவாசித்த காற்றும், பார்த்து பழகிய முகங்களும் உறைக்க, தென்றலைத் தன்னிடமிருந்து



விலக்கியவனின் முகத்தில் வலியின் கோடு ஒன்று எழுந்து மறைய, அதன் இடத்தை இறுக்கம் பிடித்துக் கொண்டது.

மனம் கவர்ந்தவனின் அச்செயலில் முதலில் அதிர்ந்து, பின் திகைத்து, சற்று நேரம் நெகிழ்ந்து, அந்த நெகிழ்ச்சியை நீடிக்க விடாமல் அவனது விலகல் அமைந்ததில் குழம்பிப் போனாள் தென்றல். தன்னை விட்டு விலகி, அதிவேக எட்டுக்கள் போட்டு முன்னே செல்பவனை மனம் வலிக்கப் பார்த்திருந்தவள், தன்னிடமே வெட்கம் கொண்டவளாக தலையை உலுக்கிக் கொண்டாள். அவனது அணைப்பிற்கு ஏங்கிய மனதை, நட்ட நடு ரோட்டில் ஊரார் முன்னிலையில் ஓர் அணைப்பிற்காக ஏங்குவதா? இப்படி எண்ணியது தெரிந்தாலே அம்மா விளாசித் தள்ளியிருக்கமாட்டார்களா? அப்படியா உடலும் மனசும் ஏங்கிப் போயிருக்கிறது? சை சை - எனத் தன்னையே அருவெறுத்தபடி மெல்ல நடந்தவளின் ஓர் ஓரம், அவனுக்காக ஏங்கத் தான் செய்தது!

அந்த ஓரத்தின் பிரதிபலிப்போ அல்லது அவன் குளிரில் நடுங்குகிறானே என்ற கரிசனமோ, அவளை மீண்டும் ''மாமா'' என உரக்க அழைக்க வைத்தது.

சில மணித்துளிகள் முன்னர், அவளது அழைப்பில் நின்ற சோழனுக்கு, இப்போது அவளது அழைப்பு காதில் விழுந்தது போலவே தெரியவில்லை. கை முஷ்டிகள் இறுக, வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான் அவன்.

மேலும் சில முறை அவனை அழைத்துப் பார்த்த தென்றலும், குழம்பிய மனதுடன் கீழிறங்கிச் சென்றாள்.

அவளை விடவும் வேகமாய் வீட்டை அடைந்திருந்த சோழன், முறவாசல் வழியாக உள்ளே செல்லாமல்,

தோட்டத்தைச் சுற்றி போடப்பட்டிருந்த வேலிப்படலை எடுத்துக் கொண்டு தோட்டத்தினுள் நுழைந்தான். அவனது அச்செயலில் மனம் வாடிவிட, அவனைப் பின்பற்றி தோட்டத்தினுள் சென்றவள் ''வூட்டுக்கு வராம இதென்ன புறத்தால் வாரீக? ஆயா வஞ்சா வஞ்சுட்டுப் போகுது... வாங்க'' என்றாள் கெஞ்சுதலாக.

''இல்ல... வேணாம்'' என அவள் முகம் பார்க்காமல் பதில் கூறியவன், அங்கிருந்த அரிக்கேன் விளக்கின் திரியை தூண்டிவிட்டு; அதை ஏற்றினான்.

''சொல்றதை...'' எனத் தென்றல் தொடங்க,

''வேலை முடிஞ்சு நீ இன்னும் வீடு திரும்பலையேன்னு ஆயாவும், அய்யாவும் பதறிப்போயிருப்பாங்க. முதல்ல போய் அவங்களைப் பாரு'' என அவளை விரட்டுவதிலேயே குறியாக இருந்தான்.

''ஹுக்கும், அப்படியே தேடிட்டாலும்... அய்யாவுக்கு அவரோட இருமலோட மாரடிக்கவே நேரம் போதல... அப்புறம் எங்கிருந்து என்னைத் தேடுறது. அவருக்கு நா வாரதும் தெரியாது... போறதும் தெரியாது. வாயில போட்டு மெள்ள ஆளு கிடைக்காட்டி தான் ஆயா என்னைத் தேடும்'' என முணுமுணுத்தவள்,

அந்த வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கத்தால் ''எனக்கு அம்மா முந்தானையில படுத்துக்கணும் போலிருக்கு... அம்மா வேணும்!'' என்றாள் திடீரென்று. கூடவே கண்களில் நீர் வேறு கோர்த்துவிட்டது.

அதுவரை அவளது முகம் பாராமல், தன் வேலையிலேயே கவனமாக இருந்த சோழன், அவளது கண்ணீரைப் பார்த்ததும் பதறிப் போனான். அவளிடம்



நீண்ட கரங்களை மிகுந்த கட்டுப்பாட்டுடன் அடக்கியவன், ''இல்லாதவங்களை நினைச்சு ஏங்குவதை விட்டுட்டு இருக்கிற ரெண்டு பெரிய மனுஷங்களைப் போய் பாரு'' என்றான் கடுமையேறிய குரலில்.

அந்த கடுமை, அவனது உணர்ச்சிகளின் மீது அவனே காட்டிக் கொண்டதா அல்லது தென்றலின் ஏக்கத்தை ஒட்டியே பேசினால் அவளது தவிப்பு அடங்குவதற்குப் பதிலாக அதிகரிக்கும் என்ற எண்ணத்தில் வெளிப்பட்டதா என்பது அவனுக்கே விளங்காத போது, அதை கேட்டிருந்த தென்றலுக்கு மட்டும் எப்படி புரியும்? அவனது கடுமையான பதிலில் அடிப்பட்டுத்தான் போனாள் அவள்.

கண்ணில் இடமில்லாமல் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரை, புறங்கையால் துடைத்தவள் விசிப்பினூடே உள்ளே மறைந்த சில வினாடிகளில் ''என்னடியாத்தா? எம்புட்டு நேரம் சென்னு வாரே? வீட்டுல ரெண்டு பெருசுங்க இருக்கிறது நினைப்பில இருக்குதா இல்லியா? ஆடி அடங்குனதுங்க தானேன்னு பைய வந்தியோ?'' என்ற பாண்டியம்மாளின் அதட்டல் இரண்டு தெரு தள்ளியும் கேட்டது.

அவளுக்குப் பதிலேதும் சொல்லாமல், அடுப்பு வைத்திருந்த ஓரத்திற்குச் சென்ற தென்றல் பாத்திரங்களை ஆராயவும் ''உனக்குப் பொங்கிப் போடத்தான் நா உசிரோட இருக்கேன் பாரு... எம் மகன் போனப்பவே போய்ச் சேந்திருக்கணும். எல்லாம் என் நேரம்... இந்த சிறுக்கி மட்டையெல்லாம் மதிக்காம இருக்கிற நிலையில என்னையே வச்சுப்புட்டியே முருகா... என்னைய வெருசா கூட்டிக்கோடா சாமி'' என அவள் ஓலமிடவும்,

அவளது வார்த்தைகளில் பொதிந்திருந்த தாய் - தந்தை யின் மறைவு தென்றலை மேலும் எரிச்சலடைய வைத்தது. இப்போ என்ன நா

''சத்த நேரம்... சும்மா கிட ஆயா. தெரியணும்... ஏன் லேட்டா வந்தேன்னு உனக்குத் இங்க வந் அம்புட்டுத்தானே? மாமா இன்னைக்கு தோட்டத்துக்குப் பக்கம் திருக்கு. நீ வைவேன்னுட்டு இருக்கு. இரு... வந்துட்டு, அங்க வேலை பார்த்திட்டு நீ மட்டும்... இரு எங்க போறே? அதை வையவா? மகனோட சேர்ந்து இப்போ போய் அதை வஞ்சே... உன் தெரிஞ்சுக்கோ?'' நானும் பரலோகம் போய்டுவேன் எனத் தென்றல் ஒற்றை விரல் நீட்டி மிரட்ட, அவளது முதுகில் பளாரென ஓர் அடி விழுந்தது.

''பரலோகம் போற வயசாடி இது? பாவி மட்ட... நாண்டுகிட்டு செத்துடுவாலாமே... பிள்ளையை வாரிக் கொடுத்திட்டு நிக்கிற என்னையும் அந்த மனுசனையும் அனாதையாக்கப் போறியோ? பேச்சைப் பாரு பேச்சை... சுழண்டு பேசுற நாக்கை இழுத்து வச்சு அறுத்துடுவேன் கழுதை!''.என்ற பாண்டியம்மாளின் முகத்தில் பெரும் பதட்டம், கண்களில் ஆறாய் கண்ணீர், கைகளில் அள விற்கு மீறிய நடுக்கம்.

பெரியவளின் பாசத்தில் தன் எரிச்சலையும், கோபத் தையும் தூர எறிந்த தென்றல் ''மன்னிச்சுக்க ஆயா'' என்றாள் மெல்ல.

''போடி பொட்டக் கழுதை!'' என அவளை விலக்கி விட்டு, செய்து வைத்திருந்த உணவை ஓர் தட்டில் போட்டுப் பேத்தியிடம் நீட்டினாள் பாண்டியம்மாள்.



அதை எடுத்துக் கொண்டு, தென்றல் வாசல் பக்கம் திரும்பவும் ''இது அந்த அனாதைப் பயலுக்கு இல்ல. உனக்கு!'' என்றாள் பாண்டியம்மாள் கடுமை குரலில்.

''என்ன ஆயா?'' எனத் தென்றல் இழுக்க, ''இங்க னேயே உக்காந்து தின்னுட்டுப் போ'' என்றாள் பெரி யவள், உத்தரவாக.

''ஏன் ஆயா? உனக்கு என் மாமாவைப் பிடிக்கல. அது நல்லது ஆயா! பாவம் பசியோட இருக்கும்... மத்தியான மும் உண்காம பட்டினியா கிடக்கு... எனக்கு மனசே ஆறலை ஆயா... அது வயுத்த காயப்போட்டுட்டு எனக் கும் சோறு வேணாம்...'' எனப் பெரியவள் கொடுத்த உணவுத் தட்டை அவளது கையிலேயே திணித்துவிட்டு, வாசல் புறம் சென்றவள்.

''ஆயா, வெளிய வந்து மாமாவை வையாத! ஆமா... சொல்லிப்புட்டேன்'' என்ற மிரட்டலோடு வெளியே விரைந்தாள். கைகளில் தந்தையின் சால்வையும், ஸ்வெட்டரும் இடம் பெற்றிருந்தன.

''பெரிய இவ! இவ சொன்னதும்... நாங்க பேசாம முடங்கிக் கிடக்கணும் போல.. போடி இவளே?'' எனத் தன் போக்கில் பேசிக் கொண்டே சென்ற பாண்டியம் மாள்.

''அவனுக்காக இவ பட்டினி கிடக்குறா... இந்த வயசுல உணவை நறுக்குன்னு அள்ளி உண்ணாம போனா சத்துப்பத்து வருமா? காலையில இருந்து மாடா உழைச்சிட்டு வந்து... வெறும் வயுத்தோட வயலுக்குப் போகுது... அடம் பிடிச்ச கழுத!'' என்ற பேச்சினூடே, இன்னுமொரு தட்டில் சோற்றை போட்டு, வெளியே எடுத்து வந்தாள்.

வாயிலின் தெற்கு மூலையில், அரிக்கேன் விளக்கின் ஒளி தெரியவே ''ஏய் புள்ள... தென்றலு! இங்க வா... இந்தச் சோறை தின்னுட்டுப் போ'' எனக் குரல் கொடுத்தாள் தென்றலின் தந்தை வழிப் பாட்டி.

பாட்டியம்மாளின் குரல் கேட்டபோதும், தெற்கு மூலையில் போட்டிருந்த காரட் செடிகளின் அருகே அமர்ந்திருந்த தென்றல், அவற்றுடன் சேர்ந்து வாய் பேசாது இருந்தாள்.

காரட் செடிகளைச் சுற்றி கொத்தி, உரமிட்டுக் கொண் டிருந்த சோழன், ''ஏய் தென்றல், ஆயா கூப்பிடுறது கேட்கல? என்னன்னு கேளு? ம்ம்'' என அதட்டினான் சோழன்.

அப்போதும் தென்றல் அமைதி காக்க, ''தென்றல், சொல்றது கேட்குதா இல்லியா? என்னையிலிருந்து பெரியவங்களை மதிக்காம இருக்க பழகின? கெட்டப் பழக்கம் தென்றல். போய் சாப்பிட்டு வா...'' என்றவள்,

எதையோ உணர்ந்து கொண்டவன் போல் ''எனக்கு சாப்பாடு போட மாட்டேன்னு சொன்னதால நீ பட்டினி இருக்கியா? தினம் தினம்... உன்னை விட்டுட்டு நான் சுடு சோறு திங்குறேன். ஒரு நாளைக்கு... நீ சாப்பிடு... நான் பட்டினியா இருக்கேன்'' என்றான் அழுத்தமாக.

அப்போதும் அவள் அசையாமலிருக்க ''என் மேல இருக்க மரியாதை அவ்வளவு தானா தென்றல்?'' என்றான் முடிவான கேள்வியாக.

அதில் நிமிர்ந்து, வேக நடையிட்டு பாண்டியம் மாளிடம் சென்றவளின் கண்களிலிருந்த கோபம் பற் தோடியது.



''நல்லவ ஆயா நீயு!'' என உளமார அவரைப் பாராட் டியவாறே, ஓர் துள்ளலுடன் கையிலிருந்த தட்டுகளுடன் தன்னவனிடம் செல்லத் திரும்ப, தன் மோவாயை தோளில் இடித்தவாறே உள்ளே நடையை கட்டிய பாண்டியம்மாளின் வாய் மட்டும் சோழனை வசை மாரிப்பொழிந்து கொண்டே இருந்தது.

தாய் ஸ்தானத்திலிருக்கும் பாட்டி அளித்த உணவில் மகிழ்ந்திருந்த தென்றலுக்கு அவரது வசவு காதிலேயே விழவில்லை என்றால், பெரியவளின் திட்டிற்கு ஏற்றது போல் தான் தன் நிலைமை உள்ளது; அவரது திட்டு நியாயம் தான் என்ற உண்மை சுட்டதில் சோழனும் பேசாமலிருந்தான்.

இரு தட்டிலும் சம பங்காய் உணவிருக்க, தன் தட்டி லிருந்து ஓர் பகுதியை அவனதில் மாற்றியவாறே அவ னிடம் சென்றவளின் முகம் பிரகாசமாய் இருந்தது.

''ஆயா மனசு கேக்காம எதுனா பேசும். ஆனா... நல் லது மாமா'' என சமாதானம் சொன்னவள், ''ம்ம் சாப் பிடு'' எனத் தட்டை நீட்டினாள்.

அவளிடமிருந்து தட்டை வாங்காமல் ''இவ்வளவு நேரம் நான் என்ன சொல்லிட்டு இருந்தேன்னு நினைச்சே? அதையே தான் சொன்னேன்? நீங்க தான்... பெரிய மனுசி ஆயிட்டீங்கல்ல. நாங்க சொல்றதெல்லாம் மண்டை யில ஏறுமா?'' என்றான் குத்தலாக.

அவனது கேள்வியில் மனம் சுட்டபோதும், முன் போல் அழவோ குழம்பவோ எரிச்சலடையவோ செய்யாமல் ''சும்மா, சும்மா... என்னைய எதுனா சுருக்குன்னு சொல் லிக்கிட்டே இருக்கணுமா? இன்னைக்கு என் பொறந்த

நான் தானே... இந்த அழகு மூஞ்சியை சுருக்காம சிரிச்சாப்பல வச்சுக்கிட்டா என்னவாம்? ஒரு நேரம் சிரிச்சா... உனக்கு உடனேயே மண்டக்கிறுக்கு பிடிச்சிடும் போல... உருவிவிட்ட மேளம் மாதிரி வார்த்தையால் அடிக்க வேண்டியது'' என நொடித்தாள் தென்றல்.

அவளது வார்த்தைகளிலிருந்த நொடிப்பிற்கு மாறாக, குரலிலிருந்த சிணுங்கல் சிரிப்பை வரவழைக்க, அதை முயன்று அடக்கியவன், ''நீ சாப்பிடு. நான் கை வேலையை முடிச்சிட்டு சாப்பிடுறேன்'' என்றான் நிமிராமல்.

''ரொம்பத்தான்!'' என சலித்துக் கொண்டவள், உணவை உண்ணத் தொடங்க, ஐந்து நிமிடத்திற்குப் பின்னர் அவளருகே அமர்ந்த சோழன், தனது தட்டை எடுத்துக் கொண்டான்.

தன் தட்டில் நிரம்பியிருந்த உணவிற்கு மாறாய் அவளது தட்டு காலியாக இருக்கவே ''எல்லாத்தையும் எனக்கே வச்சுட்டியா?'' என்றவாறு சிறிதளவு உணவை எடுத்து அவளது தட்டில் இடப்போக,

''நான் சாப்பிட்டேன்'' எனத் தட்டைப் பின்புறம் கொண்டு சென்றாள், அவள்.

''நடந்துவரும் போதே உன்னோட தட்டிலிருந்து என்னோட தட்டுக்கு சோத்தை மாத்தினதை நான் பார்த்துட்டேன்.... ஒழுங்கா வாங்கிக்கோ'' என அவள் மிரட்ட, ''ம்ஹூம்'' என மறுத்தாள் அவள்.

பல நிமிடப் போராட்டத்திற்குப் பின்னர் தன் முயற்சியை கைவிட்டவன், தனக்கு இடப்பட்ட உணவை மௌனமாய் உண்டான்.

பௌர்ணமியாய் ஜொலித்த நிலவின் சாரல்களை விட, அமாவாசையாய் மின்னும் தென்றலின் அன்பு



தூரலில் நனைந்த சோழன் தன்னருகே அமர்ந்திருந்த தென்றலின் மீது அடிக்கொடு முறை பார்வையை வீசினான்!

அவனது பார்வையை உணர்ந்து அவள் திரும்ப, லேசாய் தலையசைத்தவன் ''பொறந்த நாள் அதுவுமா உன்னை சந்தோஷமா வச்சுக்கணும்ன்னு நினைச்சு வந்த நானே கொஞ்சம் கடுசா பேசிட்டேன்... மன்னிச்சுக்கோ! பெரியவங்க மேல மரியாதை இல்லாம பேசுறியேன்னு எனக்கு வருத்தம்... வேறொண்ணுமில்லை. நமக்கு அவங்களை விட்டா வேறு யாரிருக்கா சொல்லு?'' என அவன் மெல்லிய குரலில் மன்னிப்பு கேட்க, அவனது பேச்சுக்களை ''வசவு'' என்ற நிலையிலேயே எடுக்காமல், ''கண்டிப்பு'' என்ற போர்வையிலேயே பார்த்துப் பழகியிருந்த தென்றலுக்கு மனம் மிக மிக லேசாய் பறந்தது!



# 5

✽ திருச்சி ✽

தங்களது துறை மேலாளரின் கடுமையேறிய முகத்தைப் பார்த்த மாணவ மாணவியருக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

நெஞ்சம் கதிரின் மேல் கொண்ட வஞ்சத்தில் தடதடக்க, மித்ராவின் கண்கள் வகுப்பிலிருக்கும் அனை

வரையும் கண்களால் சல்லடை போட்டு, கதிர் என்ற எதிரியை குறி பார்த்தாள்.

ஆனால், ''எங்க போய் தொலைஞ்சான்?'' என மித்ராவை பல்லைக் கடிக்க வைக்கும் வண்ணம், கதிர் வகுப்பிற்கே வரவில்லை. தீப்பிழம்பாய் இருந்த கோபம், எரிமலையாய் வெடிக்க, சுளித்த முகத்துடன் மேலாளரின் முகத்தைப் பார்க்கத் துவங்கினாள் அவள்.

மாணவமணிகளின் எதிர்பார்ப்பை வீணடிக்காமல், ஒரு நாள் படிப்பிற்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதில் தொடங்கி, வகுப்பைப் புறக்கணிப்பதால் அவர்கள் இழக்கும் விஷயங்களை (ஆசிரியர்களின் மனவருத்தம் உட்பட) விலாவாரியாய் எடுத்துரைத்து, இது வரையிலும் தன் தலைமையின் கீழ் படித்த மாணவர்கள் யாரும் இப்படி செய்ததில்லை என்ற பெருமை பேசி, தான் பார்த்ததிலேயே இந்தாண்டு மாணவர்கள் தான் மிக மோசம் என முத்திரை குத்தி, இனிமேல் இதுபோல் தவறு நடந்தால் அனைவரும் ஒரு வாரத்திற்கும் மேலாக இடைநீக்கம் செய்யப்படுவர் என்ற எச்சரிக்கையுடன் விடை பெற்றார் அவர்.

''ஷ் அப்பா!'' என்ற பெருமூச்சுடன், தன் காதிலிருந்த பஞ்சை வெளியே எடுத்த விக்னேஷ், அடைத்திருந்த காதினுள் கையை விட்டு சோம்பல் முறிக்கவும், வகுப்பிலிருந்த அனைவரும் பக்கென்று சிரித்தனர்.

அவர்களது சிரிப்பில் இணைந்து கொள்ளாமல், ''பெரிய தற்காப்பு நடவடிக்கை!'' என எரிந்து விழுந்த மித்ரா, ''எங்க உன்னோட அருமை நண்பன்? இங்க வந்தா எல்லாரும் சேர்ந்து மொத்தி எடுத்திடுவோம்ன்னு பயந்து போய் ஹாஸ்டல்-லேயே உட்கார்ந்திருக்



காணா?'' என்ற வார்த்தைகளால் விக்னேஷை குடைந்து கொண்டிருந்த வேளையில், அவர்களது கணக்கியல் பேராசிரியர் தன் வகுப்பை எடுக்க உள்ளே நுழைந்தார்.

''ஹே மித்து, சித்தாள் வந்துருச்சு. வந்து சீட்-ல உட்காருடி'' எனப் பார்வதி அடிக்குரலில் சீறிப்பாய, பூனை நடையிட்டு தன் இருக்கையை அடைந்த மித்ரா, தன்னை இருத்திக் கொண்டு நிமிரும் வேளையில் வகுப்பு வாயிலில் நின்றிருந்த கதிர், உள்ளே வர அனுமதி கோரினான்.

''பாருடி! கரெக்ட்டா க்ளியர்கேஸ் போனதும் வாரான் பாரு துரை!'' எனப் பார்வதி ஒத்து ஊத, அங்கே பெரும் வன்மம் கிளம்பியது.

உள்ளே வர அனுமதி கொடுத்த ஆசிரியர், கதிர் அவனது இருக்கையில் அமரப் போகையில் தாமதத்திற்கான காரணம் கேட்டார். ஒரு நிமிடம் தயங்கியவன் ''சாரி சார். காலையில காலேஜ் ஆபீஸ்-ல மெஸ் பில் கட்டுவதில் கொஞ்சம் தாமதமாகிடுச்சு. இனிமேல் இதுபோல நடக்காம பார்த்துக்கிறேன் சார்'' என்றான் தடுமாற்றம் சிறிதுமில்லாத குரலில்.

''ஓகே. இன்னுமொரு நாள்... இந்த மாதிரி லேட்டா வந்தால் முழு கிளாஸும் வெளியே நிற்க வேண்டியது தான்'' என அவனுக்கு முதுகு காட்டி நின்றிருந்தவர், கரும்பலகையைப் பார்த்துக் கொண்டே கூறவும் ''சரி சார்'' என உடனே அடி பணிந்தான் மாணவன்.

பத்து நிமிடங்களுக்கும் மேலாக, கரும்பலகையிலேயே தன் கவனத்தை வைத்திருந்த ஆசிரியர், மாணவர்களின் புறம் பார்வையைத் திருப்பி, அனைவரையும் தனித்தனியாய் ஆராய்வது போல் நோட்டமிட்டார்.

''ஹய்யோ... இவர் பார்க்கிற பார்வையைப் பார்த்தாலே பயமா இருக்கே? திட்டினா கூட பரவாயில்லைடா... நான் படிச்ச காலத்திலன்னு ஆரம்பிச்சு... இந்த காலேஜோட ஒவ்வோர் சுவரிலும், செங்கலிலும் என் முகம் தெரிகிறதுன்னு பாடுவாரேடா மச்சி... ஹிட்லர் வரும்போது வச்சிருந்த பஞ்சை தூக்கிப் போட்டுட்டேனே... கடவுளே என்னைக் காப்பாத்து!'' எனத் தன் நண்பனின் காதில் முணுமுணுத்த விக்னேஷ், கணக்கு ஆசிரியரின் முதல் குறியாகிப் போனது விதியின் விளையாட்டு!

''விக்னேஷ்!'' என்ற குரலில், வகுப்பிலிருந்த இரு விக்னேஷ்களும் ஒருவர் மற்றொருவரைப் பார்க்க, ''உன்னைத் தான்... கதிர் பக்கத்தில் உட்கார்ந்திருக்க கே.விக்னேஷ்... எழுந்திரு'' என்றார் அவர் விளக்கமாக.

''போச்சு'' என்ற சொல்லோடு எழுந்து நின்ற விக்னேஷிடம் ''நேத்து, கலையரங்கம் பக்கத்தில உனக்கு என்ன வேலை? உங்க வீடு புதுக்கோட்டை ரோடு பக்கத்தில தானே இருக்கு?'' என அவர் கேள்வியெழுப்ப, வகுப்பிலிருந்த அனைவருக்கும் பயம் பிடித்துக் கொண்டது.

''அது... அது... சார்...'' என இழுத்தவன் ''நான் கலையரங்கம் பக்கத்தில் இருக்க ஆஸ்பத்திரிக்கு வந்தேன்... எங்க பாட்டிக்கு ரொம்ப உடம்பு சரியில்லை சார்... அதான்'' என்றான் ஓரளவு கோர்வையாக.

''ஹோ'' என்றவர், சுருதியை எழுப்பி, ''நீ எங்கம்மா போனே?'' என்றார்.

''நானும் அதே ஹாஸ்பிடல் தான் போயிருந்தேன்... நேத்திலிருந்து எனக்குப் பயங்கர வீசிங் சார்... அதான்



வரலை. விக்னேஷை கூட அங்கே பார்த்தேன் சார்... அவங்க பாட்டியோட உட்கார்ந்திருந்தான்'' என அவள் மேலும் படத்தை ஓட்ட,

''அடக்கடவுளே! ஓவர் ஆக்டிங்-கைப் போட்டு நமக்கு ஆப்பு வச்சுடுவா போலிருக்கே? ஆத்தா... திரிசூலி... தயவு பண்ணி உட்காரும்மா'' எனத் திட்டித் தீர்த்தான் விக்னேஷ் - மனதிற்குள் தான்!

நண்பனின் முகத்தைப் பார்த்துவிட்டு, கதிர் லேசாக சிரிக்க, தன் இடக்காலால் அவனது வலது பெருவிரலை ஓங்கி மிதித்தவன் ''வந்தேன் கொன்றுவேன்'' என மெல்ல முணுமுணுத்தான்.

அந்த சிறு உதட்டசைவு கூட, கணக்காசிரியரின் கண்களில் புள்ளி கணக்கோடு பட்டுவிட, அவனிடம் எதுவும் கேட்காமல் கதிரை எழுப்பிவிட்டார்.

''நீ மற்றவர்கள் மாதிரி இல்லாம படிப்பில் அக்கறை ஜாஸ்தியுள்ளவன் என்று நான் நினைச்சதுக்கு மாறா... நீயும் கிளாஸ் கட் பண்ணிட்டு படத்திற்குப் போயிருக்க? எல்லாரும் ஒரே குட்டையில ஊறின மட்டைங்க தானே! வெயிட் வெயிட்! யாரும் என்கிட்டே பொய் சொல்லி மழுப்பவேண்டாம்...நீங்க சொன்ன கலையரங்கம் பக்கத்தில் இருக்க ஆஸ்பத்திரி-ல தான் என்னோட அப்பாவை செக்-கப்புக்கு அழைச்சிட்டு வந்தேன். நம்ம காலேஜ் பசங்க இங்க என்ன பண்றாங்கன்னு பார்த்தா... பொண்ணுங்க பசங்கன்னு எல்லாருமா சேர்ந்து படத்திற்கு வந்திருக்கீங்க? ஹ்ம்ம்? என்ன சாதிச்சிட்டீங்கன்னு எல்லாரும் கொண்டாடுறீங்க?'' என அவர் போக்கில் பொரிந்து கொண்டே இருக்க,

அவாது கடைசி வாக்கியங்கள் எதுவுமே மாணவர்களின் மண்டையில் ஏறாமல் போகும் அளவிற்கு, "கதிரும் நேற்று கல்லூரி வரவில்லை; அதற்கும் மேலாக அவன் தங்களைப் போட்டுக் கொடுக்கவில்லை" என்ற செய்தி அனைவரது மனதையுமே லேசாக்கியது - மித்ரா உட்பட.

வகுப்பு முடிந்து அவர் வெளியே காலடி எடுத்து வைத்ததும், பின்னிருக்கையில் அமர்ந்திருந்த கதிரிடம் தன் துள்ளல் பார்வையைத் திருப்பிய சுருதி "ஹேய் கதிர்ா தேங்க்ஸ் மேன்!நீ தான்... நாங்க எல்லாரும் கும்பலா படத்துக்குப் போனதை க்ளியர்கேஸ்கிட்ட போட்டுக் கொடுத்துட்டேன்னு நினைச்சோம். பட்... அது சித்ராவோட வேலைன்னு தெரிஞ்சிடுச்சு. சோ சாரி!" என்றாள் நட்புடன்.

"இட்ஸ் ஓகே" என ஓர் வார்த்தையில் அவனிடமிருந்து பார்வையை விலக்கிக் கொண்ட கதிரிடம், சுருதியைப் போல மன்னிப்பு கேட்க மித்ரா தயாராக இல்லை.

"அவன் தப்பு செய்திருப்பான் என்ற எண்ணத்தில் அவன் மீது கோபமிருந்தது. இப்போது அவன் அந்த தப்பை செய்யவில்லை என்ற பட்சத்தில் கோபம் வேண்டுமானால் போய்விடும்... அதற்காக மன்னிப்பு நன்றியுரைத்தல் எல்லாம் வழியல் கேஸ்கள் செய்யும் வேலை" எனத் தோளைக் குலுக்கிக் கொண்டு, தன் வேலையில் ஆழ்ந்து போனாள் அவள்.

தொடர்ந்த இரு வகுப்புகளுக்குப் பின்னர் வந்த தேநீர் இடைவேளையின் போது, எழுத வேண்டிய ரெக்கார்ட்



ஒப்படைப்பை முடிக்கும் வேகத்திலிருந்த மித்ராவின் காதுகள் மட்டும் கதிருடன் சிலர் நடத்தும் உரையாடலின் மீதே இருந்தது.

"அவன் ஏன் திரைப்படத்திற்கு வரவில்லை" என்ற சாரம்சத்துடன் விதவிதமாய் வந்து விழுந்த எல்லா கேள்விகளுக்கும், சின்னதாய் மட்டும் சிரித்தவன், "எனக்கு கொஞ்சம் வெளி வேலை இருந்தது" என்றான் ஒரே பதிலாய்.

என்ன தான் குடைந்தபோதும், அவனிடமிருந்து வேறெந்த வார்த்தைகளும் வெளிவரப் போவதில்லை என்பதை உணர்ந்தவர்கள், மெல்ல கலைய, மித்ராவும் தன் கவனத்தைக் கதிரிடமிருந்து விலக்கிக் கொண்டாள்.

இடைவெளி முடிந்து, கதிரின் அருகே வந்தமர்ந்த விக்னேஷ், சற்று நேரம் வம்பளந்து விட்டு, "மெஸ் பில் கட்டிட்டியா? கட்டலைன்னா சொல்லு... என்கிட்டே இருக்க பணத்தைத் தரேன்... ஹேய் இரு இரு... பணம் கைக்கு வந்ததும் திருப்பிக் கொடுத்திடலாம்... அதுக்குள்ளே வேங்கை மாதிரி பாயுறே?" என்றான் மெல்லிய குரலில்.

கூடவே, "பணம் தருகிறேன்" எனத் தான் சொன்னதும் கண்களில் உஷ்ணத்துடன் தன்னைத் தாக்கத் தயாராக இருந்த நண்பனைத் தடுத்தான், அவனது வகுப்புத் தோழன்.

சில நிமிட மௌனத்திற்குப் பின்னர் "இல்லைடா, பணம் வேண்டாம்!" என்றான் கதிர், அழுத்தமாக.

"ரொம்ப ஓவரா பண்ணாதேடா. தேவையான நேரத்தில் உதவுறதில் என்னடா தப்பிருக்கு? என்னதான் தன்மானமோ? தன்னம்பிக்கையோ? இந்த விஷயத்தில

எங்கம்மாவும் உனக்கு சப்போர்ட் பண்றதில் தான்டா
எனக்கு இன்னும் கோபம் வருது?'' எனப் பொரிந்து
தள்ளிய நண்பனின் கைகளைப் பிடித்து அழுத்தியவன்,

''ஹே ரொம்ப டென்ஷன் ஆகாதே விக்கி! மெஸ் பில் கட்டிட்டேன்! அடுத்த மாசம் வேணும்னா உன்கிட்ட வாங்கிக்கிறேன்'' என்ற சமாதானத்தோடு இடைப்புகுந்தான்.

''இதை... ரோட்-ல போற ஏதாவது கேனை கிறுக்கு கிட்ட சொல்லு... அது நம்பும்! நான் நம்ப மாட்டேன்!'' என நம்பாத பாவனையில் விக்னேஷ் தோள்களைக் குலுக்க, கதிரின் பதில் சிறு புன்முறுவலாய் மட்டுமே இருந்தது.

தொடர்ந்து ''ஹே, நீ இதுக்காக ரோடு வரைக்கும் எல்லாம் போக வேண்டாம். நம்ம கிளாஸ் பொண்ணுங்ககிட்டயே கேட்கலாம். அதுங்களும் கேனைக் கிறுக்கு பாடத்தில் பட்டம் பெற்றவர்கள் தான்!'' என விக்னேஷ் முகத்தைப் பிரகாசமாக வைத்துக்கொண்டு சொல்ல, நண்பர்கள் இருவரும் ஒருங்கே சிரித்தனர்.

''ஹே சொல்ல மறந்துட்டேன்! இந்த வாரம் அம்மா உன்னை வீட்டுக்கு வரச் சொன்னாங்கடா. எதுக்குன்னு தெரியல... என்னோட யூகத்தின்படி உன்னோட பார்ட் டைம் வேலை விஷயமா தான் இருக்கணும். அம்மாக்கு நீ... அந்த கந்தப்பன்கிட்ட செய்ற வேலை சுத்தமா பிடிக்கலை'' என்றவனிடம்,

''இந்த ஞாயிற்றுக்கிழமை கொஞ்சம் வேலையிருக்குடா. சனிக்கிழமை சாயங்காலமா வரட்டுமா?''

''எனக்கு எந்த பிரச்சனையுமில்லை. அம்மாவும் புரிஞ்சுப்பாங்க. உன்னால முடியும்போது வா...'' என



அத்தோடு அப்பேச்சுவார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைத்தவர்களின் கவனம் எட்டுத்திசையெங்கும் விரவி பரவியது!

அந்த சம்பவத்தின் பின்னர் ஏழெட்டு வாரங்கள் வேகமாய் உருண்டோட, ஒரு நாள் கல்லூரி நேரம் முடிந்து வெளியே வந்தவர்கள் தங்கள் நடையை உணவகம் நோக்கிச் செலுத்திய வேளையில் ''பாரு, நிறுத்தப் போறியா இல்லியா?'', எனக்கு கோபமா வருது பார்வதி... ஜஸ்ட் ஸ்டாப் இட்'', ''ஹே சொல்லிட்டே இருக்கேன் இல்லை... நிறுத்து நிறுத்து... எனக்கு அவனைப் பிடிக்கலைன்னு ஒரு தடவை சொன்னா உனக்குப் புரியாதா?'', ''ஹே எனக்குக் குரல் நடுங்க ஆரம்பிக்குது... வேணாம்!'' போன்ற உரையாடல்களின் மூலதனமாய் மித்ரா அமையப் பெற்றிருக்க, அதனூடே பார்வதி மற்றும் சில பெண்களின் கேலிப்பேச்சுக்கள் சர்வசாதாரணமாய் அரங்கேறிக் கொண்டிருந்தது.

முன்னே நடந்த கதிரின் கைகளைப் பிடித்து நிறுத்திய விக்னேஷ் அவர்களது சம்பாஷணையை ரசிக்க ஆரம்பிக்க, ''பொறுக்கி மாதிரி நடந்துக்காதேடா... வந்து தொலை'' என அவனை இழுத்தான் மற்றவன்.

''ஹே இருடா... ஒரே நிமிஷம் இரு... பிரஷாந்த் மித்ராக்கு லவ் லெட்டர் கொடுத்திருக்கான் போல... மச்சக்காரன்டா! இந்த மித்ரா லூசுக்கு அது பிடிக்கலை போல... கூடியிருக்க எல்லாம் சேர்ந்து அவளைக் கலாய்ச்சுக்கொட்டுதுங்க'' என அவன் சுவாரஸ்யமாய் விவரிக்க,

''அது அவங்களோட பர்சனல் விஷயம். அதை போய் ஒட்டுக் கேட்டுகிட்டு?! சை வா!'' என்று கதிர் தலையில்

அடித்துக் கொண்டு அவனை வம்படியாய் இழுத்துச் சென்றான்.

ஒரு வழியாக, டீ மற்றும் வடையை இருவரும் ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தபோது ''ஹே விக்னேஷ்! கதிர்! இங்க வாங்க... சீக்கிரம் வாங்கப்பா... ஹய்யோ கடவுளே... இங்க இந்தப்பக்கம்... லெப்ட் சைடுல பார்வதி கூப்பிடுறேன் பாரு... மித்ரா ஒரு மாதிரி அப்நார்மலா இருக்கா!? முகமெல்லாம் சிவந்து தீ மாதிரி இருக்கு... அவளைத் தொட்டா எங்களை அடிக்கிறா... பேசவே மாட்டேங்கிறா... கண்ணு ரொம்ப ரெட் ஆயிடுச்சு! சீக்கிரம் வாங்க!'' எனக் கூவினாள் பார்வதி.

# 6

✸ திருச்சி ✸

மித்ராவின் உடல்நிலை / மனநிலையைப் பற்றி பெண்கள் வந்து சொன்னதும், இரு ஆண்களும் மித்ரா அமர்ந்திருந்த இடத்திற்கு விரைந்தனர்.

பார்வதியின் வார்த்தைகளிலிருந்து ''மித்ரா ஏதோ கோபமாக பேசியிருப்பாள். அதை இந்தப் பெண்கள் தேவையில்லாமல் பெரிதுபடுத்துகின்றனர்'' என்ற எண்ணத்தில் தான் கதிர் அங்கே சென்றதே. ஆனால், அங்கே மித்ரா அமர்ந்திருந்த நிலையைக் கண்டதும் பெரிதாய் அதிர்ந்தான் என்று தான் சொல்லவேண்டும்!



அவளது உடம்பு அளவிற்கு மீறிய நடுக்கத்தில் தூக்கிப் போடுவது அப்பட்டமாய் வெளியே தெரிய, காது மடல் தொடங்கி நெற்றி, கன்னம், மூக்கு என முகத்தின் அனைத்து பாகங்களும் கோவைப்பழமாய் சிவந்து போயிருக்க, அவளது கைகள் இரண்டும் இறுக மூடப்பட்டிருந்தன. மூடியிருந்த கைகளின் வெளுப்பு அவளது கோபத்தை வெளிக்காட்ட, கதிரின் உள்ளம் பதறியது.

விளையாட்டு வினையாகும் என்றெண்ணாமல் அவளது மனதை மிகவும் புண்படுத்திவிட்டனர் போலவே? அவளது மேனி அதிர்ந்து உதறுவதைப் பார்த்தால் அவர்களது வார்த்தைகளை அவளை மிகவும் நோகச் செய்திருக்குமோ? எனப் பல கேள்விகள் மனதில் வண்டாய் ரீங்காரமிட, மித்ராவிடம் பேசுவதற்கு முன்னர் பார்வதியை தனியே அழைத்தான்.

''என்ன நடந்ததுன்னு மறைக்காம சொல்லு பார்வதி? மித்ரா இவ்வளவு கோபப்படும்படி என்ன சொன்னீங்க? அது தெரிஞ்சா... அதை ஒட்டியே பேசி அவளை சம நிலைப்படுத்த சுலபமா இருக்கும்'' என அவன் மெல்லிய குரலில் வினவ,

''அது... அது வந்து கதிர்'' என மென்று முழுங்கி தவித்து தண்ணீர் குடித்தவள் ''பிரசாந்த் மித்ராக்கு லவ் லெட்டர் கொடுத்திருக்கான். ஆனா... மித்ராக்கு அவனை சுத்தமா பிடிக்கலை'' என இழுத்து நிறுத்தினாள்.

''மித்ராவின் கோபத்திற்கு இது மட்டுமே காரணமில்லை... மேலும் ஏதோ நடந்திருக்கிறது'' என்றெண்ணிய கதிர், ''அவனைப் பிடிக்கலைன்னு சொன்னதை மீறி... அவளையும் பிரசாந்தையும் ஒட்டி எடுத்தீங்களா?'' என்றான் கேள்வியாக.

பார்வதி பதில் சொல்லும் முன்னர், ''சும்மா நடந்ததை பேசி நேரத்தை வீணடிக்காதே கதிர். மித்ராவைப் பார்க்கலாம். கொஞ்ச நேரம் போனா... இப்போ சிகப்பா இருக்கவ பச்சையா மாறிடப்போறா!'' என்றான் விக்னேஷ் பயந்த குரலில்.

''என்னடா சிகப்பு, பச்சைன்னுட்டு!?''

''அதான் மாப்ள. இப்போ கோபத்தில சிவந்து போயிருக்கவ, கோபம் ஜாஸ்தியாகி பச்சை பச்சையா பேசி நம்மளை வறுத்துடப்போறா.''

''நிலைமையோட தீவிரம் தெரியாம இவன் வேற!'' என சலித்துக்கொண்ட கதிர், மித்ராவை நெருங்கிய போது அவளது மற்றொரு தோழி சுருதி ''ஹே மித்து! என்னடி? ஏன்டி இப்படி பேய் மாதிரி முழிக்கிற? எங்களுக்கு பயமா இருக்கு மித்து... ப்ளீஸ் பேசுடி'' என அவளது தோளைத் தொட, அவளது கையை வேகமாய் தட்டிவிட்ட மித்ரா '' எனக்கு கோபமா வருது... போய்டு.... போய்டு'' என்றாள் குரல் நடுங்க.

குரல் மற்றும் உடலின் நடுக்கத்தைக் குறைக்க, பற்களால் உதட்டைக் கடித்தவள், கைகளை மேலும் இறுக மூடிக் கொண்ட மித்ராவின் பின்புறம் நின்று,

''யாருடா அது பிரஷாந்த்? உனக்கு கொஞ்சமாவது அறிவிருக்கா? யார்கிட்ட வந்து லவ் லெட்டர் கொடுத்திருக்கே? அவளுக்குத் தான் உன்னைப் பிடிக்கலை என்று ஊருக்கே தெரியுதே? உனக்குத் தெரியலையா? இல்ல... தெரிஞ்சுக்கிட்டே அவகிட்ட லவ் ப்ரொபோஸ் பண்ணியா? மித்ரா அப்படிப்பட்ட பொண்ணு இல்லைடா... படிக்கும் போதே... லவ் எல்லாம் பண்ண மாட்டாள். ஒழுங்கா உன்னோட லவ் லெட்டரை



எடுத்துக்கிட்டு ஓடிப் போய்டு!'' எனக் குரல் உயர்த்தினான் கதிர்.

அவனது பேச்சு முடியும் போது மித்ராவின் முகம் அவன் பக்கம் திரும்பியிருந்தது. கண்களில் கோபத்தைத் தேக்கி ''உனக்கு அவனைத் தெரியுமா? லெட்டர்-ல அசிங்க அசிங்கமா எழுதியிருக்கான். இவங்களும் எனக்கு அதெல்லாம் உள்ளுக்குள்ள பிடிச்சிருக்கு... சும்மா வெளிய பிடிக்காத மாதிரி சீன் போடறேன்... எனக்கும் ஆசையிருக்கு... காதலிருக்கு... கருமமிருக்குன்னு சொல்லிட்டே இருக்காங்க. எனக்கு எரிச்சலா வருது... அவனை அடிக்கணும்... இவங்களை அடிக்கணும் போல கோபமா வருது!'' என்றாள் வேகமாக.

''நீ அடிக்க வேண்டாம். உன் சார்பா நானும் விக்னேஷும் அடிச்சிடுறோம். என்ன சரியா? நானும் அவனும் உன்னை விட பல சாலிகள் இல்லையா? அதனாலே நாங்களே அடிச்சுடுறோம். என்ன சொல்ற?'' என அவளை ஒட்டியே கதிர் பேச,

''பலசாலி கூட்டணில நீ எதுக்கு சம்மனில்லாம சேர்ந்துக்கிறே? இது தான் சைக்கிள் கேப்-ல ஆட்டோ ஓட்டுறதா? இந்த ஒல்லிப்பச்சானை நம்பாதே மித்ரா. நான் ஒருத்தனே பத்து பேருக்கு சமம்... எல்லோரையும் அடிச்சு துவம்சம் பண்ணிடுறேன்'' என்றான் விக்னேஷ் காலரை தூக்கிவிட்டுக்கொண்டு.

''ஹ்ம்ம் ஆமா! கதிர் உனக்கு உடம்பே இல்லை... பிரஷாந்த் அடிச்சா ரெண்டு நாள் படுக்கையை விட்டே எழுந்துக்க மாட்டே! அதனால் விக்னேஷே போகட்டும்'' என்றாள் மித்ரா, யோசனையாக.

''அடிப்பாவி!'' - கதிர் வியந்து கொண்டிருக்கையில், சைக்கிள் கேப்-ல சைக்கிள் மட்டுமே ஓட்டும் விக்னேஷிடம் திரும்பிய மித்ரா ''பார்க்கிறதுக்கு வில்லன் மாதிரியே இருக்கியே? அவனை அடிச்சிடுவியா இல்லை நீயும் அவனோட கூட்டா?'' என்றாளே பார்க்கலாம்.

கதிர் பக்கென சிரித்துவிட, ''ஹே! இவளுக்குப் போய் ஹெல்ப் பண்ண வந்தோம் பாரு. நம்மளை... நம்மளை கேண்டீன்-ல போடற புரோட்டாவாலேயே அடிச்சுக் கணும்'' என்றான் விக்னேஷ் கடுப்புடன்.

''விக்கி விடுடா. மித்ரா ரொம்ப சீரியசா பேசுற மாதிரி இருக்கு. சும்மா ஜோக் பண்ணாதே!'' என நண்பனை அடக்கிவிட்டு,

''கண்டிப்பா அவனை அடிச்சுடலாம். உனக்குத் தான் அவனை பிடிக்கலையே அப்புறம் அவன் கொடுத்த லவ் லெட்டரை கிழிச்சுப் போடவேண்டியது தானே?'' என அவளைத் திசை திருப்பினான்.

''ம்ம். கிழிச்சுப் போடணும்...'' எனக் கண்கள் மின்ன கூறியவள்,

''ஆனா, அவன் எப்படி லவ் லெட்டர் கொடுக்கலாம்? நான் போய் ஹெட்ச்.ஓ.டி கிட்ட கம்ப்ளைன்ட் பண்ணப் போறேன்... அதுக்கு இந்த லெட்டர் வேணும். கிழிக்க மாட்டேன். அவனையும் சரி, நான் இல்லை இல்லைன்னு சொன்னதுக்கு அப்புறமும் என்னை எரிச்சல் பண்ணிய இவங்களையும் சரி மாட்டித்தான் விடப்போறேன். எனக்குப் பிடிக்கலைன்னா விட வேண்டியது தானே? சும்மா சும்மா... என்னையும் அவனையும் சேர்த்து பேசிட்டே இருக்காங்க. ரியல்லி இர்ரிடேடிங்!'' என்றாள்



மித்ரா முகத்தைச் சுளித்து. சற்றே வடியத் துவங்கியிருந்த மித்ராவின் கோபம், மேலும் ஏறுவதை கதிரால் உணர முடிந்தது.

அவளை இங்கிருந்து உடனடியாக கிளப்பிவிட வேண்டும் என்றெண்ணியவன், விக்னேஷிடம் ''என்ன செய்யலாம்?'' எனக் கண்களால் கேள்வி கேட்க,

அந்த இடைவேளையில் ''இவளுக்கு நிஜமாவே லூசு தான் பிடிச்சிருக்கு. சும்மா விளையாட்டுக்குப் பேசுறதை யெல்லாம் சீரியசா எடுத்துக்கிட்டு... என்னமோ உயிரே போற மாதிரி கத்துறா? ஹெட்ச்.ஓ.டி கிட்ட கம்ப்ளைன்ட் வேற செய்வாளாம்? ஸ்டுபிட்'' என சத்தமாகவே முணு முணுத்த சுருதி, ''ஹே வாங்கடி போகலாம். இவ... பெரிய இவ... ஒரு கிண்டலை கிண்டல் என்று ஜாலியா எடுத்துக்கத்தெரியாதவள் கிட்ட என்ன பேச்சு வேண்டி யிருக்கு?'' என மற்றவர்களையும் அழைத்துச் சென்று விட்டாள்.

''என்னடா விக்கி இது? அவங்க பாட்டுக்குப் போய்ட் டாங்க?'' என கதிர் விழிக்க, ''அவங்க சொல்றதில் என்ன தப்பிருக்கு!?'' என்றான் விக்னேஷ்.

நண்பர்கள் இருவரின் சம்பாஷணையும் உதட்டள வில் நடந்து கொண்டிருக்க, ''செஞ்சது தப்பு?!'' அதை ஒத்துக்க முடியாம ஓடறாங்க...'' எனப் பல்லை கடித்த மித்ராவின் உதடுகளிலிருந்து கசிந்த உதிரம், அவளது கோபத்தின் வேகத்தை எடுத்துரைத்தது.

''சரி மித்ரா. எதுவாக இருந்தாலும் நாளைக்கு ஹெட்ச். ஓ.டி வந்த பிறகு தான் பேசமுடியும். இப்போ வீட்டுக்குக் கிளம்பிப் போ!'' என்றான் கதிர், முடிவாக.

''ஹ்ம்ம். போறேன். போய்... எங்கப்பாகிட்ட சொல்லி அவரையும் கூட்டிட்டு வந்து கம்ப்ளைண்ட் பண்றேன்'' என்ற குளுரையுடன் எழுந்த மித்ராவை விடுத்து,

தனது நண்பனைப் பார்த்த கதிர், ''சரிடா கிளம்பலாமா? அவ வீட்டுக்குப் போகட்டும்'' என்றான், தங்களது வேலை முடிந்தது போல்.

''ஹே இருடா கதிர். எனக்கு என்னமோ அவளைப் பார்த்தா கொஞ்சம் கலவரமாவே இருக்கு... அவளை வீட்டில விட்டுட்டுப் போகலாம்டா. அவ பிரெண்ட்ஸ் தான் போய்ட்டாங்க... நாமளும் இப்படியேவா விட்டுட்டுப் போகமுடியும்'' என விக்னேஷ் பதறினான்.

''அதுக்குத் தான்... அவங்க போனபோதே என்னடா இது... அவங்களை நிக்கச் சொல்லு என்று சொன்னேன். நீ தான் அவங்க மேல என்ன தப்பிருக்குன்னு ஞானி மாதிரி பேசினே? இப்போ பார்த்தியா?'' என்ற நண்பனின் புலம்பலை ஒதுக்கி, மித்ராவின் வண்டியை கதிரை ஓட்டச் சொல்லிவிட்டு, அவளையும் தன்னையும் ஓர் ஆட்டோவினுள் புகுத்தி, மித்ராவின் வீடு நோக்கிப் போகச் செய்தான் விக்னேஷ்.

மித்ராவின் வீட்டிற்குள் மூவரும் நுழைந்தபோது, மித்ராவின் பெற்றோர் இருவரும் தங்களது மாலை நேர மருத்துவமனைக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். எப்போதும் பரபரப்புடன் வரும் மகள், இன்று இறுகிய முகத்துடன் வந்திறங்கிய, அதுவும் ஆட்டோவில் ஓர் ஆணுடன் வந்திறங்கிய மகளின் முகத்தைப் பார்க்கையில் மகாராணிக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

நெஞ்சம் தடதடக்க, ''என்னாச்சு மித்து குட்டி?'' என அவர் மகளைத் தன் தோளில் சாய்த்துக்கொள்ள,



சிவசுப்ரமணியம் விக்னேஷ் மற்றும் கதிரை கேள்வியாய் நோக்கினார்.

விக்னேஷ் நடந்ததை சொல்லத்தொடங்கும் முன்னர், தன் பையிலிருந்த காதல் கடிதத்தை எடுத்து விசிறி அடித்தவள், ''பிரஷாந்த் இருக்கானில்ல... அவன்... அந்த இடியட்...'' என தன் பலம் முழுதையும் குரலில் கூட்டி, மூர்க்கமாய் பேச ஆரம்பித்தாள்.

''ப்ளீஸ் மித்து! அமைதியாக இரு... ப்ளீஸ் அம்மா கூட வா...'' என அவளை இழுக்காத குறையாக மகாராணி அழைத்துச் சென்றுவிட, விக்னேஷின் முகத்தில் பயத்தையும் கதிரின் முகத்தில் யோசனையையும் கண்ட சிவசுப்ரமணியம், மீதி விவரம் கேட்டார்.

நடந்ததை இரத்தின சுருக்கமாக சொல்லி முடித்த கதிரிடம் மனதார நன்றி கூறிய சிவசுப்ரமணியம், ''நீங்க மட்டும் அவளை ஒட்டிப் பேசாம இருந்திருந்தா இந் நேரம் அவளை ஹாஸ்பிடல்-ல தான் பார்த்திருக்கணும். ரொம்ப நன்றி தம்பி'' என்றார் உளமார.

''என்ன அங்கிள் சொல்றீங்க? அவளுக்கு அளவிற்கு அதிகமான கோபம் அவ்வளவு தான்... நாங்க வரலை என்றாலும் அவ சரியாகி இருப்பா'' என விக்னேஷ் குறுக்கிட,

''இல்லப்பா. நீங்க நினைக்கிற மாதிரி இல்லை. அவளுக்கு ரத்த அழுத்தமிருக்கு. அவளுக்குப் பிடிக்காத விஷயத்தையோ, இல்லை அவ சொல்றதை மீறி நாம ஏதாவது செய்துட்டாலோ அவளுக்கு சட்டுன்னு ரத்த அழுத்தம் ஜாஸ்தியாகிடும்'' என்றார் வேதனையுடன்.

''ரத்த அழுத்தமா?! இந்த வயசிலா? எப்போவிலிருந்து?'' நண்பர்கள் இருவருமே கூவினர்.

"ம்ம் ஆமா!"

"சின்ன வயசிலிருந்தா அங்கிள்? என்ன பிரச்னை? ஏதாவது ட்ரீட்மென்ட் செய்தீங்களா? ரெண்டு பேரும் டாக்டர்ஸ் தானே? ஏன் ட்ரீட்மென்ட் பண்ணாம இருக்கீங்க?" என விக்னேஷ் படபடக்க.

"சொல்லணும் என்றால் சொல்லுங்க அங்கிள். எந்த கட்டாயமுமில்லை" என்ற கதிர், அவர் தயங்கவும் "மித்ராவைப் பார்த்துக்கோங்க... நாங்க கிளம்புறோம்" என எழுந்துவிட்டான்.

"உட்காருங்க தம்பி! இது ஒண்ணும் தேவ ரகசியமில்லை" என்றவர், "அவளோட இதயத்திற்கு ரத்தம் கொண்டு போற ரத்தக்குழாய் எல்லாருக்கும் அமையிற மாதிரி இல்லாம வித்தியாசமா இருக்கும். கொஞ்சம் நாரோவா (narrow/obstruction of aorta)... அப்படி இருக்கிறவங்களுக்கு ரத்த அழுத்தம் இயற்கையாகவே இருக்கும். அதோட அவளோட பிடிவாதம், ஒரே பெண் குழந்தை என்று நாங்க கொடுத்த செல்லம் எல்லாம் சேர்ந்து அவளை சில சமயம் வயலன்ட் ஆக்கிடுது" என்றார் வேதனையுடன்.

"கோபம் சரி அங்கிள்... ஆனா அவ முகமெல்லாம் ஒரு மாதிரி சிவப்பாகிடுதே. இன்னைக்கு நாங்களே பார்த்தோம்... உடம்பில் இருக்க மொத்த ரத்தமும் முகத்தில் பாய்ஞ்சு, அவளைப் பார்க்கவே ரொம்ப பயமா இருந்தது" என விக்னேஷ் தனது சந்தேகத்தைக் கேட்க,

"அந்த ரத்தக்குழாய் இடது கைக்கு ரத்தம் கொடுக்கிற இடத்தில தான் ஒரு மாதிரி சுருங்கி இருக்கும்... அவளுக்கு அதிகமா கோபப்படும் போது, உடம்போட கீழ் பாகத்திற்குப் போக வேண்டிய ரத்தம் அப்படியே தடை



பட்டுடும் தம்பி. தடைபட்ட ரத்தம் அப்படியே மேல பாஞ்சு முகத்தில் தங்கிடும்" என அவர் மருத்துவ முறையில் விளக்கியது இருவருக்கும் அவ்வளவாக புரியவில்லை என்றபோதும், மித்ராவின் மீது சட்டென ஓர் நல்லெண்ணம் எழுவதை இருவராலும் உணர முடிந்தது.

"அவ மனசுக்கு சரின்னு பட்டதை அவ செஞ்சே ஆகணும்... அதே மாதிரி அவளுக்குப் பிடிக்கலை என்று தெரிஞ்சும் நாம அந்த காரியத்தை செய்துட்டா ரொம்ப டென்ஷன் ஆகிடுவா. அந்த நேரத்தில் அவ பேசுற வார்த்தைகள், செய்ற செயல்கள் இது எதுவுமே அவளுக்குப் புரியாது. கோபம் தணிஞ்ச பிறகு, தான் பேசினதை நினைச்சு கண்டிப்பா வருத்தப்படுவா..." என மகளைப் பத்தி விலாவாரியாக விளக்கியவர்,

"மித்துவைப் பத்தி சரியா தெரிஞ்சுக்காதவங்க கண்டிப்பா அவளைத் தப்பா தான் நினைப்பாங்க. மத்தவங்க எண்ணத்தைப் போய் மாத்தமுடியாதுன்னு நாங்களும் அப்படியே விட்டுடுறது. இதெல்லாம் உங்ககிட்ட ஏன் சொல்றேன்னா, உங்ககிட்ட அவ ஏதாவது தாறுமாறாக கத்தியிருந்தா அதுக்கான மன்னிப்பா தான்" என்றார் வருத்தம் மேலிட்ட குரலில்.

"அதெல்லாமில்லை அங்கிள். அவ எங்களை எதுவுமே சொல்லலை. அப்படியே சொல்லியிருந்தாலும், இப்போ நீங்க அவளோட உடல்நிலையைப் பத்தி சொன்னதில் அந்த கோபமெல்லாம் மறைஞ்சே போய்டுச்சு" என்றான் விக்னேஷ் அவசரமாக.

சற்று நேர அமைதிக்குப் பின்னர், "நாங்க கிளம்பறோம் அங்கிள். விக்னேஷ் வேற காலேஜ் போய்...

அங்கிருக்க அவனோட வண்டியை எடுத்துட்டு வீட்டுக்குப் போகணும்'' என வெளியே செல்ல எத்தனித்த கதிரை முன்னே விட்டு,

பின்னே நடந்த விக்னேஷ் மித்ராவின் தந்தையிடம் திரும்பி ''அங்கிள், எனக்கு என்னவோ மித்ராக்கு யோகா, தியானம் மாதிரி விஷயங்கள் மூலமா ஒரு நல்ல தீர்வு கிடைக்கும்ன்னு தோணுது'' என்றான் அக்கறையுடன்.

''ஹ்ம்ம். அவளுக்கு அதில விருப்பமிருக்க மாதிரி எனக்குத் தெரியலை... ஏன்னா நாங்க ரெண்டு மூணு தடவை யோகா கிளாஸ் சேர்த்துவிட்டிருக்கோம்... ஆனா பிடிக்கலைன்னு வந்துட்டா'' என அவர் தந்தையாக கவலைப்பட,

''எங்கம்மா கூட யோகா டீச்சர் தான் அங்கிள். எங்கம்மாவைப் பார்த்த யாருமே பிடிக்கலைன்னு திரும்ப மாட்டாங்க அங்கிள்... ஐ பெட்!'' என கர்வமாய் நெஞ்சு நிமிர்த்திய விக்னேஷ், தன் தாய் பிரபாவதியின் நீட்டோலையை (visiting card) அவரிடம் நீட்டினான்.

ஓர் புன்னகையுடன் அதை சிவசுப்ரமணியம் வாங்கிக் கொள்ள, விக்னேஷின் மனதில் ஓர் இனம் புரியா உணர்வு மெல்ல தலை தூக்கியது!

உல்லாசமான ஒரு விசிலுடன் தன் நண்பனை நெருங்கி, அவனது தோளில் கை போட்டவன், ''மித்து பாவமில்லைடா'' என்றான் யோசனையாக.

''என்னது மித்துவா?''

''ஹே ச்சி, ச்சி, எதுக்கு வாயை இப்படி கோவில் வாசல் மாதிரி திறக்கிற. ஏதோ வாய்... தவறி... ப்ச்... விடேன்டா'' என அதட்டலில் மழுப்பினான் விக்னேஷ்.



அப்போதும் கதிரின் கூர் பார்வை விலகாதிருக்க, ''டேய் நீ பார்க்கிற பார்வையைப் பார்த்தா அம்மாகிட்ட இன்னைக்கு நைட்டே வந்து போட்டுக் கொடுத்திருவ போலிருக்கே? தப்பு மச்சி தப்பு... இன்னைக்கு பேசாம அருண் வீட்டில டாப்பை போட்டுடுவோம்... என்ன சொல்றே?'' என்றான் விக்னேஷ், பயத்துடன்.

''டாப்பா? நான் வரலை சாமி. இந்த வாரம் நான் ஊருக்கு போகணும். அப்போ செய்ய வேண்டிய வேலையெல்லாம் இப்போவே முடிச்சா தான்... கூட ரெண்டு மணி நேரம் அங்க தங்கிட்டு வரமுடியும். என்னை விட்டுடுடா'' என கதிர் கையெடுத்து கும்பிட,

''இந்த போஸ் நல்லாவே இல்லை. கொஞ்சம் முகத்தை அப்பாவியா வச்சுட்டு நின்னா அட்லீஸ்ட் தேர்தல்-ல டெபாசிட் காலியாகாம இருக்கும்'' என உப்புப் பெறாத வம்புகளைச் செய்தவாறே கல்லூரி நோக்கிச் சென்றனர் இருவரும்.



# 7

✱ திருச்சி ✱

கதிர் மற்றும் விக்னேஷ் இருவரும் கல்லூரியை அடைந்தபோது, இரவு ஏழு மணி ஆகியிருந்தது. கல்லூரி வளாகத்தில் நிறுத்தியிருந்த தனது வாகனத்தை வீடு நோக்கித் திருப்பிய விக்னேஷ் ''டேய் கதிர்! இன்னைக்கு

என்னோட வந்திடுடா. நாளைக்கு காலையில யோகா கிளாஸ் முடிச்சிட்டு, அப்படியே ரெண்டு பேரும் காலேஜ் வந்துடலாம்'' என நண்பனை அழைத்தான்.

''ஹ்ம்ம். இல்லைடா... ஈ.டி போடணும்டா. இல் லன்னா திங்கட்கிழமை அன்னைக்கு வைத்தி சார் வஞ்சு தீர்த்துடுவார்.''

''சனி, ஞாயிறு போட்டுக்கலாம்... ஹேரா... சாரி சாரி! நீ ஊருக்குப் போகணும் இல்ல? ஹ்ம்ம் நானும் தான்டா ஈ.டி போடணும். வீட்டுக்கு வந்தினா ரெண்டு பேருமா அசைன்மென்ட் முடிச்சுடலாம். எப்படியும் நீ எழுதின பிறகு... நான் உன்னதை பார்த்து பிட் தான் அடிக்கணும்... அதுக்கு ஒரே நேரத்தில் செய்தா நீயே செஞ்சு கொடுத் துடவே இல்ல...'' என விக்னேஷ் கண்ணடிக்க,

''அடப்பாவி! ஒரு லைன் கூட உன்னோட ஷீட்-ல போடமாட்டேன். போடா!'' என சிலிர்த்துக்கொண்ட கதிரின் வாய்க்குள் சிரிப்பு புதைந்திருந்தது.

''நட்பு என்பது நடிப்பு அல்ல, நம் நாடித்துடிப்பு! இப்படியொரு கவிதையை என்னை எழுத வைத்த நண்பனே... நீயே இப்படி சொல்லலாமா? எனக்காக ஒன்றை செய்யமாட்டேன் எனக்கூறி அக்கவிதையின் உயிரை அழித்துவிட்டாயே! வாடா என் தங்கமே! வந்து என் கவிதைக்கு உயிர் கொடு!'' என அவன் வீர வசனம் பேச,

''டேய் டேய் நிறுத்து, தெருநாய் எல்லாம் ஒரு மார்க் கமா உறுமுதுடா. தயவு செஞ்சு மேலும் அதை பயப் படுத்தாதே!'' என்றவாறே அவன் பின்னே ஏறி உட் கார்ந்து,



''நாய் கடிக்கிறதுக்கு முன்னாடி ஹாஸ்டலுக்கு வண் டியை விடு. வேண்டியதை எடுத்திட்டு வீட்டுக்குப் போகலாம்'' எனத் தன் சம்மதத்தை முன்வைத்தான்.

சிறிது நேரம் பேசாமல் வண்டி ஓட்டிய விக்னேஷ் ''கதிர், நிஜமாவே நாய் துரத்துதாடா? எனக்கு பயமா இருக்கு மச்சி'' எனப் பீதியுடன் பறைசாற்றவும்,

''ஆஹா, இந்த வீக்பாயிண்ட் எனக்கு இத்தனை நாள் தெரியாம போச்சே! இனிமேல் ஜமாய்ச்சுட வேண்டியது தான்!'' என்ற சீண்டலுடனே வீடு வந்து சேர்ந்தனர் நண்பர்கள் இருவரும்.

புதுக்கோட்டை ரோட்டில் இருந்த தங்களது வீட்டின் முன்னே (ஹ்ம்ம் மாளிகை என்று சொல்லவேண் டுமோ?) வண்டியை நிறுத்திய விக்னேஷ் ''ப்ரப்ஸ்! ஹே ப்ரப்ஸ்! எங்க இருக்கீங்க? இன்னைக்கு உங்க பையன் நிறைய வீர தீர செயல் எல்லாம் செய்துட்டு வந்திருக் கேன். வந்து வீரத் திலகமிட்டு உள்ளே கூட்டிட்டுப் போங்க'' என்றவாறே வண்டியை விட்டு இறங்கினான்.

''என்னடா வீரதீரச் செயல்? ஏதாவது நாய் துரத்திக் கிட்டு வந்ததா? அதுகிட்ட இருந்து தப்பிச்சு வந்தியா?'' என சிறுவயது முதல் நிலவிவரும் மகனின் பயத்தை வெளிச்சம் போட்டவாறே வந்த பிரபாவதியின் கண் களில் கதிர் பட்டதும், அவரது கவனம் முழுதும் அவன் பக்கம் திரும்பியது.

''வாடா கதிர்! இதென்ன அதிசயம்? வார நாளில்... அதுவும் ஏழு மணிக்கே வீட்டுப்பக்கம் வந்திருக்கே?'' என கதிரை வரவேற்றார்.

''இந்த வாரம் ஊருக்குப் போறேன்மா... அதான்...'' என்ற கதிரின் குரல், வார இறுதியில் வராமலிருப்பதற்கு

வாங்கவேண்டுமே என்ற பிரபாவதியிடம் பேச்சு பயத்தில் உள்ளே போயிருந்தது.

அவனது பயத்தை உறுதி செய்வது போல ''என்ன சொன்னாலும் அந்த வேலையை மட்டும் உன்னால விடமுடியாதில்ல? ஹ்ம்ம் என்னமோ போ!'' என முறுக்கிக்கொண்ட பிரபாவதி வீட்டின் புறம் காலடி எடுத்து வைத்தார்.

''அம்மா ப்ளீஸ்... நீங்க கோபமா இருந்தா எனக்கு மனசு சங்கடப்படுது! ப்ளீஸ்! கொஞ்ச நாளுக்கு மட்டும். அப்புறம் அந்த வேலைக்குப் போகலை... அண்ணாச்சி கிட்ட கை நீட்டி காசு வாங்கியிருக்கேன்மா. அதான்'' என்றான் கதிர் மெல்ல.

''அந்த காசை அம்மா...'' என்ற விக்னேஷின் வாக்கியம் முடியும் முன்னர், ''விக்கி'' என்று இருவருமே இடைமறித்திருந்தனர். ஓர் தோள் குலுக்கலுடன், விக்னேஷ் அந்த பேச்சை விட்டுவிட, அங்கே சிறிது அமைதி நிலவியது.

பின்னர் பிரபாவதியே ''உன்கிட்ட எனக்குப் பிடிச்சதே இந்த தன்மானம் தான். அதை குறைக்கிற மாதிரி பேசினதுக்கு மன்னிச்சுக்கோ! உடல் தேய, காலையிலிருந்து சாயங்காலம் வரைக்கும் உழைக்கிறாய் இல்லையா... அந்த ஆதங்கத்தில் சொல்லிவிட்டேன்'' என்றார் சமாதானமாக.

எப்போதுமே, பிரபாவதிக்கு கதிரின் மேல் ஓர் தனிப்பட்ட பிரியம் உண்டு. அதுவே, அதீத அக்கறை... பாசம்... அன்பு... கண்டிப்பு என்று எல்லாவற்றுக்கும் வழிவகுத்திருந்தது. வயதிற்கு மீறிய சுமைகள் / சோகங்கள் என்ற அவனது வாழ்க்கையில், அணையா தீபமாய் விளங்கும்



அவனது ''தன்மானம்'' பற்றி அவருக்கு மிகுந்த பெருமையும், கூடவே மதிப்பும் உண்டு. அதனாலேயே, இந்த இடத்தில் அவனது ''தன்மானம்'' தலைதூக்கியதும், சிறு மன்னிப்போடு ஒதுங்கிக் கொண்டார்.

பிரபாவதியைப் போலவே, விக்னேஷின் தந்தை கோடீஸ்வரனும் கதிரின் மேல் அன்பை மட்டுமல்லாது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். பணத்தில் மட்டுமல்லாது பொறுமையிலும் கோடீஸ்வரர்களாய் விளங்கிய அத்தம்பதியரின் பாசம் பிடிக்கவே, கதிரும் அதிக ஒதுக்கம் காட்டாமல், அன்போடு அவர்களிடம் பழகினான்.

அன்பு... பாசம்... அக்கறை... இவை எல்லாவற்றையும் தாண்டி, ஒரு ''தோழி'' போல் தங்களிடம் பழகும் ''பிரபா அம்மா'', அவனுக்கு எப்போதுமே ஸ்பெஷல் தான்!

தோழமை மனப்பான்மையை மேலும் வளர்க்கவென, பிள்ளைகள் இருவருக்கும் சரிசமமாய் அரட்டையில் இறங்கினார் அத்தாய்.

தினம்தினம், தன் உடைக்கு மேட்ச்சாக ரோஸ் வைத்து வரும் ப்ரீத்தி, இன்றைக்கு என்ன வண்ண உடை அணிந்திருந்தாள்... அதற்கேற்றாற் போல் பூ வைத்திருந்தாளா என்று தொடங்கிய பேச்சு,

''ஏன் விக்கி! பச்சை கலர் டிரஸ் போடும்போது... என்ன கலர் ரோஸ்டா வைப்பா... ப்ச்... நானும் அவ பச்சை கலர் டிரஸ் போடற நாளுக்காக... எவ்வளவு நாள் தான் வெயிட் பண்றது...'' என்ற பிரபாவதியின் பெருமூச்சில் தொக்கி நின்றது.

தொடர்ந்து ''இன்னைக்கு க்ளியர்கேஸ் கிளாஸ் இருந்திருக்குமே? நல்லா தூங்கினீங்களா?'' என ஓர் மனைவியின் ஆர்வத்துடன் கேள்வி கேட்டவரின் காதை திருகிய விக்னேஷ் ''ஒரு அம்மா மாதிரியா பேசுறீங்க?'' என்றான் செல்லமாக.

''டேய் கிள்ளாதேடா'' என பிரபாவதி துள்ளுவதற்குப் பதிலாக கதிர் துள்ளிவிட, ''இவன் பாசத்தைத் தாங்க முடியலைடா சாமி'' என சிலாகித்தார் பிரபாவதி!

இரவு உணவின் போது, மித்ராவின் உடல்நலக் குறைவைப் பற்றி இரு நண்பர்களும் எடுத்துரைத்து முடித்தனர்.

முடிவில் ''அவ ஹெட்ச்.ஓ.டி கிட்ட போய் கம்ப்ளைண்ட் பண்ணுவேன் என்றதும் அவ கூட இருந்த பொண்ணுங்க எல்லாம் கிளம்பிட்டாங்கமா. எனக்கு ரொம்ப வருத்தமா இருந்தது... ஏதோ கோபத்தில பேசறான்னு விடாம... இவங்கெல்லாம் என்ன பிரெண்ட்ஸ்? சும்மா அரட்டை அடிக்கிறதுக்கும், ஊர் சுத்துறதுக்கும் தான் பிரெண்ட்சா? ப்ச் பாவம்'' என்றான் கதிர், மித்ராவின் தோழிகள் பற்றி குறையாக.

''என்னைப் பொறுத்தவரைக்கும் அவங்க செஞ்சது கரெக்ட் தான். நீயே என்னை ஹெட்ச்.ஓ.டி கிட்ட மாட்டி விடுறேன்னு சொல்லியிருந்தா நானும் ஓடி வந்திருப்பேன். மித்ரா அந்த நேரத்தில் பேசினதெல்லாம் டூ மச்-டா. அவங்க சும்மா கிண்டல் தானே பண்ணினாங்க? அவளும் தான் எத்தனை பேரை ஓட்டி எடுத்திருப்பா? கிண்டல் பண்றவங்க எல்லோரையும் பிடிச்சுக் கொடுத்தா, ஹெட்ச்.ஓ.டி ரூம் பத்தாது'' என்றான் விக்னேஷ் எதார்த்தமாக.



''ஹே அவ உடம்பு சரியில்லாதவடா...'' என கதிர் மீண்டும் ஆதரவு கொடுக்க,

''அது... அவங்கப்பா சொன்னதால நமக்குத் தெரியும். அந்த விஷயம் தெரியறதுக்கு முன்னாடி, எனக்குமே அவளைப் பார்த்து சிரிப்பா தான் வந்தது. ஓவர் ஆக்ட் பண்ற மாதிரி தோணுச்சு...'' என்றான் விக்னேஷ் தன் பக்க வாதமாய்.

''என்னடா இப்படி பேசுற? நான் கூட... நீ ''மித்து''ன்னு உருகினதைப் பார்த்து அவளைப் பயங்கரமா சப்போர்ட் பண்ணுவேன்னு நினைச்சேன். நீ என்னடா என்றால் இப்படி பல்டி அடிக்கிறே?'' என்ற கதிரின் திகைப்பை தொடரவிடாமல்,

''பாவி! துரோகி! சொதப்பிட்டியேடா!'' என அவன் மீது பாய்ந்தான் விக்னேஷ்.

''என்ன சொதப்பல்?'' என்ற கேள்விக்குக் கதிர் பதில் தேடும் முன்னர்,

''என்ன விக்கி இது?'' எனக் கோடீஸ்வரனும்,

''அம்மாகிட்ட சொல்லவே இல்லையே கண்ணா'' எனப் பிரபாவதியும் ஒருங்கே குரல் கொடுக்க,

''உன்னைக் கொல்லப்போறேன்'' என நண்பனைத் தாக்கினான் விக்னேஷ்.

அதன் பின்னர், பெற்றோர் இருவரும் கேள்வியால் துளைத்தெடுக்க, ''ஹய்யோ ஒண்ணும்மில்லை... ஒண்ணும்மில்லை... ஒண்ணுமே இல்லை!'' என அமர்ந்திருந்த இருக்கை மீதேறி நின்று கொண்டு விக்னேஷ் பறைசாற்றவும், அங்கே அமைதி நிலவியது.

இருவரும்
உணவு முடிந்து, வீட்டுப்பாடத்துடன் வந்து சேர்ந்த பிரபா
அமர்ந்தபோது கையில் பாலுடன் யோகா கிளாஸ்
வதியிடம் ''அம்மா, இந்த வாரக்கடைசில வாரம் முழுசும்
எடுக்க வர முடியாததற்கு ஈடா இந்த என்றான் கதிர்.
நானே கிளாஸ் எடுத்துடுறேன்மா''

''அதெல்லாம் வேண்டாம்டா'' என விக்னேஷ்
தொடங்க,

''இல்லை விக்கி! இதுவே வேற இடமா இருந்தா, நான் என் இஷ்டப்படி லீவ் எடுக்கிறதுக்கு என்னை வேலையை விட்டே எடுத்திருப்பாங்க. அம்மா... என்ப தால் ஒண்ணும் சொல்லாம இருக்காங்க. அதை சாதகமா எடுத்திட்டு அநியாயத்திற்கு ஏய்க்கக் கூடாது'' என்றான் கதிர் நடுவே புகுந்து,

ஆம், கதிர் பிரபாவதியின் ''நல்வாழ்விற்கு யோகா!'' என்ற தலைப்புடன் இயங்கும் யோகா பயிற்சி பள்ளியில யோகாசன ஆசிரியர்.

அவனுக்கிருக்கும் தன்மானத்திற்கு, தானமாய் அளிக்கப்படும் பணத்தை வாங்கமாட்டான் என்பதை அறிந்து கொண்ட பிரபாவதி, அவனிற்கு யோகா பயிற்று வித்து (அஷ்டாங்க மற்றும் ஹதா யோகாகளுக்கான சான்றளிப்பு கொடுக்கும் டிப்ளமோ படிப்பைப் பகுதி நேரப் படிப்பாய் பயிலச்செய்து) தனது யோகா வகுப்பு களின் ஆசிரியர் ஆக்கியிருக்கிறார். அதிலும் அந்த படிப்பிற்குத் தேவைப்பட்ட பணத்தை கதிர் அவருக்குக் கொடுக்க விரும்ப, அவனது மாத சம்பளத்தில் ஓர் பங்கை அந்த படிப்பிற்கான பணமாக வாங்கிக் கொண்டு, மீதி பங்கை (அதாவது ஆயிரம் ரூபாய்) அவனிடம் கொடுத்து வைத்தார்.



அவனைப் பொறுத்தவரை அது வேலைக்கான சம்பளமாய் இருக்க, பிரபாவதியைப் பொறுத்தவரை கதிரின் உடல்நிலை பேணியது போலவும் ஆகிறது அவனிற்குப் பணம் கொடுத்தது போலவும் ஆகிறது! அதே போல், அவனது யோகா படிப்பிற்கென்று அவர் பிடித்துக்கொள்ளும் பணம் அவனுக்கே தெரியாமல் அவனுக்கென்று தனியாக ஆரம்பித்த வங்கி கணக்கில் குறைவில்லாமல் ஏறிக்கொண்டிருந்தது!

கதிரையும் விட்டுக் கொடுக்காமல், விக்னேஷையும் விட்டுக் கொடுக்காமல் ''செய்ற வேலைக்கு உண்மையா இருக்கணும் தான், அதுக்காக, தேவையெனும் போது லீவ் கூட எடுக்கக்கூடாதுன்னு இல்லை ராஜா!'' என்ற பிரபாவதி,

''உனக்கு கஷ்டமில்லன்னா நீ எப்ப வேண்டும்னாலும் கிளாஸ் எடுக்கலாம். அதுக்கு ஈடா ரெண்டு நாள் லீவும் எடுத்துக்கலாம் சரியா?'' என அப்பேச்சை முடித்து வைத்தார்.

அடுத்த நாள் அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து, குளித்து வெளியே வந்த கதிருக்கு குடிக்க தேன் கலந்த வெந்நீர் கொடுத்த பிரபாவதி, அவன் பின்னே எழுந்து வந்த மகனைப் பார்த்து அதிசயித்தார். அவரது பார் வையைக் கண்டுகொள்ளாமல் ''அம்மா, ஒரு கப் காபி, இந்த இனிப்பு தண்ணியெல்லாம் வேண்டாம்'' என அதிகாரம் செய்தான் மகன்.

தொடர்ந்தும் அவரது கேள்வி பார்வைக்குப் பதில் கூறாமல் மழுப்பிக் கொண்டிருந்தவன், ''கதிருடன் நழுவி யோகா கூடத்திற்கும் சென்று மறைந்தான்.

''விக்கி எங்கே பிரபா? ஜாக்கிங் லேட் ஆச்சே?'' என்ற கேள்வியுடன் வெளியே வந்த கோடீஸ்வரனிடம் யோகா கூடத்தைக் கண்ணால் காட்டி, உதட்டைப் பிதுக்கினார். பெற்றோர் இருவரும் ஓர் அர்த்தப்பார்வை பார்த்துக் கொள்ள, அங்கே மகனோ வாடிப்போய் யோகா கூடத்தை சுரத்தின்றி சுத்தி வந்தான்.

✸ வெள்ளகவி ✸

நள்ளிரவு இரண்டு மணிக்கு மேலாய் கொடைக் கானல் வந்திறங்கிய சோழன், பம்பர் அருவியின் அருகே உள்ளே பம்பர் பாலத்தின் வழியாக டால்பின் நோஸ் எனப்படும் பள்ளத்தாக்கை நெருங்கி, அதை ஒட்டியிருக்கும் காட்டுப் பாதை வழியாக வெள்ளகவி எனும் பழமை வாய்ந்த மலை கிராமத்தை அடைந்தான்.

கடிகாரத்தின் சிறிய முள் மூன்றை நெருங்கிக்கொண்டிருக்கும் போது, தென்றலின் தோட்டத்தை நெருங்கியவன், அந்த அதிகாலை நேரக் குளிரில் முக்குளித்தபடி, முட்டைக்கோஸ்களைப் பறித்துக் கொண்டிருந்த தென்றலை கண்டதும் நெஞ்சம் உருகியது.

பறித்த முட்டைக்கோஸ்களை, கனம் அதிகமில்லாமல் துவண்டு வழிந்த சாக்குப்பைக்குள் போடுவதற்கு அவள் படும் சிரமத்தைப் பார்த்துவிட்டு அவளருகே சென்று சாக்குப்பைகளை அவளது கையசைவுகளுக்கு ஏற்றவாறு பிடித்தான்.

சட்டென தன்னருகே ஆள் நடமாட்டத்தை உணர்ந்த ''யாரது?'' என்ற அலறலுடன் அதிர்ந்து விலகிய தென்றல், அங்கே சோழனைக் கண்டதும் ''மாமா'' என்றழைத்ததில் காவேரி வெள்ளமாய் நிம்மதி நிரம்பி வழிந்தது!



''எங்க நீயும் வராம இருந்திடுவியோன்னு என் நெஞ்சக்குழி முச்சூடும் பயம் அப்பிக் கிடந்தது... ஆயாவுக்கு ரொம்ப இழுத்துக்கிட்டு இருக்கு... நானா ஒத்தையா இம்புட்டு காயையும் சுமந்துகிட்டு சந்தைக்குப் போறதை நினைச்சாலே பயம் வந்துச்சு மாமா. நல்ல வேளை நீ வந்துட்டே!'' எனத் தன் நிம்மதியை அவள் வெள்ளையாய் எடுத்துரைக்கவும், சோழனுக்கு மிகவும் சங்கடமாய் இருந்தது. இரவு இரண்டு மணி நேரம் தூங்கியது இப்போது பெருத்த தப்பாகவும், அவமானமாகவும் இருக்க, தலையைக் குனிந்தவாறே வேலையைத் தொடர்ந்தான்.

''காரட் எடுத்தாச்சா?'' என அவன் கேட்க,

''நா மட்டுமா போனாக்கா, அம்புட்டையும் ஒண்ணா சுமக்க முடியாதில. அதான் பறிக்கலை... இப்ப பறிக்கவா?'' என அவள் வினவ.

''ம்ம். அந்த சீமெண்ணெய் விளக்கைக் கொடு, நான் பறிச்சாறேன்'' எனக் கைநீட்டினான்.

''அதில இம்புட்டுகூண்டு தான் சீம்மண்ணை இருக்குது. ரேஷன்ல அடுத்த வாரத்துக்குத் தான் ஊத்துவாய்ங்க. இரு நா போய்... வேற விளக்கு எடுத்தாறேன்'' என வேகமாய் வீட்டிற்குச் சென்று மறைந்தாள்.

அடுத்த அரை மணிநேரத்தில், காய் மூட்டைகளுடன் சாலையில் நடக்கத்துவங்கிய இருவருக்குள்ளும் அதிகமாய் பேச்சிருக்கவில்லை. கொடைக்கானல் செல்லும் காட்டுப்பாதைக்குள் இருவரும் அடியெடுத்து வைக்கும் போது, வேறு சில விவசாயிகளும் சேர்ந்துகொள்ள, அனைவருமாய் கோடையை நோக்கிப் பயணப்பட்டனர்.

அதிக நேரம் கையிலிருக்கும் சுமையை சுமக்க முடியாமல், கீழே வைத்து சுமந்து வந்த தென்றலின் கைகளின் மீது பட்ட அதிகாலை வெயில் சோழனுக்கு ஓர் அதிர்ச்சியை வெளிப்படுத்தியது!

"கையில என்ன தென்றல்? மொழி வீங்கிக் கிடக்கு?" என அவன் பதற,

"அதா? நீ வாங்கியாந்த புது துணியைப் போட்டுக்கிட்டு போனன்னைக்கு அதுக்கு மேச்சா சாருடைய (Chartreuse) ரோசை பறிச்சுத் தலையில வச்சுப் பாத்தேனா? கருணாக்கா பார்த்துப்புடுச்சு... கையிலேயே தொட்டுன்னு போட்டுடுச்சு... அதேன் வீங்கிக்கிடக்கு!" என்றாள் அவள் சாதாரணமாய்.

"வாயால சொல்ல வேண்டியது தானே? அதுவே கொள்ளிக்கட்டை மாதிரி தான் இருக்கும்... எதுக்கு கையில அடிக்கிறா" எனச் சோழன் எரிச்சலை உதிர்க்கவும்,

"அட என்ன மாமா நீயு? நானே ரோசை பறிச்சதுக்கு கூலியைப் புடுச்சுப் புடுவாளோன்னு மறுகிப்போனேன், அடிச்சதோட விட்டுட்டா" என்ற போது தென்றலின் கண்களில், கை வலியையும் மீறி சந்தோஷமே நிரம்பியிருந்தது.



## 8

தென்றலின் கண்களில் தோன்றிய சந்தோசம் அவளது கை வலியை மிகுதிப் படுத்திக்காட்ட, "என்னை



மன்னிச்சிடு தென்றல். என்னால தான்... என்னால தான் நீ இப்படி உடல் தேய உழைக்கிற? உழைக்கிறது மட்டுமில்லாம ஒரு சின்ன ஆசைக்காக அடியும் வாங்கிட்டு நிக்கிறே. இந்த நிலைமையில என்னால ஒண்ணுமே செய்ய முடியலைங்கிறது தான் என்னை வாட்டி எடுக்குது!" என உண்மையாக வருத்தப்பட்டான் சோழன்.

"அட என்ன மாமா நீயு?! எனக்கு இதில ஒண்ணும் சங்கடம் இல்ல. நீ பெரியாளா வந்த பொறவு என்னைய நல்லா கவனிச்சுக்கிடமாட்டியா?" எனத் தென்றல் வினவவும்,

"கண்டிப்பா" என்றான் சோழன், உறுதியாக.

"நீயி... நல்லபடியா படிப்பை முடிச்சுட்டா போதும் மாமா... நம்ம ஆயி அப்பனுக்கு அது தான் நிம்மதியைக் கொடுக்கும்" என்ற தென்றல்,

"அத்தை-மாமா இருந்திருந்தா எம்புட்டு சந்தோசமா இருந்திருக்கும்ல மாமா. நீயும் இப்படி படிப்புக்கு ஊடே வேலை வேலைன்னு நாயா பேயா அலைய வேண்டாம்... உன்னைய ராசா மாதிரி வச்சு பாத்துகிட்டு இருப்பாங்க... என்னால தான் முடியல... படிக்கிற உன்னைய இப்படி காய் சுமக்க விட்டுப்புட்டு கோணங்கித்தனமா இருக்கேன்" என வருத்தப்பட்டாள்.

"நீ வேற? நானே உன்னோட உழைப்பில படிக்கிறோமே? உனக்கு உதவி செய்ய முடியாம இருக்கோமேன்னு மறுகிப்போறேன். நீ என்னடான்னா?" என இடைப்புகுந்த சோழன்,

"சில சமயம், நீ படுற கஷ்டத்தைப் பாக்கும் போது படிப்பை விட்டுடலாமான்னு கூட தோணுது... நான்

விஞ்ஞானி ஆகலன்னா உலகமே அழிஞ்சுடுமா என்ன? பேசாம, படிப்பை விட்டுட்டு கிடைக்கிற வேலைக்குப் போயிடலாம்ன்னு மனசு அலைபாயுது!'' என்றாள் ஆயாசமாக.

அதிர்ந்து போன தென்றல், ஏதோ சொல்லவர, அவளை கவனியாது சோழன் மீண்டும் பேசினான். ''ஆனா... ஆனா... தென்றல், எனக்கு விஞ்ஞானி ஆகணும்கிறது சின்ன வயசு தொட்டு இருந்த கனவு... அதை அழிக்க முடியலமா! அந்த கனவு நிறைவேறினதும் கண்டிப்பா உன்னை என்னோட கூட்டிட்டுப் போய்டுவேன். என்னை நம்பு! அது வரைக்கும் தான் நமக்கு இந்த கஷ்டம்...'' என்று கூறிய சோழனின் முதல் மற்றும் ஒரே ஆசை DRDO (Defence Research and Development Organisation)-ல் வேலைக்குச் சேர்வது தான். விஞ்ஞானி என்பதை விட நாட்டின் பாதுகாப்பு / தற்காப்பு துறையில் கால் பதித்து, விஞ்ஞானத்தின் மூலமாக சில அரிய கண்டுபிடிப்புகளை நாட்டிற்கு அளிக்கவேண்டும் என்பது அவனது அடி நெஞ்சம் முதல் மற்றும் முக்கிய ஆசை. அவனது எந்த ஒரு முடிவும், அசைவும் பொறுத்தே இருக்கும் என்பது அவனுக்கு நெருங்கியவர்கள் அறிந்த விஷயம்!

''எனக்குத் தெரியும் மாமா. உன்னோட உசிரே அதில தான் இருக்குதுன்னு எனக்குத் தெரியும். அதேன், அதை விட்டுப்புட்டு எனக்கு காய் சுமக்குற கூலிக்காரனா ஆக்கிப்புட்டேன்னு சங்கடமா இருக்குது! படிப்பை விட்டுறாதே மாமா! நீ கோளாறா படிச்சா தானே... நீ நினைக்கிற வேலையில் சேர முடியும்? அதுக்காண்டித் தானே மாமா, இங்க கிடைச்ச சீட்டை விட்டுப்புட்டு... இப்போ படிக்கிற



பள்ளிக்கூடத்துக்கே போனே? அப்புறம் விட்டுவிட்டு வாரேன்னு சொல்றியே? அலும்பு பண்ணாம வெருசா படிச்சு முடி. அது வரைக்கும் நான் உன்னைய பார்த்துக்கிறேன்... அப்புறம் வாழ்க்கை முச்சூடும் நீ தானே என்னைய பார்த்துக்கிடப்போறே? பொறவு என்ன?'' என அவனைத் தேற்றிய தென்றல், ''பார்த்துக் கிடுவே தானே?'' என்றாள் அச்சமும், சந்தேகமுமாக.

''கண்டிப்பா! எனக்கு DRDO-ல வேலை கிடைச்சதும் உன்னைய ராணி மாதிரி வச்சுப்பார்த்துப்பேன். என்னை நம்பு... தென்றலு! உன்னைய மட்டுமில்ல அய்யா, ஆயா ரெண்டு பேரையும் நம்ம கூடவே வச்சுக்கிடலாம்'' என்ற சோழனின் உறுதி வார்த்தையில் வெளிப்பட்ட போதும், செயல்களில் வெளிப்படப் போவதில்லை என்பது இருவரும் அறியாதது!

வாழ்க்கையைப் பற்றிய இனிய கற்பனைகளுடன் ரோட்டை நோக்கிச் சென்றவர்கள் கொடைக்கானல் சந்தையில் தங்களது காய்களைக் கடைபரப்பினர். சில நிமிடங்களில் வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்க, தென்றலுக்கும் சோழனுக்கும் மூச்சு விட மட்டுமே நேரமிருந்தது.

வத்தலகுண்டு பகுதியில் இருக்கும் காய்கறி வியாபாரிகள் பலர் கொடைக்கானல் வந்து காய் கனி வாங்கிச் செல்வது, அங்கே வாடிக்கையான ஒன்று. மலையேறி வந்து வாங்குவதாலும், விவசாயிகள் இருக்கும் இடத்திற்கே வந்து வாங்குவதாலும், பலர் தங்களது பேரத்தை அளவிற்கு அதிகமாகவே முன்வைப்பார்கள்.

அன்றும் அதே போல் தான், கிலோ இருபது ரூபாய் என்று விற்று கொண்டிருந்த காரெட்டை பன்னிரண்டு ரூபாய்க்கு ஒருவர் அடாவடியாய் கேட்க, சோழன் சண்டைக்கு போய்விட்டான்.

''என்ன அண்ணே? அடிமாட்டு விலைக்குக் கேட்கு நீங்க? விவசாயியையும் ஒரு சக மனுஷனா பாருங்க... எங்களுக்கும் குடும்பமிருக்கு, சோலியிருக்கு. அதுக்கு மேல உங்களை மாதிரியே பசிக்கிற வயிறிருக்கு. இப்படி எங்களை ஏச்சு, பொழைக்கிறதில உங்களுக்கு என்ன அண்ணாச்சி குமியப் போகுது? அம்பது ரூபா லாபம் வருமா? அந்த அம்பது ரூபா நஷ்டம் எங்களை வயிறெரிய வைக்கும்... அந்த வயித்தெரிச்சல் உங்களை சும்மாவிடாம உங்க மேலுக்கு ஏதாவது வந்து ஆஸ்பத் திரிக்குப் போனாக்கா... அந்த டாக்டர் கேட்கிற ரூபாவை கொடுத்திட்டு தானே வருவீங்க? அங்க உங்களால பேரம் பேச முடியுமா?'' என அவன் படபடக்க,

''விடு மாமா. அவரு ஏதோ லாபத்துக்காக கேட்டுட் டாரு... விடு மாமா'' என அவனது கைப்பிடித்து கீழே அமரவைத்த தென்றல்,

''எங்களுக்கு இந்த விலை கட்டுப்படியாகாது அண்ணே. வேற இடம் பாருங்க'' என அவரிடம் கைகுவித்தாள்.

தனது கோபத்தை வெளிப்படையாக காட்டியவாறே அவர் நகர்ந்துவிட, தென்றலுக்கும் சோழனுக்கும் நடுவே சற்று நேரம் அமைதி நிலவியது.

''என்ன மாமா? உனக்கு இம்புட்டு கோபம் வருது? நான் பயந்து போயிட்டேன்...''

''ப்ச். அவர் கேட்ட விலையைப் பார்த்தியா? நம்மளை கேனைப்பயகன்னு நினைச்சாரு போல'' என்றான் சோழன் இன்னும் கோபம் குறையாமல்.

''விடு மாமா. டீ வாங்கியாறவா? வயித்தில ஒண்ணு மில்லாம தான் கோபத்தில கத்துறே! பாவம் அவரு...



அரண்டு போயிட்டாரு... கொஞ்சம் விட்டாக்கா ஏழரையை கூட்டியிருப்ப!'' என்ற தென்றலின் உதடுகளின் ஊடே, சிரிப்பு வருவதா வேண்டாமா என்று சடுகுடு ஆடிக் கொண்டிருந்தது.

''என் கோவம் உனக்குச் சிரிப்பா இருக்குதாக்கும் கழுத!'' என்ற சோழனுக்கும் சிரிப்பை அடக்க முடிய வில்லை.

''பின் என்னவாம்? வரதே மாசத்துக்கு ஒரு ட்ரிப்போ, ரெண்டு ட்ரிப்போ... அப்பவும் மூஞ்சியையும் மொகரையை யும் முழ நீளத்துக்குத் தூக்கிவச்சுக்கோ! நீயி போனதும்... ஐயோ கோவமா போச்சேன்னு எனக்கு சங்கடமா இருக் கும்'' என அவள் கழுத்தை நொடிக்கவும்,

''ஆத்தாடி, இப்படி நீ கழுத்தை நொடிக்கிறதை பார்த்தா எனக்குப் பயந்து வருதே?'' எனச் சிரித்தான்.

''சும்மா லந்தை கொடுக்காதே மாமா. நீயாவது... எனக்குப் பயப்படுறதாவது... ஹுக்கும்'' எனப் பதில் பேசிய தென்றலுக்கு, சிறு வயது முதலே அவனது கண் காணிப்பிலும், கண்டிப்பிலும், கனிவிலும், பாதுகாப் பிலும் வளர்ந்த பெருமை பொங்கி வழியத் தான் செய்தது. அதை கோபம் என்ற போர்வையிட்டு வெளிப்படுத் தியவள், அப்போர்வையின் கனம் தாங்காமல், சட்டென அதை விலக்கி, ஓர் பெருமிதத்தையே காட்டினாள்.

''நீ எனக்குப் பயப்படுறியா? இது எப்போதிலிருந்து?'' என எதிர்கேள்வி கேட்டவனின் கண்களில் வியப்பென்ற பெயரில் குறும்பே இருந்தது.

அதை சந்திக்க முடியாமல் ''நா போய் டீ வாங்கியா றேன்'' என்றவாறே தென்றல் எழ, ''ஏய், ஏய், இரு. நான் போறேன்'' என அவன் விரைந்தான்.

ஐந்து நிமிடத்தில், இரு டீ கோப்பைகளுடன் வந்தவன், ஒன்றை அவளிடம் நீட்டியவன், வாங்கி வந்திருந்த பன் மற்றும் ரொட்டிகளை அவளிடம் நீட்டினான். அப்போது ஒருவர் முட்டைக்கோஸ்களை விலை கேட்டு வர, கையிலிருந்த தனது டீயை தென்றலின் கைகளில் திணித்துவிட்டு, வியாபாரம் பார்த்தான். அவர் போன பின்னரும், விரித்திருந்த உரப்பைகளைத் தாண்டி உருண்டிருந்த காய்களைப் பொறுக்கி எடுத்தான்.

''சோறு திங்கும்போது தான் உமக்கு வேலையே ஓடுமாக்கும்?! வந்து... இதை குடி மாமா. உள்ளதே ஆறி அலமலந்து போச்சு!'' எனத் தென்றல் கண்டிக்கையிலேயே, சோழனுக்கு தன் தாயின் கனிவு சட்டென நினைவு வந்தது.

தாயின் பாசத்திற்கு மனம் ஏங்க, ''அம்மா மாதிரியே உனக்கும் என் வயித்தைப் பத்தி மட்டும் தான் கவலை தென்றல்!'' என்றவனின் கண்களில் ஏக்கமும், வலியும், பெருமிதமும் மொத்தமாய் நிறைந்திருந்தன.

''ம்ம்'' என்ற தென்றலுக்கும் தாய்-தந்தையின் நினைவுகள் பலமாய் வீசத் துவங்கின.

''நம்மளை மாதிரியே இந்த சந்தையிலேயே காயை வித்திருந்தா... அவங்க உயிராவது மிஞ்சியிருக்கும். அஞ்சுக்கும் பத்துக்கும் கணக்குப் பார்த்து... இப்படி மாஞ்சுப் போய்ட்டாங்களே!'' என்ற தென்றலின் கண்களில் கண்ணீரில் சுவடுகள்.

சோழனின் சிறு வயதிலேயே, பஞ்சம் பிழைப்பதற்காக கொடைக்கானல் அருகே இருக்கும் பூளத்தூர் என்ற ஊரிலிருக்கும் டீ எஸ்டேட்டுக்கு வேலைக்கு வந்தவர் அவனது தந்தை. சற்று காலத்தில், அவர்களது ஜாகை



கொடைக்கானலின் மேற்குப் பகுதியிலிருக்கும் வெள்ளகவிக்கு மாற, தென்றலின் வீட்டினர் பக்கத்து வீட்டு மனிதர்கள் ஆயினர்.

வெள்ளகவியையே சொந்த ஊராய் கொண்டிருந்த தென்றலின் குடும்பம், சோழனின் தாய்-தந்தையை வேற்றூர் மக்களாய் ஒதுக்கி வைக்காமல், தங்களில் ஒருவராய் இணைத்துக்கொண்டதில், சோழனின் குடும்பத்திற்குத் தங்களது பக்கத்து நிலத்தையே குத்தகைக்கு எடுத்துக்கொடுத்து, இரண்டு குடும்பங்களுமாய் இரு வயல்களையும் கவனித்து வந்தனர்.

அவர்களை மிஞ்சுவது போல் இளையத்தலைமுறையினரும் கூடி விளையாடி, ஒன்றாய் பள்ளிக்குச் சென்று வந்ததில், அவர்களுக்குள்ளும் ஓர் பாசம் பலமாகவே இழையோடியது. சோழனை விட இரண்டு வயது இளமைப்பட்டிருந்த தென்றலுக்கு, அவன் எப்போதுமே 'பெரிய மனிதன்' தான்!

''சோழண்ணே!'' என அவள் அழைக்கும் அழகில் சோழனை விட, அவனது தாயார் கோதை மயங்கிக்கிடந்தார். பிள்ளைகள் வளர வளர, இரு தாய்மார்களின் நெஞ்சத்திலும் ஓர் எண்ணம் வளர்ந்து கொண்டே இருந்தது. அதன் தாக்கத்தினால் தென்றல் பூப்படைந்த போது, அவர்களது வழக்கப்படி பலர் பரிசம் போட வருவார்கள் என்பதை அறிந்து கொண்ட கோதை, முதல் ஆளாய் ''மதினி! எங்களுக்குப் பணங்காசில்ல தான்... சொல்லிக்கிற மாதிரி சொந்த பந்தமும் இல்ல தான். இருந்தாலும், எம் மகன் தென்றலை நல்லா வச்சுக்கிடுவான். நானும் கண்ணுக்குள்ள வச்சுப் பார்த்துக்கிடுவேன். அவளை எம் மகனுக்குக் கட்டித்தருவீகளா? இப்ப

இல்ல... ரெண்டும் படிச்சு முடிக்கட்டும்'' எனக் கேட்டு விட, தென்றலின் தாயார் - முத்துமாரியின் முகத்தில் கோபத்திற்குப் பதிலாக பெரும் சந்தோசம்.

''நான் கொஞ்ச நாளா நினைச்சதை... நீங்க கேட்டுட்டீங்க மதினி! பொட்டப் புள்ளையை வச்சிருக்கோமே... அதுவும் கருத்துச் சிறுத்து இருக்கே!? எங்க எப்படி வாழப்போறதோன்னு மயங்கிப் போயிருந்தேன்'' என முத்துமாரி, தன் சம்மதத்தை வெளியிட... அதை அப்படியே ஆமோதித்தார் தென்றலின் தந்தை - பெரிய கருப்பன்.

ஆனால், நான்கு நெஞ்சங்கள் மகிழ்ந்திருந்த அவ்வேளையில் ''நமக்கில்லாத சொந்தமா? இப்புட்டு பேரு... நா நீயுன்னு தென்றலைப் பரிசம் போட வரிசை கட்டி நிக்கிறாங்க. அவங்களை விட்டுப்புட்டு... இப்படி ஒண்ணுமில்லாத குடும்பத்தில் கொடுக்கணுமா?'' என அபசகுனமாய் புகுந்தது பாண்டியம்மாளின் குரல்.

பெரியவர்கள் நால்வரும் ஒரு நிமிடம் திகைத்து விழித்துக் கொண்டிருக்கையில், ''யாரு... நா நீயுன்னு போட்டிப்போடறா? அந்த முத்துச்சாமியை சொல்றியோ? அவன் ஒண்ணும் புள்ளைக்காக வரல... நம்ம நிலத்துக்காக வருதான்'' எனப் பெரியகருப்பன் தாயை அடக்கினார்.

ஆனால், பாண்டியம்மாளுக்கு கோபம் தான் அதிகமானது. ''இவங்க மட்டும் எதுக்கு வாராய்ங்க. நம்ம நிலத்துக்குத் தான்...'' என நொடித்தார்!

''அவனுக்குக் கொடுக்கிறதைவிட... தங்கச்சிக்கு கொடுக்கிறதில் எனக்கு சந்தோசம் தேன். சும்மா கிட ஆத்தா'' எனப் பெரியகருப்பன் முற்றுப்புள்ளி வைத்துவிட்ட



போதும். பாண்டியம்மாளுக்கு சோழன் குடும்பத்தின் மீதிருந்த கோபம் குறைந்தபாடில்லை.

தங்களுக்குள் திருமணப் பேச்சுவார்த்தை நடந்ததைப் பற்றிய விவரம் எதும் தெரியாமல், ஒன்பதாம் வகுப்பில் காலடி எடுத்துவைத்திருந்த தென்றலும், பதினொன்றாம் வகுப்பில் பயிலும் சோழனும் நிம்மதியாய் சுற்றிவந்தது பொறுக்காமல், அதிகவிலை கிடைக்கும் என்பதற்காக வத்தலகுண்டு சென்று காய் விற்று வந்த இருவரது பெற்றோரையும் ஒரே சமயத்தில் விபத்தில் மாயச்செய்தது.

விபத்து பற்றிய விவரம் அறிந்து, தென்றலை அழைத்துக்கொண்டு மருத்துவமனை சென்ற சோழனிடம் அவனது தாயார்-கோதை பேசிய கடைசி வார்த்தை ''தென்றலை... கடைசி வரைக்கும் நல்லபடியா பார்த்துக்கணும் ராஜா. அவ தான் உனக்குன்னு நான் நெஞ்சில குறிச்சுட்டேன்... பார்த்துக்கோ!'' என்பது தான்.

அதே போல், தென்றலிடம் ''அவனுக்கு உறவுன்னு இருந்தது நானும் அவுக அப்பாவும் தான். இப்ப... நானும்... அ... அவுகளும் இல்லாமப் போயிட்டோம். அவனை... அவனை அனாதை ஆக்கிடாதே தாயி! அவனைப் பார்த்துக்கோ! எம்புள்ள... பெரிய படிப்பு படிச்சு உன்னை ராஜாத்தி மாதிரி வச்சுப்பான்... என்ன?'' என வினவியவர், அவள் கலங்கிய கண்களுடன் தலையசைக்கவும் ''அவனை ஒரு டிரிப்பு ''மாமா''ன்னு கூப்பிடு தங்கம். நீங்க வாழறதை பார்க்கத் தான்... கொடுத்து வைக்கலை... இதையாவது கேட்டுருதேன்'' என்றார் கண்ணீருடன்.

தென்றலின ''ம... மா... மாமா'' என்ற அழைப்பு முடியும்போது, பூவுலகில் கோதை வாழ்ந்த வாழ்விற்கு முடிவு ஏற்பட்டது!

கோதையின் ஓரிரு வாக்கியங்களுக்கு மாறாய் பெரிய கருப்பன் சிற்சில வார்த்தைகளே பேசினார் - ''தென்றலு...'' ''ஆத்தா...'' ''அவளைப் பார்த்துக்க ராசா!'', ''நீங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக்கொடுத்து நல்லபடி வாழணும்'' என்றதோடு பெரியகருப்பனின் பெரிய உருவம், தன் பெண்ணின் கையைப் பிடித்தவாறே உயிரைவிட்டது.

அவராவது ஓரிரு வார்த்தைகள் பேசினார் என்று சந்தோஷப்படும் அளவிற்கு, சோழனின் தந்தையும் தென்றலின் தாயாரும் விபத்து நடந்த இடத்திலேயே மாண்டு போயிருந்தனர்.

கிடைக்கவிருக்கும் இருநூறு ரூபாய் லாபத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மலைப்பயணம், நால்வரின் உயிரையும் காவு வாங்கிவிட, அதன் பின்னர் அதே வியாபாரத்தை மலையிலேயே செய்து வந்த பிள்ளைகள் மனதில் ஏக்கம் புகாத நாளே இல்லை எனலாம்!

ஏக்கம் மிகுந்த நாட்களில் இன்றும் ஒரு நாளாய் மாறியதில், தென்றலின் கண்களில் கண்ணீரின் இருப்பிடமாய் மாறிப்போனதைக் கண்ட சோழன், தன்னைத் தானே திட்டிக்கொண்டான்; பெற்றோரின் நினைவை அவளுக்குப் புகட்டியவனே அவனல்லவா!

''சாவு நடக்கணும்ன்னு இருந்தா எங்க இருந்தாலும் நடந்திருக்கும் தென்றல். தேவையில்லாம வருத்தப் படாதே!'' என்ற சோழன், தென்றலின் முகம் மாறாமலே இருக்கவும், ''இல்லை... திரும்பி வராதுன்னு ஆகிட்ட ஒன்றை நினைச்சு முடங்கிக்கிடக்கிறதில் என்ன புண்ணியமிருக்கு? இல்லாததை விட்டுட்டு இருக்கிறதை பாரு... இங்க இருக்க காயை விக்கிற வழியை முதல்ல



பாப்போம்... அப்புறம் எல்லா காயும் வித்துட்டா பழனியக்கா கடையில கறி சாப்பாடு சாப்பிட்டு வீட்டுக்குப் போகலாம்... நிலா வரையில் வயலைக் கொத்தி, கோஸுக்கான விதையை தூவிட்டு நா ஊருக்குக் கிளம்புறேன்... வேலை நிறைய கிடக்கையில் கண்டதையும் நினைச்சு குழப்பிக்காதே'' என அடுத்து வரும் வேலைகளைப் பட்டியலிட்டான்.

''இல்ல மாமா.... கறி சாப்பாடு வேண்டாம்...'' எனத் தென்றல் மறுக்க,

அவள் எதற்காக சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட சோழன் ''ஒரு நாள்... அதுவும் ஒரு வேளை! வார நாள் முழுசும் வயித்துப் பசிக்காக திங்குறோம். வாரக்கடைசில நாக்கு ருசிக்காக திங்கலாம். உனக்கு அந்த சாப்பாடு மேலிருக்க இஷ்டம் எனக்குத் தெரியும். நீ பேசாம வா...'' என அடக்கிவிட்டான்.

அடுத்து வந்த ஒரு மணிநேரத்தில், கொண்டு வந்த காய்கள் அனைத்தையும் விற்றிருந்த தென்றலும், அவளது மாமனும் கொண்டு வந்த உரப்பைகளை உதறி எடுத்துக்கொண்டு, மதிய உணவுண்ண பழனியக்காவின் அசைவ உணவகத்திற்கு நடையை கட்டினர்.

வழியில் கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்காக விதவிதமான கடைகள் விரிந்து பறந்திருக்க, குளிருக்கு இதமான சணல் ஆடைகளைக் கடக்கையில் தென்றலின் முகத்தில் தீராத ஆராய்ச்சி, அதி முக்கியமான வேடிக்கை. ஒரெட்டு முன்னே வைத்து நடந்து கொண்டிருந்த சோழனுக்கு, அவளது வேடிக்கை கண்ணில் படாமல் போனதால் அவன் தன் சிந்தனைகளுடன் தன் போக்கில் நடந்து கொண்டிருந்தான்.

அந்த தெருவின் (எற்றத்தின்) கோடிக்குச் சென்ற போது ''அம்மாடி!'' என்ற தென்றலின் திடுக்கிடலும், ''கண்ணை என்ன புடதிலேயா வச்சிகிட்டு வாறே!'' என்ற வேற்றாளின் திட்டும் சோழனின் காதில் விழுந்தன.

''என்னாச்சு? என்ன தென்றல்?'' என அவளருகே வந்த சோழன் வினவியதில் அவன் மீது கவனத்தைத் திருப்பி,

''உம்ம தங்கச்சியை ரோட்டைப் பார்த்து நடக்க சொல்லுங்க மச்சான்! அப்படியே மிதந்துக்கிட்டு வருது!'' என்ற புதியவனின் குரலும் கண்ணும் தென்றலின் மேனியை ஏளனமாய் அளவிட்டன.

கையில் பீடியும் நாக்கில் குளரலுமாய் இருந்தவன், புகையை ஆழ எடுத்து தென்றலின் முகத்தில் விடவும், அவளைத் தனக்குப் பின்புறமாய் இழுத்துக் கொண்ட சோழன், பதில் பேசும் முன்னர் ''ஹே தங்கச்சியில் லையா? உரிமையா இழுக்கிறதை பார்த்தா பொண்டாட் டியா? தாலி இல்லையே? ஒ லவ்வரா? இதைப் போயா லவ் பண்ற?'' எனத் தன் போக்கிற்கு உளறிக்கொண்டே இருந்தான் அவன்.

அவன் முன்னே விரல் நீட்டி, ''போடா! போயிரு! இன்னும் ரெண்டு நிமிஷம் இங்க நின்ன... மவனே கொன்னேபுடுவேன்'' என அடிக்குரலில் எச்சரித்தவன், தொடர்ந்து அவனைத் தீர்க்கமாய் பார்த்ததில் புதியவன் தான் பின்வாங்கி, அவன் வழியே சென்றான்.

இன்னமும் சோழனின் கைப்பிடியிலிருந்த தென்றலிடம் ''எப்ப பார்த்தாலும் என்ன வேடிக்கை? ரோட்டைப் பார்த்து நடக்க முடியாதா?'' எனப் பல்லைக்கடித்தவாறே அவளை வழிநடத்திச் சென்றான்.



அந்த காவாலிப்பய வேணும்னே வந்து மோதினாக்க... நா என்ன செய்றது?'' என அவனுக்குப் பதில் பேசிய தென்றலுக்கு என்ன தோன்றியதோ ''எப்படி பொகையை முகத்திலேய விட்டான் பாரு மாமா. ஒரே நாத்தம்! இதைப் போய்.. இழுத்து இழுத்து விடுறானுங்க. குடி வேற... இன்னும் கூத்தி கேட்குது இவனுக்கு... காவாலிப்பய! அவனை அடிச்சிருக்க வேண்டியது தானே மாமா!'' என எரிச்சல் பட்டாள்.

அதற்கு சோழன் பதில் சொல்லும் முன்னர் ''ஏன் மாமா? நீ பீடி பிடிப்பியோ? தண்ணி போடுவியா? காலே சுக்குப் போனா... எல்லாரும் பீடி பிடிப்பாங்கன்னு...'' என்றவளை இடைமறித்து ''யாரு சொன்னா?'' என்றான் சோழன்.

''பூங்கொடி தே! காசியும் ஒரு ட்ரிப்பு சொன்னாப்ல எனக்கு நினைப்பிருக்கு'' என்றவள், ''சொல்லு மாமா!? பீடி பிடிப்பியோ? கள்ளு குடிப்பியோ?'' என்றாள் படு தீவிரமாக.

அவளது அந்த தீவிரம் ஏனோ சோழனுக்குத் தொற்றிக் கொள்ளவில்லை! மாறாய் அவளிடம் வம்பு செய்யும் எண்ணம் மேலிட ''பீடி பிடிக்கிறதில தென்றலு, சிகரெட் தான்... உசந்த பீடி!'' என்றவன், அவளது அதிர்ச்சியை பொருட்படுத்தாமல்,

''தண்ணியிலும் கள்ளு எல்லாம் கிடையாது... உசந்த சரக்கு தான்... வெளிநாட்டு சரக்கு'' என்றான்.

அந்த நேரம், அவனது நாக்கில் சனி பகவான் நர்த் தனமாடி இருக்கவேண்டும். அதன் விளைவாக ''உனக்கு தெரியுமா தென்றல்? உம் மாமனுக்கு ரெண்டு பேர் லவ் லெட்டர்... காதல் கடிதாசி கொடுத்தாங்க'' என்றது தான் தாமதம்,

கையில் வைத்திருந்த உரப்பை சுருளால் அவன் முதுகில் ஒன்று வைத்தவள் ''கொடுப்பா, கொடுப்பா, அதையும் நீரு... படிச்சு... அவளுகளோட போவீரு! என்னைய பத்தி தெரியாது... எதுனாலும் பொறுத்துக்கிடுவேன்.. வேறொரு பொம்பளையை மட்டும் லேசா பார்த்தின்னு தெரிஞ்சது... மண்டையை பொளந்திருவேன்'' என்ற பேச்சுடன், அவனை மேலும் மேலும் அடித்தாள். பிற்காலத்தில் ''சொல் ஒன்று செயல் வேறு'' என்ற அடைமொழிக்கு இருவரும் எடுத்துக்காட்டாய் திகழப்போவது இறைவன் மட்டுமே அறிந்த ஒன்று!

அவளது அடிகளிலிருந்து லாவகமாய் விலகிய சோழன் ''இப்படி பச்சைப் புள்ளயா இருக்கியே, தென்றலு! நான் என்ன சொன்னாலும் நம்பிடறதா? மாமா இப்படி செய்வேனா? அதுவும் கோதை அத்தை மகன் இப்படி செய்வேனா? என்ன தென்றலு? அதெல்லாம் சும்மா விளையாட்டுக்கு... நீ என்ன சொல்றேன்னு பார்க்கலாம்ன்னு... அடேங்கப்பா என்ன கோபம்... என்ன பொறாமை...'' எனத் தன் கன்னத்தின் மீது கைவைத்து, அவன் வியப்பது போல் நடிக்க,

''வெளாட்டு பண்ணியா? போ மாமா... சை... நா ஒரு நிமிசம் அரண்டு போயிட்டேன்...'' எனச் செல்லமாய் சிணுங்கினாள் தென்றல்.

இதனூடே உணவகம் வந்திருக்க, அங்கே இருக்கையில் அமர்ந்ததும் ''மாமா... இப்படி செய்யல சரி, இனிமேலும் செய்யாதே மாமா... எனக் கூறி, அவனது கேள்வியான புருவச்சுளிப்பிற்கு ''அதேன்... பீடி... அதெல்லாம்... உடம்புக்கு கெடுதி!'' என்றாள் மெல்ல.



''சரி, சிகரெட் குடிக்கலை... தண்ணி? அதுவும் கூடாதா? அட்லீஸ்ட் பொண்ணு?'' என அவன் கண்ணில் சிரிப்புடன், கைகளை மொட்டுப்போல் குவித்துக்கெஞ்ச ''உதை படப்போறே!'' என ஒரு விரல் நீட்டி மிரட்டினாள் தென்றல், சிரிப்புடன் தான்!



# 9

✱ திருச்சி ✱

மித்ராவின் உடல்நலம் பற்றி தெரிந்த தினத்தை அடுத்து, மூன்று முதல் நான்கு நாட்கள் மித்ரா கல்லூரி பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை. அந்த வார இறுதியும் செவ்வனே கழிந்துவிட, அடுத்த வாரத்தின் துவக்கத்தில் தான் வகுப்பிற்கு வந்தாள் மித்ரா.

ஆனால், வந்தவளிடம் அவளது தோழிகள் யாவரும் முகம் திருப்பிக் கொள்ள விக்னேஷ் தான் பரிதாபத்தில் உருகிப் போனான்.

பக்கத்தில் அமர்ந்திருந்த கதிரின் தோள்களை இடித்து ''பாவம்டா மித்து... ஒண்ணு கூட பேச மாட்டேங்குது பாரேன்...'' என ஏகத்திற்கு அவன் பட்ட வருத்தத்தில்,

''டேய், அன்னைக்கு என்னமோ அவங்க செய்தது நியாயம் தான் என்ற ரேஞ்சில் பேசினே? இப்போ என்ன அந்தர் பல்டி அடிக்கிறே?'' என்றான் கதிர் சிரிப்புடன்.

''அது போன வாரம்... இது இந்த வாரம்'' என ராகம் இழுத்தானே ஒழிய, விக்னேஷ் பதிலேதும் சொல்வதாய் இல்லை.

இதுவரை புத்தகத்தில் பதித்திருந்த கண்களை மித்ராவின் புறம் திருப்பியிருந்த கதிருக்கு அவள் மீது ஓர் நல்ல அபிப்ராயம் விழும் பொருட்டு அமைந்தது தோழிகளின் உரையாடல்கள். பார்வதியின் அருகே அமர்ந்த மித்ரா ''ஹேய் பாரு! சாரிடி... அன்னைக்கு எனக்கே நான் என்ன செய்றேன்னு தெரியலைடி... அந்த அளவுக்கு டென்ஷன் ஜாஸ்தி ஆகிடுச்சு... இதோ பாரேன்... மெடிக்கல் ரிப்போர்ட் கூட கொண்டு வந்திருக்கேன்... என்னோட ப்ராப்ளம் பத்தி முழுசா போட்டிருக்கு பாரேன்! நான் வேணும்னே செய்யலை பாரு... என்னையும் மீறி நடந்திடுச்சு...'' என மன்னிப்பு கேட்டபோது, ''ஹே என்னடி இது ப்ரூஃப் எல்லாம் காம்பிக்கிறே! இட்ஸ் ஓகே மித்து...'' என உருகிவிட்டாள் பார்வதி.

அதே போல் மற்ற தோழிகளும் உருகிவிட, சுருதி என்றவள் ''உன் மேல அந்த நேரத்தில கோபம் இருந்ததுப்பா... ஆனா மூணு நாளா நீ காலேஜ் வரலைன்னதும் பயந்துட்டோம் தெரியுமா? உன் வீட்டுக்கு போன் பண்ணாலும் எடுக்கலையா? எங்கப்பா போயிருந்தீங்க?'' என்றாள் நட்பு உண்டு செய்த ஆதங்கத்தில்.

''கொடைக்கானலுக்குப் போயிருந்தோம்பா. எனக்கு ஒரு மாற்றத்திற்காக அப்பா அங்க கூட்டிப் போனாங்க'' என்ற மித்ராவின் பதிலில் நண்பர்கள் கூட்டம் சமாதானமாகிவிட,

''கொடைக்கானல் வரைக்கும் போயிருக்கா... ஒரு வார்த்தை சொல்லலை பாரேன்'' என விக்னேஷ் தான் அந்து அந்து விழுந்தான்.



''அவ பிரண்ட்ஸ்கிட்டேயே அவ சொல்லலை... உன்கிட்ட எதுக்குடா அவ சொல்லணும்?'' என கதிர் கூர் பார்வை பார்க்க,

''என்னடா கதிர் இப்படி சொல்லிட்டே? நாமளும் அவளோட பிரண்ட்ஸ் தானே?'' என்றான் விக்னேஷ், ஏதோ பெரும் விந்தையைக் கண்டுவிட்ட மாதிரி.

''பிரண்ட்ஸ்? இது எப்போவிலிருந்து?'' என கதிர் அவனுக்கும் மேலாய் வியக்க, ''போன வாரத்திலிருந்து!'' என அலட்சியமாய் முடித்தான் விக்னேஷ்.

அதற்கு மேல் விக்னேஷை ஆராய முடியாமல், துறை மேலாளர் வந்திருக்க, ஏற்ற இறக்கம் சற்றுமில்லாத அவரது பேச்சின் புறம் கதிரின் கவனம் திரும்பிவிட்டிருந்தது!

கதிரின் தீவிர பாவனைக்குச் சற்றும் சம்மந்தமில்லாதது போல், ''டேய்! ஏன்டா இவர்... இந்தக் கொல்லு கொல்றார்... கொஞ்சமாவது வாய்ஸ்-ல மாடுலேஷன் கொடுக்கலாம் இல்ல... காலையில சீக்கிரம் எழுந்தது வேற... அவர் ஒரே மாதிரி பேசுறது தூக்கமா வருதுடா'' என நண்பனின் காதைக் கடித்து, அதற்குப் பரிசாய் காலில் ஒரு மிதியும், ''இப்போ உன்னோட தூக்கம் பறந்து போயிருக்குமே'' என்ற விசாரிப்பையும் பெற மறக்கவில்லை விக்னேஷ்!

இரண்டு வகுப்புக்களுக்குப் பின்னர் வந்த தேநீர் இடைவேளையின் போது, கதிர் வெளியே செல்ல எழுந்தபோதும் கூட விக்னேஷ் அவனது இருக்கையை விட்டு எழவில்லை. பிற நாட்களாய் இருந்தால், தேநீர் இடைவேளையின் மணியும் விக்னேஷின் சோம்பல் முறிவுடன் கூடிய ''டீ சாப்பிட்டு வரலாமா?'' என்ற

அழைப்பும் இணை பிரியா சகோதரர்கள் போல் பின்னிப் பிணைந்திருக்கும். ஆனால் இன்றோ, தான் எழுந்த பின்னரும் இருக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்த விக்னேஷைப் பார்க்கக் கதிருக்கு வியப்பாக இருந்தது!

''என்னடா? கேண்டீன் வரலை?''

''என்னமோ சமோசா... ப்ஃப்ஸ்... டீ... காபின்னு அங்க இருக்க எல்லாம் நாக்கில தண்ணியை விட வைக்கிற மாதிரியா இருக்கு? பறந்துட்டு போறதுக்கு? எனக்கு வேணாம்... நீ வேணா போய்... அந்த சுடு தண்ணியைக் குடிச்சுட்டு வா.''

''ரொம்பத் தான்! வேண்டாட்டிப் போயேன்!'' - காலை உணவு உண்ணாத கதிருக்கு அந்த நேரத்துத் தேநீர் மிக அவசியமாய் இருந்ததால் அவன் கிளம்பிச் சென்றான்.

தேநீர் குடித்துவிட்டு அவன் திரும்பிய வேளையில் அவன் கண்ட காட்சி ''அடப்பாவி! இதுக்குத் தான் டீயை சுடு தண்ணி ஆக்கினியா?'' என வியக்க வைத்தது. அவனது இடத்தில் மித்ரா அமர்ந்திருக்க, அவளுக்கும் விக்னேஷுக்கும் மிக சுவாரஸ்யமாய் நடந்தேறிய உரையாடல் தான், கதிரின் அசாத்திய வியப்பிற்குக் காரணம்!

மெல்ல தனது இருக்கையை நோக்கிச் சென்றவன், அப்போதும் அவர்களது கவனம் தன் மீது திரும்பாததைக் கண்டு லேசாய் கனைத்தான். அதில் முதலில் விழித்த விக்னேஷ் ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்க்க, விக்னேஷின் பார்வை போன திசையில் தலையைத் திருப்பிய மித்ரா ''ஹாய் கதிர்!'' என்றாள் நட்புடன்.

''ஹாய்'' எனக் கதிர் சுருக்கமாய் முடித்ததை உணராத மித்ரா ''தேங்க்ஸ் கதிர். அன்னைக்கு என்னைப் பத்திரமா



வீட்டில கொண்டு விட்டதற்கு!'' என்றாள் அதே நட்புடன்.

''பரவாயில்லை'' என அதற்கும் கதிரின் பதில் சுருக்கமாய் அமைய,

''என்ன விக்னேஷ்? உன் பிரண்ட் உனக்கு நேர் எதிரா இருக்கான்? வார்த்தையை எண்ணி எண்ணித் தான் பேசுவாரோ?'' என்றாள் மித்ரா உயர்த்திய புருவங்களுடன்.

''அதெல்லாமில்லை. கொஞ்சம் ஸ்டார்டிங் ட்ரபிள்! உதைச்சுட்டே இருந்தா... சே சே பேசிட்டே இருந்தா... உறுமலோட அழகா ஸ்டார்ட் ஆகி... ஸ்மூத்-தா போவான்...'' - தேர்ந்த மெக்கானிக் தன் வண்டியைப் பற்றிச் சொல்வது போல் விக்னேஷ் பேச, மித்ராவிற்குச் சிரிப்புப் பீறிட்டது.

''ஓவர் பேச்சுப்பா!'' எனத் தலையில் அடித்துக்கொண்ட மித்ரா,

''சரி... சரி... எங்க அப்பா - அம்மா உங்க ரெண்டு பேருக்கும்... அன்னைக்குச் சரியாவே தேங்க்ஸ் சொல்லலையாம். அதனால் இந்த வாரம் எங்க வீட்டுக்கு லஞ்சுக்கு வரச் சொன்னாங்க... என்ன வந்துடுவீங்க தானே?'' எனத் தன் பெற்றோரின் ஆசையை முன் வைத்தாள்.

கதிர் ஏதோ சொல்லி மறுப்பதற்குள் ''சாப்பிட வாங்கன்னு நீ சொன்னாலே போதும்... இப்படி கெஞ்ச வேண்டாம்! வந்துடுறோம்!'' என அவனுக்கும் சேர்த்துப் பதில் சொன்னான் விக்னேஷ்.

''தேங்க் யூ'' என்ற மித்ராவிடம்,

''நீ சொன்னதை நாங்க மறக்க மாட்டோம்... அதே மாதிரி நான் சொன்னதையும் நீ மறக்கக் கூடாது! என்ன

டல் ஓகேவா? நோ டல்ன்னு சொன்னியோ... அப்புறம் லஞ்சுக்கு வர வேண்டிய இந்த இரண்டு வி.ஐ.பி.ஸும் கல்தா கொடுத்துடுவோம்'' என விக்னேஷ் மிரட்ட,

''மறக்கலைங்க வி.ஐ.பி சார். இன்னும் ரெண்டு நாளில் என்னோட முடிவைச் சொல்றேன்'' என்று விட்டுப் போனாள் மித்ரா.

''குட் கேர்ள்'' என அவளைப் பாராட்டிய நண்பனை வேற்று கிரக வாசி போல் பார்த்த கதிர், ''என்ன தான்டா நடக்குது இங்க?'' என்றான் புரியாத பாவனையுடன்.

''என்ன நடக்குதா? நீ நடக்கிற... மித்ரா நடக்கிறா... நம்ம பூசணி... சை சை பூரணி மாம் நடந்து வராங்க... வேறென்ன நடக்கணும்கிற?'' என விக்னேஷ் அப்பாவியாய் கண்ணை விரித்ததும், கதிருக்குக் கோபம் வந்தது.

''சரக்கு மலிந்தா சந்தைக்கு வந்து தானே ஆகணும்! அப்போ பார்த்துக்கிறேன் மகனே'' என உள்ளுக்குள் குமைந்தவனுக்கு, அந்த மலிந்த சரக்குத் தன் சந்தைக்கே வரப் போவது தெரியவில்லை!

அந்த சரக்கும் அந்த வார சனிக்கிழமையே அவனது யோகாசன சந்தைக்கு வந்தபோது தான், கதிருக்கு விவரமே புரிந்தது.

அதிகாலையில் குளித்து முடித்து, யோகப் பயிற்சிக் கூடத்திற்குள் ஆசிரியராய் அவன் புகுந்த சமயம், அங்கே பெரும் அமைதி நிலவியது. மாணவர்கள் வர இன்னும் சற்று நேரமாகும் என்பதால், ஏற்கனவே கூட்டிச் சுத்தமாக வைக்கப்பட்டிருந்த கூடத்தை மேலும் ஒருமுறை மேலோட்டமாக சுத்தப் படுத்திவிட்டு, வகுப்பு தொடங்கு



வதற்கு முன்னர் தான் செய்யும் தியானத்தை செய்யத் துவங்கினான்.

அரை மணி நேரத்திற்கும் மேலாய் சீரான மூச்சிழுப்புடன் சென்ற தியானத்தை முடித்தவன், உடம்பின் ஒவ்வோர் அணுவிற்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கும் மத்யாசனம் செய்ய எண்ணினான். எடுத்ததும் அந்த ஆசனத்தைச் செய்யாமல், மூச்சுப் பயிற்சி, தசைகளைத் தளர்த்தும் சிறு சிறு அசைவுகள் போன்றவற்றை செய்தவன், பத்மாசனம் போட்டான்.

பின்னர் மல்லாந்து படுத்து, கைகளைப் பின்னால் ஊன்றியவன், முதுகை வில் போல் வளைத்து, அதே சமயம் தலையையும் வளைத்தான். ஐந்து வினாடிகள் அதே நிலையில் இருந்தவன், மெதுவாக ஊன்றியிருந்த கைகளை எடுத்துக் கால் கட்டை விரல்களைப் பிடித்த சமயம் தான் பிரபாவதியுடன் மித்ரா உள்ளே நுழைந்தது.

''வாவ்! என்ன ஆன்ட்டி இது? இப்படி வளைஞ்சிருக்கான்? முகுது புடுச்சுக்கப் போகுது!!'' என மித்ரா வியக்க,

''இது பேரு மத்யாசனம், மித்ரா! மத்தின்னா மீனுன்னு அர்த்தம்... மீன் குளத்தில இருக்க அழுக்கை எடுத்துச் சுத்தப்படுத்துவது போல், இந்த ஆசனம் நம்ம உடம்பில இருக்க கழிவுகளை அகற்றிவிடும். கூடவே அது கொடுக்கிற உற்சாகத்திற்கு ஓர் அளவே கிடையாது'' என்றார் பிரபாவதி ஆசிரியராக.

''இருந்தாலும்... யாரோட துணையுமில்லாமல்... அவன் மட்டும் தனியா செய்றான்? யாருமில்லாத சமயத்தில எங்கயாவது இடக்கு மடக்கா பிடுச்சுக்கிச் சுன்னா?'' என அப்போதும் மித்ராவிற்கு ஆச்சரியமே!

அவளது முதல் கேள்வியில் ஆசிரியராய் பதில் சொன்ன பிரபாவதி, தற்போதைய கேள்வியில் லேசாய் வியந்து. "கதிர், யோகா கத்துக்க வந்திருக்கான்னு நினைச்சியா? அவன் ஸ்டுடெண்ட் இல்லைம்மா... யோகா இன்ஸ்ட்ரக்டர்!" என்றார்.

"யோகா இன்ஸ்ட்ரக்டரா?" என வாயைப் பிளந்தவள்,

"இந்த விக்கிப் பக்கி... கதிரும் யோகா கிளாஸ் வருவான்னு மட்டும் தான் சொல்லிச்சு... அவன் தான் டீச்சர்ன்னு சொல்லவே இல்லையே?" என்றாள் வாய்விட்டே! தான் நினைப்பதை மனதிற்குள்ளே வைத்திருந்தால் அவள் மித்ரா அல்லவே!

"அடாடா! என் பையனுக்கு என்ன ஒரு அழகான பேரு வச்சிருக்கே? அன்னைக்கு மாஸ் கட் அடிச்சபோது கூட அவனை வாங்குவாங்குன்னு வாங்கினியாமே! உன்னால தான்டா எனக்குத் திட்டுன்னு கதிரை மொத்தி எடுத்துட்டான்" என பிரபாவதி சிரிக்கவும்தான், மித்ராவிற்குத் தான் கூறியதே உறைத்தது.

ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தவள் "சாரி ஆண்ட்டி! சும்மா... ஒரு ரைமிங்-காக தான்! இனிமேல் அப்படிச் சொல்ல மாட்டேன், ஆண்ட்டி!" என்றாள் சிறு சங்கடத்துடன். தாயின் முன்னரே பிள்ளையை "பக்கி" என்றது அவளது நெஞ்சை உறுத்தியதோ என்னவோ!

"நானும் உங்க பருவத்தைத் தாண்டி வந்தவ தான்மா... காலேஜ் நாட்களில் வாழ்க்கையை அனுபவிக்காம எப்போ அனுபவிக்கப் போறோம்?! அதனால... எனக்காக உங்களை நீங்க மாத்திக்க வேண்டாம்... எப்பவும் போலவே இருங்க."



"தேங்க்ஸ் ஆண்ட்டி! விக்கி சொன்னான் - எங்கம்மா மாதிரி ஸ்வீட் அம்மா இந்த உலகத்திலேயே கிடையாது... என்னோட முதல் பிரண்ட் அவங்க தான்னு சொன்னான்... அப்போவெல்லாம் எப்பவும் போல நீ விடுறான்னு நினைச்சேன்... ஒரு ஸ்டேஜ்ல எங்கம்மா தான் பெஸ்ட் அம்மா போடான்னு சண்டை கூட போட்டேன்... இப்பவும் எங்கம்மா தான் பெஸ்ட் அம்மா" எனக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டவளிடம் இருந்த கர்வம், ஒருவகையில் பிரபாவதிக்குப் பிடித்திருந்தது.

தன்னிடமிருக்கும் பொருட்கள் ஆகட்டும், தன் முக்கிய உறவுகள் ஆகட்டும், ஏன் தானே ஆகட்டும் - உலகிலேயே பெரியது அது தான் என்ற அவளது எண்ணம், எதிலுமே சிறந்ததையே தேடத் தூண்டும் என்பதை உணர்ந்தபோதும், சிறு வயது தானே சீக்கிரம் வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வாள் எனத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டார்.

அதனால் அப்பேச்சை அப்படியே விட்டவர், கதிர் அவனது யோகாசனத்தை முடித்திருப்பதை உணர்ந்ததும் அவனிடம் சென்றார்.

"கதிர் சார், உங்களுக்கு ஒரு புது ஸ்டுடெண்ட் வந்திருக்காங்க சார்! எனக்கு... இல்லை... இல்லை என் பையனுக்கு ரொம்ப வேண்டப்பட்டப் பொண்ணு சார்! அதனால பார்த்துக்கோங்க சார்!" என்றார் போலியான பணிவுடன்.

துவாலையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்த கதிர், அப்போது தான் மித்ராவைக் கண்டான். ஆசனமோ, தியானமோ செய்யும் வரை அவனது கவனம் அவனது பரமாத்மாவிடம் மட்டுமே இருந்ததால், சற்றுச்

கூட சிலரைப் புரியவில்லை. ஆசன நிலையிலிருந்து எழுந்ததும், பிரபாவதி கூறிய விவரத்தில் சிரிப்பு மேலிட... திரும்பி பார்த்தவன் மிதமாய் அதிர்ந்தான்.

"மித்ரா... நீ இங்க?"

"விக்கி தான்... என்னோட பிரச்சனைக்கு யோகா பண்ணினா மனசு ரிலாக்ஸ் ஆகும்... மருந்து மாத்திரை கூட அவசியமில்லாம போயிடலாம்ன்னு ரொம்பவும் ப்ளேட் போட்டானா? அவனோட அறுவைத் தாங்க முடியாம ஓடி வந்துட்டேன்" எனச் சிரிப்புடன் பதில் கூறினாள் மித்ரா.

அதற்கு கதிர் ஓர் புன்னகையையே பதிலாய் கொடுத்து முடித்துவிட, "இவனுக்குப் பெரிய புன்னகை மன்னன்னு நினைப்பு... இல்லைடா மித்து!?" என்றார் பிரபாவதி சிரிப்புடன்.

"நான் நினைச்சேன்... நீங்க சொல்லிட்டீங்க" என அவருக்கு ஓர் ஹை-ஃபை கொடுத்தவள்,

"சில சமயம் இந்த புன்னகைக் கூட பஞ்சமாகி... ருத்ர மூர்த்தி மாதிரி எல்லோரையும் முறைச்சுட்டே இருப் பான்மா... பெரிய நரசிம்ம ராவ்ன்னு நினைப்புன்னு நாங் கெல்லாம் கிண்டல் பண்ணுவோம்" என்றாள், கூடுதல் தகவலாக.

"விக்கிக்கு ரைமிங்கா பேர் வச்சுட்டீங்க... இவனுக்கும் "கதிர்... ஓர் புரியாத புதிர்"ன்னு ரைமிங்கா வர மாதிரி வச்சிருக்கீங்களா? இல்லை... வேற ஏதாவது பேரா?" எனப் பிரபாவதி ஆர்வம் மிகவுற கேட்க,

"கிளாஸுக்கு நேரமாச்சும்மா" என்றான் கதிர், முகத்தை உர்ரென வைத்துக் கொண்டு.



"ஆனால் பெண்கள் இருவரும் அதை மதித்தால் தானே?" கதிர் ஒரு புதிர்! இது கூட நல்லா இருக்கே!?" எனக் கூறி பிரபாவதியிடம் கை கொடுத்த மித்ரா,

"அவனுக்கு "பாவ்லா"ன்னு பேர் வச்சிருக்கோம்" என்றாள் மர்மப் புன்னகையுடன்.

"என்னது புலாவ்வா?" எனப் பிரபாவதி கண்ணை விரிக்க,

"புலாவ் இல்லைம்மா... "பாவ்லா (Paula)"... ஹிட் லரோட தம்பி பேர் அது..." என விளக்கம் கூறியது கதிரே தான்.

"ஹே... உனக்குத் தெரியுமா?" என மித்ரா குதிக்க,

"ஹ்ம்ம் தெரியும்! Paula வை உச்சரிக்கத் தெரியாம பாவ்லா... அப்புறம் அதை பாவ்பஜ்ஜி ஆக்கின கதையும் எனக்குத் தெரியும்" என்றான் கதிர் சாதாரணமாகவே!

"ஹே தெரியுமா?" என இப்போது அதிகமாகவே துள்ளினாள் மித்ரா.

அவளுக்குச் சரியாக, "பாவ்பஜ்ஜி!" எனக் கூறிச் சப்புக் கொட்டிய பிரபாவதி, "இன்னைக்கு சாயங்காலம் அது தான்..." என்றார் சிறு பிள்ளை போல்.

"கிளாஸுக்கு நேரமாச்சும்மா" எனக் கதிர் மேலும் கடுப்படிக்க, "சரிடா... கிளம்பிட்டேன்!" என சலித்துக் கொண்டே வீடு நோக்கிச் சென்றார்.

அவரை எதிர்த்து வந்த விக்னேஷ் ட்ராக் ஷூட்டும், கைகளில் யோகாசன விரிப்புமாக வரவும் "என்ன பக்கிமா... ச்சே ச்சே விக்கிம்மா... இந்தப் பக்கம்?" எனக் கண் சிமிட்டினார்.

''என்னது பக்கியா? மித்ராவோட உபயமா? அடிப் பிச்சிடுவேன் ஜாக்கிரதை? கோடீஸ்வரன் சார்கிட்ட சொல்லி... ஒரு ஆயிரத்துக்குக் கூட வழியில்லாம பண்ணிடுவேனாக்கும்'' என வார்த்தைகள் மிரட்டியபோதும், அவனது கைகள் தாயைத் தோளோடு அணைத்திருந்தன.

''அடேங்கப்பா எனக்கு நெம்ப பயமாமாமா இருக்கே!'' எனச் சிரித்த தாயும்,

''யோகா கிளாஸ் போறியா? லேட்டா போனா... கதிருக்குக் கோபம் வரும்... ஓடு ஓடு...'' என அவனை விரட்டினார்.

அவரது கன்னத்தில் அழுத்தமாய் ஓர் முத்தம் வைத்துவிட்டு விக்னேஷ் யோகாசன வகுப்பை நோக்கி இரண்டடி எடுத்து வைக்கவும், ''விக்கி! கதிர்கிட்ட... இன்னொரு புது ஸ்டுடென்ட் சேர்ந்திருக்கான்... முதல் ஸ்டுடென்ட் மாதிரி இவன்கிட்ட பக்குவமா நடந்துக்க வேண்டாம்... நல்லா ட்ரில் வாங்குன்னு சொல்லிட்டு வந்திடவா?'' என்றவரின் வார்த்தைகளில் - ஓர் ஆசிரியரின் அக்கறை, ஓர் தாயின் கனிவு ஆகியவை பொய்யாக கலந்திருக்க, ஓர் சிறுமியின் குறும்பே முழுதாய் நிறைந்திருந்தது.

''ஒண்ணும் வேண்டாம்! நீங்க பேசாம இருக்கிறதே... எனக்கு நீங்க செய்யும் பெரும் சகாயம்... தயவு செஞ்சு போங்க'' எனக் கையெடுத்துக் கும்பிட்ட விக்னேஷ், சிரிப்புடனே யோகாசனக் கூடத்திற்குள் சென்றான்.

அவன் சென்ற பத்து நிமிடத்திற்கெல்லாம், கதிரிடம் அவன் செய்த வம்பு நின்றிருந்தது என்றால் கதிரின் புது



முகமான ஆசிரிய முகத்தை மித்ராவும் விக்னேஷும் நேரில் கண்டு வியந்து தான் போயினர்.

யோகாசனம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து அவன் பேசப் பேச, யோகா என்பதை உடற்பயிற்சி என்ற அளவில் மட்டும் பார்த்திருந்த இருவருக்குமே பிரமிப்பாய் இருந்தது. தினம் தினம் நாம் உட்கொள்ளும் உணவுகளின் மூலமாக நாமே நமக்குள் ஏற்றிக் கொள்ளும் நஞ்சுக்கள் தான் நமது வயோதிகத்தை நிர்ணயிக்கிறது எனக் கூறி, யோகாசனம் செய்வதால் உடலிலிருக்கும் நஞ்சுக்கள் நீக்கப்பட்டு உடல் சுத்தமாகவும், இணக்கமாகவும், உராய்தல் சிறிதுமின்றி நல்ல உயிரோட்டத்தோடும் இருக்கும் என்ற போது, விக்னேஷ் மற்றும் மித்ரா இருவருமே அவனது வார்த்தைகளில் கட்டுண்டு இருந்தனர் என்று தான் சொல்ல வேண்டும்.

அந்த வாரத்தில் அவர்கள் இருவரும் மட்டுமே புதியவர்களாய் இருந்த பட்சத்தில், புது நபர்கள் யாருமில்லாத அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவனிடம் வம்பு செய்ய வேண்டும் என்றெண்ணிய மித்ராவின் மூளை, அந்தத் திசையில் சிறிதும் பயணிக்கவில்லை. மாறாய், அவன் கூறும் வார்த்தைகளில் தோய்ந்து போயிருந்தாள் என்றே சொல்லலாம்.

இதுநாள் வரை, யோகா என்பது தாய் மற்றும் நண்பனை மூழ்க வைத்திருக்கும் ஓர் சாதனம் என்ற முறையிலேயே அதைப் பார்த்திருந்த விக்னேஷிற்கு, சிறு காலம் முன்னரே யோகாப்பயிற்சியைத் தொடங்கியிருக்கலாமோ என்று தோன்றியது. அதற்குக் காரணம் -

யோகாவின் மேல் தோன்றிய ஈடுபாடா அல்லது தேனுண்ட வண்டைப் போல் அமர்ந்திருந்த மித்ராவா என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாகும்!

அதிகமாய் பேசி, கேட்போரின் பொறுமையைச் சோதிக்காமல், அளவாய் பத்து நிமிடம் பேசிய கதிர், முடிவில் யோகாவின் முழு நன்மைகளையும் அடைய யோகா சனங்களுடன் பிராணயாமா மற்றும் தியானம் ஆகிய வற்றை கடைபிடிக்க வேண்டும் எனக் கூறி முடித்தான்.

அவன் முடித்த வினாடி, ''நீ இப்போ... செஞ்சியே மத்தி... மத்தி... ஹ்ம்ம் ஒரு ஆசனம்... அதை சொல்லித் தரியா?'' என ஆர்வம் மிகவுற கேட்டாள் மித்ரா.

''எடுத்த உடனே, அந்த ஆசனம் செய்ய முடியாது. முதலில் மூச்சுப் பயிற்சி, அப்புறம் தசைகள் இலகுவாக சிறு சிறு தசை அசைவுகள், மெதுவா பத்மாசனம், அப்புறம் மூச்சுப் பயிற்சியுடன் கூடிய அசைவுகள்... இதெல்லாம் தாண்டி தான் அதற்குப் போகணும்'' என முடித்த கதிர்,

''முக்கியமான விஷயம் - யோகா பயிற்சியில் அவசரம் என்பது அறவே கூடாது'' என்றான் கண்டிப்பாக.

கேட்டிருந்த இரு மாணவ மணியருக்கும் வேறு வழியின்றிப் போக, திர்கா என்ற மூச்சுப் பயிற்சியை அவனது கற்பித்தலில் செய்ய முயன்றனர். ஒரு நாசி வழியாக இழுக்கும் காற்று, அடி வயிறு வரை சென்று, அங்கே தங்க வேண்டும் என்பதை செய் முறையில் செய்துக் காட்டியவன்,

விக்னேஷிற்கு அம்முறை சரியாக வராததை உணர்ந்து அவனது அடிவயிற்றில் கைவைத்து, ''நீ மூச்சை உள்ளே இழுக்கும் போது... என்னோட கை மேல வரணும்... அதாவது உன்னோட வயிறு உப்பணும்... அதே மாதிரி ஐந்து செகண்ட் வச்சிருந்திட்டு... நீ மூச்சை வெளி விடும் போது... என் கை உள்ள நல்லா அமுங்கணும்'' என்றான். அதே போல், விக்னேஷ் ஒழுங்காய் செய்யும் வரை அவனை விடவும் இல்லை.



அவர்களையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மித்ராவைப் பார்த்து ''இங்க என்ன வேடிக்கை? நீ ஒழுங்கா தான் செய்ற... அதனால் நீ பாட்டுக்கு செஞ்சுட்டே இரு... நான் சொல்ற வரை நிறுத்தக் கூடாது'' என ஆணையிட்டான் கதிர்.

லேசான முகச் சுளிப்புடன் முகத்தைத் திருப்பிய மித்ராவிற்குத் தான் ஏன் இப்பயிற்சியை ஒழுங்காக செய்தோம்? விக்னேஷ் போல்... ஏதும் தப்பு செய்திருந்தால்... கதிர் வந்து சொல்லிக் கொடுத்திருப்பானே... தொட்டிருப்பானே... என எண்ணங்கள் நீண்டு கொண்டே சென்றன!

# 10

✸ திருச்சி ✸

கதிரின் ஸ்பரிசத்திற்காக ஏங்கிய மித்ராவின் மேனியை அவளது மூளை எச்சரித்ததன் விளைவாக, தன் எண்

ணங்களின் விபரீதப் போக்கைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்றாள், மித்ரா!

அவளது முயற்சிக்கு உதவுவது போல் ''இன்றைக்குப் பாடம் அவ்வளவு தான்! நீங்க வேணும்னா கால் மணி நேரம் மூச்சுப் பயிற்சி செய்துட்டுக் கிளம்பலாம்'' என்ற கதிர், தனது அடுத்த வகுப்பிற்கான மாணவர்களை எதிர்நோக்கத் தொடங்கிவிட்டான்.

''அவ்வளவு தானா? ஏன்? இன்னும் கொஞ்சம் சொல் லிக் கொடு! வாங்கின காசுக்கு வஞ்சகம் செய்யாதேபா... காசு கொடுத்தவ கேட்கிறேன்... சொல்லிக் கொடு!'' என்ற மித்ராவிற்கு அவனிடம் சண்டை போட வேண்டு மென்ற எண்ணம் துளியும் இருக்கவில்லை.

அந்த எண்ணத்தைக் குரலில் கொண்டு வந்து, அவள் குழைய, கதிரவனின் முகத்தில் அவள் எதிர்பார்த்தச் சிரிப்பிற்குப் பதிலாக, கடுகடுவென எள்ளும் கொள்ளும் வெடித்துச் சிதறின.

''உன் பணத்திற்காக இங்க யாரும் நாக்கைத் தொங் கப் போட்டுட்டு இருக்கலை. ஒரு யோகா மாஸ்டரா எனக்கு எதை, எப்போ, எப்படி சொல்லித் தரணும்னு தெரியும். அதன்படி தான் சொல்லித் தருவேன்! அது உன்னோட காசுக்கு வஞ்சகம் செய்ற மாதிரி இருந்தா, உன்னோட காசை வாங்கிட்டுப் போய்ட்டே இரு!'' என வார்த்தைகளை அவன் அள்ளிக் கொட்டிய வேகத்தில், விக்னேஷ் பயந்து போனான்.

''டேய் கதிர்! ரிலாக்ஸ்மா. அவ உன்னைக் கேள்வி கேட்கலை. சும்மா கிண்டல்...'' என நண்பனிடம் அவன்



கெஞ்சியது காற்றுக்கு இரையாக, கதிர் அங்கிருந்து நகர்ந்து போயே விட்டான்.

அவனது நடையிலேயே அவனது எரிச்சல் புரிய, ஆயாசத்துடன் அவனைப் பார்த்திருந்த விக்னேஷ், தன் வலது புறத்தில் அமர்ந்திருந்த ருத்ர காளி மித்ராவிடம் கண்ணைத் திருப்பினான்.

எரித்து விடுபவள் போல், கதிரின் முதுகுப் புறத் தையே வெறித்துக் கொண்டிருந்த மித்ராவிடம் ''மித்து ப்ளீஸ்... அவன்கிட்ட காசு பணம்... அந்தஸ்து... இது பத்திப் பேசாதயேன்!? அவன் அந்த விஷயங்களில் ரொம்ப ரொம்ப ரொம்ப சென்சிடிவ். சட்டுன்னு கோபம் வந்திடும். மித்த விஷயங்களில் அவன் எவ்வளவு பொறுமைசாலியோ, அந்தளவிற்கு இந்த விஷயத்தில் கோபக்காரன்! ப்ளீஸ் புரிஞ்சுக்கோ!'' என்றான் புரிய வைத்துவிடும் தவிப்புடன்.

ஆனால், புரிந்து கொள்வதற்குப் பதிலாக எரிந்து கொண்டிருந்தது மித்ராவின் மனம். இது நாள் வரையிலும், யாரும் அவளைத் திட்டியதே இல்லை என்று சொல்லிவிடலாம்! வீட்டில், பள்ளியில், கல்லூரியில் என எல்லோருக்கும் அவள் ஒரு செல்லப் பிள்ளை தான்! சில தினங்கள் முன்னர், தோழிகளி டையே ஏற்பட்டச் சின்னச் சண்டையில் கூட, மித்ராவை யாரும் திட்டவில்லை... கோபமாய் பேசினார்கள் தான், ஆனால் அது துறைத் தலைவரிடம் செல்வேன் என்ற மித்ராவின் மிரட்டலில் வெளிப்பட்ட பயத்தினால் தான் என்பது மித்ராவின் கணிப்பு! அப்படியிருக்கையில், கதிரின் இன்றைய சுடு சொற்கள் பெரும் எரிச்சலைக் கிளப்பியது!

அந்த எரிச்சலைக் குரலில் மறையாது காட்டிய மித்ரா ''அவனுக்கு மட்டும் தான் கோபம் வருமா? எனக்கும் தான் வரும்! அதை எப்படிக் காட்டுறேன் பாரு'' எனச் சவால் விட்டுவிட்டு, அங்கிருந்து நகர்ந்தாள்.

கவலையுடன் இரு நண்பர்களையும் பார்த்திருந்த விக்னேஷ், எழுந்து வீட்டினுள் செல்வதற்கு முன்னர், பிரபாவதியின் முன்னே நின்றிருந்த மித்ரா, என்ன சொன்னாளோ, பிரபாவதியின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்திருந்தது.

''சரிடா. நான் பார்த்துக்கிறேன்! நீ... வீட்டுக்குப் போ!'' என அவளை வீட்டிற்கு அனுப்பியவரிடம் ''அம்மா... கதிர்...'' என விக்னேஷ் தொடங்க, ''எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு, விக்கி. இதோ வந்துடுறேன்'' என நழுவி, யோகாக் கூடம் நோக்கி நடந்தவரை யோசனையுடன் பார்த்திருந்தான், விக்னேஷ்!

ஒரு மணி நேரம் சென்று, கல்லூரி செல்வதற்காக யோகாக் கூடத்தைவிட்டு வெளியே வந்த கதிர், எப்போதும் போல் வீட்டிற்கு வராமல், யோகாக் கூடத்திற்கென தனியாக அமைக்கப்பட்டிருந்த வாயிலின் வழியே வெளியே சென்றுவிட்டான் என்பதை விக்னேஷ் அறியவில்லை. சாப்பாட்டு மேசையில் தந்தையுடன் அமர்ந்தவன், வாயிலையே எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட கோடீஸ்வரன் ''கதிரையா தேடுறே?'' என்றார் வியப்பாக.

''ஆமாப்பா! காலேஜ் நேரமாகிடுச்சு... அவன் வந்தா சாப்பிட்டுப் போக சரியா இருக்கும்...' எனக் கையைத் திருப்பி மணி பார்த்த மகனின் தோளில் தட்டி,



''அவன் அப்பவே கிளம்பிட்டானே கண்ணா!'' என்றார் வியப்பை மறைத்துக் கொண்டு.

''கிளம்பிட்டானா? எப்போப்பா? நீங்க பார்த்தீங்களா?'' என இருக்கையை விட்டு எழுந்து, கிட்டத்தட்டக் கூவினான், விக்னேஷ்.

''எதுக்கு இவ்வளவு டென்ஷன்? அமைதியா இரு!'' என்ற பிரபாவதியின் குரலில்

''அவனை ஏதாவது சொன்னீங்களாமா? மித்ரா சொன்னதை வச்சா?'' என மகன் எகிற,

''உன் நண்பனை நான் ஒண்ணுமே சொல்லலை. என்னோட ஸ்டாஃப்-பைத் தான் சொன்னேன்'' எனப் பட்டென பதில் கொடுத்தார், பிரபாவதி! தாய் எவ்வளவுக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுக்கிறாரோ அந்தளவிற்கு அவரிடம் கண்டிப்பும் இருக்கும் என்பதை அறிந்த விக்னேஷிற்கு, இந்தக் குரல் தப்பு செய்தால் தண்டிக்கும் குரல் என்பது புரிய, எகிறிய குரல் சட்டென தாழ்ந்து போனது!

உணவை மறுத்துவிட்டுக் கல்லூரிக்குப் பறந்தவன், நேரே கதிரின் அறைக்குச் செல்ல, அவனது அறைத் தோழர்களின் ''கதிர் காலேஜ் போய்ட்டானே!'' என்ற அறிவிப்புக் காத்திருந்தது.

அதற்குள்ளாகவா? இன்னும் கால் மணி நேரத்திற்கும் மேல் இருக்கிறதே? என்ற எண்ணத்துடன் வகுப்பிற்குச் சென்றால், கதிர் என்ற ஒற்றை ஜீவன் மட்டும், அங்கே அமர்ந்திருந்தது!

''டேய், என்னடா நினைச்சிட்டு இருக்கே உன் மனசில? எதுக்குடா சொல்லாம கொள்ளாம வந்தே?

சாப்பிடவும் இல்ல... ப்ச்... ஏன் இப்படி செய்றே?'' எனக் கடிந்து கொண்டே, நண்பனின் அருகே வந்து அமர்ந்தான் விக்னேஷ்.

''சாரி விக்கி!'' என அவன் ஒற்றை வார்த்தையில் முடித்துக் கொண்டதும், ''அம்மா, ஏதாவது சொன்னாங்களாடா?'' என்றான் தயக்கத்துடன்.

''ம்ம்'' என ஆரம்பித்தவன், ''இல்ல. ஒண்ணும் சொல்லலை'' என்றான் அவசரமாக.

''எனக்குத் தெரியும் அம்மா... உன்னை ஏதோ சொல்லியிருக்காங்க!'' என விக்னேஷ் அடித்துப் பேச,

''இல்லைன்னு சொல்றேனே விக்கி'' எனக் கதிர் அதற்கு மேலும் அடித்துப் பேச,

''சும்மா மழுப்பாதேடா! அம்மா சொல்லிட்டாங்க! மித்ரா விஷயம் தானே?'' என்றான் விக்னேஷ், அவனுக்கும் மேலான அழுத்தக் குரலில்.

''ஹோ, சொல்லிட்டாங்களா? ஹ்ம்ம் ஆமா! ஒரு ஆசிரியரா நான் மித்ராகிட்ட பேசினது தப்புத் தானே? படிக்க வரவங்ககிட்ட இப்படிப் பேசினா, யாருக்குத் தான் கோபம் வராது! நான் பாட்டுக்கு என் மனசில தோணியதெல்லாம் பேசினா, யோகா கிளாஸுக்கு வரவங்க எல்லாம் ''நீயும் ஆச்சு, உன் பணமும் ஆச்சு''ன்னு அம்மா முகத்தில தூக்கி எறிஞ்சிட்டுப் போய்டுவாங்க இல்லை!? ப்ச்... நான் செய்தது தப்புத் தான்! அம்மா வைக்கிற பாசத்தை சாதகமா எடுத்திட்டு, முதலாளி மாதிரி ஏதேதோ பேசிட்டேன்! இனிமேல் பார்த்து நடந்துக்கணும்!'' என்றான் கதிர், உணர்ந்த குரலில். அதில் வருத்தமிருந்த போதும், ஓர் உறுதி தெரிந்தது!



''இல்லைடா கதிர்! அம்மா...'' என ஆரம்பித்த விக்னேஷிடம்,

''இல்லை விக்கி! எனக்கு அம்மா மேல கோபமில்லை. என் மேல தான் கோபம்! கொடுத்த இடத்தை அதிகமா உபயோகப்படுத்திக்கிட்ட கோபம்!'' என்ற கதிருக்குப் பிரபாவதியின் வார்த்தைகளே நெஞ்சினுள் ஓடிக் கொண்டே இருந்தன.

''உன்னோட காசை வாங்கிட்டுப் போய்ட்டே இருன்னு சொன்னியாமே? இப்படித் தான் ஒரு ஸ்டுடென்ட்கிட்டப் பேசுறதா? நாம சொல்லித்தரும் கலையை வச்சு வரதை விட, நம்ம நடந்துக்கிற முறையை வச்சுத்தான் நிறையப் பேர், நம்மைத் தேடி வருவாங்க! நீ இப்படி... எல்லோரையும் எடுத்து எறிஞ்சு பேசிட்டு இருந்தின்னா, சீக்கிரமே இந்த யோகா கிளாசை இழுத்து மூட வேண்டியது தான்! இன்னைக்கு மித்ரா... நாளைக்கு இன்னொருத்தர்... இப்படிப் போய்ட்டே இருந்தா... உனக்கு நல்லதில்லை, கதிர்! இந்தத் தப்பை விக்னேஷ் செய்திருந்தாலும், அவனை இத போலத் தான் கண்டிச்சிருப்பேன். நான் சொல்றதைப் புரிஞ்சுக்கிற பக்குவம் உனக்கு இருக்குன்னு நான் நம்புறேன்!'' எனக் குரலில் ஏற்ற இரக்கமில்லாமல், தெளிவான சீரான குரலில் அவர் சொல்லிக் கொண்டே செல்ல, அப்போது கனத்த நெஞ்சம் இன்னமும் சரியாக வில்லை, கதிருக்கு!

''திட்டி விட்டாரே!?'' என்ற கோபமோ, ஆதங்கமோ இல்லாமல் தாயில்லாத தனக்குத் தாயாய் விளங்கியவரிடம் திட்டு வாங்கினோமே என்ற வருத்தமே மேலோங்க, புத்தகத்தை வெறித்துக் கொண்டிருந்த

கதிரிடம், அம்மாக்காக... நான் சாரி கேட்டுக்கிறேன்” என்றான் விக்னேஷ்.

“ஹே லூசு, நான் பண்ணின தப்புக்கு நீ ஏன் டா சாரி கேட்கிறே?” என்ற கதிருக்குத் தன் தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கியிருந்து, அதற்கான முயற்சிகள் எனச் சிலபல நடவடிக்கைகளை எடுத்தான்.

அதன் முதல் முயற்சியாக, அன்றைய தேநீர் இடைவேளையின் போது, அவர்களது இருக்கை நோக்கி வந்த மித்ராவைக் கண்டதும் “எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு” என்று ஒதுங்கிப் போனான்.

விக்னேஷிடம் வந்த மித்ரா “என்ன... உன்னோட உன்னத நண்பன் முறுக்கிட்டுப் போறான்!? காலையில விழுந்த திட்டோட பாதிப்பா?” என உதடு சுளித்து, முகத்தில் எரிச்சலைக் காட்ட,

“ஏன் மித்ரா? எதுக்காக எங்கம்மாகிட்ட... கதிர் பேசினதைச் சொன்னே? ப்ச்...” எனத் தன் வருத்தத்தை முறையே காட்டிவிட்டான், கதிரின் உயிர்த்தோழன்.

“அப்படித் தான் சொல்வேன்! நான் சும்மா விளையாட்டுக்குத் தானே சொன்னேன்... பெரிய இது மாதிரி கத்துறான்...” என்றபோது மித்ராவின் குரல், சில தினங்களுக்கு முன்னர் தன் தோழியர் செய்த கிண்டலுக்காக அவர்களை வறுத்தெடுத்தது போலவே இருந்தது!

அந்தக் குரலின் அபாயப் போக்கு புரிந்து, சட்டென சுதாரித்த விக்னேஷ், மித்ராவின் புரியாத கோபத்தை விட, கதிரின் புரிந்த கோபம் எவ்வளவோ மேல் என்ற



முடிவிற்கு வந்து சேர்ந்தான்! அதன்படி, மித்ராவிடம் வேறு விஷயங்கள் பேசியவன், அடுத்த நாள் யோகா வகுப்பிற்கு அவள் வருவதை உறுதி செய்தும் கொண்டான்!

கதிர் மேலிருக்கும் கோபத்தில் வராமல் இருந்து விடுவாளோ என்ற அவனது பயத்தைப் போக்குவது போல், அடுத்த நாள் வந்து நின்ற மித்ரா, கதிரைப் பார்த்த பார்வையில் நிச்சயம் எரிச்சல் இருந்தது. அதை விடவும் மேலாய், இகழ்ச்சி இருந்தது!

இன்று என்ன பிரச்னை வரக் காத்திருக்கிறதோ என்ற பதைப்புடன், வகுப்பைத் தொடங்கிய விக்னேஷ் கதிரின் பொறுமையிக்கப் பயிற்சியில் மனதையும் உடலையும் யோகாவினுள் உட்படுத்தினான்.

இப்போதும் விக்னேஷின் உடல் அசைவுகளைத் தன் கைகளினால் தொட்டுச் சரி செய்து கொண்டிருந்த கதிரைப் பார்க்கும் போது, மித்ராவிற்கு நேற்றைய தினம் போல் ஆசை எழவில்லை. அவள் மனம் முழுதும், கதிரின் நேற்றைய பேச்சுக்களும், “எந்தத் தப்பும் செய்யாத என்னைத் தூக்கி எறிந்து பேசிவிட்டான்” என்ற கோபமும், என்னை மதிக்காதவனின் மேல் எனக்கு அப்படி ஒரு எண்ணம் வரவே கூடாது என்ற வைராக்கியமும் மட்டுமே நிறைந்திருந்தது!

அந்த வைராக்கியத்தின் காரணமாய், தன் வேலையில் மட்டும் கவனமாய் இருந்த மித்ரா, பயிற்சி முடிந்ததும் வெளியே செல்லத் திரும்ப “மேடம், ஒரு நிமிடம்” என்ற கதிரின் குரல் அவளைத் தடுத்தது!

"என்னையா?" என்பது போல் திரும்பிப் பார்த்தவளின் ஆச்சரியப் பார்வையைத் தன் நேர் பார்வையினால் தவிர்த்து.

"நேற்று உங்களிடம் எடுத்தெறிந்து பேசியது தவறு தான்! மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்றான் ஒவ்வொரு வார்த்தைக்கும் போதிய இடைவெளிவிட்டு, அழுத்தம் திருத்தமாக.

"டேய்!" என விக்னேஷ் நடுப்புகும் போதே, "இட்ஸ் ஓகே. பரவாயில்லை!" என்ற வார்த்தையுடன், வெளியே சென்றுவிட்டாள், மித்ரா.

அவளைப் பொறுத்தவரை, தான் செய்யாத தப்பிற்கு அவளது சுடு சொற்கள் மிகவும் தப்பு! அந்தத் தப்பிற்கான மன்னிப்பை அவன் வேண்டுவது சரியே என்ற எண்ணம் தான்! அதே எண்ணம் தான், கதிருக்கும்!

ஆனால், கதிரின் உயிர்த் தோழனான விக்னேஷிற்குக் கதிரின் இந்த வார்த்தைகள் ஏதோ அபாய மணியின் சத்தம் போலவே தோன்றியது!

அது அபாய மணியே தான் என்று உறுதி செய்வது போல், அடுத்தடுத்து சில சம்பவங்கள் நடந்தேறின.

வாரத்திற்கு இரண்டு முறைக்கும் மேலாக விக்னேஷின் வீட்டிற்கு வந்துவிடும் கதிர், அந்த வாரம் முழுதும் அவனது வீட்டிற்குச் செல்வதைத் தவிர்த்தான்!

அடுத்ததாய் நடந்தது தான் விக்னேஷை மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தது!

இரண்டு வாரத்திற்கு ஒரு முறை என ஏறக்குறைய எல்லா வார இறுதிகளிலும், கதிர் திண்டுக்கல் சென்று



விடுவது வழக்கம். அங்கே இருக்கும் ஓர் பிரபல துணிக் கடையின் முதலாளியிடம் வாங்கிய கடனை, வேலை செய்து கழித்துக் கொண்டிருக்கிறான் என்பது விக்னேஷ் அறிந்த விஷயமே. அந்தப் பணம், அவனது முதல் வருடக் கல்லூரிக் கட்டணத்திற்காக வாங்கியது என்றும், அதை முக்கால் பாகம் அடைத்துவிட்டதாகவும், மீதியை அடைக்கும் முன்னர், அதற்கான வட்டிக்காக அங்கே சென்று வேலை செய்வதாகவும் கூறியிருக்கிறான்.

ஆனால், முதல் வருடம் தொட்டு நடந்து கொண்டிருந்த இந்தப் பழக்கம், சட்டென நின்று போனது!

மூன்று வாரங்களுக்கும் மேலாய் அவன் திண்டுக்கல் போகாமல், வார இறுதிகளில் யோகா வகுப்பிற்கு வருவதைக் கவனித்துவிட்டு, "ஏன்டா" எனக் கேட்டதற்கு,

"அண்ணாச்சி கிட்ட வாங்கின கடனை அடைச்சாச்சு!" என்றான் கதிர். அதைக் கூறும் போது, அவனது கண்களில் தென்பட்ட அடிபட்ட வலியும், அந்த வலியிலிருந்து மீளும் வழி தெரியாமல் அவன் பட்டபாடும், செல்வச் செழிப்பில் புரளும் அவனது உயிர்த் தோழனுக்குப் புரியாமல் போனது தான் உண்மை!

"எப்படி அடைச்சே?" என ஆயிரம் முறைக்கும் மேலாய் கிடுக்கிப் பிடி போட்டு,

முடிவில் "வேறோர் ஆளிடம் வாங்கிக் கொடுத்தேன்" என்ற தெளிவில்லாத பதிலே பெற்றான் விக்னேஷ். அந்த வேறோர் ஆள் யாரென்பதை, என்ன முயன்றும் கதிரிடமிருந்து வாங்க முடியவில்லை.

''எதுக்கு இவ்வளவு அவசரம்?'' என்ற விக்னேஷிடம் பதில் சொல்லாமல் மழுப்பிய கதிரால், பிரபாவதியிடம் மழுப்ப முடியவில்லை. ''இங்கே, வாரக் கடைசியில் கிளாஸ் எடுப்பது தானே என்னோட வேலை... எனக்குன்னு ஒதுக்கப்பட்ட நேரத்தில் செய்யாம, அதுக்குப் பதிலா வேற நாளில் செய்வது கூட ஒரு வகையில் அட்வான்டேஜ் எடுத்துக்கிறது மாதிரி தானே?'' என்ற அந்த ரோஷக்காரனின் நேர் பார்வையைப் போல் அவனது குரலும் நிமிர்ந்தே நின்று, அவனது தன்மானத்தைப் பறைசாற்றியது!

அந்தப் பதிலில் நண்பனுக்காய் சிலிர்த்த விக்னேஷின் இதயம் ''எல்லாம் உங்களால் தான்'' என்பது போல் தாயை முறைக்க,

அவரோ ''அம்மா... அம்மான்னு கூப்பிடறதெல்லாம் சும்மா வாய் வார்த்தைக்காக தான் இல்லையாடா? ஒரு அம்மாவா... உன்னோட தவறுகளை நான் திருத்தக் கூடாதா?'' எனப் பொரிந்து தள்ளிவிட்டார்.

''தாயும் மகனும் என்றாலும், வாயும் வயிறும் வேற தானேமா!'' எனச் சட்டென பதில் சொன்னவன்,

''சாரிமா. சட்டுன்னு வாயில வந்துடுச்சு! நீங்க திருத்தினதில் இருந்த உண்மையை உணர்ந்ததால தான், இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கேன்! மித்ராகிட்ட நான் அப்படி பேசினதுக்கு, என்னோட அடிப்படை குணம் தான் காரணம்னாலும், உங்ககிட்ட நான் எடுத்துக்கிட்ட அதிகப்படி உரிமையும் ஒரு வகையில் அதுக்குக் காரணம் தான்! அதை குறைக்கிறதுக்கான ஒரு சின்ன



முயற்சி தான் இது... ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க!'' என்றதோடு முடித்துக் கொண்டான்.

தாயைப் போல் எண்ணும் பிரபாவதியிடமே ரோஷம் பாராட்டிய கதிர், அதற்குக் காரணமாய் இருந்த மித்ராவிடம் தன் ரோஷத்தைக் காட்டாமலா இருப்பான்?! தன்னால் முடிந்த மட்டும், அதைக் காட்டவே செய்தான், அந்த மண்ணின் மைந்தன்!

தானாய் சென்று அவளிடம் பேசும் வேலையை எப்போதுமே அவன் செய்ததில்லை என்பதால், இப்போதும் அவளிருந்த பக்கமே அவனது தலை திரும்பாதது யாருக்குமே வித்தியாசமாய் படவில்லை! ஆனால், பிறரின் கண்ணிற்குப் படாதபோதும், சம்பந்தப்பட்டவளின் கண்களில் முறையே பட்டது!

தன் வார்த்தைகளுக்கான மன்னிப்பை அவன் வேண்டியதுமே, மித்ராவின் கோபம் மறைந்துவிட்டது எனலாம். அவன் தப்பு செய்தான் - மன்னிப்பு கேட்டான் - அதோடு முடிந்துவிட்டது என்பது அவளது கணக்கு! அந்த கணக்கின் படி, விக்னேஷுடன் பேசும்போது கதிரிடமும் ஏதாவது தொணத்தொணத்தவளுக்கு, முகத்தைப் பாராமல் அவன் கூறும் பதில்கள் ஒரு வித எரிச்சலையும், ஏன் இப்படி என்ற வியப்பையும் உண்டு பண்ணின.

தன்னிடம் பேச வேண்டும் என ராகுல் தவமிருக்கையில், அவனது முகத்தைப் பார்க்கவே பிடிக்காமல், விக்னேஷ் மற்றும் கதிருடன் பேச வந்தால், இவன் என்னவோ பேசுவதற்குக் காசு கேட்பான் போலவே!? என மூக்கின் மேல் விரல் வைத்து வியந்தவள்,

கிட்டத்தட்ட மூன்று மாதத்திற்கும் மேலாய் இது தொடர்ந்து அடுத்த வருடத்தில் அவர்கள் காலடி எடுத்து வைத்தப் போதும் நீடிக்கவே, ஓர் நல்ல நாள் - பெரிய நாளில் என்ன பேசுகிறோம் என்பதை அறியாமல் ''என்ன கதிர்? என்கிட்டே பேசுறதுக்கு உனக்குக் காசு எதுவும் வேணுமா? முகத்தைப் பார்க்காம, வார்த்தையை எண்ணி எண்ணிப் பேசுறே?'' என மனதில் எண்ணியதைக் கேட்டே விட்டாள்!

கதிரின் புதிரான போக்கின் காரணம் தெரிந்த விக்னேஷ், தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்து விட, 'காசு... காசு... காசு... உனக்கு இதை விட்டா வேற பேச்சே கிடையாதா? நீ... பெரிய பணக்காரின்னா அது உன் மட்டுக்கும்... அதை எல்லார்கிட்டயும் காட்டுற வேலை வேண்டாம்!' என்ற வார்த்தைகள் சுடச் சுடக் கொதித்தப் போதும், கதிரின் முகம் நிதானமாய் மித்ராவை நோக்கியிருந்தது.

''ஹே! நா... சும்மா...'' என அவள் தொடங்க,

''இதையும் வேணும்னா ஹெட்ச்.ஓ.டி கிட்டச் சொல்லு! ஆனா, ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சுக்கோ... யோகா கிளாஸ்-ல கேட்ட மாதிரி உன்கிட்ட வந்து மன்னிப்பெல்லாம் கேட்க மாட்டேன்'' என வார்த்தைகள் சாட்டையாய் சுழன்று விழுந்தன.

''இவன் ரொம்ப ஓவர்ரா பேசுறான்!'' என விக்னேஷிடம் திக்கிய மித்ராவிற்குக் கண்கள் சிவந்து, கன்னம் இரண்டும் பெருந்தணலில் வைத்தத் தோசைக் கல்லாய் கங்கென சிவந்திருந்தன.

மித்ராவின் முகத்தின் சிவப்பும், குரலின் நடுக்கமும் விக்னேஷை பேசவைத்தன; இது நாள் வரையிலும்



உயிராய் இருந்த நண்பனை வார்த்தைகளால் சாட வைத்தன; ''இவன் என் நண்பன்!'' என்று ஒருவருக்கு ஒருவர் பெருமை பட்டுக் கொண்டிருந்த அவனே ''உன்னை என் பிரண்ட்ன்னு சொல்லவே எனக்குப் பிடிக்கலை'' என்று சொல்ல வைத்தது!

விக்னேஷ் மற்றும் மித்ராவை விட்டுவிட்டு நகர்ந்து சென்ற கதிரை ''டேய் கதிர்'' என்று விளித்து நிறுத்திய விக்னேஷ்,

''என்ன நினைச்சுட்டு இருக்க உன் மனசில? ஒரு கிண்டலை... கிண்டலா எடுத்துக்கத் தெரியாதா உனக்கு?'' என்றான் காட்டத்துடன்.

''அவ பேசினதில எனக்குமே எந்த தப்பும் தெரியல! அதை விளையாட்டான பேச்சா... பிரண்ட்ஸ்குள்ள பேசுற பேச்சா எடுத்துக்க முடியாதா உன்னாலா?''

''உன்கிட்ட பணமில்லைன்னு இங்க யாருமே உன்னைக் குறைவா எடை போடலை! சொல்லப் போனா, அந்த நினைப்பே எங்க யாருக்குமில்லை... நீ தான் அதை விடாம பிடிச்சுக்கிட்டு, எங்களையெல்லாம் படுத்துறே!?''

''எப்போ எதுக்காக கோபப் படுவியோ என்ற பயத்தில்... வார்த்தையை யோசிச்சு யோசிச்சுப் பேச வேண்டியிருக்கு! சை... எரிச்சல் மூட்டுறே, கதிர்!''

''எல்லாரும் உன்னை மாதிரி மனுஷங்க தானே? நீ மட்டும் மேலிருந்து குதிச்சா வந்தே?! பெரிய இவன் மாதிரி...''

''உன் பிரண்ட்ஸ் புத்தி சொல்லு... உன்னைப் பத்திச் சொல்றேன்னு சொல்வாங்க. அப்படிப் பார்த்தா,

என்னைப் பத்திக் கண்டிப்பா தப்பா தான் சொல்வாங்க!" எனக் கூறி முடித்தபோது! விக்னேஷின் கோபம் அடங்கிய பாடாய் இல்லை.

"மித்ராவின் சீண்டல் வார்த்தைகளுக்குக் கூட இந்தளவு சீற வேண்டுமா? கொஞ்சமும் மாறக் கூடாதா?" என்ற தன் ஆத்திரத்தையும், ஆதங்கத்தையும் அவன் மறைக்காமல் காட்டிவிட, அந்தக் காட்சியில் சம்பந்தப்பட்டிருந்த மூவருமே பெருத்த அமைதிக்கு ஆளாகினர்!

இந்த அமைதி அடுத்து வந்த ஆண்டுகளில் கரைந்த போதும், விக்னேஷிடம் முன்பு காட்டிய நெருக்கத்தைக் கதிர் காட்டவே இல்லை!

அதே போல், மித்ராவிடம் காட்டியே இராத நெருக்கம், கல்லூரி முழுதும், "மித்ராக்கும் கதிருக்கும் சண்டையா. ரெண்டு பேரும் பேசிக்கிறதே இல்லை! மித்ரா இருக்கிற ப்ராஜெக்ட் குரூப்-ல கூட இருக்கமாட்டேன்னு சொல்லிட்டானாம் கதிர்! ரெண்டு பேருக்கும் இடையே விக்னேஷ் தான் மாட்டிட்டு முழிக்கிறான்!" என்று பேசும் அளவிற்கு காட்டப்படாமலே போனது! கல்லூரிக் காலத்தை அவர்கள் முடிக்கும் வரையிலும் கூட!!



# 11

• வெள்ளகவி •

*(நான்கு வருடங்களுக்குப் பிறகு - அதாவது சோழன் தனது படிப்பை முடித்துக் கொண்டு சொந்த மண் திரும்பும் நாள்)*



அதிகாலை நான்கு மணியளவில் கொடைக்கானலை அடைந்து, அங்கிருந்து கால் நடையாக வெள்ளகவி வந்து சேர்ந்த சோழனின் கால்கள், தென்றல் வேலை செய்யும் பெருமாள் கோவிலை நோக்கிச் சென்றன.

அவன் கோவிலை அடைந்தபோது, அர்ச்சகர் கூட வாராதிருக்க, தென்றல் சுற்றுப் பிரகாரத்தைப் பெருக்குவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள்.

தன் கையிடுக்கில் துடைப்பத்தை இடுக்கிக் கொண்டு, காதுக்குள் செல்லும் ஊதல் காற்றைக் கட்டுப் படுத்துவதற்காக, தன் தலையிலிருந்த துணியை இறுக்கிக் கட்டிய தென்றலின் காதுகளில் "தென்றல்" என்ற சோழனின் அழைப்பு விழவில்லை.

விரைந்து நடந்தவளை ஓட்டத்தில் பிடித்த சோழனின் கை, அவளது தோளில் விழவும், கையிலிருந்த துடைப்பத்தைக் காற்றில் வீசியவாறே திரும்பிய தென்றல், அங்கே தனது வருங்காலக் கணவனைக் கண்டதும் "மாமா" எனக் கூவினாள்.

"முதுகைப் பொளந்துறாதேமா தாயே!" எனக் கையை மேலே தூக்கி, முதுகைக் குறுக்கி, கால்களை வளைத்து கும்பிடுவது போல் பாவனை செய்த சோழனைப் பார்த்து மனம் விட்டுச் சிரித்தாள், தென்றல்.

"அய்யோ மாமா! கம்மாணச்சும் வந்தைக் கூட்டாதே... பாக்குறவுக என்னைய தப்பா நினைப்பாக" என அவனது கையைப் பிடித்துக் கீழிறக்கி விட்டவளுக்கு, தன் மாமனின் வருகை மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. கடந்த நான்கு வருடங்களாக, அவனது வருகை வெகுவ[illegible]ந்து போயிருந்ததே! மாதம் ஒரு முறை

என்றிருந்த அவனது வருகை, மூன்று மாதத்திற்கு ஒரு முறை என மாறியபோதே தென்றலால் தாங்க முடியவில்லை.

ஒரு முறை, வியாபாரத்திற்குப் போகும் தினமான ஞாயிறன்று வந்திறங்கிய சோழனைக் கண்டதும் தென்றல் பொரிந்து விட்டாள். ''ஏன் மாமா... ஏன் மாமா... இப்படிச் செய்யுதே? மூணு மாசமா காணலையே? என்ன செய்றியோ? அப்படியென்னத்த வெட்டி முறிப்பியோ... மாசத்துக்கு ஒரு முறை வந்து போகக் கூடாதா, மாமா? உனக்கென்னவோ ஏதோன்னு மனசு கிடந்து மறுகிப் போவுது!'' என அவள் எரிச்சல் படவும்,

''வேணும்னே யாராவது வராம இருப்பாங்களா, தென்றலு?!'' எனத் தானும் வருந்திவிட்டு, ''நா வேலை பாக்குற இடத்தில மூணு மாசத்துக்கு ஒரு வாட்டி தான் லீவு கேட்க முடியும். அதனால தான்!'' என்றான், சோழன் விளக்கம் போல.

''அதான் திண்டுக்கல்லு-ல வேலைக்குப் போறதில்லைல... அந்த துணிக்கடை யண்ணே இன்னமும் ஜோலிக்குக் கூப்பிடுதாரா என்ன?'' என அவள் எரிச்சலுடன் புருவம் உயர்த்த, ''அவர்ட்ட பார்த்த வேலையை விடுறதுக்குத் தானே, உன்னோட மொதலாளி கிட்ட காசு வாங்கித் தந்தே. இது வேற இடம்மா...'' என்றான் சோழன், முன்னர் நடந்ததை மீண்டும் எடுத்துக் கூறி,

''அவர்ட்ட வாங்குன காசைத் திருப்பிட்டோம்ல. பொறவு என்ன? இந்த வருஷத்துக்கும் பள்ளிக்கூடப் பீஸ் கட்டியாச்சு... மாசா மாசம் ரூமுக்கு ஆவுற காசையும் தான் அதில வாங்கிட்டாக இல்ல... வேற என்ன மாமா செலவு?'' என அவனை கேள்வி கேட்டவள்,



''சாப்பாட்டுக்கா?'' எனத் தன் ஊகத்தையும் முன் வைத்தாள். ''அதுக்குத் தான், மாசா மாசம் சொளையா ஐநூறு ரூபா தண்டம் கட்டுறியே?'' என அவன் உச்சுக் கொட்டவும் ''சாப்பாட்டுக்கு செய்ற செலவுக்குச் சலிச்சக் கிறக் கூடாது மாமா. வயுத்துப் பசிக்குத் தானே சம்பாதிக்கிறோம்'' என்ற அதட்டலில் முடித்தாள் தென்றல்.

''ம்ம்'' என்றவனின் சோர்ந்த குரல், ''நான் நினைக்கிற வேலை கிடைக்கணும்ன்னா, படிப்பு மட்டுமில்லாம தனியா எதாவது செய்யணும். அதுக்கு நிறைய காசாகும்... அதுக்கும் உன்கிட்ட வந்து நிக்க மனசு வல்லை. ப்ச் விடும்மா... வரதே ஒரு நாள். அதிலும் இதையே பேசணுமா?'' என வேகமாய் ஒரு முற்றுப் புள்ளி வைப்பவன், ''நீ சொல்லு... வேலையெல்லாம் எப்படிப் போவுது? அந்த சுகுணா அவளோட தீ நாக்கை அடக்கி வச்சிருக்காளா?'', ''தினமும் ஒழுங்கா சாப்பிடுறியா?'', ''ஆயாவோட சண்டை போடறதில்லையே?'', ''ஐயாவுக்கு இருமல் எப்படி இருக்கு?'', ''காசிக்குப் பரிசம் போட வந்தாங்களே? எப்போ கல்யாணமாம்?'', ''வடிவு அக்காவுக்குக் குழந்தை பிறந்துடுச்சா?'' என அவளை வேறுபுறம் திருப்பியும் விட்டு, அதில் வெற்றியும் கண்டு விடுவான்!

இதே, அந்த ஒரு வருடமும் தொடர, அதற்கு அடுத்த வருடம் சோழனின் வருகை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்கு மாறிப் போனது!

கேட்டதற்கு, ''படிச்சு முடிச்சதும், நான் நினைக்கிற வேலை கிடைக்கணும்னா, இப்போ கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தான் ஆகணும்! நம்ம நல்லதுக்குத் தான்

சொல்றேன்'' என இருவரையும் இணைத்து ''நாம்'' என
அவன் கூறுவதிலேயே, தென்றலின் உச்சி, பாத
நுனை குளிர்ந்து பன்னீர் பூவாய் மனம் பூத்துவிடும்.

இன்றைய பிரிவின் காரணம் - நாளைய கூடல் என
பதே பிரிவை நியாயப்படுத்திவிட, தென்றல் ஆ
வுட்னே நாட்களை எண்ணத் துவங்கியிருந்தாள்.

படித்துக் கொண்டிருந்த சோழன், தனது படிப்பு முடி
இத்தனை நாட்கள் இருக்கின்றன என்பதை வருட
கணக்கில் எண்ணினால், அவனைப் படிக்க வைத்
தென்றலோ மாதக் கணக்கிலோ, வாரக் கணக்கிலோ
நாட்களை எண்ணாது, நாள் கணக்கில் அவனது வ
வையும், இருவரது இணைவையும் எண்ணிக் கன
களுடன் காத்திருந்தாள்.

அந்தக் காத்திருப்பின் நிறைவுப் படலம் வந்தே
மூன்று மாதங்கள் இருக்கின்றன என்பதை மூன்
மாதங்கள் முன்னர் வந்த சோழன் ''அடுத்த முறை
வெள்ளகவி வரதுக்கு ஆறு மாசமாகாது தென்றல், மூ
மாசத்திலேயே வந்திடுவேன். பரீட்சை வருது... அ
முடிந்ததும் நேரா ஊருக்கு பஸ் ஏறிட வேண்டியது தா
உன்னோட ஒரு வாரம் இருந்திட்டு... மேக்கொண்
பார்க்கணும்'' என்றவனின் பேச்சில், தனக்கு சாத
மாகவே பலதையும் ஈர்த்துக் கொண்டாள் தென்றல்.

தான் கணித்த விஷயங்களின் சாரம், நெஞ்சத்தி
சாரல் வீச, வண்ண வண்ணக் கனவுகளுடன் உ
வந்தவள், தான் வேலை செய்யும் இடத்தில் கூட ''
இனிமைக்கும் மூணு மாசம் தா வேலைக்கு வருவே
அதுக்குள்ளார, நா வாங்கின காசைக் கழிச்சுக்கிடு



சகுணா அக்கா!'' என வாக்குறுதி வேறு கொடுத்து, சோழனின் கடனை அடைப்பதற்காக தான் வாங்கிய கடனை முழுதாய் அடைத்தும் முடித்திருந்தாள்.

மூன்று வருடமாய் தொடர்ந்த அக்கடனின் வட்டியும் முதலும், ஒரு வழியாய் முடிந்தேறியதில் உண்டான சந்தோஷத்தை விட, தன் வாழ்வு விடிந்ததன் அடையாளமாக தன் மணவாளன் பொற்சுடர் விடியலாய் வந்து நின்றது பெரும் சந்தோஷத்தைக் கூட்டியது!

தனது பூமனம் அடைந்த பூரிப்பை, பூவிதழில் தேக்கிய தென்றல் ''இம்புட்டு வெள்ளன வந்திருக்கியே மாமா?'' என முறையே வியந்தாள்.

''திருச்சில ஒரே சூடா இருந்தது... அதான் தென்றல் வீசுற பக்கமா வந்துட்டுப் போகலாம்ன்னு ஓடி வந்தேன்'' எனச் சோழன் சிரிக்க,

''அய்யே!'' என அழகாய் வெட்கம் கொண்டாள், மென் தென்றலை மையலுடன் வீசினாள்.

''நேத்து மத்தியத்தில பரீட்சை முடிஞ்சுடுச்சு... பொட்டிப் படுக்கையெல்லாம் கட்டிட்டு வர, கொஞ்சம் நேரமாகிடுச்சு!'' என விளக்கம் சொன்னவன், ''இருந்த சந்தோஷத்தில, இந்தக் குளிர்-ல நடந்து வந்தது கூட தெரியல'' என்றான் சந்தோசமாக.

''எனக்கும் மனசுக்கு லேசா இருக்குது, மாமா!'' என்ற தென்றல், சற்று நேரம் அந்த கனமில்லா தன்மையை அனுபவித்து மகிழ்ந்தாள்.

தொடர்ந்து ''இன்னும் எம்புட்டு நாள் மாமா... இங்கன இருப்பே?'' எனக் கேட்டு, அதற்கு அவன் பதில்

சொல்லும் முன்னர், ''நீ நினைச்ச வேலை கிடைச்சுச்சா மாமா? ம்ம் கிடைச்சிருக்கும்... இல்லன்னா உன் முக... இம்புட்டு பூத்திருக்காதில'' என தானாகவே பலதையு... பேசினாள்.

''ம்ம்... வேலை... அது அப்புறம் சொல்றேன்... மொதல இங்க நடக்கிறது சொல்லு'' எனச் சோழ... பேச்சை மாற்றியதும், எப்போதும் போல் அவனது கேள்... களுக்குப் பதில் சொல்லத் தயாராகாமல், அவனை முறைத்தாள் தென்றல்.

''ஐயா...'' என அவன் ஆரம்பிக்க, ''எப்ப பார்த்... தாலும்... நா தேன் எல்லாம் சொல்லணுமா? நீர் எதுவு... சொல்ல மாட்டீரோ? எப்ப... எதைக் கேட்டாலும்... அப்புறம்... அது வேற விஷயம்... இதை மனசில எத்... கிட்டு சங்கடப்படாதேன்னு சொல்லி... என் வா... அடைச்சுப்புடு... என்னைய பார்த்தா கேனைச் சிறுக்... கணக்கா இருக்குதோ?'' எனத் தன் நீண்ட நா... கோபத்தைத் தங்கள் வாழ்வின் முக்கிய நாளான இன்... வெளியிட்டாள், சோழனுக்கு உறவாகப் போகும் ஓ... உறவு.

''அடேங்கப்பா! என்ன ஒரு கோபம்?! பயமா இரு... குதே!?'' எனக் கையை மார்பிற்குக் குறுக்கே குடுத்... முறைத்த சோழன், சிரித்தே மழுப்பப் பார்த்தான்.

ஆனால், தென்றலின் வார்த்தைகளில் குடி எ... திருந்த புயல் கரையை நெருங்கும் ஆபாயத்தை வெளி... படுத்தும் வண்ணம் ''கழுவுற மீனுல நழுவுற மீ... நழுவாத மாமா! இப்பக் கூட, வேலையைப் பத்தி... கேட்டதுக்கு, மருவாதையா பதில் சொன்னியா...



வேணும்ன்னே பதில் சொல்லாம, கொடைச்சல் தானே கொடுக்கிறே?'' என்றாள் தென்றல், எரிச்சலுடன். அவளுக்குப் பல தருணங்களில் தனது கேள்விகளுக்குச் சரியான பதில் வராதது நினைவில் வந்து, மேலும் எரிச்சலைக் கூட்டியது.

அதிலும், அவனது அறை, கல்லூரித் தோழர்கள், அறையைப் பகிர்ந்து கொள்ளும் உடன் பயில்வோர், கல்லூரி விடுதி, முக்கியமாய் அவன் வேலை செய்யும் இடம் பற்றிய தென்றலின் கேள்விகள், பதிலின்றியே போகும்.

அவளது கேள்வியைக் காற்றில் கரைக்கும் அவனது தந்திரத்தை, அந்த நொடியில் உணராமல், அவனது எண்ணப் போக்கிற்கு ஏற்றவாறு சுற்றித் திரியும் தென்றலின் எண்ணங்கள் - சோழன் கிளம்பியபின்னர், தன் மடத்தனத்தை எண்ணி எண்ணி நொந்திருக்கின்றன. அந்த நோவின் காரணமாய் தான், இந்த நொடிப்பு!

ஆனால், இப்போதுமே நழுவும் மீனாகவே இருக்க விருப்பம் கொண்டு ''உன்கிட்ட சொல்ற அளவிற்குப் பெருசா எதுவும் நடக்கலை, தென்றல்! நம்ம ரெண்டு பேருக்கும் முக்கியமான விஷயத்தைக் கண்டிப்பா உன்கிட்ட சொல்லுவேன்! உன்கிட்ட சொல்லாம... யார்கிட்ட சொல்லப் போறேன் சொல்லு! அதுக்கான, கால நேரம் வந்ததும் கண்டிப்பா சொல்லுவேன்!'' என்றான் சோழன், அவள் மனதின் விருப்பு - வெறுப்பு அறிந்தவன் போல. அந்தக் குரலில் சிறு கர்வம் கூட இருந்தது!

"ம்க்கூம்" எனக் கழுத்தை வெட்டிய தென்றல், "சொன்னாச் சொல்லு... சொல்லாக்காட்டி போ!" என்ற கோபத்துடன், கோவிலைச் சுத்தப்படுத்தும் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

இந்த மாதிரி கோபங்கள், அவன் வரும்போதெல்லாம் நடந்தேறும் ஓர் வாடிக்கையான விஷயம் என்பதாலோ அல்லது அன்றைய சந்தோசம் கொடுத்த உற்காசத்தாலோ "தென்றல் டீச்சர், தென்றல் டீச்சர்' என்னை மன்னிச்சிடுங்க டீச்சர்! நா வேணும்னா நூறு தோப்புக்கரணம் போட்டுடுறேன்" என்றவன், அவள் முன்னே சென்று நின்று கொண்டு, "ஒன்று, இரண்டு..." என்று எண்ணியவாறே தோப்புக்கரணம் போடத் துவங்கினான்.

சில பல மணித் துளிகள், எண்களின் உச்சரிப்பு மட்டுமே கேட்க, முடிவில் வெள்ளிச் சதங்கையாய் அந்த விடிகாலை வேளை, பூத்தது!

சோழன், இப்படி விளையாட்டாக பேசி இரண்டாண்டுகளுக்கும் மேலாகிவிட்டதை வருத்தத்துடன் நினைத்துப் பார்க்கும் தென்றலுக்கு, இன்றைய அவனது விளையாட்டுத்தனம், நிம்மதியைக் கொடுத்தது!

பெற்றோரை இழந்ததுமே, அவனது விளையாட்டுத்தனத்தின் ஒரு பாதி அழிந்து, அந்த இடத்தைப் பொறுப்பு வந்து சூழ்ந்து கொள்ள, பகுதியாய் இருந்த அவனது விளையாட்டுத்தனம் - கல்லூரி சேர்ந்த முதல் இரண்டு வருடங்கள் வரைத் திளைத்து மகிழ்விக்கத் தான் செய்தது!



ஆனால், கிட்டத்தட்ட மூன்று வருடங்களாய் தேய்ந்து குறைந்த அவனது வருகைகள் போல, அவனது சிரிப்புப் பேச்சும், தன்னிடம் மட்டும் வெளிப்படும் குறும்பும் குறைவதற்குப் பதிலாக முற்றிலுமாய் மறைந்துவிட்டதை உணர்ந்திருந்த தென்றலுக்கு, இன்றைய அவனது வருகை எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுத்ததோ, அதே அளவிற்கு இன்றைய அவனது சந்தோஷப் பேச்சுவார்த்தைப் பெரும் மகிழ்வைக் கொடுத்தது!

அந்த மகிழ்வின் காரணமாய், தாங்கள் போட்ட சண்டையின் மூலக் காரணத்தை மறந்திட்ட இருவருமே (ஒருவேளை தென்றல் மட்டுமோ?) அப்போதைய வேலையில் மூழ்கினர்.

இருவருமாய், கோவிலைச் சுத்தம் செய்து முடித்த போது அர்ச்சகர் வந்துவிட, சோழனிடம் அவர் நல விசாரிப்புகள் நடத்திக் கொண்டிருக்கையில், தென்றல் வாசல் தெளித்து, மாக்கோலம் ஒன்றை இட்டு முடித்திருந்தாள்.

"பெருமாளைத் தரிசனம் செய்திட்டுப் போங்கோ, சேமமா இருப்பேள்!" என அழைப்பு விடுத்த அர்ச்சகரைக் காட்டிலும், உள்ளிருந்து அருள்பாளித்தப் பெருமாளின் கண்களில் நிரம்பி வழிந்த தேஜஸ், இருவரையும் கட்டி இழுக்க, வருங்காலத் தம்பதியர் என்ற நினைப்பில் தென்றல் சோழனுடன் தரிசனத்திற்காக உள்ளே சென்றாள்.

தரிசனம் முடிந்து வெளியே வரும்போது, இருவருக்குமே மனம் நிம்மதியில் திளைத்தது! உயிரை உருக்கிக்

கொண்டிருந்த ஊதல் காற்றின் விலையாக, உணர்வுகள் ஊசலாடிக் கொண்டிருக்க, ஊணில் கலக்க விரும்பிய அவ்விரு உயிர்களும் ஊமையாய் நடையை எட்டிப் போட்டனர்!

தென்றலின் மனதில், முதன் முதலாய் கல்லூரியில் சேர்ந்த ஆண்டு, சோழன் தனது பிறந்தநாளுக்கு வந்ததும், அன்று அவன் கொடுத்த பச்சை வண்ண உடையும் நிழலாய் இல்லாது நிஜமாய் ஆட, பச்சையில் மின்னிய உடையின் காரணமாய் சிவப்பாய் மாறியது அவளது கரிய தேகம்.

தேகத்தின் சிவப்பு, குரலின் வனப்பைக் குறைத்து விட, மௌனமெனும் வண்ணம் மயிலிறகால் பூசப் படவே, இருவரும் அதன் வண்ணங்களாய் மாறிப் போயினர்!

வரப் போகும் வாழ்வை எண்ணித் தென்றல் சிவந்திருக்க, தன் முடிவிற்குப் பதிலாய் வரப்போகும் வார்த்தைகளை எண்ணிச் சோழன் சிந்தித்திருந்தான்.

சிவப்பும், சிந்திப்புமாய் நடந்தேறிய அந்தச் சிறு பயணம், தென்றலின் வீட்டில் முடிவு பெற, ''உள்ளார வா, மாமா'' என அழைத்தாள், தென்றல்.

''இல்லை தென்றல், நா... பொற வாசப் பக்கமா வரேன்'' எனப் பின்பக்கம் நடக்கத் திரும்பிய சோழனின் கைப்பிடித்து, வீட்டினுள் இழுத்துச் சென்ற தென்றல் ''ஆயா வஞ்சா... நா பாத்துக்கிறேன். சும்மா வா மாமா'' என்றவாறே உள்ளே நுழைந்தாள். பேத்தியின் பேச்சுக்



குரலில் நிமிர்ந்த பாண்டியம்மாள், ஆவலுடன் வரும் சோழனைக் கண்டதும் ''இங்க இருக்க கொஞ்சநஞ்சத்தையும் ஆட்டைய போட்டுப் போக வந்துட்டான்! பொசக்கெட்டப் பய!'' என கழுத்தை முறையே வெட்டினாள்.

அவர் சொல்வது உண்மை தான் என்பது போல், சோழன் ஊருக்கு வந்து செல்லும்போதெல்லாம், அவன் வந்து போகும் இடைவேளையில் தான் சம்பாதித்தப் பணத்தில் மூன்றில் இரண்டு பகுதிகளை அவனுக்கு வாரியே இறைப்பாள் தென்றல்.

பாண்டியம்மாளின் கோபப் பார்வையும், சுடுச் சொற்களும், வேகப்பந்து வீச்சாளரின் லாவகத்துடன் வந்து விழுகையில் ''மாமாவுக்கு... நா செய்யாம யாரு செய்வா?'' என்றோ ''காசு... காசுன்னு ஏன் ஆயா அடிச்சுக்கிறே? காசு இன்னைக்குப் போவும், நாளைக்கும் வரும்... மாமாவோட படிப்பு அப்படியா?'' என்றோ ''அது படிச்சு முடிச்சதுமா... யாருக்கு சம்பாதிக்கப் போவுது? உன் பேத்திக்குத் தானே?'' என்றோ வாயை அடைத்து விடுவாள், அவரது அருமைப் பேத்தி.

என்னதான், பேத்தியின் பேச்சுக்கள் அவளது எதிர்காலத்தை அழகாய் படம் பிடித்துக் காட்டினாலும், அந்தப் பழுத்த மனுஷிக்குப் பேத்தியின் வாழ்வைப் பற்றிய கவலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே தான் போனது!

அப்பன் - ஆத்தா இல்லாத ஒருத்தனுக்குக் கட்டிக் கொடுப்பதா என்ற தன்மானம் ஒரு புறமும், தாய் - தகப்பன் இல்லாத இந்த சின்னப் பெண்ணிற்குப்

புகுந்த வீட்டு உறவுகளும் இல்லாது போவதா என்ற கவலை மறுபுறமும், அவரை வாட்டி வதைக்கவே செய்தது!

இக்காரணங்கள் மட்டுமல்லாது முக்கியமான ஒரு காரணமாய், பெரிய படிப்பு படித்து விட்டு வரும் சோழனின் கண்களில், படிக்காதவள் என்ற பெயர் மட்டுமல்லாது படிப்பிற்கு ஈடுகட்டும் வகையில் அழகுமில்லாதிருக்கும் தென்றல் குறைவாய் தென்பட்டு விடுவாளோ என்ற கவலை தான், பெரும் காரணமாய் இருந்தது!

அப்படியெதுவும் நடந்து விட்டால், அவன் மேல் உயிரையே வைத்திருக்கும் தன் பேத்தி எப்படித் தாங்குவாள் என அந்தத் தாயுள்ளம் தவித்துப் போனது!

தந்தையைப் பெற்றவளின் தவிப்புப் புரியாமல், சோழனைத் தன் உயிராய் மட்டுமல்லாது உணர்வாய் எண்ணி வாழ்ந்திருந்த தென்றலோ, பாண்டியம்மாளின் திட்டுக்களைக் காதிலேயே வாங்குவதாய் இல்லை. காதில் வாங்கிச் சங்கடப்படும் சோழனின் காதுகளிலிருந்து அவற்றை அகற்றவே முற்பட்டாள்!

இப்போதும் அந்த முயற்சியை அவள் மேற்கொண்டிருக்க, பாண்டியம்மாளுக்கு ஆத்திரமாய் வந்தது. அவளது ஆத்திரத்தை அலட்சியமாய் ஒதுக்கிய தென்றல், எழுந்து கொண்டிருந்த நெட்டிருவின் அருகே சென்று ''அய்யா... மாமா வந்திருக்கு... படிப்பு முச்சுடும் முடிஞ்சுப் போச்சுதாம்!'' என்றாள் குதூகலத்துடன்.

''அப்படியா ராசா?'' என நெட்டிரு இருமலின் ஊடே பேசத் துவங்க, ''இன்னி... காசுக்கு ஆசைப்பட்டு...



ஏழறைய கூட்ட மாட்டான்'' என வெளிப்படையாகவே நிம்மதியடைந்தாள், பாண்டியம்மாள்.

அவளது பேச்சைக் காதில் வாங்காது. அங்கே ஓர் விசாரிப்புப் படலம் நிகழ்ந்து முடிய அதன் முடிவில் ஓர் குண்டை அலுங்காமல் குலுங்காமல் தூக்கிப் போட்டான், சோழன்.

''படிப்பை முடிச்சுட்டீரா? எனக்கு மனசுக்கு ரொம்ப லேசா இருக்குது... ராசா! இந்தப் புள்ளைய உம்ம கையில புடிச்சுக் கொடுத்துட்டா, இழுத்துகிட்டு கிடக்கிற ஒடம்பை ஒரேடியா நீட்டிப்புடுவேன்'' எனத் தன் ஒரே கடமையை வெளியிட்டதோடு நிறுத்திக் கொள்ளாமல், ''உம் படிப்பு முடியுதுன்னு தெரிஞ்சோ என்னவோ... இந்தக் கழுத... சேந்தி-ல இருந்து பொட்டியெல்லாம் கட்டிக்கிட்டுக் கிடந்துச்சு... அதோட அப்பன் - ஆத்தா நினைவா, ஒசக்க இருந்து நிறைய பொருள் கூட எடுத்து வச்சிருக்கு'' எனத் தன் பேத்தியின் எதிர்பார்ப்பையும் முன் வைத்தார்.

அவருக்குப் பதிலாய் ஓர் புன்சிரிப்பையேனும் சோழன் உதிர்ப்பான் என்ற தென்றல் எதிர்நோக்கியிருக்க அவனோ, ''அதுங்கய்யா... இப்பதைக்குக் கல்யாணம் வேண்டாம்ன்னு பார்க்கிறேன்'' என்றான் சிறு சங்கடத்துடன்.

அவன் உதிர்த்த அந்தச் சிறு வாக்கியம் - கேட்டிருந்த மூவரது தலையிலும் பெருத்த இடியை இறக்க, தென்றலின் கண்களிலிருந்த ஆவல் மறைந்து, சோழனை வெறித்தவாறு நின்றிருந்தாள் அவள்!



# 12

''திருமணம் வேண்டாம்'' என்ற சோழனின் பேச்சில், அங்கிருந்த மூவரும் அதிர்ந்து போயிருக்க, அதில் முதலில் மௌனத்தைக் கலைத்தது பாண்டியம்மாள் தான்.

''அதானே பார்த்தேன்! பட்டப்படிப்புப் படிச்சிட்டு வந்த தொரைக்கு இந்தக் கருத்தச் சிறுக்கியைக் கட்டிகிடப் பிடிக்குமா என்ன?'' எனப் பாண்டியம்மாள் தன் கோபத்தை வெளியிட, ''நீ சத்த சும்மா இரு... பாண்டி!'' என இருமலினூடே அவரை அடக்கிவிட்டு, சோழனிடம் திரும்பினார்.

அடைத்த நெஞ்சத்தை நீவி விட்டுக் கொண்டு அவர் பேசும் முன்னர், தென்றலும் சோழனும் வாய் திறக்க, தென்றலின் வார்த்தைகள் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டன.

''அதான் வேணாம்ன்னு சொல்லுதில்ல... பொறவு எதுக்கு அதுக்கிட்ட கெஞ்சிட்டு கிடக்கற? மனசையும் ஒடம்பையும் நோவடச்சுக்காம, செவனேன்னு படு!'' எனத் தன் தாத்தனை அடக்கிவிட்டு, பின்புறம் நோக்கி விரைந்தாள்.

தன்னைக் கொத்திப் பிடுங்கும் சுகுணாவிடம் கூட தன் தன்மானத்தை விட்டு ஓர் நாள் கூலிக்காகக்



கெஞ்சியவளுக்கு, இன்றைய சோழனின் நிராகரிப்பு - ஒரே வினாடியில் பெரும் பாதிப்பை உண்டு பண்ணியிருந்தது! அந்த ஒரு நாள் கூலி, தன் கரம் பிடிக்கப் போபவனுக்கு உதவியாய் இருக்கும் என்ற ஒரே காரணத்திற்காக, அராஜகமாய் பேசிய சுகுணாவிடம் கூட வளைந்து கொடுத்தவளுக்கு, யாருக்காக வளைந்து கொடுத்தாளோ அவனே தன்னை அவமானப் படுத்தி விட்டது போல், நெஞ்சம் விம்மி வெடித்தது!

ஏற்பட்டிருந்த மனக் காயத்தின் விளைவாக, தன் மானம் தலை தூக்கத், தன்னை மறுத்தவனிடம் கெஞ்சுவது என்பது அவளுக்குப் பெரும் இழுக்காய் படவே, தனக்கென வாதாடத் துடித்த உறவுகளை அடக்கி விட்டுப், பின் வாசலுக்கு விரைந்தாள்! அங்கேயே இருந்தால், அவன் கூறும் காரணங்களைக் கேட்க வேண்டியிருக்குமே? என்பதும் சேர்ந்து கொள்ள, தென்றலின் நடையில் வேகம் கூடியது!

சோழனின் ''தென்றல்... நில்லும்மா... நா சொல்றதை...'' என்ற வார்த்தைகள், அவளை நிறுத்துவதாய் இல்லை என்றதும், சோழன் அவளைத் தொடர்ந்து செல்ல எத்தனித்தான்.

''சத்த நில்லுப்பா'' என அவனை நிறுத்தி வைத்த நெட்டிரு. ''ஏன் ராசா? தென்றலை வேணாம்கிற? அந்தப் புள்ள... உன்னைய கட்டிக்கப்போறவன்னு நினைச்சு உருகுதுய்யா! அப்பன் - ஆத்தா இல்லாத புள்ளைய நோவடிக்காதே, தம்பி! உன் காலில விழுந்து கேட்குதேன்'' என்றார் கெஞ்சும் குரலில்.

''ஐயா! என்னங்கய்யா இது? கல்யாணம் இப்போதைக்கு வேணாம்ன்னு தான்யா சொன்னேன். எப்பவுமே

வேணாம்ன்னு சொல்லலை... இன்னுமொரு ரெண்டு வருஷம்...'' என்ற வாக்கியத்தைச் சோழன் முடிக்கவில்லை.

''அந்த ரெண்டு வருசத்தில வேறொரு செவத்தப் புள்ளையை வளைச்சுரலாம்ன்னு நெஞ்சுரம் கொண்டிருக்கிறீரோ?'' என எகிறிய தென்றலின் பாட்டி, சட்டென ''உமக்காக... உமக்காகன்னு அஞ்சு வருசமா தவமிருக்குதுயா எம் பேத்தி! வேத்தாளு யாராவது பரிசதுக்கு வந்தா மொகத்துக்கு நேரா ''எம் மாமனைத் தான் கட்டிக்கப் போறேன்னு'' சொல்லி, அவிங்களை விரட்டியிருக்கு... அதையாய்யா விலக்கி வைக்கிறே? பச்சப் புள்ளையா... தாங்காது!'' எனச் சட்டென உடைந்து விட்டார்.

அந்த அழுகையிலிருந்தும் விரைவாகவே வெளி வந்தவர் ''நா வெடுக்கும்னு பேசுதேன்னு அவளை வேணாம்ன்னு சொல்லுதியோ? இல்ல, உம்ம படிப்புக்காக... இந்த இடத்தை விலைக்குக் கொடுக்க ஒத்துக்கிடலைன்னு வேணாம்ன்னு சொல்லுதியா? நோய்ல கிடக்கிற எங்களுக்குப் பொறவு, அவளுக்கு வேற நாதியில்லையேன்னு தேன் போட்டு வச்சேன்... அதை மனசில வச்சுட்டு... அவளை வேணாம்ன்னு ஒதுக்கிறியா?'' என்றவருக்கு, சோழனின் படிப்பிற்காக தங்களது தோட்டத்து நிலத்தை விற்கலாம் எனத் தென்றல் கேட்டப்போது, அவளது எதிர்காலத்தை முன்னிறுத்தித் தான் மறுத்தது நினைவு வந்து, அதனால் தான் சோழன் மறுக்கிறான் என்ற எண்ணம் தோன்றியது!

ஆனால், அவனோ ''ஹய்யோ! இல்லைங்க ஆயா! எனக்கு இன்னும் ரெண்டு வருஷம் படிக்கிறதுக்கு



இப்போ படிக்கிற காலேஜ்-ல இருந்தே பணம் தராங்க.... அதை முடிச்சுட்டா, நான் நினைச்ச மாதிரியான வேலை கண்டிப்பா கிடைக்கும்... நல்ல சம்பளத்தில, தங்கறதுக்கு வீட்டோட... ராஜா மாதிரி இருக்கலாம். அந்த நிலைக்கு வந்ததும்... கல்யாணத்தை வச்சுக்கலாம்ன்னு நினைச்சேன்! தென்றலை வேணாம்ன்னு சொன்னாக்க, எங்கம்மாவோட ஆவி கூட என்னை மன்னிக்காது!'' என்ற சோழன், அந்தக் கடைசி வரிக்காகத் தன்னைத் தென்றல் வெறுக்கப் போவதை அறியவில்லை!

''இம்புட்டு வருசம் படிச்சது பத்தாதாக்கும்? இன்னமும் ரெண்டு வருசமா? தென்றலை ஒடத்தப் புள்ளைங்க எல்லாருக்கும் கலியாணம் முடிஞ்சு, இடுப்பில ஒண்ணும், வயித்துல ஒண்ணுமா வளைய வருதுங்க... இவளை இன்னியும் தனி மட்டையா போட்டு வைக்கணுமா?'' எனப் பாண்டியம்மாள் தவிப்புடன் கேள்வியெழுப்ப,

நெட்டிருவோ ''தம்பி! அவளை உம்ம பொறுப்புல விட்டுட்டா, எங்க ரெண்டு உசுரும் நிம்மதியா போகும். எனக்கும் சரி, இவளுக்கும் சரி... இப்பவோ அப்பவோன்னு இழுத்துகிட்டு கிடக்கு... இன்னும் இரண்டு வருசமெல்லாம் தாங்காது, தம்பி! உறவுன்னு இருக்க நாங்களும் போய்ட்டா, அந்த பச்ச மண்ணு என்ன தம்பி செய்யும்? சத்த யோசிய்யா...'' எனத் தங்கள் நிலைமையை எடுத்துரைத்தார்.

''உங்களுக்கு ஒண்ணும் ஆகாது ஐயா! வேலை கிடைச்சதும், தென்றலை மட்டுமில்லை... உங்க ரெண்டு பேரையும் என்னோட கூட்டிட்டுப் போய், நல்லா

பார்த்துப்பேன்! என்னை நம்புங்க..." என்றான் சோழன் மிகுந்த உறுதியுடன்.

அவனது அந்தப் பேச்சில் வெருண்ட பாண்டியம்மாளோ, தனது கெஞ்சலைக் கைவிட்டு "உங்கிட்ட சோறு வாங்கிச் சாப்பிட நாங்க உசிரைக் கையில புடிச்சுக்கிட்டு இருக்கல... உன்னைய மனசுல நினைச்சு, பாவத்திற்கு. அந்தப் புள்ளைய நல்லா வச்சுக்கோன்னு தான் கேட்குறோம்!" என்றார் வெடுக்கென.

"கண்டிப்பா ஆயா! அவளை என் கண்ணுக்குக் கண்ணா வச்சுப் பார்த்துப்பேன்..." எனச் சோழன் முடிப்பதற்குள், "அப்ப, வெருசா ஒரு நல்ல நாள் பாக்கட்டுமா?" என தெட்டுரு பறந்து விட்டார்.

"இல்லைங்க அய்யா! இந்த ரெண்டு வருஷப் படிப்பு எனக்கு ரொம்ப முக்கியம்! வலிய வர வாய்ப்பை என்னால விட முடியாதுங்க..." என்றதோடு எழுந்தவன், "நா தென்றல் கிட்டப் பேசுறேன். அவ என்னைப் புரிஞ்சுப்பா" என்றதோடு விடுவிடுவென வெளியே நகர்ந்துவிட்டான்.

பின்வாசல் கதவருகில் சென்றவன், ஓர் வினாடிக்கும் மேலாய் தயங்கி நின்று "இப்படிப் பேசுறதால எனக்கு அவ மேல இஷ்டமில்லைன்னு நினைக்காதீங்க ஐயா! எனக்காக அவ பட்டக் கஷ்டத்துக்கு எல்லாம் ஈடு கட்டுற மாதிரி, அவளை வச்சுப்பேன்! இந்த வேலை கிடைச்சா, போன, நாலு வருஷத்துக்கு வாங்கின கடனை மட்டுமில்ல, தென்றல் எனக்காக பட்டக் கடனையும் ஆறே மாசத்தில திருப்பிட முடியும்! அதனால தான்,



இவ்வளவு தூரம் சொல்றேன்" என்றான் தன் பக்க நியாயமாய்.

பாண்டியம்மாள், ஏதோ பேசத் துவங்கும் முன்னர், சோழன் வெளியே சென்று விடவே, பெரியவர்கள் இருவரும் கலக்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அவர்களைக் கவலைக்கு ஆளாக்கிய தென்றலோ, அங்கே கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தாள்!

நான்கு வருடங்களாய் மனதில் நிரம்பியிருந்த எதிர்பார்ப்பு, கடந்த மூன்று மாதங்களாய் உச்சத்தை எட்டியிருக்க, தேன் கட்டியிருந்த தேன் கூடு ஒற்றைக் கல்லின் அடியால் கலைந்தது போல், அவளது நெடு நாளைய ஆசைகள் ஒற்றை வார்த்தையில் முழுதாய் கலைந்து போயின!

அவளைப் பொறுத்தவரை, அவளது நம்பிக்கைக்குப் பாத்திரமான சோழன் வாக்குத் தவறிவிட்டான் என்பதே மனதின் முதலும், கடைசியுமாய் இருந்தன!

நான்கு வருடங்களாய், படிப்பு முடிந்ததும் திருமணம் என்ற ரீதியில் பேசிக் கொண்டிருந்தவன், படிப்பு முடிந்ததும் வேறு மாதிரி பேசுவது என்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! இப்போது இரண்டு வருடம் என்பவன், இரண்டு வருடம் கழித்து, வேறேதோ காரணம் சொல்ல மாட்டான் என்று என்ன நிச்சயம் என்று அவளது பெண்மை கூக்குரலிட்டது!

பாட்டியம்மாள் எதிர்த்த போதெல்லாம், சோழனுக்கு ஆதரவாய் பேசிய தனக்கு, இது தேவையான ஒன்று தான் எனத் தோன்றியது!

தன் மனசில் கல்வெட்டாய் பதிந்து போன சோழனின் நினைவுகளால், பாண்டியம்மாள் கொண்டு வந்த சம்மந்தங்கள் அனைத்தையும்... நிமிர்ந்த தலையுடன் எதிர்த்தேனே? அதற்கெல்லாம் அர்த்தமே இல்லாமல் போய் விட்டதே?

தான், அவன் மேல் கொண்ட ஆசையை - அவன் என் மேல் வைக்கவில்லை போலவே? ஆம், கண்டிப்பாக வைக்கவில்லை! இப்போது கூட.. அவன் மேல் எனக்கு ஆசையிருக்கிறது... கல்யாணம் என்று ஒன்று நடந்தால் அவனோடு தான் என்று அவன் சொல்லவில்லையே? தன் தாய்க்குக் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவேன் என்று தானே கூறுகிறான்? எனச் சோழனின் பேச்சு வார்த்தைகள் - ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் எடுத்துக் கொண்டு, தன்னையே புண்படுத்திக் கொண்டாள், அந்தத் தியாகச் செம்மல்!

அவளது மனக் குமுறல் புரியாமல் பின் வாசலுக்கு விரைந்த சோழன், மழையினால் நனைந்து கொண்டிருந்த தோட்டத்தில் தவிப்புடன் கண்களை ஓட விட்டவாறே தலையைத் திருப்ப, அவனுக்கு வலது புறத்திலிருந்த திண்ணையில் கால்களில் தலையைத் தாங்கி அமர்ந்திருந்தாள், தென்றல். அவளை அங்கே கண்டதில் மெல்லியதாய் ஓர் நிம்மதிப் பெருமூச்சு வெளிவர, அவள் புறம் நடந்தான்!

அந்த நிம்மதியை மனதினுள்ளே வைத்துக் கொள்ளாது, வாய் விட்டு வெளியே சொன்னது பெரும் தப்பாய் முடியும் என்பதை உணராமல், "எம்மேல இருக்க



கோவத்தில, மழையில நனைஞ்சிடுவியோன்னு பயந்துப் போயிட்டேன்" என்ற சொல்லோடு, தென்றலின் அருகே அமர்ந்தவனை நிமிர்ந்து கூடப் பாராமல், பருவ மழை தேடி ஓடினாள் அந்தப் பாவை!

"ஏய்.... தென்றல்... என்னமா செய்றே? நில்லு... சொல்றதைக் கேளு... சார மழும்மா... உடம்புக்கு ஒத்துக்காது" எனத் திண்ணையிலிருந்தே கத்திய சோழனின் சொற்கள் காதில் விழுந்த போதும், தோட்டத்தின் மேற்கு மூலைக்குச் செல்லும் வரை, தென்றலின் வேக நடை குறையவில்லை.

அவளது நடையில் தென்பட்ட வேகம் அவளது கோபத்தை உணர்த்த, இனியும் தாமதித்துப் புண்ணியமில்லை என்று தோன்றிட, ஓட்டத்தில் அவளைப் பின் தொடர்ந்தான் சோழன்.

அன்றொரு நாள், பனி பொழிந்த ஓர் அமாவாசை இரவில், இருவருமாய் உணவைப் பகிர்ந்துண்ட இடத்தில் தொப்பென அமர்ந்த தென்றலின் மேனி, பெய்து கொண்டிருந்த பேய் மழையால் துவண்டதா அல்லது சோழனின் நிராகரிப்பால் துவண்டதா என்பது அறிந்தவனுக்கு அப்பாற்பட்ட விஷயம்.

அவளருகே வந்தவன், "தயவு செஞ்சு, வீட்டுக்குள்ள வா தென்றல்! உடம்பு கெட்டுடும்மா" என அவளது கைப்பிடித்து இழுத்தவனிடமிருந்து ஒரே உதறலில் வெளிவந்தவள் "ரொம்பத் தான் அக்கறை! எனக்கு என்ன ஆனா உனக்கென்ன? உன்னோட படிப்பும் வேலையும் தானே உனக்கு முக்கியம்" என அவனது முகத்தைப் பாராமல் பேசிய போது, மழையுடன

போட்டிப் போட்டுக் கொண்டு கண்ணீர் வழியத் தொடங்கியிருந்தது!

வானத்தின் அழுகைக்கும், மங்கையின் அழுகைக்கும் வித்தியாசம் கண்ட அந்த மண்ணின் மைந்தன், "அழாதே தென்றல்!" என்றான் தவிப்புடன். அவனது தவிப்பும் அவளுக்குத் தப்பாகப் பட" அப்படித்தேன் அழுவேன்! உனக்கென்ன?" என்றாள் வெடுக்கென.

"இப்படிப் பேசினா எப்படிம்மா?" என்ற சோழன், அவளை உள்ளே அழைத்துச் செல்ல எடுத்துக் கொண்ட எந்தவொரு முயற்சிக்கும் அங்கே இடமில்லாமல் போனதும், அவளருகே அமர்ந்தவன், மெல்லப் பேசத் துவங்கினான்.

"நா கல்யாணமே வேணாம்ன்னு சொல்லலைம்மா. இன்னும்... இரண்டு வருஷத்திற்கு அப்புறம்..." என அவன் ஆரம்பிக்கையிலேயே, "நீ அய்யாகிட்டப் பேசினதெல்லாம் எனக்குக் கேட்டுடுச்சு!" என்றாள் தென்றல், "எனக்குத் தெரியும். நீ சொல்லத் தேவையில்லை" என்பது போல.

"ம்ம், அவங்க தான் பெரியவங்க... புரிஞ்சுக்க மாட்டேங்கிறாங்க. நீ கூடவா?" என்றவன், அவளிடம் தென்பட்ட மௌனத்தை நல்ல சகுனமாய் எடுத்துக் கொண்டு மேலே பேசினான்.

"எனக்கு DRDOல கிடைக்கப் போற வேலை ரொம்ப நாள் கனவுன்னு உனக்குத் தெரியும் தானே? நான் படிக்கிற காலேஜ் மேனேஜ்மெண்ட்டும் DRDO-வும் சேர்ந்து, என்னோட மேற்படிப்புக்கு உதவியும் செஞ்சு, கூடவே ஒரு ப்ராஜெக்ட்-டும் செய்து கொடுக்கச்



சொல்லி, ரெண்டும் முடியுற நேரத்தில, என்னை நேரடியா ரிசர்ச் அசிஸ்டென்ட்டா எடுத்துக்கிறதா சொல்லியிருக்காங்க. இப்போவே வேலைக்குப் போனா... டெக்னிகல் அசிஸ்டென்ட்டா தான் போகணும்..." என்றவன், அந்த விளக்கம் போதும் என்பது போல் தென்றலைப் பார்க்க, அவளோ அவன் புறம் திரும்பவே இல்லை.

அவளது எண்ண ஓட்டத்தைப் படிக்க முயன்றவன் போல், "கிடைக்கிற வேலையில சேர வேண்டியது தானேன்னு நினைக்கிறியா? சேரலாம்தான்... ஆனா, இந்த வேலையில சேர்ந்தா... ரிசர்ச் அசிஸ்டென்ட்டா ஆகுறதுக்குக் குறைஞ்சது நாலு வருஷம் ஆகும். நான் சொல்றது குறைஞ்சது... நிறைய கூட ஆகலாம்.... அப்படியிருக்கும் போது, ரெண்டு வருஷத்தில... அதுவும் அவங்களோட மேற்பார்வையில் ஒரு படிப்புப் படிச்சப் பிறகுங்கிறது... யாருக்குமே கிடைக்காத ஒரு வாய்ப்பு! அதை இழக்கலாமா... தென்றல்? நீயே சொல்லு?!" என அவளிடம் பந்தைத் தள்ளியவன், அவளது உதைப்பிற்காக காத்திருந்தான்!

அவனது நீண்ட விளக்கத்திற்கு "இதையே தான்... நாலு வருஷம் முன்னாடியும் சொன்னே!" என்பதாய் இருக்க, அவளது மரத்தக் குரலிலிருந்து வேதனை புரிந்தது சோழனுக்கு!

"இந்த மாதிரி ஒரு வாய்ப்பு கிடைக்கும்ன்னு எனக்கு அப்போ தெரியலைம்மா. உன்னை ஏமாத்தணும்ங்கிற எண்ணமெல்லாம் எனக்கு இல்லை, தென்றல்! அப்படியிருந்திருந்தா, எதுக்கு ஊருக்கு வரேன்? உங்கிட்டயும்,

ஆயா - அய்யாகிட்டயும் இதைப் பத்திப் பேசுறேன்'' என்றவனுக்குத் தன் செயலை நியாயப்படுத்திவிடும் பரபரப்பு மிகுந்திருந்தது!

''அதானே? நாங்க எக்கேடு கெட்டா... உனக்கென்ன? நாங்க உனக்கு ஒட்டா... ஒறவா? எங்ககிட்ட எதுக்குச் சொல்லுதே?'' என்ற தென்றலுக்கு, அவனது நியாயம் சுத்தமாய் பிடிக்கவில்லை.

''என்னம்மா... இப்படிப் பேசுறே? சொந்தம்ன்னு எனக்கிருக்கிறது நீங்க மட்டும் தானே?''

''சும்மா... ரூட்டக் கொடுக்காத மாமா. இம்புட்டு நாளும், இதையே தேன் சொன்னே?! அப்படி எங்க மேல பாசமிருந்தா... இப்படிப் பேசுவியா?''

''கல்யாணத்தைத் தள்ளிப் போடறதால... பாசமில்லாம போய்டுமா?''

''பாசமில்லாம போவாது? மூணு உசுரும் இல்லாம போய்டும்!''

''என்ன பேச்சுப் பேசுறே, தென்றல்? நான் கல்யாணமே வேண்டாம்ன்னு சொல்லலைம்மா. இன்னும் இரண்டே வருஷம்... கண்ணைத் திறந்து மூடறதுக்குள்ள ஓடிப் போய்டும்.''

''அப்படி நினைச்சுத்தேன்... நாலு வருசமும் பல்லைக் கடிச்சிட்டு இருந்தேன்... ஆனா... ஆனா...'' என ஓங்கி ஒலித்த தென்றலின் குரல், ''என்னைய விடு... உம் மேல ஆசைப்பட்டப் பாவத்துக்கு அனுபவிச்சுட்டுப் போறேன்! அந்த மூத்த உசுரு ரெண்டும்... என்ன பாடுபடும்ன்னு யோசிச்சுப் பார்த்தியா? அவங்களோ



நிம்மதியை விட உன்னோட படிப்புத் தேன் முக்கியமா போச்சில்ல!?'' எனக் குமுறிவிட்டாள்.

''என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டேன்னு பேசுற உன்கிட்ட... இனியும் நா என்ன சொல்றது?'' என்ற சோழன், ''தயவு செஞ்சு மழையில நனையாத! உள்ள வா!'' என்றான் இறுகிய குரலில்.

அந்த இறுகிய குரல், முன்னர் போல் தென்றலைப் பணிய வைக்காமல், சிலிர்க்க வைத்தது! அவளது அசைவற்றத் தன்மையில், ஓர் நிமிடம் தயங்கி நின்ற சோழன் ''உன்னை... நான் ஏமாத்த நினைக்கலைமா! அப்படி நினைச்சா... எங்க அம்மாவோட...'' என்ற வாக்கியத்தை முடிப்பதற்குள்,

''உங்க அப்பன் - ஆத்தாளுக்குச் செய்த சத்தியத்திற்காக... என்னைய கட்டிக்கிட வேண்டாம்! அப்படி... அவுக வாக்குத்தேன்... உன்னைத் தடுக்குதுன்னா.. கட்டிக்கிடப் போற நானே சொல்லுதேன்... நீ வேற யாரையாவது கலியாணம் செய்துக்கோ!'' என்றாள் தென்றல், கனல் பறக்கும் பார்வையுடன்.

''ஏய்!'' எனக் கை ஓங்கிய சோழன், ''கிளிப் பிள்ளைக்குச் சொல்ற மாதிரி சொல்லிக்கிட்டு இருக்கேன்! சொல்றதைப் புரிஞ்சுக்காம... கண்டதும் கழியதையும் பேசுறே?!'' என்றான் கர்ஜனையுடன். பொறுமையாய், தன் நிலையை எடுத்துக் கூறிய பின்னரும், தென்றலின் எதிர்ப்பேச்சு அவனை அதிகமாக கோபப்படுத்தியிருந்தது.

கை ஓங்கி நின்றவனை... ஒரு நிமிடம்... ஒரே ஒரு நிமிடம் மிரண்டு பார்த்தத் தென்றல், அடுத்த நொடியே

நேர் கொண்ட பார்வையாய் நிமிர்ந்து பார்த்தாள்! வீ
மரத்தி அல்லவா!

அந்தப் பார்வை என்ன செய்ததோ, ''எனக்காக நீ பட்டிருக்க கடனையெல்லாம் பைசா மாறாம உன் பேர்ல சொத்தாவோ பணமாவோ திருப்பிடணும், தென்றல்! அந்த வேலைக்குப் போனா... மூணே மாசத்தில எல்லாத்தையும் திருப்பிடலாம். இப்போ, நீ உன் மொதலாளிகிட்ட வாங்கித் தந்தது உட்பட! எனக்கும் சுய கௌரவம், தன்மானம்... எல்லாம் இருக்கில்ல? பொண்டாட்டிகிட்ட... வாங்கிப் படிச்சேங்கிறது...'' இப்போதும் வாக்கியம் பாதியிலேயே நின்றது!

''கௌரதையா? யாருகிட்ட யாரு? அப்ப... கலியாணத்திற்குப் பொறவு... எனக்கு நீ போடப் போற சோத்துக்கும், வாங்கித் தரப் போற துணிக்கும், மொடங்கக் கொடுக்கப் போற இடத்துக்கும்... நா காசு தரணுமா? அப்படிப் பார்த்தாக்க, உனக்கு விரிக்கப் போற முந்திக்கும்... எனக்குக் காசு தருவீரா தொர?'' என்ற தென்றலின் சீற்றத்திற்குப் பதிலாய், சோழனின் வலது கை விரல்கள் அவளது கருத்தக் கன்னத்தில் பலமாய் இறங்கிச் சிவப்பாய் தடம் பதித்திருந்தது!



# 13

தென்றலின் கன்னங்களில் இறங்கியிருந்த தன் கைகள் ரிந்ததும் தான், அவளைத் தான் அடித்திருக்கிறோம் ன்பதே சோழனுக்குப் புரிந்தது!



''அடித்து விட்டோமே?'' என்ற கழிவிரக்கத்தை விட, ''இப்படிப் பேசிவிட்டாளே?'' என்ற ஆதங்கம் தான், சோழனின் மனதில் ஓங்கி நின்றது!

இரக்கத்தை ஆதங்கம் வென்றதில், கோபம் நிலைத்து விட, ''இன்னொரு தடவை... இந்த மாதிரி பேசினே?!'' என ஒரு விரல் நீட்டி எச்சரித்தவன், ''பேசாதே!'' என்றதோடு உதடுகளை இறுக மூடிக் கொண்டான்!

அவன் அடித்ததிலேயே திகைத்து விழித்துக் கொண்டிருந்த தென்றல், அவனது எச்சரிக்கையில் தன்னுள்ளும் கோபத்தைக் கொண்டு வந்தாள்!

''பதில் பேச வக்கில்லைன்னா... கையை நீட்டுவீரா? நா வாய்ச் சொல்லா தானே கேட்டேன்... அதுக்கு எதுக்கு கை நீளுது?'' எனக் கண்களில் கனல் பறக்க, அவள் கத்தவும், சோழனுக்குக் கோபம் ஏறத் துவங்கியது!

''அப்படித் தான் நீளும்! நீ பேசினப் பேச்சுக்கு... இன்னும் இரண்டு அறை வச்சிருக்கணும்! அதை செய்யாம விட்டேன்னு சந்தோஷப்படு!'' என்றவன், தென்றல் ஏதோ பேசத் துவங்கவும், ''தேவையில்லாத சண்டைக்கு வழி வகுக்காம, உள்ள எழுந்து வா!'' என்றான் முடிவாக.

தன் பேச்சிற்கு முக்கியத்துவம் கொடுக்காத அவனது பாவனை, கோபத்தைக் கிளப்ப ''வர முடியாது!'' என்ற சொல்லோடு, அமர்ந்த இடத்திலேயே மேலும் அழுத்தமாய் அமர்ந்தாள் அவனது மனைவியாகப் போகும் மகராசி!

''இப்ப என்ன நடந்திடுச்சுன்னு... இந்தச் சண்டித்தனம் பண்றே? உன்னைய விட்டுட்டு... யாரையும் கட்டிக்க

மாட்டேன்னு, கோவில்ல சத்தியம் பண்ணாத குறையா... உன் கிட்டச் சொல்லியாச்சு! இன்னும் நம்ப மாட்டேன்னு... முறைச்சிட்டு இருந்தா... இரு! எனக்கு ஒண்ணுமில்லை!'' எனக் கடுமையாக பேசியவன், சற்று தூரம் அவளைக் கடந்து நடந்தான்.

அவன் தன்னை விட்டு விலகிச் செல்வதை வலியுடன் உணர்ந்த தென்றலின் ஒரு பக்க மனது - அவனைத் தடுத்து நிறுத்தும் உத்வேகத்துடன் இருக்க, மறுபக்க மனதோ - அவனுடன் நடக்கவிருந்த தனது திருமணம் நின்றதில் உக்கிரமாய் மறுத்தது! காதல் இருந்த பக்கத்தைத் தன்மானமிருந்த பக்கம் வென்றதில் - மேள தாளங்கலென இடிகள் முழங்க, பூமியுடனான தனது திருமணத்தைத் தண்ணீர் மாலைகளை இட்டு, நிறைவேற்றிக் கொண்டிருந்த வானத்திலே கண்களைப் பதித்திருந்தாள்!

தென்றலின் மனதை விட்டு வெகு தூரம் சென்று விட்டோம் என்று உணர்ந்த சோழன், இப்போது அவளை விட்டு விலகி நடந்த சிறு தூரத்தை இரண்டே எட்டில் கடந்து, மீண்டும் அவளிடம் வந்தான்.

வானத்தை நோக்கியிருந்த அவளது முகத்தை வலுக்கட்டாயமாக அவன் புறம் திருப்பியவன், இரண்டு நிமிடத்திற்கும் மேலாய் அவளது கண்களைக் கூர்ந்து பார்த்தான்.

தூய்மையான மழை நீருக்கு ஈடாய் கடல் நீரென பொங்கிக் கொண்டிருந்த தென்றலின் கண்களும், அவனைத் தயக்கமின்றி பார்த்திருந்தன.



இருவருக்குமே, அவர்கள் பக்க வாதம் நியாயமாய் பட, அங்கே கழிவிரக்கத்திற்கோ அல்லது குற்ற உணர்ச்சிக்கோ இடமில்லாமல் போக, இரண்டு தன்மானச் சின்னங்களும், தங்களுக்குள் இருக்கும் காதலை மறந்து சிலிர்த்து நின்றனர்.

தன்னையே தளராது 'பார்த்திருந்த தென்றலின் கண்களில் ஊடுருவியிருந்த' பார்வையை சற்றும் அகற்றாமல், ''என் மேல உனக்கு நம்பிக்கை இல்லை... அப்படித்தானே? இருக்கட்டும்... அப்படியே இருக்கட்டும்!'' எனக் கோபத்துடன் மொழிந்தவன்,

''உன்னோட நம்பிக்கைக்காக... நம்மளோட வாழ்க்கையை என்னால அடகு வைக்க முடியாது! உன் மனசில எப்ப வேணும்னாலும்... என்னால நம்பிக்கையை விதைக்க முடியும்... ஆனா, இப்போ படிக்கிறதுக்குக் கிடைச்சிருக்க வாய்ப்பை என்னால விட முடியாது!'' என்றான் உறுதியாக.

''இந்தப் படிப்பை முடிச்சிட்டு... நல்லபடியா வேலையில சேர்ந்த பிறகு, நான் இங்க வருவேன்! கண்டிப்பா வருவேன்! வந்த நிமிஷம்... கட்டின துணியோட உன்னை அழைச்சிட்டுப் போறதா முடிவு பண்ணியிருக்கேன்...'' எனத் தொடர்ந்து தன் முடிவைக் கூறிவிட்டு,

''என்ன விளங்குதா?'' என்றான் கேள்வியாக.

அவனது வார்த்தைகளிலிருந்த பலவற்றையும் தப்பாக அர்த்தம் பண்ணிக் கொண்ட தென்றல், பேச வாய் திறக்கும் முன்னர் ''பேசிட்டு இருக்கேன்... இல்லையா? மூச்!'' என்றான், அவளது தாடையிலிருந்த தனது கைகளை மேலும் அதன் மேல் அழுத்தியவாறே.

தலையைச் சிலுப்பி அவனது பிடியிலிருந்து விடுபட முயன்றவளை, இன்னமும் அழுத்தமாய் பிடித்து வைக்கும் வண்ணம், அவளது தோள்களை மறு கையால் அழுத்திப் பிடித்தான்.

''நான் வரவரைக்கும்... ஆயாவும், பேத்தியும்... பரிசம், கலியாணம், குழந்தை குட்டின்னு எதையாவது... எவனோடயாவது செஞ்சு வச்சீங்க?! அறைஞ்சு பல்லைப் பேத்துடுவேன்... தெரிஞ்சுக்கோ! நான் வரவரைக்கும்... என்னோட தென்றலா... எனக்காக காத்திட்டு இருக்கணும்! இருக்கிற! அவ்வளவுதான்!'' என்றான் ஒவ்வோர் வார்த்தையிலும் உறுதி தொனிக்க.

அந்தக் கடைசி வரியில், தன் முழு பலத்தையும் கூட்டி அவனிடமிருந்து விடுபட்டவள் ''உம் மேல ஆசைப்பட்ட மனசுதேன்ன்... இந்த ஒடம்பில இருக்குது! அது அணையாத நெருப்புத் துண்டா கணண்டுக்கிட்டு இருக்கிற வரையிலும்... வேறொருத்தனோட குடும்பம் நடத்த... நா என்ன பரத்தையா? என்னைய என்னன்னு நினைச்சே?'' எனச் சீறி விழ, அவளது முதல் வார்த்தைகளில் சீற்றம் குறைந்து லேசாகிக் கொண்டிருந்த சோழனின் மனம், அவளது கடைசி வார்த்தையில் பன்மடங்காய் பொங்கிவிட்டது!

சுள்ளென பொங்கிய கோபத்தின் விளைவாக, காற்றாற்று வெள்ளமென சீறிக் கொண்டிருந்த தென்றலின் கன்னத்தில், இடியென தன் கரங்களைப் பதித்தான், அவன்!

அவளது கன்னத்தில் விழுந்த தனது முதல் அடிக்கே வருத்தப்படாதவன், தற்போது இறக்கிய அடுத்த



இடிக்கும் கூட சிறிதும் வருந்துவதாய் இல்லை! மாறாக, தென்றலின் அடுத்தக் கன்னத்திலும் ஓர் அறை விழுந்தது!

கூடவே ''பொம்பளையாடி நீ? கட்டிக்கப் போறவன் கிட்டப் பேசுற பேச்சைப் பாரு... பேச்சை? கொன்னு... பொதைச்சிருவேன்'' என்ற கர்ஜனை, இடிக்கு மேலாய் முழங்கியது!

வானத்தின் இடிகளுக்கு ஈடாய் தன் கன்னங்களில் இறங்கிய அடிகளை, ஓர் பிரம்மிப்புடன் பார்த்திருந்த தென்றலுக்கு, காதுக்குள் அலையடிப்பது போல் ''சள சள'' வென இருந்ததே ஒழிய, இடிகளின் மேளதாளமோ... சோழனின் கர்ஜனையோ எதுவுமே காதில் விழவில்லை.

அவனது பிடியிலிருந்து விடுபட்ட கன்னத்தைக் கைகளால் தேய்த்து விட்டுக் கொண்டவள், காதுகளையும் தேய்த்துவிட்டதும்தான், தன் அடியின் தீவிரத்தை உணர்ந்தான் சோழன்!

அவளது வார்த்தைகள் உண்டு பண்ணியிருந்த கோபத்தை, அவளது செய்கை மறக்கடித்து விட, சட்டென அவளருகே அமர்ந்தவன், அவளைத் தன் தோளில் இழுத்துச் சாய்த்தான்! செவி மடித்து, தன் மீது சாய்ந்திருந்த உயிர் பறவையை, அணைப்பில் இருத்தியவாறே வழிநடத்தி வந்து, மழையின் சாரல் தாண்டிய திண்ணையில் அமரவைத்து விட்டு, தனது பேச்சைத் துவங்கினான்!

''சாரி மா... சாரி தென்றல்! அந்த வார்த்தையைக் கேட்டதும்... ஏற்கனவே இருந்த கோபம்... எல்லை மீறிப்

போய்டுச்சு!'' என அவளது கன்னங்களை வருடிக்
கொடுத்தவாறே பேசியவன்,

''நீயும்... அப்படிப் பேசலாமா தென்றல்? எனக்கு
மனசுக்கு எவ்வளவு கஷ்டமா இருக்குத் தெரியுமா?!

''நீ... என்னோட உயிர்மா!! உன்னை... நான் கல்
யாணம் செய்துக்கிற நிமிஷத்தில இருந்து, சந்தோஷமா
வச்சுக்கணும்ன்னு நினைக்கிறேன்!

''கல்யாணம் செய்துட்டும்... உனக்கு சுமையா நான்
இருக்கக்கூடாது! உன்னை... நான் தாங்கணும்... ராணி
மாதிரி தாங்கணும்!!

''அதெல்லாம், இப்போ முடியாதுமா! அதனால
தான்... இரண்டே வருஷம்... அதுக்குள்ள உனக்கு என்
மேல இருக்க ஆசை குறையாதுங்கிற மாதிரி தான் மா...
எனக்கும்!'' என்றான் உருக்கமாக.

பதிலேதும் சொல்லாமல் அவள் தேம்பிக் கொண்
டிருக்க, ''உன்னால இதைப் புரிஞ்சுக்க முடியலைன்
னாலும் பரவாயில்லை... இப்படி வார்த்தையால என்னைக்
கொல்லாதே! ''பர... பரத்...'' ச்சை... இதெல்லாம் ஒரு
நல்ல குடும்பப் பொண்ணு பேசுற பேச்சா? இனிமேல்...
மறந்தும் இந்த வார்த்தை உனக்கு ஞாபகம் வரக்கூடாது!
அப்படியே ஞாபகம் வந்தாலும், என்னோட அடியும்
உனக்கு ஞாபகம் வந்து... அதை மறக்க வைக்கணும்!''
என்றான் கண்டிப்புடன்.

அப்போதும் அங்கே மௌனமே நிலவ ''தே...'' எனத்
தொடங்கியவன், அவளைச் சுற்றிப் படர்ந்திருந்த
தனது கைகளை இறுக மூடித் திறந்து, தன்னை அடக்கி
னான்.



''தென்றல்!'' என மிக மென்மையாக அழைத்தவன்,
அவளது காது மடல்களில் சின்னதாய் ஒரு முத்தம்
வைத்த கையோடு, அவளது முகம் நிமிர்த்தி, நெற்றி
யிலும் இதழ் பதித்து நிமிர்ந்தான்.

முகம் நிமிர்த்தி அவனது முத்தத்தை வாங்கிக் கொண்
டவளுக்கு, அந்த அணைப்பு ஆறுதலைத் தந்ததோ...
அல்லது தோள் சாயும் இந்தத் தருணம் மீண்டும்
வராமலே போய்விடுமோ என்ற எண்ணம் பயத்தைத்
தந்ததோ அவனிடம் ஒண்டினாள், அந்தக் கைம்பாவை.

அவளை இறுக அணைத்துக் கொண்டு, ''உன்னை
நான் அடுத்த முறை பார்க்கும் போது, என் கையில
உனக்கான தாலி இருக்கு! அதைக் கட்டி, புருஷன்
பொண்டாட்டியாதான்... நாம ரெண்டு பேரும் இந்த
ஊரை விட்டுப் போறோம்! என்னை நம்புடி... இது
கண்டிப்பா நடக்கும்!'' என்றான் மென்மை கலந்த
உறுதியுடன்.

அடுத்து வந்த பல நிமிடங்களில் மழையின் சாரல்
மட்டுமே சத்தம் எழுப்பிக் கொண்டிருக்க, வெளியே
பெய்த வான் மழைக்கு நிகராய் தென்றலின் மனதினுள்
ளும் எண்ணங்கள் மழையாய் பொழிந்து கொண்
டிருந்தன.

எண்ணங்களின் முடிவாக, அவனிடம் தன் பக்க
நியாயத்தைப் புரிய வைக்கலாம் என்ற நோக்கத்துடன்
மெல்ல வாய் திறந்து ''மா'மா!'' என்றாள் மெல்ல.

''என்னம்மா?'' என அவனும் உருக,

''அய்யா - ஆயா பாவம் மாமா! நமக்குக் கலியாணம்
நடந்திரும்... என்னைய பத்திய ரோசனையை கழிச்சுக்

கட்டிப்புடலாம்ன்னு இருக்காக! அந்த வயசான
உசிருக்கு... நாம இதை விட என்ன மாமா நல்லது செய்ய
முடியும்? நீயே சொல்லு?'' என அவள் பேச, சோழ
னுக்கு ஆயாசமாய் வந்தது.

''திரும்பத் திரும்ப... என்ன இது?'' என அவன்
எண்ணியது, அவனது உடல் அசைவில் வெளிப்பட்டு
விட, ''அதுக்காக, உன்னைய இந்தப் படிப்பைப் படிக்
காதேன்னு சொல்லலை, மாமா! நல்லா படி... அதுக்கு
முன்னாடி, என் கழுத்தில ஒரு தாலிக் கயிறைக் கட்டிப்
புட்டேன்னா, எல்லோருக்குமே மனசு சந்தோஷப்
படும்....'' என்றாள் அவசரமாக.

சோழன் பேசும் முன், மீண்டும் முந்திக் கொண்டவள்
''தாலி கட்டினதுக்காக... என்னைய உன்னோட கூட்டிப்
போன்னு சண்டித்தனம் செய்ய மாட்டேன்! உம் படிப்பு
முடிஞ்சதும்... கூட்டிப்போ! அது வரைக்கும்... நா
இங்கனவே இருக்கேன்!'' என்றாள் இறைஞ்சும் குரலில்.

அணைத்திருந்தவளின் குரலில் கெஞ்சல் அளவு
கடந்திருக்க, சோழனுக்குமே அவள் பால் இரக்கம் வரத்
தான் செய்தது! ஆனால், அந்த இரக்கத்தை சுயகௌரவம்
வென்று விட, அவளது யோசனைக்கு / யாசிப்பிற்கு
''முடியாது'' என்ற பதிலைச் சொல்லப் போகும் தன்
நிலைமை எண்ணி நொந்தவாறே, அவளை மீண்டும்
அணைத்தான்.

ஆனால், அவனது எண்ணப் போக்கின் மறுதலிப்பை
உணராது, அணைப்பின் இறுக்கத்தை உணர்ந்து, அவனது
பதில் நல்லதாக இருக்கும் என்றெண்ணிய தென்றல்
''என்ன மாமா... சொல்லுதே? ஆயாவுக்கு உம் மேல



இருக்கக் கோவம் நறுசா போய்டும்... அதுக்கு வேறென்ன
மாமா வேணும்? நா சந்தோசமா இருந்தா போதும்... நீ
என்னைய நல்லா வச்சுக்கிறதைப் பார்த்திருச்சுன்னா,
உன்னைத் தலையில தூக்கி வச்சுச் சீராடும் தெரியுமா?''
என்றாள் எதிர்பார்ப்புடன்.

அவளது எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடியாத
தன் நிலைக்காக, ஓர் மானசீக மன்னிப்பை வேண்
டியவன், அதை வாய் மொழியாகவும் கேட்கும் பொருட்டு
மெல்ல அவளைத் தன்னிடமிருந்து விலக்கி நிறுத்தி
னான்.

அவனது ''ஆம்'' என்ற ஓர் இசைவிற்காக, அவளது
முகம் ஏங்கியிருக்க, அவளது வலக் கையைத் தனது இரு
கைகளுக்குள்ளும் இருத்திக் கொண்டவன் ''தென்றல்!''
என்றான் மெல்ல.

மேலும் பேசுவதற்கு முன்னர், தொண்டையைச்
செருமிக் கொண்டு ''நீ சொல்ல வரது எனக்குப் புரியுது...
ஆனா, கல்யாணம் பண்ணினப் பிறகும் உன்னைத்
தனியா விட முடியாது... தாலின்னு ஒண்ணை உன்
கழுத்தில கட்டிட்டா, அதுக்குப் பிறகு வர, உன்னோட
சுகத் துக்கங்கள் எல்லாம் என் பொறுப்பு! அப்படி
யிருக்கும் போது, உன்னை இங்கக் கஷ்டப்பட விட்டு...
அங்க என்னால நிம்மதியா படிக்க முடியாது! படிப்பும்
கெட்டு... சந்தோஷமும் கெட்டு... வாழ்க்கையில நிம்
மதியே போய்டும்!'' எனக் காரணக் காரியங்களை விளக்கி
விட்டு,

''கல்யாணம் செய்துகிட்டு படிப்புங்கிறது நடக்காத
காரியம்!'' என்று முடித்தே விட்டான்!

பல வினாடிகள் சென்ற பின்னரும், தென்றலிடமிருந்து பதில் வராது போகவே, தனக்குள்ளிருந்த அவளது கைகளிலிருந்து அவளது முகத்துக்குப் பார்வையை அவன் இடமாற்ற, அங்கே அவனுக்குப் பதிலாய் ஓர் வெறித்தப் பார்வையே குடியிருந்தது.

அதற்குப் பதில் சொல்ல முடியாது திணறிக் கொண்டிருந்தவன், ஏதாவது சொல்ல வேண்டுமே என்ற எண்ணத்தில் ''இது தவிர... என்ன வேணும்னாலும் கேளும்மா... கண்டிப்பா செய்றேன்!'' என்றான் மன்றாடும் குரலில்.

ஆனால், தென்றல் தான் எதைக் கேட்கும் மனநிலையிலும் இருக்கவில்லையே!!

தான் பேசிய வார்த்தைகளை அனைத்திற்கும் ''புரிந்து கொள்ள மறுக்கிறாய்!'' ''என்னை நம்பவில்லை!'' ''நம் வாழ்வின் விடியலுக்காக தான் பேசுகிறேன்!'' எனத் தப்பு வண்ணம் பூசியவனின் நிலையை அறிந்து கொள்ள முயன்று, அதன் விளைவாக அவனுக்கும் பாதகமில்லாமல், தனது உறவுகளுக்கும் பாதகமில்லாமல் ஓர் முடிவெடுத்தால்? ச்சு... அதற்கும் ஒத்துக்கொள்ள மறுக்கிறானே? தன் உறவுகளின் வேதனையை விட... அவனுக்கு அவனது முடிவு தான் பெரிதா?

''உன்னை நான் புரிந்து கொள்ளவில்லை என்றாயே! இப்போது, நீ தான் என்னைப் புரிந்து கொள்ளவில்லை!'' என்பது போல் சோழனைப் பார்த்தவள், அவனது பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, எழுந்தாள்.

''தென்றல்...'' என அவன் தவிக்க, அவனைத் திரும்பியும் பாராது வீட்டினுள் சென்றவள், சமையலறை எனப்



பெயர் பண்ணுவதற்காக வரவேற்பறையில் போடப்பட்டிருந்த தடுப்பினுள் சென்று, சுருண்டு படுத்தாள்!

வீட்டினுள் நுழைந்த பேத்தியைப் பார்த்து, ''என்னத்தா?'' என நெட்டிரு உருக.

''என்னடி சொன்னான் அவன்? மண்டக்கனம் பிடிச்சவன்... நான் எம்புட்டுச் சொல்லியிருப்பேன்... கேட்டியா?'' எனப் பாண்டியம்மாள் மறுகினார்.

அவர் மேலும்மேலும் சோழனைத் திட்டிக் கொண்டிருக்க, ''ஆயாயாயா!'' என அதட்டி நிறுத்திய தென்றலின் குரலில், பெரியவர்கள் மட்டுமல்ல வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்த சிறியவனும் திகைத்து நின்றான்.

''உசிரைக் கொடுத்து, எதுக்காக இப்படிக் கத்துறே? மெத்தப் படிச்சிருக்காரே அந்தத் தொரை... உம் பேச்சைக் கேட்டு... என்னைய கூட்டிப் போவாருன்னா? உன் உசிரு போனாக் கூட, என்னைக் கட்டிக்கிட மாட்டார்! விளங்குச்சா?'' என்று முழங்கிய தென்றல்.

''அரிப்பெடுத்து கிடக்க மட்டைன்னு என்னைய சீந்திப் பார்க்கிறார்!''

''இனி அவரைப் பத்தினப் பேச்சு... இங்க முழைச்சுச்சு?? என்னைய உயிரோட பார்க்க முடியாது!! சீமெண்ணெய்யை ஊத்திக்கிட்டு... கொளுத்திக் கிடுவேன்'' என்ற பயமுறுத்தலோடு, தன் வாக்குவாதத்தை முடித்தாள்!

''யாத்தே... என்ன பேச்சுப் பேசிப்புடுச்சு... கொளுத்திக்கிற வயசாய்யா இது?'' என நெட்டிரு தலையில அடித்துக் கொள்ள,

''கேனைச் சிறுக்கி... அவனுக்காக... நீ ஏன்டி... கொளுத்திக்கிற?'' எனப் பாண்டியம்மாள் திகைத்துப் போனார்!

இரு பெரியவர்களின் வேதனையையும் மீறிக் கொண்டு, நனைந்த உடைகளுடன், கண்ணும் முகமும் கனன்ற நிலையில் படுத்திருந்த தென்றலின் தோற்றம் நெஞ்சைப் பிசைய, பெரியவர்களைத் தாண்டி அவளிடம் வந்தவன் ''தென்றல்...'' என்றான் மெல்ல.

பாண்டியம்மாள், தன் பேச்சைத் தொடங்கும் முன்னர் ''போயிரு! போயிரு!'' எனக் கத்தியவள், நீண்ட அவனது கரங்களை வெறித்துப் பார்த்துக் கொண்டு ''என்னைய தொடாதே! தொட்டின்னா... கொளுத்திக் கிடுவேன்! போ... போ...'' என்றாள், உயிரை உருக்கும் குரலில்.

அதற்கு மேல், ஒன்றும் பேசாமல், வீட்டை விட்டு வெளியே வந்த சோழன், அந்த ஊரை விட்டும் வெளியேறினான்!!

# 14

* திருச்சி *

காலை எட்டு மணியளவில், யோகா வகுப்பிற்கான நுழைவு வாயில் அருகே, தன் நண்பனுக்காக காத்திருந்தான் விக்னேஷ்.



சில வருடங்கள் முன்னர், நடந்தேறிய சிறு வாக்கு வாதத்திற்குப் பின்னர், கதிர் தன்னிடம் சரியாகப் பேசாதது விக்னேஷின் மனதில் ஆழமாய் பதிந்து போயிருந்தது!

தன் மனதிலிருப்பதை வாய்விட்டுக் கேட்டால், ''அதெல்லாம் இல்லையேடா! எப்பவும் போலத்தான்... உன்னோட பேசுறேன்'' எனும் கதிரிடம் ஏற்பட்டிருக்கும் ஒதுக்கத்தை உணர முடியாத அளவிற்கு, விக்னேஷிற்கு அறிவில்லாமல் போய் விடவில்லை.

அந்த அறிவின் காரணமாய் ''ஏன்டா.... நான் உன்னோட பிரண்ட் தானே? ஒரு பிரண்ட்டா... நான் உன்னை எதுவும் சொல்லக் கூடாதா? சரிப்பா... நான் சொன்னது தப்பா இருந்தா என்ன? இது எனக்குப் பிடிக்கலை... இனிமேல் இப்படிப் பேசாதேன்னு சொல்ல வேண்டியது தானே? எதுக்கு... இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் போறே?'' எனச் சண்டைக்கு நின்றாலும்,

''நீ பேசினது... தப்பா இருந்தா தானே... உன்கிட்ட சண்டை போடணும்?! நீ பேசினது கரெக்ட்... டா விக்கி!'' என முடித்து விடுவான், அந்த தன்மானச் சிங்கம்!

இதே போராட்டம் ஆண்டுக் கணக்கில் நடந்து கொண்டிருக்க, என்னதான் கதிர் தன்னிடம் இயல்பாக பேசினாலும், முதல் வருடங்களில் தங்களுக்குள் இருந்த நெருக்கம் ஒரு சதவீதமாவது குறைந்திருக்கின்றது என்றே எண்ணினான், விக்னேஷ்!

அதுவும் கடந்த ஒரு வாரமாக, எதையோ பறிகொடுத்தது போலவே இருக்கும் கதிர், விக்னேஷின் துளைத்தலுக்கு ''ஒண்ணுமில்லைடா'' என்பதைத் தவிர

எதையுமே சொல்வதாய் இல்லை என்றதும்தான், விக் னேஷ் ஓர் முடிவிற்கு வந்தான்.

அந்த முடிவின்படி, கதிரின் வகுப்பு முடிவதற்காக காத்திருக்கத் துவங்கினான். ஆறு மணிக்குத் துவங்கி ஆறரை வரை ஒன்று, ஆறரை முதல் ஏழு வரை ஒன்று, ஏழு முதல் எட்டு வரை அடுத்தது என்றிருந்த வகுப்புகள் முடிந்து, மணி எட்டே காலை எட்டியதும் கூட கதிர் வெளியே வரவில்லை என்றதும், மெல்ல உள்ளே நுழைந்த விக்னேஷ் திடுக்கிட்டுத்தான் போனான் என வேண்டும்!

ஏனென்றால், பத்மாசன நிலையில் அமர்ந்திருந்த கதிரின், மூச்சுக்கள் சீராக வந்து கொண்டிருந்த போதும், கண்ணிலும் கண்ணீர் சீராக வடிந்து கொண்டிருந்தது!

அவனுக்குத் தெரிந்த இத்தனை ஆண்டுகளில், கதிரிடம் கண்ணீர் என்ற செயலையே கண்டிராத விக்னேஷிற்கு, இது பெரும் அதிர்ச்சியைக் கொடுத்த தில் ஆச்சரியம் எதுமில்லையே!

சில வினாடிகள் அவகாசம் கொடுக்கலாம் என் றெண்ணி அவன் தயங்க, கதிரின் கண்ணீர் வினாடிகள் கடந்து நிமிடங்களில் வழிந்து கொண்டிருந்தது!

பத்து நிமிடங்கள் வரையிலும் கூடப் பொறுக்க முடியாமல், நண்பனின் தோளில் கைவைத்த விக்னே ஷைத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த கதிர், அவசர அவசரமாய் கண்களைத் துடைக்கும் போதே, அவனது கைகளை விக்னேஷின் கைகள் தடுத்தன!

''என்னாச்சுடா?'' என்ற கேள்வியுடன்.



''ஒண்ணுமில்லைங்கிற பதில் எனக்குத் தேவை யில்லை! உன் பிரண்ட்டா என்னை நீ மதிச்சா, என்ன விஷயம்ன்னு சொல்லு! இல்லைன்னா... என் முகத்தி லேயே முழிக்காதே?! அப்படியே போய்டு!'' என்ற தன் எதிர்பார்ப்பையும் அவன் முன் வைக்கவும், கதிர் முழு தாய் உடைந்தான்!

ஒரு வாரம் முன்னர் கேட்ட அதே வார்த்தைகளை... மீண்டும் கேட்டதும், கதிரின் உள்ளம் குமுறாமல் இருந் தால் அல்லவே அதிசயம்!

✵ வெள்ளகவி.. ✵

சோழன் தனது முடிவைத் தெரிவித்து விட்டுச் சென்ற அந்த ஒரு மாதத்தில், தென்றலின் ஓட்டுக் குடிசையின் வெளியே மட்டுமல்லாது உள்ளேயும் கண்ணீர் மழை பெய்தவண்ணம் இருந்தது!

பேத்தியின் கண்களில் வழிந்த கண்ணீருக்கு ஈடுகட் டும் வண்ணம் பாண்டியம்மாளின் வாய்களில் சோழன் வஞ்சகமில்லாமல் விழுந்து எழுந்தான்!

பாண்டியம்மாளை மேலும் மேலும் பேச வைக்கும் வண்ணம், ''உங்க தாத்தனோட தங்கச்சிப் பேரன்... திண்டுக்கல்லு பஞ்சு மில்லுல வேலை பார்க்கிறானாம்! அவனைப் பரிசம் போட வரச் சொல்லுதேன்'' என்ற அவரது அறிவிப்பிற்கு, ''என்னைய பேச வைக்காத... ஆயா! அப்படி எவனாவது வந்து நின்னான்... உம் பேத்தியைக் கருகின சருகா த்தேன் பாக்கக் கிடைக்கும்... கருத்தச் சிறுக்கி தானே? கருகினா என்னன்னு நினைக் கிறியோ?'' என்று கூறிய வார்த்தைகளால், பெற்ற

வளுக்கு ஈடான அவளது மனத்தைக் குத்திக் கிழித்தாள், இளையவள்.

வீட்டிலிருப்பவளுடன் தான் போராட வேண்டியிருக்கிறது என்ற வருத்தத்தை பாண்டியம்மாளுக்குக் கொடுக்காமல் ஊரில் இருப்பவர்களும், வேலைக்குச் செல்லாமல் வீட்டினுள்ளே முடங்கியிருந்த தென்றலைப் பற்றி, பலதரப்பட்ட விமர்சனங்களை முன், வைத்தனர்.

பேத்தியின் வார்த்தையையும், ஊராரின் வார்த்தையையும் தாண்டி, தங்களது வாரிசின் வாழ்வு விடியாது போனதே என்ற வருத்தத்திலேயே பாண்டியம்மாளின் உயிர் பறந்து போனது!!

* திருச்சி *

படிப்பு முடிந்து மூன்று மாதங்கள் கடந்திருந்த நிலையில், கல்லூரி நட்பைப் பிரிந்திருக்க முடியாமல், மித்ராவின் வகுப்புத் தோழர்கள் அனைவரும் மாதம் ஒரு முறை சந்திப்பதை வழக்கமாக்கியிருந்தனர்.

வேலை தேடி வெளியூர் சென்றவர்கள் - திருச்சி வந்து கலந்து கொள்ளும் வண்ணம், சனி - ஞாயிறுகளிலேயே சந்திப்பு நடந்தேற, வெளியூரிலிருந்த பலரும் அதில் கலந்து கொண்ட நிலையில், உள்ளூரிலிருந்த மித்ரா மாதம் தவறாமல் நண்பர்களைச் சந்தித்து மகிழ்ந்ததில் தவறேதும் இல்லையே?!

அந்த வழக்கப்படி, நடந்து கொண்டிருந்த மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் ''கலைவாணி'' கலையரங்கத்தில் கூடினர் அனைவரும். அங்கே ஓடிக் கொண்டிருந்த ஓர் புத்தம் புதிய திரைப்படத்திற்கு நுழைவுச் சீட்டு வாங்கும் பணியை ஏற்றுக் கொண்டிருந்த



மித்ராவிற்கு, தங்களது முதல் மாஸ் கட்-டும் அதைத் தொடர்ந்த கதிரின் / விக்னேஷின் பேச்சுக்களும் நினைவில் வந்து போயின!

அந்த முதல் முறைக்குப் பின்னர், நூறுக்கும் குறையாத முறைகள் அந்தத் திரையரங்கிற்கு வந்திருந்தாலும், அன்றைக்கு கதிர் வராததை அவளால் மறக்க முடியவில்லை!

தொடர்ந்து, துறைத் தலைவரிடம் அவர்களைக் காட்டிக் கொடுக்காமல் அவன் பேசிய பேச்சும்!

ஆனால், அதைத் தொடர்ந்து கதிரின் தன்மானப் பேச்சுக்களும், தன்னை மதிக்காத அவனது தன்மையும் நினைவில் வந்து அவளைக் கடுகடுக்கச் செய்தன!

திரையரங்கம் என்றில்லை - தினமும் காலையில் யோகா செய்யும் வேலைகள் யாவும் அவனது சிடுசிடுத்த முகமே நினைவில் வந்து, கோபத்தைக் குறைப்பதற்காக அவள் மேற்கொண்ட யோகாவினாலே கோபத்தைக் கிளப்பிவிட்டது!

நினைவும், கோபமும் ஓய்வின்றி போட்டியிட, நினைவிற்கு நிழல் கொடுக்கும் வண்ணம் கதிர் நிஜமாக அங்கே வந்து நின்றான்!

விக்னேஷுடன் வந்து சேர்ந்தவனிடம் பார்வையைத் திருப்பாமல், விக்னேஷுடம் மட்டுமே பேசும் பாவனையில் ''என்ன விக்கி... எங்க இந்தப் பக்கம்?'' என்றாள் புருவத்தை உயர்த்தி!

''கெட்-டு கெதருக்கு வந்திருக்கோம்... படத்துக்குப் போறதா தானே இன்னைக்கு ப்ளான்? இல்லையா என்ன?'' எனப் புரியாமல் வினவியவனிடம், ''ஹோ

சில்லி! எங்களோடவா? படத்துக்கா? நீங்களா?'' எனக் கேலியில் கொக்கிப் போட்டாள், மித்ரா!

''ஹே, என்ன? பொடி வச்சுப் பேசுற மாதிரி இருக்கு? நாங்கெல்லாம் படத்துக்கு வர மாட்டோமா? என்ன?'' என விக்னேஷ் குரலை உயர்த்திய போது,

''டேய் விக்கி, நீ தேவையில்லாம டென்ஷன் ஆகாதே! அவங்க என்னைச் சொல்றாங்க! நான் கூட படத்திற்கு வந்திருக்கனேன்னு அவங்களுக்கு ஆச்சரியம்... நான் தான் / நானே தான் வந்திருக்கேன்னு சொல்லு!'' எனக் கூறி, அவனை அடக்கினான் கதிர்.

''அடேங்கப்பா! உன்னோட பிரண்ட் வந்தது... அதுவும் நானிருக்க இடத்திற்கு வந்தது எட்டாவது அதிசயம் தான் போ! அதுக்கே, இன்னைக்கு நான் இரண்டு ஸ்வீட் சாப்பிடணும்!''

மித்ராவின் அதிகப்படியான வியப்பில் விக்னேஷிற்கே எரிச்சல் வந்தது என்றால் கதிரைப் பற்றி கேட்கவே வேண்டாம்! முகம் அஷ்டக் கோணலாய் வளைந்து நெளிந்திருக்க, உதடுகள் ஏளன வளைவு ஒன்றை பெற்றிருந்தது!

விக்னேஷிற்கோ ''சில சமயங்களில் இவளது பேச்சு... ஆபத்தான வளைவுகளில் அசால்ட்டாய் சென்று திரும்புகிறதே! கடவுளே!'' என எரிச்சலாய் வந்தது!

அவளது அழகிய வடிவும், வித்தியாசமாய் இருந்த அவளது குணமும், வரக் கூடாத வியாதியும் என அவனை கட்டிப் போட்டிருந்த காரணங்கள் - அவளது அலட்சியப் பாவனையில் மட்டுப்பட்டதற்கும் மேலாக, நண்பனின் வளைந்த உதடுகளில் பெரும் ஆபத்தை



இனம் கண்டதில், விக்னேஷிற்குப் பதட்டமாய் இருந்தது!

இன்று படத்திற்குப் போகலாம் என்று அழைத்த போது கூட ''இன்னைக்கு மனசுக்கு ஏதோ சங்கடமாவே இருக்குடா! நான்... வரலையே'' என்று தயங்கிய நண்பனை ''ரூம்-குள்ளேயே இருந்தா... இப்படித்தான் இருக்கும்! பேசாம... என்னோட வா!'' என்று கரைத்துப் பார்த்துத் தோற்ற பின்னர், ''நான்... இன்னும் ' ரெண்டு மாசத்தில் எம்.எஸ்-காக வெளிநாடு போய்டுவேன்! அது வரைக்கும்... அட்லீஸ்ட் வாடா'' எனப் பிடித்து இழுத்து வந்திருந்தான்.

உள்ளுக்குள் உடைந்து போயிருந்தவனை, அப்படி இப்படியென்று ஒருவாறாக சரிகட்டி இங்கே அழைத்து வந்தால், இவளது வேண்டாத பேச்சு அவனை மீண்டும் கூட்டிற்குள் அடைத்து விடும் போலவே என்று பயந்து போனான், அந்த அன்புத் தோழன்!

இது நாள் வரையிலும், இருவரையும் விட்டுக் கொடுக்காது, மித்ராவிற்காக கதிரிடமும், கதிருக்காக மித்ராவிடமும் பேசிக் கொண்டிருந்தவனுக்கு, நண்பனின் தற்போதைய நிலையைக் கண்டதும் அவன் பால் சாயத் தான் தோன்றியது!

அந்த எண்ணம் மறையும் முன்னர் ''மித்ரா, தேவையில்லாமல் அவனிடம் வம்புக்கு நிக்காத! அவனும் நம்மளோட படிச்சவன் தான்... நீ இந்த பார்ட்டிக்கு வந்திருக்க மாதிரி... அவனும் இந்த பார்ட்டிக்கு வந்திருக்கான்! அதோட விடு! சும்மா சும்மா அவனைச் சீண்டிட்டே இருந்தா, நல்லா இருக்காது!'' என்ற எச்சரிக்கை, தகுந்த வாக்கிய உச்சரிப்புகளுடன் வந்து விழுந்தது!

அதைக் கேட்டிருந்த இருவருமே ஒரோர் வகையில் திகைத்துப் போயினர் என்பது நிஜம்!!'

எப்போதும் போல், தனது திகைப்பைப் பட்டென வெளிப்படுத்தியது மித்ரா தான்!

''ஹேய்! என்ன கொழுப்பா? உன் பிரண்ட்டுக்காக... என்னையே திட்டுவியா?'' என அவள் கண்களை உருட்டிக் கொண்டு, அவனிடம் கை ஓங்கியதில், விக்னேஷிற்குக் கோபம் வருவதற்குப் பதிலாக, சட்டென சிரிப்பு வந்து விட்டது.

வயிற்றைப் பிடித்துக் கொண்டு அவன் விழுந்து விழுந்து சிரிக்க, மீண்டும் திகைத்தனர் மற்றவர்கள் - இப்போது கதிர் / மித்ரா மட்டுமல்லாது அங்கிருந்த அனைவருமே!

''ஹேய்... என்னடா?''

''இல்லை... ஹி... ஹி... இல்லை... நேத்து... எங்கம்மா ஒரு... ஹய்யோ அம்மா... முடியலையே!''

''ஹி... ஹி... சூப்பர் மித்து! இந்த போஸ்லதான் ரொம்ப அழகா இருக்கே!''

''கடவுளே... ஹய்யோ... எங்கம்மா நேத்து நைட் ஒரு சீரியல் பார்த்தாங்க... அதில ஒரு வில்லிக்குச் சாமி வந்து... நல்லவள் ஆகி... அவளோட புருஷனான வில்லனையே பின்னு, பின்னுன்னு பின்னி எடுத்திடுவா! அந்த மாதிரி இருந்தது...''

''வில்லிக்கு சாமி வந்தா ஹீரோயின்!...''

''மித்ராக்குக் கோபம் வந்தா சாமி!... எப்புடி?'' என் றான் சிரிப்பின் ஊடே! அங்கே இருந்த அனைவரும்



''ஓஹோ'' வெனச் சிரிக்க, மித்ராவிற்குத் தன் கோபத்தை இழுத்து வைப்பது என்பது மிக மிகக் கடினமான காரியமாக இருந்தது!

முடிவில் அவளும் சிரித்துவிட, எல்லோரும் சிரித்த முகத்துடனே படத்திற்குச் சென்றனர்.

படம் முடிந்து வெளியே வந்த போது ''ஃபிகருக்காக பிரண்ட்டை கழட்டி விடுறவனைப் பார்த்திருக்கேன். பிரண்ட்டுக்காக ஃபிகரைக் கழட்டி விடுகிறியே?!'' என மித்ரா, கிண்டல் செய்ய,

''ஹே சொல்லவே இல்லை... பாரேன்! நீ என்னோட ஃபிகரா?!!!!!!''

''நான் சொல்லவே இல்லாத லவ்வை... நீயே புரிஞ்சுக்கிட்டியா?''

''என்ன ஒரு அறிவு? காலேஜ் முடிஞ்சு வந்ததும் உனக்கு மூளை... அளவுக்கு அதிகமாகவே வளர்ந்திருக்குப் போலவே!'' என விக்னேஷ், ஏகத்திற்கும் வருத்தப்பட்டதில் கதிர் சிரிக்க, மித்ராவோ அவனைத் துரத்திக் கொண்டு திரையரங்கத்தை வலம் வந்தாள்.

''ஹய்யோ சாமி! சாமி!''

''வேப்பிலை கொடுங்க... ஹோ வேப்பிலை இல்லையா... சரி பரவாயில்லை கருவேப்பில்லை... அதுவும் இல்லையா?''

''ஹோ இந்த சாமிக்கு இலை - தழை எல்லாம் வேண்டாமாம்!''

''குச்சி மிட்டாய்... இலந்தப்பழம்... லாலிபாப்... இது மாதிரி ஏதாவது கொண்டாங்கப்பா!'' என அவன் கத்திக்

கொண்டே ஓட, அங்கே சிரிப்பிற்கு அணை கட்ட முடியாமல் போனது!

இதே சந்தோஷத்துடன் வெளியே வந்த நண்பர்கள், நிறைந்த மனதுடன் பிரிந்து செல்ல, விக்னேஷின் வண்டியில் அவனும் கதிருமாய் பயணம் செய்தனர்.

பயணத்தின் மத்தியில் ''டேய் விக்கி! என்னை மன்னிச்சிடுடா!'' என்றான் கதிர் மெதுவான குரலில்.



# 15

''தமிழ் அகராதியில் எனக்குப் பிடிக்காத ஒரே வார்த்தை - மன்னிப்பு!!'' என அவன் கடிக்க,

''டேய், நான் சீரியஸ்-சா பேசுறேன்! காமெடி பண்ணாதே!''

''இன்னைக்குத் தான் காமெடி-யா பேசியிருக்கே! முன்னேயாவது... அப்பப்போ பேசினாலும் நச்சுன்னு எதையாவது பேசி என்னை வாயைப் பிளக்க வைப்பே! இப்போ... அது கூட இல்லாம ஊமைச் சாமியார் ஆகிட்டியே!''

''ப்ச், அதை விடுடா! என்னை மன்னிச்சிடு!''

''எதுக்கு மேன்... மன்னிப்பு?''

''இன்னைக்கு எனக்காக மித்ராகிட்டப் பேசின மாதிரித் தானே... அன்னைக்கு மித்ராக்காக என்கிட்டப்



பேசியிருப்பே?! அதைப் புரிஞ்சுக்காம... நீயும் என்னோட ஏழ்மையைக் குத்திக் காட்டுறதா நினைச்சுட்டேன்!''

''அடப்பாவி! அப்படியொரு எண்ணமே எனக்கு இல்லைடா!!''

''சாரிடா!''

''சரி அதைவிடு... அந்தப் பிரச்சனைக்கு அப்புறம்... எத்தனை நாள் உன்கிட்ட ''என்ன கோபம்''ன்னு கேட்டிருப்பேன்! அப்போவெல்லாம் ''நீ எந்தத் தப்பும் செய்யல... நீ செய்தது கரெக்ட் தா'' ன்னு சொல்லிட்டுத் திரிஞ்சே? முன்னாடியே சொல்லியிருந்தா... எல்லாருக்குமே இந்த மனக்கஷ்டம் வந்திருக்காதில!?'' விக்னேஷின் இந்த வாதத்திற்குப் பதில் சொல்ல முடியாமல் ''ம்ம்'' என்ற சொல்லோடு முடித்துக் கொண்டான், கதிர்.

அவனது மௌனம் தாங்காமல் ''உன்னோட சுய கௌரவத்தைப் பத்தித் தெரிஞ்சிருந்தும், நானும் அப்படிப் பேசியிருக்கக் கூடாது! ப்ச்! விடு! இனிமேல், நமக்குள்ள என்ன பிரச்னை என்றாலும்... பேசித் தீர்த்துக்கலாம்! தயவு செஞ்சு... முகத்தைத் தூக்கிட்டு, என்னை விட்டு ஒதுங்கி ஒதுங்கிப் போற வேலை வேண்டாம்!'' என்றான் விக்னேஷ் முடிவாக.

''உன்னை விட்டும் ஒதுங்கிட்டா... இந்த உலகத்தில் ஒரு பக்கா அனாதைடா நான்!''

''ச்சீ! வாயைக் கழுவு! பக்கா அனாதை... பக்கா பண்ணாத அனாதைன்னு கிறுக்கு மாதிரி பேசிட்டு! நானும் என் தங்கச்சியும் இருக்கும் போது... நீ எப்படிடா அனாதையாவே? சில சமயம்... உன் நாக்கில சனி புகுந்து விளையாடுதுடா!''

''உன் தங்கச்சி... எனக்கு உறவா?? ம்ப்ச்! ஆனா, ஒண்ணு! என் வாய்ல மட்டுமில்லை கையிலேயும் சனி தாண்டவம் தான்- டா ஆடுறார்!''

''என் கையில அவர் எப்படி ஆடலாம்? நானும் தான் ஆடுவேன்னு நீயும் ஆடிட்டியோ? ஆனாலும், இப்படி வேகமான ஸ்டெப்ஸ் போட்டிருக்க வேண்டாம்!?''

''ச்சு!''

''என்னடா ச்சுஃப்ச்...ப்ச்..ம்ப்ச்... ஓவர் ரைமிங் போடறே? செய்றதையும் செய்துட்டு... துரைக்கு முறைப்பு வேற!''

''அவளை மாதிரியே பேசுறேடா! அவளும் ''தொரை'' ன்னு தான் சொன்னா...''

''சும்மா ஃபீலிங்க்ஸ்-சைக் கூட்டாம... தங்கச்சியைப் போய் பார்த்திட்டு வா!''

''ம்ஹூம்!''

''நீயும் கஷ்டப்பட்டு... அவங்களையும் கஷ்டப் படுத்தி... ஏன் கதிர்?''

''இல்லைடா! அடுத்தத் தடவை அவளைப் பார்க்கும் போது... அவளுக்கான தாலி என் கையில இருக்கும்ன்னு சொல்லிட்டு வந்திருக்கேன்! இப்போ போய்... நின்னா, அவளுக்கு ஏமாற்றமா இருக்காதா? அவளைக் காலத்துக் கும் கஷ்டப்படுத்தி வந்தாச்சு... இன்னொரு கஷ்டத்தைக் கொடுக்கணுமான்னுனு...''

''இப்படியே இழுத்திட்டே இரு... காரியம் கை மீறிப் போகப் போகுது!''

''சும்மா இருடா! அதெல்லாம்... எதுவும் ஆகாது!'' ன முடித்தப் போதும், கதிருக்கு மனம் படபடவென டித்துக் கொள்ளத் தான் செய்தது!



அன்றைய தினம் விடிந்ததிலிருந்து, ஏதோ கெட்டது நடக்கப் போவது போல் தோன்றிய உறுத்தல், இப்போது மீண்டும் விஸ்வரூபம் எடுக்க, நொடிகள் மௌனமாய் கழிந்தன. கல்லூரி நெருங்கும் போது ''டேய் விக்கி! இன்னைக்கு ஏதோ விபரீதம் நடந்த... ஹ்ம்ம் நடக்கப் போற மாதிரியே மனசை அழுத்துது!'' எனத் தன் தவிப்பை ஒருவழியாக வெளியிட்டே விட்டான், அவன்.

''என்னடா நீ? மித்ரா... ஏதோ தெரியாத் தனமா என்னோட ஃபிகர்ன்னு வெளிப்படையா சொல்லிட்டா? அதுக்காக... இப்படியா? விபரீதம்... அப்படி... இப்படின்னு! நானும் கொஞ்சம் நல்லவன் தான்டா!'' எனச் சிரிப்பினூடே கேலி செய்தான், நண்பன்!

அவனது பேச்சிலும், குரல் பாவனையிலும் தன் துக்கம் மறந்து சட்டென சிரித்த தோழனை, அதன் பின்னரும் உற்சாகமாகவே வைத்துக் கொண்டான், விக்னேஷ்.

ஆனால், விளையாட்டுப் பிள்ளையாய் மட்டுமில்லாமல் ''ஊருக்கு வேணும்ன்னா போன் பண்ணிப் பாருடா! அங்க எல்லாரும் நல்லா இருக்காங்களான்னு விசாரிச்சுக் கிட்டா... உனக்குக் கொஞ்சம் நிம்மதியா இருக்கும்!'' எனப் பொறுப்பான தோழனாய், அறிவுரையும் செய்தான்!

''போனா? அங்க எல்லாம்... போன் இல்லைடா! முன்னாடி... அந்த ரோஸ் கார்டன்னுக்கு போன் பண்ணுவேன்... இப்போ, உன் தங்கச்சி அங்க வரதில்லையாம்!! ப்ச்... இருந்த ஒரு வழியும் போச்சு!'' எனக் கதிர் சலித்துக் கொள்ள, திறந்திருந்த வழிகளை அனைத்தையும் அடைத்துவிட்டு நிற்கிறாயே என அடிக்கத் தோன்றியது, மற்றவனுக்கு!

''சரிடா, மணி ஒன்பது ஆகிடுச்சு, நீ வீட்டுக்குப் போ... அம்மா காத்திட்டு இருப்பாங்க'' என அவனை அனுப்பி வைத்துவிட்டு, விடுதி அறையினுள் நுழைந்த கதிருக்கு மனம் அலைபாய்ந்து கொண்டே இருந்தது!

* வெள்ளகவி.. *

தனக்கு வெகு சீக்கிரமே திருமணம் முடிந்து விடும் என்ற நினைப்பில், ரோஜா தோட்டத்திலும் வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டு வெளியேறி யிருந்த தென்றலுக்கு, மீண்டும் அங்கே போய் நிற்க அவமானமாய் இருந்தது!

ரோஜா தோட்டத்திற்கு என்றில்லை - வீட்டை விட்டு வெளியேறுவது பிடிக்காத ஒரு காரியமாய் இருந்தது எனலாம்!

இறங்கித் தெருவில் நடந்தால், அனைவரது கண்களும் தன் மீதே இருப்பது போல் தோன்ற, யார் எப்போது என்ன கேள்வி கேட்பார்களோ என்ற பயத்திலேயே வெளியே வராமலிருந்தாள், அவள்!

வீட்டினுள் முடங்கியிருந்த அவளை விடவும் மேலாய், முடங்கியிருப்பவளைப் பார்த்தே தங்களது பாதி உயிரையும் கால் வாசியாக குறுக்கிக் கொண்டனர், பாண்டியம்மாளும் நெட்டிருவும்!

''படிப்பு முடிந்ததும் திருமணம்!'' என்ற அவனது வாக்குறுதியை அவனே மதிக்காமல் போனதற்கு, அவனுக்குக் கிடைத்திருக்கும் புது வாய்ப்பு மட்டும் காரணமில்லை என்பதை முழுமையாக நம்பினாள் தென்றல்!



அவளது நிறத்தின் மேல் அவளே கொண்டிருந்த வெறுப்பு - அவனது புறக்கணிப்பிற்கு அவள் சூடிக் கொண்ட வண்ணங்களுள் ஒன்றானது! சொல்லப் போனால், மிக அழுத்தமாய் வரையப்பட்ட ஓவியத்தின் மேல் மிக மிக அடர்த்தியாய் சாற்றப்பட்ட வண்ணமானது!

அந்த ஓவியத்திற்கு மென்மேலும் மெருகூட்டுவது போல், தென்றலின் படிப்பறிவின்மை அடர்த்தியான வண்ணத்தின் ஊடே புகும் கடினமான கோடுகளாயின!

கடினக் கோடுகளின் ஊடே வரும் மென் ஊசிகளாய், தென்றலின் ஏழ்மை இடம்பெற, சோழனுக்குத் தென்றல் பூசிய அரிதாரம் அவளையே பயமுறுத்தியது என்று தான் சொல்ல வேண்டும்!

''தன் மன்னவன்!'' என்ற தனது எண்ணத்தைத் தவிடு பொடியாக்கும் வண்ணம், தான் அவன் மேல் வைத்தக் கண்மூடித் தனமான அன்பிற்கு எதிரொலி இல்லாமல் போனதை எண்ணி அவளால் அழாமல் இருக்க முடியவில்லை!

''தாய்க்குக் கொடுத்த வாக்கிற்காகவும்'', தனது படிப் பிற்கு உழைத்த நன்றிக் கடனுக்காகவும்'' என்ற அவனது இரு காரணங்களும் - இரு பெரும் கருங்கற்களாய் அவனது மனதை அழுத்தியது!

இந்த வேதனையை அழுகையாய் அவள் வெளியிட, தன் மகனின் வாரிசு துடித்து துவள்வதைக் கண்ட மூதாட்டி ஒரேடியாக துவண்டு, மாய்ந்தே போனதில், அந்த வீடே அஸ்தமித்துப் போனது!

''என்னைய தவிக்க விட்டுட்டு... நீ மட்டும் ஒத்த உசிரா போயிட்டியே!'' என நெட்டிரு கதறியபோது, தென்றல் அதிர்ந்து போனாள்!

ஏற்கனவே, தன் மன வேதனை தான் பாட்டியை உயிர்
துறக்க வைத்திருக்கிறது என்ற எண்ணத்தில் வாடி
யிருந்தவளை நெட்டிருவின் சொற்கள் புரட்டிப்
போட்டன!

தன்னை அவமதித்த ஒருவனுக்காக தான் சிந்திய
கண்ணீர், ஓர் உயிரைப் பறித்திருக்க, இன்னொரு
உயிரும் அந்த வேதனையில் மாண்டு விடுமோ? என்ற
அச்சம் தலை தூக்கியது!

''இப்படிப் பட்ட மரமா... நிக்குதே!! நா என்னத்த
செய்வேன்?!'' - பேத்தியைப் பற்றிய கவலையில்
வெளியான புலம்பலுடனே இரவு உறக்கத்திற்குச்
சென்ற பாண்டியம்மாளை, அடுத்த நாள் காலையில்
உயிர் பிரிந்த நிலையில் தான் பார்க்க முடிந்தது!

தாய் - தகப்பனை இழந்த நிலையில், தனக்கென
இருந்த ரத்த சொந்தங்களுள் ஒன்றை இழந்த தென்றல்,
உடைந்து போனாள்!

அன்னை இறந்த போது, அவரது இழப்பை ஓரளவு
சரிகட்ட பாட்டி இருந்ததால் சீக்கிரமே தேறிவந்த தென்ற
லால், அவரையும் இழந்து நிற்கும் நிலையைப் பொறுத்
தாள முடியவில்லை!

அதை விடவும் மேலாய், ஏற்கனவே இருமல் மற்றும்
காச நோயின் விளைவாக பாதியாளாய் இளைத்திருந்த
நெட்டிரு அறுபது வருடங்களுக்கும் மேலாய், தன்
னுடன் வாழ்ந்த உற்ற துணையை இழந்ததில் மேலும்
சோர்ந்து போனது, தென்றலின் குற்ற உணர்ச்சியைப்
பெருக்கியது!



அந்தக் குற்ற உணர்வும், அதற்கு மூல காரணம் என்று அவள் கருதிய சோழனின் மேல் திரும்பியது வேறு விஷயம்!

கோபம் ஒரு புறமிருக்க, தனது முட்டாள் தனத்தினால் தன் பாட்டியை இழந்தது போல் தன் பாட்டனையும் இழந்துவிடக் கூடாது என்ற முடிவுடன், அழுது சிவந்திருந்த கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டாள், அந்த தமிழச்சி!

✹ திருச்சி ✹

விக்னேஷ் சொல்வது போல், தேவையில்லாமல் பிடிவாதம் பிடிக்கிறோமோ? ஊருக்குப் போய் வரலாமா? ஊருக்குப் போவதால் இருக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வென்று ஒன்று வராமல் மேலும் வளர்ந்தால் என்ன செய்வது? என அவன் தனக்குள்ளேயே யோசித்துக் கொண்டிருக்கும் போது, அறைக் கதவு தட்டப்பட்டது.

இயந்திரத் தனமாய் கதவைத் திறந்த கதிரின் வியப்பிற்கு வழிவகுக்கும் வண்ணம், அங்கே விக்னேஷ் நின்றிருந்தான்!

''என்னடா? வீட்டுக்குப் போகலை?''

''ம்ம். உன்னை இந்த நிலையில் விட்டுப் போக மனசு வரலை... நீயும் வீட்டுக்கு வந்து நாளாச்சே?! யோகா கிளாஸ் இருக்கும் போதாவது... அப்பப்ப வந்திட்டு இருந்தே. இப்போ, அடிக்கடி டெஹ்ராடன் போறதால, வேலையையும் விட்டாச்சு! சோ... இன்னைக்கு என்னோட வா!''

என்ன மறுத்தும் வலுக்கட்டாயமாய் இழுத்து வந்து விட்ட விக்னேஷ், தன்னால் முயன்றவரை சூழ்நிலையை இயல்பாகவே வைத்திருக்க முயன்றான்.

விடுதியிலிருந்து வீட்டிற்குச் செல்லும் வழியில் சட்டென வண்டியை நிறுத்தியவன், தலையில் ஓங்கி அடித்துக் கொள்ளவும்.

''என்னாச்சுடா? எதையாவது மறந்துட்டியா?''

''ம்ம்ம். ஆமா... ரொம்ப முக்கியமானது! ப்ச்!'' என அவன் மேலும் சோர்ந்து போக,

''ரொம்ப முக்கியமானதுன்னா... அதைப் பண்ணிட்டே வீட்டுக்குப் போகலாம்டா! மணி... ஒன்பதை கூட ஆகலையே?!''

''ப்ச்! வேணாம் மச்சி! நா யார்கிட்ட கேள்வி கேட்கணுமோ... அவங்க கண்டிப்பா தூங்கியிருப்பாங்க... பரவாயில்லை விடு... நாளைக்குப் பார்த்துக்கலாம்.''

மிகவும் சோர்ந்தவன் போல் வண்டியைச் சலிப்புடன் எடுத்த நண்பனிடம் ''அப்படி யார்கிட்டடா கேள்வி கேட்கணும்? நம்ம ஹெச்.ஓ.டி. கிட்டயா? இல்லை யாராவது ப்ரோஃபெசர் கிட்டவா? படிக்கிற காலத்தில கூட... இவ்வளவு ஆர்வமா இருந்ததில்லையேடா? இப்போ என்ன விஷயம்?'' எனத் தன் குழப்பத்தை மறையாது வெளியிட்டான், கதிர்.

சடன், பிரேக் போட்டு வண்டியை நிறுத்திய விக்கி, ''நீயெல்லாம் ஒரு பிரண்ட்டா டா... இல்லை பிரண்ட்டான்னு கேட்கிறேன்!'' என உறுத்து விழித்துட்டு...

''நம்ம ப்ரோஃபெசர்கிட்ட டவுட் கேட்கிற அளவுக்கு... நான் என்ன முட்டாளா? சை... ச்சை... என்னை என்னன்னு நினைச்சே?'' எனச் சீறினான்.



அவனது சீறலில் சிரித்த கதிர், ''சரி மாப்ள! நீ பெரிய அறிவாளிதான்! ஒத்துக்கிறேன்! உன்னோட அறிவாளித்தனமா கேள்வியை... இந்த முட்டாளுக்கும் சொல்லு!'' என்றான்.

''அதுவா? கேள்வியைக் கேட்டதும்... என்னைப் பார்த்து பொறாமையெல்லாம் படக் கூடாது சரியா?'' என்ற பீடிகையுடன்.

''நம்ம மித்து... இருக்கா இல்ல...மித்து!'' என ஆரம்பித்து. ''சரி... சரி, முறைக்காத! நம்ம மித்து இல்ல... என்னோட மித்து!'' எனத் தொடர்ந்து ''இதுக்கும் ஏன்டா முறைக்கிற? அவளே என்னோட ஃபிகர்ன்னு சொன்ன பிறகும்... இந்த முறைப்பெல்லாம் செல்லவே செல்லாது!'' என்றான் முடிவாக.

''விஷயத்துக்கு வாடா!''

''ம்ம். என்னோட மித்துகிட்ட...'' இந்த பேஷண்ட் செத்துப் போயிட்டா... டாக்டர்ஸ் எல்லாம்... கண்ணாடியைக் கழட்டிட்டு ''காட் இஸ் கிரேட்'' என்று சொல்றாங்களே?! உங்கப்பா காண்டாக்ட் லென்ஸ் தானே போட்டிருக்காரு? அவர் எந்த மாதிரியா ரியாக்ஷன் கொடுப்பார்''ன்னு கேட்க நினைச்சேன்! மறந்தே போயிட்டேன்! ரெண்டு நாளா... ஒரே மண்டைக் குடைச்சலா இருக்கு...''

''டேய்! உன்னை!'' என ரோட்டிலேயே கட்டிப் புரண்ட நண்பர்கள் இருவரும், ஒருவாறாக பதினோரு மணிக்கு வீடு வந்து சேர்ந்தனர்!

மகனின் வருகைக்காக காத்திருந்த பிரபாவதி, மகனுடன் வந்த கதிரைப் பார்த்ததும், வாயிலுக்கு ஓடி வந்தார்!

''அடேங்கப்பா! கதிர் சாரா? இந்தம்மாவைப் பார்க்க வந்துட்டாரா? என்ன அதிசயம் இது?!'' என அவர் கண் சிமிட்டிச் சிரிக்கவும்.

''கதிர் சாரே தான்! அவர் வாசிச்ச முகாரி ராகத்தில, ஹாஸ்டலுக்குள்ள கழுதைகள் வரும் அபாயம் இருக்குன்னு அறிவிப்பு வந்ததாலா... நான் தான் கூட்டிட்டு வந்தேன்!'' என்றான் மகன்.

''ஏற்கனவே அங்கிருந்த கழுதைகளை மேச்சு நொந்து போயிருப்பாரா இருக்கும்! புதுசா இன்னும் பத்தான்னு பயந்து போய்... அறிவிப்பு விட்டுட்டார்.''

பிரபாவதியின் கேலியில் ''அம்மா!'' எனச் செல்லமாய் அழைத்தான், கதிர்!

''இது அடுத்த அதிசயம்!'' என அவனது தோளில் அடித்தவர், இருவரையும் உள்ளே அழைத்துச் சென்றார்.

''யோகா கிளாஸ் வேலையை விட்டதும்தான்... வீட்டுக்கு வந்திருக்கே! அப்படித் தானே?'' என அவர் ஊடுருவ,

''ம்ம்... அது... அது... அப்படியில்லைம்மா... அப்போ வந்தா... தேவையில்லாம எதாவது பிரச்னை...'' என இழுத்தான், இளையவன்.

''என்ன பிரச்னை? உனக்கு ஒரு நல்லது சொல்லிக் கொடுத்தா... அதுக்குப் பேரு... பிரச்னை பண்றதா?''

''அதை... நீங்க சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் எதனால வந்தது? நான் அதிகமா உரிமை எடுத்துக்கிட்டதால தானே? அதைத் தான் சொல்றேன்...''

அப்போதும் பிரபாவதியின் முகத்தில் தெளிவு வராது போலிருக்க, ''அம்மா! இங்க தொடர்ந்து வந்திட்டே



இருந்திருந்தா... காலப் போக்கில, உங்களோட அந்தக் கண்டிப்பை நீங்க காட்டுற பாசம் மறக்கடிச்சிருக்கும்... அந்தத் தைரியத்தில, நான் இன்னொரு தப்பும் செய்திருக்க வாய்ப்பிருக்கு! அது தேவையில்லாத ஒரு மனவேதனை தானே? முன் யோசனையா... அதைத் தவிர்க்க நினைச்சேன், அவ்வளவு தான்!'' என்றான் கதிர், தன் பக்க விளக்கமாய்.

''பெரிய முன் ஜாக்கிரதை முனுசாமி! போடா! பழுத்தக் கிழவன்... மாதிரி பேசறான்!'' என நொடித்துக் கொண்டாலும், பிரபாவதியால் கோபத்தைப் பிடித்து வைக்க முடியவில்லை.

ஏனென்றால், அவனது தன்மானம் அவருக்குப் பிடித்திருந்தது!

இந்தச் சிறு வயதில் என்ன ஒரு சுயகௌரவம்?

தான் செய்தது தப்பு என்று உணர்ந்த நிலையில், அதை மீண்டும் செய்யக் கூடாது என்று என்ன ஒரு உறுதி?

அவனது தன்மானம் பற்றி அறிந்திருந்தமையால் - யோகா வகுப்பாசிரியராய் தன்னிடம் பணியாற்றிய வரை, அவன் தங்கள் வீட்டிற்கு வரமாட்டான் என்ற அவரது கணிப்பு உறுதியானதில் சிறு வியப்பும், சந்தோஷமாய் பையன்களை உபசரிக்கத் துவங்கினார்.

அப்போதும் ''ஏற்கனவே ஒரு மொக்கைப் படத்தைத் தான் பார்த்திட்டு வந்திருக்கோம்... நீங்க ரெண்டு பேரும் வேற... பாசத்தைப் பொழிஞ்சு, அதுக்கும் மேல மொக்கை போடறீங்களே? டூ மச்!'' என விக்னேஷ்,

தார்க்குச்சிப் போட்டப் பிறகு தான் உணவுண்ணும் படலம் அரங்கேறியது!

யோகா வகுப்புகளில் பார்க்க நேரிடும் போது ''அம்மா'' என்று அழைப்பு கதிரிடமிருந்து வரும் தான் என்றபோதிலும், இப்போதிருக்கும் நெருக்கம் அதிலில்லாது போனது, பிரபாவதிக்குப் புரிந்தது!

செயல் மட்டுமல்லாது முகத்திலும், குரலிலும் கூட ஒதுக்கத்தை வரவழைத்திருக்கிறானே? ரோஷக்காரன் தான்!

ஆனால், அந்த ரோஷத்தின் விளைவாக அவரிடம் பேசாமலே இருக்காமல், தப்பு செய்யத் தூண்டும் சந்திப்புக்களை வேலையை விட்டப் பிறகும் அவன் தொடரவில்லையே! பாசக்காரன் தான்!

ஹ்ம்ம்! ரோஷமும் பாசமும் ஒருங்கே நிரம்பிய கௌரவன்!

அவரது எண்ண ஓட்டங்களைப் பற்றி அறியாமல், அன்றைக்கு மித்ராவுடன் தான் ஆடிய ''காதல்'' நாடகத்தைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தான், விக்னேஷ்!

''இன்னைக்குத் தான்மா... கூகிள்-ல'' காதல் கடிதம் எப்படி எழுதுவது'' ன்னு தேடலாம்ன்னு இருந்தேன்! அதுக்குள்ளே, இந்த மித்துவே ''நான் உன்னோட ஃபிகர்''ன்னு திருச்சிக்கே சொல்லிட்டா!''

''ஒரு பெரிய வேலை மிச்சம்!'' என்ற மகனின் முதுகில் ஓரடி வைத்த பிரபாவதி, ''அவளை ரொம்பவும் கிண்டல் பண்ணாதே, விக்கி! மித்ரா ஏற்கனவே ரொம்ப சென்சிடிவ்...'' என்றதோடு முடித்துக் கொண்டார்.



''கிண்டலா? என்னம்மா நீங்க? இலை மறை காயா... என்னோட காதலைச் சொல்றேன்... அதைக் கூடப் புரிஞ்சுக்கத் தெரியாம?'' காய் வேணும்னா கேட்டு வாங்கிச் சாப்பிடு! எதுக்கு... இப்படி சுத்தி வளைக்கிற?'' என்ற தாயின் கிண்டலில், இரு பையன்களும் சிரிக்க,

''அம்மா, எனக்கு என்னவோ... உங்ககிட்ட விஷயத்தை நேரா சொல்ல வெட்கப் பட்டுக்கிட்டு, சுத்தி வளைக்கிறான்னு தோணுது! நிஜமாவே... விக்கிணுக்கு மித்ரா மேல ஒரு கண்ணு! இப்பன்னு இல்லை... அவ ஃபிரஸ்ட் இயர்-ல இருந்தே!''

''ஹ்ம்ம். அப்படிங்கற? எனக்கு என்னவோ... நாய்க்குப் பயப்படுற பையன்... பேய்கிட்ட மாட்ட மாட்டான்னு தோணுது!'' - கதிரின் பேச்சிற்கு எதிர்ப் பேச்சுப் பேசிய பிரபாவதி, கன்னத்தில் ஓர் விரலைத் தட்டி யோசித்தார்.

''பேயா?'' என்ற கதிருக்குச் சிரிப்பை அடக்க முடியாமல் போக, ''அம்மா... இது டூ மச்!'' என்ற விக்னேஷும் சிரிக்கவே செய்தான்.

''டேய் டேய்! அவகிட்டப் போய்... போட்டுக் கொடுத்துடாதீங்கடா... ஒரு ரைமிங்-காக சொன்னேன்!'' என்ற பிரபாவதிக்குத், தன் மகனை அவள் ''விக்கி - பக்கி'' என்று சொன்னதற்குப் பழி தீர்த்துக் கொண்ட திருப்தி!

''ஹை! இது நல்லா இருக்கே?! உங்களோட வாலுத்தனத்தை அரங்கேற்றாம தூங்க மாட்டான், இந்தத் தானைத் தலைவன்!''

''பெரிய இவன்... போய்ச் சொல்லிக்கோ! எனக்கென்ன? அப்படியே அவ வந்து கேட்டாலும்... விக்கி

தான் மா உன்னை ''ராட்சசி!, ரத்தக் காட்டேரி!'' ன்னு சொன்னான்... அவன் சொன்னதுக்கு எதிர்ப்பேச்சுப் பேசி, ஒரு மாதிரி ''பேய்''க்குக் கொண்டு வந்தேன்! கொஞ்சம் விட்டிருந்தா... ''பூ'' விற்குக் கொண்டு வந்திருப்பேன்... அதுக்குள்ளே... உன்கிட்டப் போட்டுக் கொடுத்துட்டான்னு சொல்லிடுவேன்! மித்ரா... உன்னை நம்புறதை விட என்னைத்தான் நம்புவா!''

''ஓவர் கான்பிடன்ஸ் உடம்புக்கு ஆகாது... பிரபாவதி!'' என ரஜினி பாணியில் எச்சரித்த விக்னேஷ், தட்டில் தடவ, அங்கே தோசைக்குப் பதிலாய் வெள்ளித் தட்டுப் பல்லை இளித்தது.

''அம்மா... ஒரு தோசை, ப்ளீஸ்! சீக்கிரம்!'' என அவன் அவசரப்படுத்த,

''தோசை என்ன... இட்லி மாதிரி பன்னியா? கூட்டமா வரதுக்கு? அது சிங்கம்டா... சிங்களா தான் வரும்! வெயிட் பண்ணிச் சாப்பிடு!''- நண்பன் மற்றும் அவனது தாயுடன் உரையாடியதால் உண்டான சந்தோஷத்தில், கதிர் பேசிவிட, வெடித்துக் கிளம்பிய சிரிப்பில் வீடே கிணுகிணுத்தது!

''ஹே, கதிரா இது? கிட்டத்தட்ட ரெண்டு / மூணு மாசமா... தேவதாஸ் மாதிரி இருந்தான்மா! என்னை மாதிரி அடிக்கடி மொக்கை போடலைன்னாலும், அப்பப்போ எல்லோரையும் கலாய்ச்சிட்டு இருப்பான்... இப்போ அதெல்லாம் காணாமல் போய்டுச்சேன்னு கவலைப்பட்டுட்டு இருந்தேன்! ஹே சூப்பர் கதிர்!'' என உண்மையான சந்தோசம் வெளிப்பட, குதூகலித்தான் நண்பன்!



மகனின் குதூகலத்திற்கு மாறாக ''என்னாச்சு கண்ணா?'' என வாஞ்சையாக, அவனின் தலை தடவினார் பிரபாவதி!

''அதும்மா... அது... அது வந்து!'' என அவன் தடுமாற, நண்பனின் திணறலை ரசித்துக் கொண்டே, விஷயத்தைப் போட்டு உடைத்துவிட்டான் விக்னேஷ்!

ஐந்தே நிமிடத்தில் கதிரின் உள் விவகாரம் அரங்கிலேற ''ஹே!'' எனக் குதூகலிப்பது, பிரபாவதியின் முறையானது!

''சரியான அமுக்குணிடா... நீ!? இத்தனை வருஷமா... ஒரு வார்த்தை... வார்த்தை என்ன வார்த்தை... ஒரு பார்வையில கூட, உன்னோட காதலைப் பத்திச் சொல்லவே இல்லை, பாரேன்! அழுத்தத்திலும் அழுத்தம்!''

''ஆனாலும், இப்போ நீ செய்திட்டு இருக்கிறது தப்பு, கதிர்!''

''ரோஷம் இருக்க வேண்டியதுதான், அதுக்காக இப்படியா? நீ ஊருக்குப் போகாம இருக்கிறது தப்பு, ராஜா! அந்தப் பொண்ணு மனசு... எவ்வளவு கஷ்டப் படும்!? நீ அவளைப் புறக்கணிச்சதா நினைச்சிட்டு இருக்கவளோட கோபத்துக்கு... இன்னமும் உரம் போடற மாதிரி நடந்துக்குறது நல்லது இல்லை, கதிர்!''

''இரண்டு பெரியவங்க வேற இருக்காங்கன்னு சொல்றே? அவங்க மனசைக் கஷ்டப்படுத்தலாமா? போய்... ஒரு எட்டுப் பார்த்திட்டு வாப்பா'' என்ற பிரபாவதியின் அறிவுரைகள் அனைத்திற்கும், ''ம்ம்'' என்பதைத் தவிர வேறெதையும் உதிர்க்காத கதிர், சில

வருடங்கள் கழித்து ''ஹய்யோ, அம்மா சொன்னப்போதே... ஊருக்குப் போயிருக்கணுமோ? தப்பு பண்ணிட்டேனே!'' என்ற வருத்தத்திற்கு ஆளாகப் போவது விதி என் கையில், விதியை மதியால் வெல்லும் உத்தி அவனுக்கு இல்லாது போனதும் - அதன் விளைவாய் இப்போது அவனது பயணம் நடக்காமலிருப்பதும் விதி அல்லவோ!

''அம்மா... அவனையெல்லாம் திருத்தவே முடியாதும்மா! தேவையில்லாம, உங்களோட எனெர்ஜியை வேஸ்ட் பண்ணாதீங்க!'' என்ற விக்னேஷிடம்,

''அது இல்லைடா... அடுத்த முறை பார்க்கும் போது கண்டிப்பா கல்யாணம் என்கிற மாதிரி சொல்லிட்டு... இப்போ போறது ஏமாத்துற மாதிரி தானே டா! ஏற்கனவே என்னை ஏமாற்றுக்காரனா தான் பார்க்கிறா... இனி ஒரு தடவை...'' எனப் பதில் கூறிய கதிருக்கு, குரலே எழும்பவில்லை.

''அதான் சொல்லிட்டேனே?! உன்னைத் திருத்தவே முடியாது... விடு!'' என்ற மகனின் குரலில் அடக்கப்பட்ட கோபமிருப்பதைக் கண்ட அன்னைக்கு, லேசாய் மனம் துணுக்குற்றது.

மூன்று வருடங்கள் முன்னர் நடந்த ஒரு சிறு விரிசலைத் தற்போது தான் சரி செய்திருக்கும் கதிரிடம், மீண்டுமோர் வாக்குவாதத்தை நடத்தி, அவனை மேலும் மேலும் காயப்படுத்தி விடுவானோ என்று பயந்து போனார், அந்த அன்னை!

கதிரின் நட்பில் ஏற்பட்ட விரிசல் மகனின் மனதை ந்தளவு பாதித்தது என்பதை அறிந்தவர் ஆயிற்றே!''



கதிர் என் கூடப் பேச மாட்டேங்கிறான்மா! எல்லாத்துக்கும் நீங்க தான் காரணம்!'' எனச் சிறுப் பிள்ளை போல், தன்னைக் குறை கூறியபோதும், கதிரின் நட்பில் ஏற்பட்ட சிறு சுணக்கமே மகனின் பல நாள் வாட்டத்திற்குக் காரணம் என்பதைப் புரிந்து வைத்திருந்த தாய்க்கு, இருவருக்குள்ளும் இப்போது நிகழும் நல்லிணக்கம் குலைந்து விடுமோ என்ற பயம் தொற்றிக் கொண்டது!

அதன் விளைவாக, மகனின் அதிகமான அறிவுரையை / கோபத்தை முளையிலேயே கிள்ள எண்ணினார்! ஆனால், அவரது மகனின் மனதை மட்டும் பார்த்து எழுந்த அந்த எண்ணம், ஓர் பெண்ணின் வாழ்வை சூன்யமாக்கப் போவதை அவர் அறிந்தாரில்லை!

சூழ்நிலையில் ஏற்பட்டிருந்த சூட்டைத் தணிக்கும் நோக்கத்தில் ''இன்னைக்கு... நெட்-ல ஒரு ஆராய்ச்சியைப் பத்திப் படிச்சேன்டா, பசங்களா!'' எனப் பீடிகை போட்டு, இருவரது கவனத்தையும் தன் புறம் திருப்பினார்.

''அதாவது, 60% பொண்ணுங்களோட பேர் ''A''-ல முடியுமாம்... 25% பொண்ணுங்களோட பேர் ''L''-ல முடியுமாம்... மீதி 15% தான் வேற எழுத்தில முடியுமாம்...''

''நானும் காலையில இருந்து யோசிச்சிட்டே இருக்கேன்... எனக்குத் தெரிஞ்ச எல்லா பேருமே ''A'' இல்லைன்னா ''L''-ல தான் முடியுது! ஒருத்தர் பேர் கூட... வேற எழுத்தில முடியவே இல்லை!''

''நைட் தூங்குறதுக்குள்ள ஒரு பேராவது கண்டுபிடிச்சுடணும்ன்னு நினைச்சிட்டே இருந்தேன்! கண்டு

பிடிச்சுட்டேன்!'' என்றாள் சிறு குழந்தையின் [illegible]
டுடன்.

''என்மா... இப்படி சம்பந்தா சம்பந்தமில்லாம [illegible]
நீங்க?!'' என்ற விக்னேஷின் முறைப்பிற்கு,

''சம்பந்தத்தோட தான்டா பேசுறாங்க! உன் [illegible]
யோட பேரைப் பத்தி சொல்றாங்க!'' என்றான் கதி[illegible]
சிரிப்புடன்.

''ஹோ... ஹோ... காட் இட்!'' எனக் கூவிய வி[illegible]
னேஷ், எங்கிருந்து எங்க தாவிட்டீங்க! சரியான... [illegible]
என் வாயால சொல்லமாட்டேன்பா...'' என்றான் சி[illegible]
புடன்.

''சொன்னாத் தான்... நீயும் குரங்கு ஆகிடுவியே!''
என்ற பிரபாவதியின் கால் வாருடன் இரவு உணவு
இனிதே முடிந்தது!

உணவு முடிந்து, நண்பர்கள் இருவருமாய் படுக்கை
யறைக்குள் நுழைந்த போது மணி நள்ளிரவை வெகு
வாய் தாண்டியிருக்க, இருவருமாய் படுக்கையில் விழுந்
தனர்.

அன்றைய தினத்தின் முதல் நினைவாய் தோன்றிய
மன அழுத்தம் கதிரின் நெஞ்சைப் பிசையத் தொடங்கிய
வேளையில் ''டேய் கதிர்! இன்னைக்கு மித்து...'' எனத்
தொடங்கி, ஏதோ பேசத் துவங்கினான் விக்னேஷ்!

நண்பனின் பேச்சை அரை மணி நேரத்திற்கும்
மேலாய் கேட்டிருந்த கதிரின் மனதில் ''மித்ராவின்
துடுக்குத் தனமான பேச்சும்... விக்னேஷின் விளை
யாட்டுத் தனமான பேச்சும் ஒன்றுக்கு ஒன்று எதிர்
மறையானது என்றாலும், ஒன்றை ஒன்று கண்டிப்பாக



க்கும்! இருவரும் வாழ்வில் இணைந்தால் வாழ்வு
சுவாரஸ்யமாய் கழியும்!'' என்றெண்ணினான்.

ஆனால், நடந்ததோ!?



# 16

ஆறு மாதங்களுக்குப் பின்னர்...

* வெள்ளகவி... *

பரீண்டியம்மாளின் மறைவிற்குப் பின்னர் நெட்டுரு
வின் உடல்நிலை மிகுந்த சிதைவுக்கு உள்ளாக, அவரது
மருத்துவத்திற்குச் செலவான பணத்தைச் சம்பாதிக்க,
தென்றல் மீண்டும் வேலைக்குச் செல்ல வேண்டியதாய்
இருந்தது!

அவர்கள் இருவருக்கும், தோட்டத்தில் விளையும்
காய் - கனிகளை விற்று வரும் பணமே போதுமானது
என்ற போதிலும், சோழனும் இல்லாமல் பாட்டியும்
இல்லாமல் தென்றலால் ஒற்றை ஆளாய் தோட்டத்தில்
வேலை செய்ய முடியவில்லை.

மண்ணைக் கொத்தி விதை விதைத்து, இதம் பதமாய்
அதற்கு நீர் ஊற்றி, பூச்சி அரிக்கையில் உரமிட்டு, இடும்
உரத்தைத் திருடி உண்ணும் களைகளை ஆதாரத்துடன்
களைந்து, விளைந்த பதம் பார்த்து காய்களை அறுவடை
செய்து, தலை சுமையாய் கோடைக்கு எடுத்துச் சென்று
விற்கும் திராணி தென்றலுக்கு இருக்கவில்லை!

உழைப்பிற்கு அஞ்சாதவள் என்ற போதிலும், இரண்டு பேர் பார்த்த வேலையை ஒருவரே பார்ப்பது என்பது கடினமாய் இருந்தது!

வேலைக்கு ஓர் கூலி ஆளைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றால் வரும் வருமானத்தில் பாதியை அவருக்குக் கூலியாய் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் உண்டானது!

கழுத்தை நெறித்தப் பணத்தேவை - இனி வர மாட்டேன் என்று சொல்லிவிட்டு வந்த ரோஜா தோட்டத்திற்கே மறுபடியும் கழுத்தைப் பிடித்துத் தள்ளியதில், மனம் நொந்திருந்த தென்றலை மென்மேலும் கூனிக் குறுக வைக்கவென சுகுணா வார்த்தையால் சுட்டுக் கொண்டிருந்தாள்!

அவளது சுடு தணல் வார்த்தைகளில் வெந்து கொண்டிருந்த ஓர் இனிய (!) காலை வேளையில், ''கதிர் என்பவருடைய அத்தை மகளைப் பார்க்க வேண்டும்!'' என்ற சொல்லுடன், ஓர் தம்பதியர் வந்து நின்றனர்.

தென்றலிடமிருந்த தனது கவனத்தை வந்தவர்களிடம் திருப்பிய சுகுணா, ''கதிரா?''

''ஹே காசி! நம்ம ஊர்-ல கதிர்ன்னு யாராவது இருக்காங்க?''

''கதிருக்கு முறைப் பொண்ணாம்-ல அப்படி எவளாவது இங்க இருக்கீங்களா?'' என்று உரக்கக் கூவினாள்.

ஐந்து நிமிடங்களுக்கு மேலான பின்னரும், பதிலேதும் இல்லாமல் போக ''அப்படி யாரும் இங்க இல்லையே?'' என அவள் திருப்பவும்.

''திருச்சி-ல என்.ஐ.ஐ.டி-ல படிக்கிறார். பி.இ முடிச்சிட்டு.. இப்போ எம்.டெக் பண்ணிட்டு இருக்கார்.



அவரோட ஊர் இது தான்னு சொன்னாங்க. அவரோட அத்தை மகள்... முன்னாடி இங்க வேலை பார்த்தாங்களாம்! பேரு... பேரு... சரியா தெரியல'' என முழு விவரம் கூறியவர் மகாராணி! ஆம், மித்ராவின் அன்னை!

''திருச்சி-ல பெரிய படிப்பு படிக்கிறவன்... சோழன் பய மட்டும் தான்! கதிர் இல்லையே? இந்த ஊரு தானே?''

''ராணி... கதிரோட முழு பேர் கூட... அன்னைக்குப் பேசிட்டு இருக்கும் போது... அவனோட முழு பேருன்னு விக்னேஷ் ஏதோ சொன்னானே... சென்..'' என சிவசுப்ரமணியம் இழுக்க,

''செங்கதிர்சோழன்!'' என்ற மகாராணியின் அறிவிப்பில்,

''அந்தப் பட்டத்து ராசனுக்கு... ஊருக்கு ஒரு பேரா? விளங்கிடும்!''

''சோழன்-ங்கிற பேரு... ஊர் நாட்டான் தனமா இருக்குப் போல... அதான் சாரு மாத்திக்கிட்டாரு போல!'' என நொடித்தாள், சுகுணா.

''சோழன்'' என்ற பெயரில் உடம்பில் ரத்தமெல்லாம் முகத்திற்குப் பாய, அவன் மேலிருந்த கோபமெல்லாம் மறைந்து, அவனுக்கு ஏதும் ஆபத்தோ என்ற பதட்டத்தில் முன்னே ஓடி வந்தாள், தென்றல்.

''நாந் தேன்... அவரோட... முறைப்... ம்ம் அயித்தை மக! மாமாவுக்கு ஒண்ணும்மில்லையே?'' என அவள் பதற,

''அவருக்கு ஒண்ணுமில்லை!'' என மகாராணி பதில் கொடுக்க, ''அவனால தான் பலருக்குப் பிரச்னை!'' என முணுமுணுத்தார் சிவசுப்ரமணியம்.

இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த தென்றலிடம், ''உன்கிட்ட கொஞ்சம் பேசணும்! வா!'' என்றார் சிவசுப்ரமணியம் ஆணையிடும் குரலில்.

''என்கிட்டக்கவா? என்ன பேசணும்?'' என அவள் விழிக்க, ''அட வாம்மா! உன்கிட்டப் பேசுறதுக்கு அப்பாயின்ட்மென்ட் வாங்கிட்டு வரணுமா?'' என்றார் அவர். தூக்கி எறிதல் முழுதாய் தோன்றிய முகத்துடன்.

அவரது குரலிலிருந்த அலட்சியம் தயங்க வைத்தப் போதும், ''ஏய், என்ன வாயைப் பாத்துக்கிட்டு இருக்கே? பெரியவங்க வந்து கூப்பிடையில இப்படித்தேன்... முழிப்பியோ? போ... போய் பேசிட்டு வா!'' என அனுப்பி வைத்தாள் சுகுணா, வந்திருந்தவர்களின் ஆடை - அணிகலன்கள் மட்டுமல்லாது அவர்களது பென்ஸ் காரிலும் அசந்து போய்!

''வீட்டுக்கு வாரீகளா? எங்க அய்யாவும் இருக்காரு...'' எனத் தென்றல் இழுக்க, ''அதுவும் சரி தான்... எல்லாத்தையும் ஒரே வேலையா முடிச்சிட்டுப் போய்டலாம்... பேத்திகிட்ட சம்மதம் வாங்க ஒரு தடவை... பாட்டன்கிட்ட சம்மதம் வாங்க ஒரு தடவைன்னு அலைய வேண்டாம்-ல!'' எனப் பூடகமாக பேசியபடி, உடன் நடந்தனர் தம்பதியர்.

அவர்களது காரின் அருகே தென்றல் தயங்கி நிற்க, ''ஏறும்மா'' என்ற மகாராணியைத் தடுத்து, ''உன் வீடு எங்க இருக்குன்னு சொல்லு! நாங்க வந்துடுறோம்! நீ நடந்து வா...'' என்றார் சிவசுப்ரமணியம்.



''சொகுசு பயணத்திற்கு அலைகிறாள்'' எனச் சொல்லாமல் சொன்ன அவரது பார்வையில் கூனிக் குறுகிப் போனவள், தரையைப் பார்த்துக் கொண்டே வழி சொல்லிவிட்டு, வேகமாய் முன்னே நடந்தாள்!

''என்னத்தா?! வெருசா வந்துட்டே?'' என்ற நெட்டிருவிடம்.

''மாமாவுக்குத் தெரிஞ்சவங்க ரெண்டு பேரு வந்திருக்காக... அவுகளைக் கூட்டியாந்திருக்கேன்'' என்ற போது, அந்த இருவருமே வீட்டினுள் நுழைந்தனர்.

இருமலினூடே எழுந்த நெட்டிருவின் வரவேற்பை வேண்டா வெறுப்பாக பெற்றுக் கொண்ட மருத்துவத் தம்பதிகள், உட்காருவதற்கென தென்றல் காட்டிய கயிற்றுக் கட்டிலை மறுத்தவர்களிடம்.

''எங்க ராசா நல்லா இருக்காருங்களா? அவரைப் பார்த்தீகன்னா... இந்தப் புள்ள... தவிச்சுக் கிடக்கிறதை சொல்லுங்கய்யா! உங்களப் போல பெரிய மனுசங்க சொல்லையாவது கேட்குதாரா பாப்போம்!'' என்றார் நெட்டிரு. அவருக்கு அவர் கவலை!

''அய்யா... சும்மா இரு...'' என்ற தென்றலின் அதட்டலுக்கு ஏற்ப, வந்திருந்தவர்களின் முகம் இரண்டும் கடினமானது.

''பெரியவரே! நாங்க ரெண்டு பெரும் திருச்சி-ல டாக்டர்-ரா இருக்கோம்! ஒரு பொண்ணு - பேர் மித்ரா. ஒரு பையன்!''

''திருச்சி-லேயே இரண்டு பங்களா! கொடைக்கானல்-ல ஒரு எஸ்டேட்... தோட்டம்... தொறவு... இடம்... நிலம்ன்னு ஏகப்பட்டச் சொத்திருக்கு!''

''இது எல்லாத்துக்கும் ஏக போக வாரிசு யாரு தெரியுமா? எங்க ரெண்டு பசங்க தான்!''

சிவசுப்ரமணியத்தின் பேச்சில் வீசிய பணக்கார வாடை குமட்டிக் கொண்டு வர...

''பணமிருந்தா... அது உங்க மட்டுக்கும்! அதுக்கு இப்படி அலும்புரீக?'' என்றாள் தென்றல் எரிச்சலுடன்.

''ஏய், பொண்ணு! மரியாதையா பேசு! எங்களுக்கு ஒண்ணும்... இந்தக் குடிசையில வந்து நின்னுக்கிட்டு... உன்கிட்டப் பேசணும்ன்னு அவசியமில்லை... எங்க பொண்ணு பண்ணி வச்சிருக்கக் காரியம் அப்படி... அதனால தான் நிறுத்தி நிதானமா பேசிட்டு இருக்கேன்!'' என சிவசுப்ரமணியம் கத்த,

''ப்ளீஸ்! கொஞ்சம் அமைதியா இருங்க சிவா! நான் பேசுறேன்!'' என்று கணவனை அமைதிப்படுத்திய மகாராணி, தென்றலின் தலையில் பேரிடி ஒன்றை இறக்கினார்!

''எங்க பொண்ணு மித்ராவும்... கதிரும் ஒரே கிளாஸ்-ல படிச்சவங்க!''

''காலேஜ் முடிக்கிற வரைக்கும் இல்லாத காதல்... காலேஜ் முடிச்சதும் விஸ்வரூபமா முளைச்சிடுச்சு!''

''யாருக்கு'' என்ற விவரம் சொல்லாமல், வெறுமே காதல் என்று அவர் மொழிந்தது கேட்டிருந்த இருவரையும் அதிகமாகவே தாக்கியது எனலாம்!

அதிர்ந்த இரு உள்ளங்களின் குமுறல் வெளியேறும் முன்னர், மகாராணியே பேசத் துவங்கினார்.



''ரெண்டு பேருக்கும் கல்யாணம் செய்யலாம்ன்னு பேசிய போது... உன் பேரு அடிபட்டுச்சு... கதிர் உன்னை நினைச்சு...வே..'' என்றவரை இடைமறித்து,

''கதிருக்கும் மித்ரா மேல இஷ்டம் தான்... ஆனா உன்னை நினைச்சு கொஞ்சம் தயங்கினான்... நீ எதுவும் பிரச்சனை பண்ணுவியோன்னு பயப்படறான் போல... எங்களுக்கும் அந்தப் பயம் தான்... ஒரே பொண்ணோட வாழ்க்கை பாருங்க.... அவனோட தயக்கத்தை மதிச்சு... உன்கிட்டப் பேச வந்திருக்கோம்!'' எனக் கோர்வையாய் பேசி முடித்தார் சிவசுப்ரமணியம்.

மகாராணியின் அதிர்ந்த முகத்தையோ, அவரது பேச்சு இடைவெட்டப் பட்டதையோ கவனிக்கும் மனநிலையில் இல்லாமல், தென்றலும் சரி நெட்டிருவும் சரி பலமாக அதிர்ந்து போயிருந்தனர்.

''கல்யாணத்தைத் தள்ளிப் போடலாம்'' என்ற சோழனின் வார்த்தைகளுக்கே நிலை குலைந்து போயிருந்த அந்தக் குடும்பம், ''வேறோர் பெண்ணிற்கும் அவனுக்கும் காதல்... தொடர்ந்து திருமணம்'' என்பதில் சுக்கு நூறாய் சிதறியது!

''இந்தக் கொடுமைக்குத்தான் கலியாணத்தைத் தள்ளிப் போட்டானா... படு பாவி! எம் பேத்தி வாழ்க்கையைச் சீரழுச்சுப் புட்டானே?! அவன் நல்லா இருப்பானா? பட்டுக் கிடப்பான்... பாடையில போவான்...'' எனக் கிராமத்து மனிதனுக்கே உரிய கோபத்துடன் சீறினார் நெட்டிரு.

''அய்யா'' என அவரிடம் பாய்ந்த தென்றல், பசியாறும் கன்றாய் தன் வேதனையைப் போக்கும் வழி தேடி [illegible]ர் தோள் சாய்ந்தாள்.

''இந்தப் புள்ளகிட்ட என்னய்யா கொற? அவனுக்காக உசிரைக் கூடக் கொடுக்குமய்யா!''

தெட்டிருவின் புலம்பலைக் கேட்கும் அளவிற்கு, வந்திருந்த இரு பெருந்தகைகளுக்கும் பொறுமையில்லாமல் போக, ''யாருக்கும் கிடைக்காத ஒரு அரிய வாழ்க்கை அவனுக்குக் கிடைச்சிருக்கு! சும்மா... நன்றி கடன்... அம்மாவுக்குக் கொடுத்த வாக்குன்னு அவனைக் கட்டிப் போடாதீங்க!'' என முடித்தார் அந்த மருத்துவர்.

அவரது பேச்சில் அடங்கியிருந்த கோபம் பன்மடங்காய் பெருக, ''இதைச் சொல்லி... இருக்க ரெண்டு உசிரையும் எடுக்கத்தேன் வந்தீகளா?'' எனச் சீறி விழுந்தாள், இளையவள்.

''ரொம்பப் பேசாதேமா! நாங்க... உயிரைக் காப்பாத்துற கடவுள்!'' எனப் பெருமிதத்தில் பூரித்தவர்,

''என் பொண்ணோட ஆசைக்காக இங்க பேச வந்திருக்கேன்! உன்னோட நினைப்பு... கதிரை என் பொண்ணோட நல்லபடியா வாழவிடாது! அதனால, அவன் கிட்டப் பேசி... மித்ராவைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லு! உனக்கு... எவ்வளவு பணம் வேணுமோ நான் தரேன்'' என்றாரே பார்க்கலாம்! தென்றல் பொங்கிவிட்டாள்!

''யோவ், டாக்டரு! ஏதோ பெரிய மனுசனாச்சேன்னு மொகம் கொடுத்துப் பேசிக்கிட்டு இருந்தேன்... என்னைய என்னன்னு நினைச்சே? பணத்துக்குச் சோடை போற... பட்டணத்து மனுசின்னா... நீ சொல்றீயே கதிருன்னு... அந்த மனுஷன் வேணும்னா உன் பணத்



தைப் பார்த்துப் பல் இளிப்பான்... நா மாட்டேன்! நருவிசா மாட்டேன்! தெரிஞ்சுக்கோ!''

கேட்டிருந்த இருவரது முகமும் வெளிறியிருக்க, தென்றல் மேலும் பேசினாள்.

''போ... போய்... உம் பொண்ணுக்கும்.. ஊருக்கு ஒரு வேஷம் போடற கதிரோ... சோழனோ அவனுக்கும் கலியாணத்தைப் பண்ணிவச்சு... அவங்களைப் பணத்திலேயே பொரட்டு... அதையே திங்கவும் சொல்லுய்யா... போ... போ... வெளிய போ!'' என வெறிக் கொண்டவள் போல், அவள் முழங்கியதில் சிவசுப்ரமணியமும், மகாராணியும் வினாடியில் வெளியேறி இருந்தனர்.

வண்டியை எடுத்துக் கொண்டு. ஐந்து நிமிடத் தூரத்தைக் கடந்த பின்னர் ''என்னையே... அவன் இவன்னு பேசுறாளா? அவளை என்ன செய்றேன்... பாரு?! போகும் போது... ஒரு போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுத்திட்டுப் போகலாம்'' எனப் பல்லைக் கடித்தார், மருத்துவர்.

ஆனால், கடமை மனைவியாய் அவருக்கு ஒத்து ஊதாமல் ''என்னன்னு கம்ப்ளைன்ட் பண்ணுவீங்க? கண்ட கண்ட படத்தைப் பார்த்ததும், கழிசடையான பிரண்ட்சோட சேர்ந்தும் என் பொண்ணு மனசில ஒருத்தனை நினைச்சிட்டு இருக்கா... ஆனா, அவன் முகத்தில அடிச்ச மாதிரி ''என் முறைப் பெண்ணைத் தான் கல்யாணம் செய்துப்பேன்'' ன்னு சொல்லிட்டான். அது பொறுக்காம... அந்த முறைப் பெண்ணைப் போய் மிரட்டினோம்... அதுவும் சும்மா இல்லை... அவனுக்கு எங்க பொண்ணு மேல இஷ்டமிருக்க மாதிரி ஜோடனை

செஞ்சு பேசினோம்... அவ எங்களைத் துரத்திட்டான்னா?'' என்றார் கடும் கோபத்துடன்.

''நீங்க இப்படி நடந்துப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை, சிவா! அந்தப் பொண்ணைப் பார்த்தா எனக்கே பொறுக்கலை... கண்ணில அப்படியொரு வலி! மேலும் மேலும் பலமா அடிச்சிட்டு வந்திருக்கீங்க!''

ஆற்றாமையுடன் புலம்பியவரின் முன்னே மெதுவாக தலை குனிந்த சிவசுப்ரமணியம் சட்டென நிமிர்ந்தார்.

''அந்தப் பொண்ணைப் பத்தி இவ்வளவு 'கவலைப் படரவ, அங்கேயே உண்மையைச் சொல்லியிருக்க வேண்டியது தானே? அந்தப் பொண்ணை விட... உன் பொண்ணோட பிடிவாதம் தானே உன்னோட வாயை அடைச்சு வச்சிருந்தது?'' என்றவரின் முன் தலை குனிவது, மகாராணியின் முறையானது.

''மித்துக்குட்டிக்கு என்னமும் ஆகிடுமோன்னு பயமிருக்கு தானே?''

''நம்ம முன்னாடியே கையை அறுத்துக்கிட்டு... அவ துடிச்சதை மறக்க முடியுமா என்ன?''

''ஏற்கனவே அளவுக்கு அதிகமாக கோபம் வரும்! இப்போ... அந்தப் பையன் வேண்டாம்ன்னு சொன்னதும் அரைப் பைத்தியம் மாதிரி ஆகிட்டாளே? அதைப் பார்க்கப் பொறுக்காம தான்... அப்படி நடந்துக்கிட்டேன்'' எனத் தன் பக்க நியாயத்தை எடுத்துக் கூறினார். அந்தப் பெரிய மனிதர்.

மனிதர்களுள் ஒவ்வொருவருக்கும் ஓரோர் நியாயம்! தன் பக்க நியாயத்திற்கென வாதாடும் பலர்,



எதிர்ப்பக்கமிருக்கும் நியாயத்தைக் காது கொடுத்துக் கூடக் கேட்க மறுப்பது, அதன் நிஜம்! ஓங்கிப் பேசுவதால் தங்கள் பக்கம் வென்று விட்டது என்று இறுமாப்புக் கொண்டிருக்கும் அவர்களை அடிக்கவென, எதிர்ப்பக்கம் சத்தமின்றி வெல்வது, கடவுளின் பலம்!

ஆனால், இந்த உலக நியதி அரங்கேற சிறிது காலம் பிடிக்கும் என்பதால், எதிர்ப்பக்கத்தில் இருந்த தென்றலாள் துவண்டு போனது என்னவோ நிதர்சனத்தின் நிர்ப்பந்தம்!

சிவசுப்ரமணியமும் மகாராணியும் கிளம்பி அரை மணி நேரமே ஆகியிருந்த வேளையில், நெட்டிருவும் தென்றலும் இடிந்து போய் அமர்ந்திருந்தனர்.

நெட்டிருவிற்கு - சோழனின் காதல் விவகாரம் தெரிந்தது பெரும் இடியாய் இருக்க, தென்றலுக்கோ அவனது பேர் மாற்றமும் அதனுடன் சேர்ந்து கொண்டது.

''கதிர்'' என்றால் இங்கே யாரென்று கூடத் தெரியாத அளவிற்கு, ''சோழன்'' என்ற பெயருடன் இங்க உலாவியவன், பெரிய படிப்பு படிக்கும் இடத்தில் பெயரை மாற்றிக் கொடுத்திருக்கிறான் என்றால் என்ன அர்த்தம்?!

இங்கிருக்கும் அவனது 'ஏழ்மை' அடையாளம் அங்கே யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக தானே?

படிக்கும் இடத்தில் தனது ஏழ்மையை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாதவன், படிப்பறிவில்லாத ஏழைப் பெண்ணான தன்னைக் கண்டிப்பாக மணக்க மாட்டான்!

மணப்பதா? சை... அது தான் மித்ரா... என்ற பெண்ணைக் காதல் செய்கிறானாமே!

அந்தப் பெண்ணின் மீது கொண்ட காதலால் தான் கல்யாணத்தைப் புறக்கணித்திருக்கிறான்!

இரண்டு வருடங்கள் என்று வாய் வார்த்தைக்காக தள்ளிப் போட்டுவிட்டு, ஒரேடியாக தொலைத்துத் தலை முழுகுவது தான் அவனது எண்ணமாய் இருந்திருக்கிறது!!

ஒட்டுமொத்தமாய் கை கழுவதற்கு அடையாளமாகத் தான்... ஊருக்கு வருவதையும் தவிர்த்திருக்கிறான்! அடப்பாவி!

அன்று கூட, தனக்கு இரண்டு பெண்களிடமிருந்து காதல் கடிதம் வந்ததாய் சொன்னானே? அதில் ஒருத்தி தான் இந்த மித்ராவோ!? மித்ராவைப் போல் எத்தனை பேரோ! அவனது அன்றைய பேச்சை விளையாட்டென்று எண்ணினேனே! பார்த்தால் என்னையல்லவா விளையாட்டுப் பொருளாய் எண்ணி விளையாடி இருக்கிறான்!?

அவனுக்காக... அவனது படிப்பிற்காக என்று உயிரைக் கொடுத்தேனே?!

ஆயாவின் வார்த்தையையும் கேளாமல் அவர்களையும் சாவிற்குத் துரத்தி... கடவுளே!

ஆயா... இல்லாமல் நானும் அய்யாவும் படும் கஷ்டம் பத்தாது என்று இப்போது இவர்கள் வேறு?

சை... சுகுணாவின் தேள் கொட்டும் பேச்சிற்குப் பயந்து... அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்தது தப்பாகி விட்டதோ?! அய்யா துவண்டுவிட்டாரே!?

தென்றலின் எண்ணப் போக்கை மரிப்பது போல் "தென்றலு... என் ஆத்தா... என்னைப் பெத்தவளே!"



எனப் பேத்தியைக் கட்டிக் கொண்டு அழுத நெட்டிரு. அதற்கு மேல் பேசவே இல்லை!

அவரது உயிர் பூவுலகை விட்டுப் பிரிந்து - விண்ணுலகில் வாழும் தன் குடும்பத்தாருடன் கலந்தது!



## 17

* டெஹ்ராடன்... *

காலை முழுதும் முதுகு ஒடியும் வேலையின் ஊடேயும் மகிழ்ச்சியுடன் காணப்பட்ட கதிர் என்ற செங்கதிர் சோழனின் இரவு நேரம், பெரும் துன்பத்துடன் கழிந்தது!

"திருமணம் வரை உன்னை வந்து பார்க்க மாட்டேன்" எனச் சொல்லிவிட்டு வந்த தனது மடத்தனத்தை நொந்தபடி படுத்திருந்தவனுக்கு, விக்னேஷும் பிரபாவதியும் தொடர்ந்து தன்னை மாற்ற முயல்வது நினைவுக்கு வரவும், விக்னேஷின் அதட்டலுக்கும் பிரபாவதியின் அன்பிற்கும் ஏங்கினான் அவன்!

அவர்கள் இருவரும் திருச்சியிலிருந்தாலாவது ஒரு முறை போய் வரலாம்... அவர்கள் அனைவரும் அமெரிக்கா சென்று விட்டனரே!

இப்போது... திருச்சி சென்றால்... அந்த மித்ரா வேறு வந்து ஏதாவது உளறுவாள்... சை... இருக்கும் பிரச்சனை போதாது என்று இவள் வேறு!? இந்த நேரத்தில் விக்கி இங்கில்லாது போனானே!?

விக்கியும் அவனும் சமாதானமான சில நாட்களிலேயே, விக்னேஷுற்கு வட அமெரிக்காவிலிருக்கும் விர்ஜினியா மாகாணத்திலிருக்கும் பல்கலைக் கழகம் ஒன்றில் இடம் கிடைத்து விட, விக்னேஷின் வெளிநாட்டுப் பயணம் உறுதியானதில், பிரபாவதியும் கதிரும் தவித்த அளவிற்குக் கூடுதலாய் கோடீஸ்வரனும் தவித்ததன் விளைவாக, மகனுடன் பெற்றோர் இருவரும் அமெரிக்கா பயணப்பட்டிருந்தனர்!

மகனது கல்லூரி, தங்குமிடம், போக்குவரத்து ஆகியவற்றை தங்கள் திருப்திப்படி சரி செய்து விட்டு, நெடுநாட்களாய் அவர்கள் செல்லவிருந்த உலகச் சுற்றுலாவை முடித்துக் கொண்டு ஊர் திரும்புவதாய் ஏற்பாடாகியிருந்தது!

அந்த ஏற்பாட்டின்படி, விக்கியின் குடும்பம் இந்தியாவை விட்டுக் கிளம்பியிருக்க, தனது சுகத் துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் சில மனிதர்களும் தன்னை விட்டுத் தொலை தூரம் சென்றதில், கதிர் மனம் உடைந்தான்!

விக்னேஷ் கிளம்பிச் சென்றதுமே டெஹ்ராடன் வந்திருக்க வேண்டுமோ?

ஒரு மாதம் தாமதம் செய்தது - பல பிரச்சனைகளைக் கொண்டு வந்து விட்டதோ?!

ஆனால், டெஹ்ராடன் வருவது என்பது என் கையிலா இருந்தது? மேலிருக்கும் அதிகாரிகளின் உத்தரவுப்படி தானே வேலை செய்ய முடியும்?!

முதல் வருடத்தில் எழுத வேண்டிய ஒரு பேப்பருக்காக அங்கே தங்கியிருந்ததால் என்ன என்ன பிரச்சனைகள்!?



பிரச்சனைகளா?? ஹ்ம்ம் ஒரே பிரச்சனை தான்! அது- ''மித்ரா''... சரியாகச் சொல்லப் போனால் ''மித்ராவின் காதல்''!

கண்றாவி - இவளுக்குக் காதல் வரவில்லை என்று யார் கேட்டார்கள்!?

அதுவும் அவள் காதல் சொன்ன முறை - அப்பப்பா!

''ஹே கதிர்! ரெண்டு நாள் முன்னாடி... நான் ஒரு படம் பார்த்தேன்... அதில காலேஜ்-ல எதிரும் புதிருமா இருக்க ரெண்டு பேரு... காதலில விழுந்து... கல்யாணமும் செய்துக்கிறாங்க...''

''அது மாதிரி... என்னை வச்சு யோசிச்சப்போ... நீ தான் கண்ணில வந்தே!''

''அப்புறமும்... நிறைய யோசிச்சேன்னா! உன் மேல காதலன்கிற மாதிரி தான் எல்லா சைன்ஸ்-ஸும் இருக்கு!''

''சோ... ஐ லவ் யு! என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ!''

ஐந்தே வரிகளில் தனது காதலை வெளிப்படுத்திவிட்டு, பெருமிதத்தோடு அவள் கொடுத்த லுக்!? கடவுளே!

''காதலா?!?!'' என்பது போன்ற அதிர்ந்த பாவனையைக் கொடுத்த கதிரிடம் கண்ணால் கவிதை பேசி, மொழியால் தொடர்ந்தது தான் அங்கே கொடுமை!

சில நாட்களிலேயே பொறுமையிழந்து ''என்ன வேணும். உனக்கு? கண்ட கண்ட படத்தையும் பார்த்திட்டு... காதல் கருமாந்திரம்ன்னு எதுக்கு என்னைத் தொல்லை பண்றே?'' எனக் கத்தியபோது, அவள் சிரித்ததில் எரிச்சல் தான் மூண்டது!

''சினிமா என்பது ஒரு மாயை, மித்ரா! அதில நடக்கிறதெல்லாம்... வாழ்க்கையாகாது!''

''யாரோ ஒரு ஹீரோ... லூசுத் தனமா ஏதாவது செய்தான்னா... நானும் அது மாதிரி செய்ய முடியாது... நான் ஒரு சாமானிய மனிதன்!''

''என்னோட ஆசைகள்... இலட்சியங்கள் எல்லாமே வேற! என்னோட வாழ்க்கையும் வேற!''

''தயவு செய்து... என்னை விட்டுப் போய்டு!!''

மூச்சைப் பிடித்துக் கொண்டு அவன் சொல்லி முடித்தப்போது, ''என்னோட தற்போதைய ஆசை... உன்னைக் காதலிக்கிறது தான்!'' என்று மொழிந்த மித்ராவை அடிக்க வேண்டும் போல் கைகளைப் பரபரத்தது என்னவோ உண்மை!

அவளது பதிலில் கொதித்து ''கொஞ்ச நாள் முன்னாடி விக்கியை உன்னோட ஆள்-ன்னு சினிமா தியேட்டர்ல வச்சு சொன்னவ தானே நீ? இப்ப... என்ன என் மேல் திடீர் காதல்?'' என்று ஏளனம் செய்தான், கதிர்.

அவனது நேரடித் தாக்குதலின் விளைவாக யோசிக்கத் தொடங்கிய மனதை மறைத்தவாறே ''அது... அது... ஹான்... அது சும்மா விளையாட்டுக்காக சொன்னது... இது தான் நிஜம்!'' என அவள் கூறியபோது, அப்படியே விட்டுவிடாமல், இன்னும் கொஞ்சம் அவளது யோசனையைத் தூண்டியிருக்க வேண்டுமோ என்று இப்போது நினைத்தான், கதிர். ப்ச்... ஆனால் அப்போது கோபம் தான் தலைக்கேறியது.

''ஷிட்... எனக்குன்னு ஒருத்தி காத்திட்டு இருக்கா... அவளைத் தவிர வேற யாரையும் என்னால நினைச்சுக்



கூடப் பார்க்க முடியாது!'' - உள்ளடக்கிய கோபத்தை அவன் வெளியிட,

''யாரு, யாரு காத்திட்டு இருக்கா? உன்னோட முறைப் பெண்ணா?'' என மூச்சிரைக்கக் கத்திவிட்டு ஓடிய மித்ரா, திரும்பி வர மாட்டாள் என அவன் எண்ணியிருக்க, இரு தினங்களில் வந்து நின்ற அவளது பெற்றோரைக் கண்டதும் ஏளனம் தோன்றியதும் உண்மை தான்!

அதுவும் அவர்கள் ''எங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்துக் கொள்! நீ இல்லை என்றால்... செத்து விடுவேன் என்று அவளது கையை அறுத்துக் கொண்டாள்! தயவு செய்து கருணைக் காட்டு...'' என சினிமா வசனம் பேசியபோது, ஏளனம் இகழ்ச்சியாய் மாறியது என்னவோ நிஜம்!

''உங்க பொண்ணு... தான் சினிமா தனமா நடந்துக்கிறான்னா... நீங்க அவளுக்கு ஒரு படி மேல போய்... சை சை...''

''எனக்குன்னு அங்க காத்திருக்க உயிருக்கு என்னால துரோகம் செய்ய முடியாது! முடியவே முடியாது!''

''உங்க பொண்ணோட உயிருக்காக பார்த்தா... என் உயிரும் சரி... என் மனைவி ஆகப் போறவ உயிரும் சரி... மரிச்சுப்போய்டும்!''

''என் வாழ்க்கையின் முடிவுகளை எடுக்கும் உரிமை... உங்களுக்கு உங்க பொண்ணுக்கோ கொஞ்சம் கூட இல்லாத நிலையில... ப்ச்... தயவு செய்து போய்டுங்க!'' எனக் கையெடுத்துக் கும்பிட்டப் போது, சிவசுப்ர

மணியம் அவனை வெறித்துப் பார்த்ததே மனதில் இப்போதும் நிழலாடியது!

அதன் பிறகு, ஒரு வாரத்தில் டெஹ்ராடன் போகும் நிலை ஏற்பட்டு விட, கதிரின் நினைவுகளிலிருந்து மெல்ல மறைந்திருந்தாள், மித்ரா!

திடீரென நடந்த பயணமும், மித்ராவின் பேச்சுக்களில் தெரிந்த அர்த்தமற்றத்தன்மையும், கூடவே புது ஊரில் தன்னை நுழைத்துக் கொள்ளும் பரபரப்பிலிருந்த விக்னேஷின் நேரமின்மையும் சேர்ந்து கொள்ள, மித்ராவின் திடீர் காதலை நண்பனிடம் மறைத்தான், கதிர்!

கூடவே, விக்னேஷின் மனதில் மித்ராவின் மேல் ஆசையிருப்பின், நண்பனுக்குத் துன்பமாய் முடியுமே என்ற எண்ணத்தில் தன் கோபத்தைத் தன்னுள்ளே அடக்கிவைத்தான், அந்தத் தோழன்!

இந்த வேதனையை எல்லாம் புறம் தள்ளுவது போல், தென்றலின் வெறித்தப் பார்வையும், ''என்னை ஏமாற்றி விட்டாயே!'' என்ற பாவனையும், குத்திக் கிழித்த அவளது பேச்சுக்களுமே, நினைவுகளை கூறு போட, கதிருக்கு நாட்கள் துன்ப மயமாய் கழிந்தன!!

துன்பத்தினுள்ளும் ஓர் இன்பமாய், தன்னிடம் கைப்பேசி இல்லாததை அவன் எண்ணி மகிழ்ந்திருக்க, அந்த மகிழ்ச்சியே பெரும் துன்பமாய் மாறிப் போனது, விதியின் வண்ணக்கோலம்!

**ஆறு மாதங்களுக்குப் பிறகு...**

*** திருச்சி ***



டெஹ்ராடனில் தனது பயிற்சி முடிந்து கடைசி பரீட்சைக்காக திருச்சி திரும்பியிருந்த கதிருக்குப் பற்பல சந்தோஷங்கள் மனதில் அலையலையாய் மோதின!

முதலாவதாக, இரண்டு வருட மேற்படிப்பைக் குறையொன்றுமில்லாமல் முடிக்கப் போவது!

இரண்டாவதாக, அவனது அறிவாற்றலுக்கும் திறமைக்கும் தீனி போடும் வண்ணம், அவனது கனவு நிறுவனமான DRDO-வில், ''ரிசர்ச் அசிஸ்டெண்ட்'' வேலைக்கான உத்தரவைக் கையில் வாங்கியது.

அடுத்ததாக, உலகச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்பியிருந்த பிரபாவதி, அவன் தென்றலைப் பார்க்கச் செல்லும் போது தானும் வருவதாய் கூறியது! முக்கியமாக, இரண்டு வருட இடைவேளையின் பின்னர் தன் வாழ்விற்கு உரம் சேர்க்கும் தென்றலைக் காணப்போவது!

வாழ்வின் சந்தோஷங்களை அனைத்தும் ஒட்டுமொத்தமாய் தன்னைத் தாக்கப் போகின்றன என்ற நினைப்புடன், தேர்வை நல்ல படியாக முடித்த கதிர், விக்னேஷின் வீடு தேடிச் செல்ல, அங்கே மித்ரா காத்திருந்தாள்!

மித்ராவை அங்கே கண்டதும் முகம் இருண்ட கதிரிடம் அவள் தற்போது வேண்டியது - காதலில்லை! மன்னிப்பு!

அவளது மனதினுள் காதல் வந்தது போலவே மின்னல் வேகத்தில் போகவும் செய்திருந்தது.

காதல் என்ற எண்ணம் அவளுள் வருவதற்குக் காரணமாய் இருந்தவை - திரைப்படமும், நண்பர்களும்

என்றால், காதல் போவதற்குக் காரணமாய் இருந்தது அவளது சுய அலசல்!

“இந்தக் கதிரோட எப்போ பார்த்தாலும் சண்டையா இருக்குப்பா...சை.. அவனைப் பார்த்தா மட்டும்... எனக்கு ஏன் தான் சண்டை போடுற மூடு வருதோ?” எனப் புலம்பிய மித்ராவை,

“ஹே! இந்த சண்டைக்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? உனக்கு அவன் மேல வந்திருக்க காதல்!” எனக் கூறிய குழப்பிய முதல் பிரகஸ்பதி, அவளது தோழி ஸ்ருதி தான்!

“என்னடி உளறுரே?”

“எல்லா காதலுமே ஊடலில் தான் மாஸ்டார்ட் ஆகும்!”

“இது ஊடல் இல்லை... சண்டை!”

“ரெண்டும் ஒண்ணு தான்! உனக்குக் காதல் வந்துடுச்சு!”

ஸ்ருதியின் அந்த உளறலுக்கு உரம் சேர்ப்பது போல், இல்லவே இல்லாத ஓர் உணர்வை இருப்பது போல் பறைசாற்றி முடித்தனர் மற்ற தோழிகளும்!

ஏற்கனவே ஒரு முறை ராகுல் என்பவன் கொடுத்த காதல் கடிதத்தை வைத்து மித்ராவைப் படுத்தி எடுத்த வர்களுக்கு, இதுவும் ஓர் குதூகல விளையாட்டாய் இருந்தது போலும்!

ராகுலையும் அவளையும் இணைத்துப் பேசியபோது, மித்ராவின் முகத்தில் தோன்றிய கோபம்-கதிரைப் பற்றிப் பேசும்போது காணாமல் போயிருந்ததும், அவளது



முகத்தில் தோன்றியிருந்த குழப்பமும், அவளது காதலை உறுதி செய்வது போலிருக்க, அதையே காரணம் காட்டி அவளை மேலும் குழப்பினர்!

“மூணு வருஷமா... ரெண்டு பேரும் முட்டிக்கிட்டு நிக்கிறீங்களே?! அது.... முப்பது வருஷக் காதல் வாழ்க்கைக்கு அடித்தளமாக்கும்!” என உசுப்பேத்திவிட்ட ஸ்ருதிக்கு, வெகு நாட்களாய் அதே எண்ணம் தான்!

மித்ரா-கதிருக்கு இடையே பிரச்சனை தொடங்கிய நாள் தொட்டு, “இந்த மோதல் காதலில் தான் முடியப் போகிறது!” எனத் தொழிகளிடம் சூளுரைத்துக் கொண் டிருந்தவள், அதை இப்போது அரங்கேற்றவும் செய்ததில், மித்ரா காதாநாயகி வேடமிட்டு பாந்தமாய் அதில் பொருந் திப் போனாள்!

அதற்கு முன்னரும் (அதாவது மூன்று வருடமாக), மித்ராவிடம் பல முறை ஜாடை மாடையாக எடுத்துக் கூறிக் கொண்டிருந்தவள், தான் சென்னைக்குச் செல்லு முன் செய்ய வேண்டிய நல்ல காரியமாய் எண்ணித் தான், மித்ராவின் மனதில் காதல் விதையை விதைத் ததே!

அந்த விதைக்கு நீர் ஊற்றுவதற்கென்றே மித்ராவும் சில பல காதல் படங்களைக் கண்டு களித்தாள்!

சிறு செடியாய் வேர்விட்டிருந்த அந்தக் காதல் செடி யின் வேர்களை உறுதி செய்வது போல், மூன்றாண்டு களாய் கதிருடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஒரு முறைக்குப் பல முறை ஓட்டிப் பார்த்த மித்ராவிற்கு, யோகா வகுப்பில் கதிரின் ஸ்பரிசம் தன் மீது விழ வேண்டும் என்று தான் எண்ணியது நினைவில் வந்து,

''அப்போதே நம் அடி மனதில் ஆசை வந்திருக்கிறது!'' என்பதை உறுதி செய்தது!

''காதல்'' என்பது உறுதியானதுமே, தன் படபட சுபாவத்தின் விளைவாக கதிரிடம் பகிர்ந்து கொண்டு, அவனது உடனடி மறுப்பைத் தாங்க முடியாமல் கையை அறுத்துக் கொண்டு, ''கல்யாணம்' என்று ஒன்று நடந்தால்.... அது கதிரோடு தான்'' என்று வசனம் பேசி, பெற்றோரை மிரட்டி... என ஆனானப்பட்ட ஆட்டம் ஆடி விட்டாள், அந்தச் செல்வச் சீமாட்டி!

ஆனால், அவளது ஆட்டத்தைச் சற்றும் சட்டைச் செய்யாமல் இருந்த கதிரின் ஒதுக்கமும் மித்ராவைச் சிந்திக்க வைத்தன!

''எடுத்தோம் கவிழ்த்தோம்!'' என்பது போல் காரியங்களைச் செய்துவிட்டு, அந்த நேரத்தின் சூடு தணிந்ததும் செய்தக் காரியத்திற்காக வருந்தும் மித்ராவின் குணம், அவளது காதல் விஷயத்தில் அமலுக்கு வந்தது!

அதன் விளைவு-மித்ராவின் மன்னிப்புக் கோரும் படலம்!

''சாரி, கதிர்! தேவையில்லாம உன்னைத் தொல்லை பண்ணிட்டேன்....''

''நீ... என்னைச் சட்டையே செய்யாம டெஹ்ராடன் போனப்போ எனக்குக் கோபம்... கோபமா வந்தது!''

''ஆனா... கொஞ்ச நாளிலேயே... உன்னைப் பார்க்கணும்... உன்னோட பேசணும்ங்கிற ஆசை அப்படியே வடிஞ்சுடுச்சு!''

''அப்போதான் எனக்கே புரிஞ்சது! இது காதல் இல்லைன்னு....''



''நீ.... என்னை அவாய்ட் பண்றதைத் தாங்க முடியாம... அதுக்கொரு தீர்வாத்தான் நான் காதலைத் தேர்ந்தெடுத்திருக்கேன்னு புரிஞ்சது!''

''சாரி கதிர்! என்னால.... உனக்கு நிறைய பிரச்சனைகள்... உன்னோட முறைப்பொண்ணு வேற....''

இது வரை அவள் சொல்வதை மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்த சோழன், 'தென்றலா? அவளுக்கு என்ன? அவளைப் போய் பார்த்தியா? எதுக்கு? என்ன விஷயம்? நீ... எதுக்கு அங்க போனே?'' எனப் பதறி விட்டான்!

அவனது பதற்றத்தை விழிவிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த மித்ராவைக் கையமர்த்திவிட்டு, பிரபாவதி தொடர்ந்தார்.

''கதிர் கண்ணா! டென்ஷன் ஆகாம... அம்மா சொல்றதைக் கேளு!''

''என்னம்மா? என்ன விஷயம்? தென்றலுக்கு ஏதாவதா?''

''அது... அது...'' என்று இழுத்தப் பிரபாவதி, மித்ராவின் பெற்றோர் நடத்திய மிரட்டல் நாடகத்தை உணர்ச்சியற்றக் குரலில் சொல்லி முடித்தார்!

''என்ன தைரியம்? ஏழைங்கன்னா என்ன வேணும்னாலும் செய்யலாமா?!'' - இப்போது கதிரின் பார்வை மித்ராவைக் கூறு போட்டது!

''சாரி கதிர்! என்னோட பிடிவாதத்தைப் பார்த்துப் பயந்து....''

''இது பயமில்லை! சுயநலம்! சை.... இவங்கெல்லாம் உயிர் காக்கும் டாக்டர்... ச்சை...''

''ஹ்ம்ம் நீ சொல்றது கரெக்ட்தான்! உன்னோட ஊருக்குப் போயிட்டு வந்து... தென்றல் பேசினதைப் பத்தி அப்பா சொன்னதும்... எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது.... என்னோட காதல் நிறைவேறிடும்ன்னு.. ப்ச்... சினிமா வில்லி மாதிரி... உன்கிட்ட இந்த 'நல்ல' விஷயத்தைச் சொல்லணும்ன்னு துடிச்சிட்டு இருந்தேன் தெரியுமா... பக்கா சுயநலம்!''

அந்த நிமிடம் தான், மித்ராவின் தொல்லைகளிலிருந்து தப்பிப்பதற்காக கைப்பேசி வாங்காமலிருந்த தன் மடத்தனத்தை நொந்து கொண்டான், கதிர்!

கைப்பேசி இருந்திருந்தால்.... ஐயோ... தேனம்மா! என் தென்றல்! என்ன பாடுபட்டாளோ!

''இப்போ... கோபப்பட்டு எந்தப் பிரயோஜனமும் இல்லை, கதிர்! அதைவிடவும் முக்கியமான வேலை ஒண்ணு இருக்கு.... தென்றலைத் தேடிக் கண்டுபிடிக்கணும்!''

''தேடணுமா? என்னம்மா சொல்றீங்க?! எனக்குத் தலையே சுத்துதே!''

''ஹ்ம்ம்... தென்றல்கிட்ட உண்மையைச் சொல்றதுக்காக மித்ராவும் அவங்க அம்மாவும் கொஞ்ச நாள் முன்னாடி வெள்ளகவி போயிருக்காங்க... அங்க....''

''மறுபடியுமா? ஹய்யோ, கடவுளே!''

''தென்றல் ஊரை விட்டுப் போயிட்டதா... அவ வேலைப் பார்த்த ரோஸ் கார்டன்-ல சொன்னாங்களாம்....''

''ஊரை விட்டா? அய்யா... ஆயா... எல்லாருமா? எங்க போவாங்க?!''



அவனது அந்தத் துடிப்பிற்குப் பதில் சொல்ல முடியாமல் பிரபாவதிக்கே திக்கியது என்றால் மித்ராவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்!

பெண்கள் இருவரின் நீண்ட மௌனம் ஏதோ விபரீதத்தை உணர்த்த, ''என்னம்மா? என்னாச்சுன்னு சொல்லுங்கம்மா... ப்ளீஸ்...'' என இறைஞ்சினான் கதிர்.

''பெரியவங்க ரெண்டு பேரும்....''

''ஊரில தானே இருக்காங்க...'' என்றபோது கதிரின் குரல் நடுங்கியது!

''ஹ்ம்ம்.....அவங்க ரெண்டு பேரும் இறந்து போய்ட்டாங்க!''

அதற்குப் பதில் கூற முடியாமல், கதிர் நின்ற இடத்திலேயே சமைந்தான்!

* டெஹ்ராடன் *

தனக்கென நிறுவனம் ஒதுக்கியிருந்த வீட்டில், விட்டத்தை வெறித்துக் கொண்டு படுத்திருந்த கதிரின் மனம், சூன்யமாகிவிட்ட வாழ்வின் சூட்சமத்தை எண்ணி நொந்து கொண்டிருந்தது!

''உன்னையே நம்பியிருந்தவளை... நோகடிச்சுட்டியே! நல்லா இருப்பியா.. நீ?!''

''இருந்த உறவெல்லாம் போய்... அனாதையா போனாளே! உன்னால தான்...''

''படிச்சிட்டோம்ங்கிற திமிர் தானே?''

''அந்தப் படிப்பை உனக்குக் கொடுத்தது அவளோட உழைப்புத்தானே?! அதை மறந்துட்டியே! நன்றி கெட்டப் பாவி!''

மித்ராவின் மன்னிப்புப் படலத்திற்குப் பின்னர், நிமிடமும் தாமதிக்காமல் வெள்ளகவி சென்றவனுக்குக் கிடைத்தவை - இந்த வசவுகள் தான்!

தென்றலின் நட்பு வட்டம் அவனைப் பார்த்து இகழ்ந்தது இன்னும் நெஞ்சில் மறையாத ரணமாய் குத்திக் கொண்டிருக்க, தன் வாழ்வின் வெளிச்சம் மறைந்து போனதில் இருந்திருந்தான், அந்த மன்னவன்!

கூடவே, ''சுய மரியாதை'' என்ற போர்வையில் இரண்டு வருடங்களாக அவளைப் பார்க்காமலிருந்தது எத்தனை பெரிய பிழை!?

தன்மானம், ரோஷம், கோபம் - எனப் பலவற்றையும் எண்ணிக் கொண்டு, அவளிடம் தொடர்பு கொள்ளாம லிருந்த தனது பொறுப்பற்ற தனத்தை எண்ணி நொந்து கொண்டிருக்கும்போது, கதிரின் புது கைப்பேசி கிணு கிணுத்தது!

அதில் ஒளிர்ந்த விக்னேஷின் எண்ணைப் பார்த்த தும், ஒரே தாவலில் அதை எடுத்தவனைப் பிலு பிலு வெனப் பிடித்தான், உடன் பயின்றவன்!

இன்னமும் தென்றலைத் தேடாம... டெஹ்ராடன்ல என்னடா பண்ணிட்டு இருக்கே? இப்பவும் உனக்கு இந்த வேலை.... தான் முக்கியமா போச்சில்லையா?''

''டேய் விக்கி.... அப்படியில்லைடா... இங்க சொன்னத் தேதிக்கு ஜாயின் பண்ணலைன்னா....''

''பண்ணலைன்னா என்ன? வேலை போய்டுமா? இதைத்தான் சொன்னேன்... உனக்கு இந்த வேலை தான் முக்கியம்ன்னு....''



''என்னடா இப்படிப் பேசுறே? இது தான்டா என்னோட கனவு... ஆசை... லட்சியம் எல்லாமே!''

''அப்போ... தென்றல்? ரெண்டு வருஷம் முன்னாடி யும்... இதைக் காரணம் காட்டித்தான்... அந்தப் பொண்ணை ஊரை விட்டே விரட்டியிருக்கே! இப்ப வும்.... சை.... எனக்கு அப்படியே உன்னை இழுத்து வச்சு,,, நாலு அடி வைக்கனும் போலிருக்கு...'' எனப் பல்லைக் கடித்தான், அந்தப் பண்பாளன்!

''நா... ஒண்ணுமே செய்யாத மாதிரி பேசாதேடா... வாரம் முடிஞ்சா சனியும் ஞாயிறும் ஊரில தான்டா நாயா பேயா அலையுறேன்... ஊரில இருக்க ஒருத்தர் விடாம கேட்டுப் பார்த்துட்டேன்... முக்கால் வாசிப் பேருக்கு அவ எங்க போனான்னே தெரியல... தெரிஞ்ச ஒண்ணு ரெண்டு பேரும் அவ இருக்க இடத்தைச் சொல்றதா இல்லை...''

''அவங்க சொல்லலைன்னா... அப்படியே விட்டுடு வியா?''

''இல்லைடா... எனக்குத் தெரிஞ்ச அளவில... பக் கத்துக்கு ஊரில இருக்க அவங்களோட சொந்தக்காரங்க வீட்டுக்கெல்லாம் போய்ப் பார்த்துட்டேன்டா... அங் கேயும் இல்லை! இதில கொடுமை என்னன்னா... அவங்கள பல பேருக்கு அய்யா செத்ததே தெரியலை.... ப்ச்!''

''இதுக்குப் பேரு தான் கொடுமைங்கிறது! கொடுமைக் குக் காரணமானவனே கொடுமை பத்திப் பேசுறே! சூப்பர் டா மச்சான்!''

''கொடுமைக்காரனா? என்னடா விக்கி?''

''அப்புறம்... உன்னை எப்படிக் கூப்பிடறதாம்? தங்கன்னா!?... அப்படி என்னடா ரோஷம்? யாராவது ஒரு வார்த்தை... உன்னைக் குறையா சொல்லிட்டா நீ தாங்க மாட்டியோ? பெரிய இவன் மாதிரி... அவங்க இருக்கப் பக்கமே தலை வச்சுப் படுக்க மாட்டானாம்... இடியட்-டா நீ ! அம்மாவும் நானும் ஏதோ சொன்னோம்ன்னு எங்க கூடப் பேசாம இருந்த மாதிரித்தானே.... அவங்களையும் அவாய்ட் பண்ணியிருக்கே! அதை விடவும் கொடுமை என்ன தெரியுமா? ரோஸ் கார்டன்-ல யாரோ ஒரு பொம்பளை... ஏதோ திட்டினா... அதுக்கு அப்புறம் போனே பண்ணாம இருந்திருக்கப் பாரு.... அதுதான்! முட்டாள்! அடி முட்டாள்! நீயெல்லாம் நல்லா படிச்சு... என்னத்தடா சாதிச்சே?'' என உளமார வறுத்தெடுத்தான், உயிர் நண்பன்!

''அப்படியில்லைடா..... அதுக்கு முன்னாடி கூட, ஆயா என்னோட நிலைமையைப் பத்தித் திட்டி பேசு வாங்க. அந்த முறை தென்றலே என் மேல நம்பிக்கை இல்லாத மாதிரி பேசினதும்.... திரும்ப ஒரு தடவை அவ நம்பிக்கையைக் குலைக்கிற மாதிரி...''

''போதும் நிறுத்து! இந்த டயலாக் எனக்கே மனப் பாடம் ஆகிடுச்சு... வேற ஏதாவது பேசு!'' என அதற்கு முற்றுப்புள்ளி வைத்தவன், ''அடுத்து என்ன செய்யறதா உத்தேசம்? நல்லா வேலைப்பார்த்து சயின்ஸ்டிஸ்ட் ஆகுறதா?'' என்றான் ஏளனமாக.

''பச்! என்னை என்ன தான் பண்ணச் சொல்றே?''

''ஹ்ம்ம். இனிமேலாவது நான் சொல்றதைக் கேளு! அவ பிரண்ட்ஸ் காலில விழுந்தாவது அவ இருக்க



இடத்தைக் கண்டுபிடி... இல்லைன்னா பேப்பர்-ல விளம்பரம் கொடு...'' என்ற அவனது அறிவுரைகளுக்கு இடமில்லாது, அடுத்த அரை மணி நேரத்தில் மித்ராவிட மிருந்து அழைப்பு வந்தது!

''ஹே கதிர்! நீ உடனே கிளம்பி.... திருச்சி வா... இல்லை... இல்லை.. வால்பாறை போ! சீக்கிரம்... உடனே கிளம்பு கதிர்!'' மித்ராவின் பதட்டம் மற்றும் உற்சாகம் நிறைந்த குரலிலிருந்து எதையும் உணர முடியாமல் 'என்ன மித்ரா? விஷயத்தைச் சொல்லு.. ப்ளீஸ்!'' என்று தவித்தான், எதிர் முனையிலிருந்தவன்!

''ஹே, தென்றல் அங்க இருக்கா மேன்!'' - தேனினும் இனிய அச்செய்தி செவியில் பாய, ''நிஜமாவா?! நன்றி கடவுளே! தேங்க்ஸ் மித்ரா....'' என ஒரு வினாடிக்கும் மேலாய் தன்னிலை மறந்தவன், ''உனக்கு எப்படி மித்ரா தெரியும்? நீ வால்பாறை போயிருந்தியா?'' என்றான், தன்னைச் சமன்படுத்திக் கொண்டு.

''ம்ஹூம்! உன் தென்றலை நியூஸ்-ல காட்டி னாங்க!''

''நியூஸ்-லேயா? என்ன விஷயம் மித்ராரா்ரா...'' என்றபோது கதிரின் மனது கண்டதையும் யோசித்து, காத தூரம் ஓடியது!

''ம்ம்.. எஸ்! அங்க இருக்க டீ எஸ்டேட்-ல மூணு பேரு யானை மிதிச்சு இறந்துட்டாங்களாம்! சோ.... அங்க இருக்க தொழிலாளிகள் எல்லோருமா சேர்ந்து ஸ்ட்ரைக் பண்ணிட்டு இருந்தாங்க... நியூஸ் சேனல்-ல அதை ஒரு ரவுண்டு அப் காட்டினாங்களா... அம்மா தான் கண்டு பிடிச்சாங்க... உடனே உனக்கு போன் போடறேன்!''

என ஒரே மூச்சில் விஷயத்தைச் சொல்லி கதிரின் மூச்சு நிற்காமல் காப்பாற்றினாள், தோழி!

''தேங்க்ஸ் மித்ரா! ரொம்ப தேங்க்ஸ்.... இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன். நான் உடனே கிளம்புறேன்!'' என்றவன், பதிலை எதிர்பாராமல் அழைப்பை வைத்துவிட்டு, வால்பாறைக்கு விரைந்தான்!



# 18

✻ வால் பாறை ✻

டெஹ்ராடன்னிலிருந்து பறந்து வந்த கதிரின் வேகத்திற்கு அடுத்த நிமிடமே அவன் வால்பாறையில் இருந்திருக்க வேண்டும் என்றாலும், போக்குவரத்து மற்றும் பொருளாதார நிலவரப்படி நாற்பது மணி நேரங்கள் கழித்தே அவனால் வால்பாறை வரமுடிந்தது.

நாற்பது மணி நேரமும் தென்றலைக் காணப்போகும் இன்பமும், இத்தனை நாட்கள் அவள் அனுபவித்த துன்பமும் மாறி மாறி வர - உருக்குலைந்து போனான் அவன்!

''யாருமற்ற அனாதையா அவளைத் துரத்திவிட்டோமே!'' என்ற குற்ற உணர்வே மிஞ்ச, பல காலங்களாய் அவள் பட்டத் துன்பத்திற்கெல்லாம் அவளை நன்றாக... மிக நன்றாகவே வைத்துக் கொள்ள வேண்டும்



என்ற முடிவுடன், தமிழ்நாடு அரசிற்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத்திற்குள் காலடி எடுத்துவைத்த போது மணி இரவு எட்டை நெருங்கியிருக்க, வால்பாறையில் இருள் வெள்ளமென பரவி, அசாத்திய அமைதியில் ஊரே துயில் கொண்டிருந்தது.

இருட்டும் குளிரும் அவனுக்குப் பழகிய ஒன்று தான் என்பதால் உடலளவில் அவனுக்குப் பயமோ நடுக்கமோ இருக்கவில்லை. அதற்கு மாறாக, அவனது மனமோ அவன் வந்த டெஹ்ராடன்-சென்னை எக்ஸ்பிரஸ் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஓடிக் கொண்டிருந்தது!

தன்னவள் தன்னவளாகவே இருப்பாள் என்பதை மனதின் ஒரு பாதி நம்பினாலும், மனதின் மறு பாதியோ அவள் தன்னவளாகவே இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையைக் கடவுளிடம் வைக்க மறக்கவே இல்லை!

வேண்டுதலும், வேதனையுமாக நின்றிருந்த அவனை மேலும் சோதிக்காமல், அந்த தேயிலைத் தோட்டத்தின் காவலாளி தொழிலாளர்கள் குடியிருப்பின் பக்கம் கையைக் காட்ட, கதிரின் நடை அதிவேகமானது.

ஆனால், குடியிருப்புப் பகுதியை அடைந்தால் அங்கே நூற்றிற்கும் மேற்பட்ட வீடுகள் இருக்கவே, தென்றல் இருக்கும் வீட்டை எப்படி கண்டுபிடிப்பது என்று மலைத்துப் போனான் அவன்.

அவனைச் சற்று நேரம் தவிக்கவிட்ட ஆண்டவன், சற்று தொலைவில் சில ஆடவர்களை நடத்திக் கூட்டி வர, அவர்களிடம் விரைந்த கதிரை கேள்வியாய் பார்த்தனர் அக்கூட்டத்தில் இருந்தவர்கள்.

''இங்க.... தென்றல்ன்னு ஒரு பொண்ணு வேலை பார்க்கிறா இல்லையா.... அவ வீடு....'' என்று கதிர் கேள்வியாய் இழுக்க,

''தென்றலா....யாரு? எந்த ஊர்ல இருந்து வந்திருக்கு?''

''வெள்ளகவி....''

''ம்ம்.... அப்படி யாருமில்லையே!'' - என்ற பதிலில் கதிரின் இதயம் ரயிலை விட்டு விமான வேகத்திற்குத் தடதடத்தது.

''ஹ்ம்ம்... கொஞ்சம் மாநிறமா.... சின்னப்பெண்ணா... வலது மூக்கில மூக்குத்தி போட்டிருக்கும்.... ஊரு வெள்ளகவி.... கொடைக்கானல் பக்கத்தில இருக்க ஒரு சின்ன கிராமம்... இங்க வந்து சேர்ந்து ஆறு மாசம் தான் ஆகியிருக்கும்... இல்லை அதை விடக் கம்மியா...'' எனத் தனக்குத் தெரிந்த தான் ஊகித்தத் தகவல்கள் அனைத்தையும் கொட்டினான், தவித்திருந்தவன்.

''ஹோ... ரமாக்காவோட வந்த புள்ளைகளைச் சொல்றாரு போலண்ணே... அந்த முனை வீட்டில தான் மூணு பொட்டைப் புள்ளைகளையும் தங்க வச்சிருக்கு அக்கா.... போய் பாருங்க...''

''நன்றி'' என்ற வார்த்தை காற்றில் கரைய, அவர்கள் கை காட்டிய திசையில் நடக்கத் துவங்கிய கதிருக்கு, அந்த வீட்டின் கதவைத் தட்டிவிட்டுக் காத்திருந்த நிமிடங்கள் யாவும் துன்பத்துடன் கழிந்த பல இரவுகளை விடவும் துன்பமாய் இருந்தது!

ஒரே வித்தியாசம் - தன்னவளைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவலும், அவள் இங்கு இருக்க வேண்டுமே என்ற வேண்டுதலும் கூடுதலாய் சேர்ந்து கொண்டன!



ஐந்து நிமிடக் காத்திருப்பிற்குப் பின்னர் திறக்கபட்டக் கதவின் பின்னே, ''யாரு' என்ற ஒய்ந்த குரலுடன், தூக்கக் கலக்கத்தில் நின்றிருந்த பெண்- தென்றல் இல்லை!

கதவு திறக்கும் சப்தம் கேட்டதுமே, சிறு குழந்தையின் எதிர்பார்ப்புடன் காத்திருந்த கதிரின் முகத்தில் ஏமாற்றம் தோன்றி மறைய, ''இங்க... தென்றல்ன்னு... வெள்ள கவி-ல...'' என்ற வாக்கியத்தை அவன் முடிப்பதற்குள்

''தென்றலா... தோட்டத்தைக் காவக் காத்துக்கிட்டு... பின்பக்கம் இருக்குது! நீங்க யவரு?'' என்றாள் அந்தப் பெண்.

''நா... அவளோட மாமா...''

''ஹோ... சரி... பின் பக்கம் போய்ப் பாருங்க... வீட்டைச் சுத்திக்கிட்டே போவலாம்'' என்றவள், கதிரின் நன்றிக்குக் கூடக் காத்திராமல் கதவை அடைத்து விட்டாள்.

அவளைத் தேடி விரைந்த கால்களுக்கு ஈடாய், ''இந்தப் பனியில் வெளியே அமர்ந்திருக்கிறாளே?'' என மனது அவள் நலம் நாடியது.

வரிசையாய் அமைந்திருந்த வீடுகளின் பின்புறம் சென்றவனின் பார்வை நாலா பக்கமும் அகன்று விரிய, சொர்ப்பமாய் எரிந்து கொண்டிருந்த தெரு விளக்கின் ஒளியில் சமைந்த பாவையாய் கண்ணில் பட்டாள் - அவனது தென்றல் !

இழுத்து வைத்திருந்த மூச்சை ஒரே தவணையில் வெளியே விட்டவன், இது வரை வெளித்தோற்றமாய் கடைப்பிடித்த அவனது நிதானத்தைக் கைவிட்டு, கிட்டத்தட்ட அங்கே ஓடினான்.

தொலைந்து போன உறவுகளின் நினைவுகளில் ஆழ்ந்திருந்த தென்றலுக்குச் சுற்றுபுறம் பற்றிய உணர்வே

இல்லாது போக, அவளது தோளில் விழுந்த கையினால் அதிர்ந்தவள் ''ஆ....ஆஆ'' என வீறிட்டாள்!!

இருளில் புதைந்து போயிருந்த உருவத்தை நெருங்கும் போதே, அவள் தன்னவள் தான் என்பதை அறிந்து கொண்டவனுக்குத் தலை முதல் கால் வரை ஓர் பரவசம் ஓடி மறைந்தது!

சந்தோஷம் ஊற்றாய் பெருக, அவளது தோள் தொட்டவன் - அவள் வீறிடவும் ''ஏய்... தேனு! தென்றல்... தேனம்மா... நா தான்டா... மாமா கண்ணம்மா.... உன்னோட மாமா தேனு...'' என்ற சமாதானத்துடன் அவளை இழுத்தணைத்தான், அவளது மாமன்.

முதலில் முரட்டுத்தனமாய் திமிறிய தென்றல் - சிறிது நேரத்திலேயே அவன் மார்பில் தொய்ந்தாள்.

''மாமா...'' என அடிபட்ட மானாய் வந்த கதறல், இரு இளம் உள்ளங்களின் மனதை ஊடுருவ, இருவருமே மற்றவரது அருகாமையை அனுபவித்து மகிழ்ந்தனர்.

இறுகிக் கொண்டே சென்ற கதிரின் அணைப்பில் அடங்கிக் கொண்டே வந்த தென்றலின் இரண்டு வருட மனக் குமுறல் - அழுகையாய் உருமாறி ஆறென பெருக்கெடுத்து ஓடத் துவங்கியது!

இதுநாள் வரை அவன் மீதிருந்த கோபம் - எரிச்சல் - வெறுப்பு - ஆற்றாமை போன்ற உணர்வுகள் அனைத்தும் புறம் தள்ளப்பட, அடிமனதிலிருந்த காதல் மட்டும் விஸ்வரூபமெடுத்து இருவரையும் தாக்கியது.

தென்றலின் கோபத்தையே எதிர்பார்த்து வந்திருந்த கதிருக்கு அவளது அழுகை அதிர்ச்சியைக் கொடுக்க, அம்பு தைத்த சின்னச்சிறு குயிலாய் அவள் அழுதது நெஞ்சை உருக்கியது



''தேனம்மா... அழாதே டா.... அதான் மாமா வந்துட்டேனே...''

''இனி மேல் உன்னை விட்டுப் போகவே மாட்டேன்...''

''இது வரைக்கும் உன்னைப் பிரிஞ்சிருந்து நான் பட்ட கஷ்டம் போதும்...''

''அய்யாவும் இல்லாம ஆயாவும் இல்லாம... உன்னைத் தனியாளா விட்டதுக்கு நான் தான் அழணும்... நீ இல்லைம்மா... அழாதே தென்றல்!''

அவனது சமாதானங்கள் தொடர்ந்து கொண்டே இருக்க, தென்றலின் அழுகை தான் நிற்கும் நிலையில் இல்லை.

ஒரு கட்டத்திற்கு மேல், தன் நெஞ்சில் புதைந்து போயிருந்தவளை வலுக்கட்டாயமாக பிரித்தெடுத்தவன் ''தென்றல்!'' என்றான் அழுத்தமாக.

இதுவரை - குழைந்து, நெகிழ்ந்து, கரகரத்து, உணர்ச்சிவசத்துடன் வெளிவந்த அவனது குரலிலிருந்த அழுத்தமும், அவன் தன்னை விலக்கி நிறுத்தியதும் மனதை அறுக்க, சட்டென சுதாரித்தாள் தென்றல்.

முன்னொரு முறையும் அவன் இப்படி அணைத்ததும்... உடனே விலக்கியதும் நினைவு வர, ஈரம் படிந்த கன்னத்தைப் புறங்கையால் துடைத்துவிட்டவாறே ''என்னைய திரும்பியும் விட்டுப் போயிடுவியா மாமா?'' என்றாள் கேவலின் ஊடே.

அவளது உடல் மெலிவும், அதற்கும் மேலாய் அவளது அழுகையும் உருக்கி வைத்திருந்த நெஞ்சத்தை,

இந்தக் கேள்வி சுக்குநூறாய் உடைக்க, அவளை மீண்டும் இழுத்தணைத்தான் கதிர்.

''உன்னை விட்டுப் போகவாடி.... இவ்வளவு தூரம் வந்திருக்கேன்!''

''போக மாட்ட தானே?''

''நிச்சயம் போக மாட்டேன்... சாகுற வரைக்கும்...''

''நானும்....'' என்றபோது தென்றலின் காதலே அங்கே பிரதானமாய் இருந்தது.

சில நொடிகள் மௌனத்தில் கழிய, ''எம் மேல உனக்கு எத்தனையோ கோபமிருக்கும்.... அத்தனைக்கும் என்னைய நியாயப்படுத்த முடியாது..''என மெல்ல தன் விளக்கத்தைத் தொடங்கினான் கதிர்.

அவனது ஆயிரம் ஆயிரம் விளக்கங்கள் தனக்குத் தேவையில்லை என்பது போல், ''உன் கூடப் படிச்சப் புள்ளை... அதைப் பத்தி மட்டும் சொல்லு...'' என்ற ஒற்றை கேள்வியிலேயே தன் மனதை வெளியிட்டாள் தென்றல்.

''அவளை நா காதலிக்கவே இல்லை...'' எனப் பட்டென விழுந்த பதில்.

''உன்னைத் தவிர வேற யாரையும் கல்யாணம் செய்துகிட்டா நான் செத்துப் போய்டுவேன்னு சொன்னேன்.. அதைக் கேட்காம...'' என அவன் தொடர்ந்தது எதுவும் அவளுக்குக் கேட்கவே இல்லை. அதுவரை பேசியதே, காதல் கொண்ட நெஞ்சத்திற்குப் போதுமானதாய் இருந்தது.

அவள் முகம் தெளிந்து மிளிர்ந்தது மனதை உற்சாகக் கடலில் மூழ்கச் செய்தாலும், தான் கொடுக்க வேண்டிய



விளக்கங்களை மறக்காமல் கொடுக்கத் துவங்கினான் கதிர்.

''எதுக்கு உன்கிட்ட மன்னிப்பு கேட்கிறேனோ... இல்லையோ... அய்யா-ஆயா இறந்த சமயத்தில் உன்னோட இல்லாம இருந்ததுக்கு மன்னிப்பு கேட்டே ஆகணும்.. தேனு!

''உன்கிட்ட சொன்ன ஒரு வார்த்தைக்காக, இரண்டு வருஷம் ஊர் பக்கமே வராம இருந்தது ரொம்பப் பெரியத் தப்புதான்.. ஊருக்கு வரலைன்னாலும், வேற விதத்திலாவது உன்னோட தொடர்பில இருந்திருக்கணும்... அதையும் செய்யாம... என்னை மன்னிச்சிடு தென்றல்!

''மனசார மன்னிப்பு கேட்கிறேன்! தயவு செஞ்சு என்னைய மன்னிச்சிடு!''

அவனது மன்னிப்பு முடிகையில் ''ம்ம். ஆயா சாகையில அய்யா இருந்தாரு... ஆனா அய்யா சாகையில... உன்னைய ரொம்பத் தேடி வந்துச்சு மாமா...'' எனக் கூறி, அவனிடம் ஒண்டினாள் அச்சிறு பாவை.

இரு மூத்த உறவுகளைத் தொலைத்த துக்கத்தை இருவரும் ஆற்றிக் கொண்டிருக்கையிலேயே, ''அவுக சாவுக்கு நாந்தேன் உரம் சேர்த்துப்புட்டேன் மாமா... என்னைய நினைச்சே ரெண்டு உசிரும் போய்டுச்சு...'' என்றாள் தென்றல் உறுத்தலுடன்.

''நீ இல்லைம்மா.... நான் தான் எல்லாத்துக்கும் காரணம்...''

''இல்ல மாமா.. உன்னோட ஒத்த பாவனையா நானும் இருந்திருந்தா.. அய்யா - ஆயா நிம்மதியா இருந்திருப்

பாக...'' என அதை மறுத்தவள் ''தேவையில்லாத ஏழரையை நா ந்தேன் கூட்டிப்புட்டேன்.. நா பண்ண சண்டித்தனம் தாங்காமத்தேன்.. நீயும் ஊருப் பக்கம் வராது போய்ட்டே... பெரியவுக மனசும் நொந்து போச்சு...''

''யாருமில்லாம ஒத்தாளா... அனாதையா இருந்தப்ப.. ரொம்ப யோசிச்சிருக்கேன் மாமா... கூறு கெட்டத்தனமா நா லந்து பண்ணது தான்... நடந்து போன அம்புட்டுக்கும் உரம். இல்லையா மாமா....''

நடுவில் புக முயன்றவனைத் தடுத்துவிட்டு ''இல்ல மாமா... நம்ம செழிப்பா இருக்கிறதுக்கின்னு நீ மேல படிக்கிறதா சொன்னதை ஒத்துக்கிடாம.. உன்னைய நோக வச்சு... அவிகளையும் படுத்தி... உம் மேல இருந்த ஆத்திரத்தில் புத்தி மழுங்கிப் போயி... ரப்பு ராங்கித் தனமா.. இங்கிட்டு வந்து உட்கார்ந்துக்கின்னு.. அம் புட்டுப் பேரையும் நோக வச்சுப்புட்டேன்...''

''சோலிக்குன்னு இங்கிட்டு வந்ததும் த்தேன்... எனக்கு உறைச்சுச்சே...''

''உன்னைய இனிமைக்கும் பாக்கக் கூடாதுன்னு வைராக்கியமா கிளம்பி வந்துப்புட்டேன்... ஆனா... முடியல மாமா...''

''அய்யா-ஆயா இருக்கையிலேயே உன்னைய தேடி அலைஞ்ச மனசை... உம் மேல இருந்த ஆத்திரம் உலுக்கிப்புடிச்சு... இப்போ... தனியா இருக்கயிலே... கோணங்கித் தனமா உன்னைய விட்டுப்புட்டேனோன்னு தவியா தவிச்சுப் போய்ட்டேன்...'' என்ற போது அவளது



குரலிலிருந்த நடுக்கம், அவளது துக்கத்தைப் படம் பிடித்துக் காட்டியது!

''அந்தப் புள்ளையோட அப்பனும் ஆத்தாளும் பேசிட்டுப் போனதில் கணண்டுட்டு கிடந்த மனசு.... நீ என்னைய கட்டிக்கிட மாட்டேன்னு நொந்து போச்சு மாமா...''

''ஒரு கோபத்தில...அவுக மகளுக்கு உன்னைய கட்டி வைக்கச் சொல்லிப்புட்டனே ஒழிய... உன்னைய என்னால மறக்க முடியல மாமா..''- இப்போது கோபமும் தாபமும் ஒருங்கே கலந்திருந்தன.

''நீ... எனக்கு வேணும்! எனக்கு மட்டும் த்தேன் வேணும்!'' -- இதிலிருந்தது அப்பட்டமான உறுதி! அசைக்க முடியாத வேண்டுதல்! நெஞ்சைத் துளைக் கும் காதல்!

அதற்கு மேல், தென்றலின் தவிப்பை அவளது வருங் காலக் கணவனால் கேட்க, முடியவில்லை!

''போதும் தேனு! ரெண்டு பேருமே... ஆயுசுக்குமான கஷ்டத்தை அனுபவிச்சிட்டோம்... போதும்! இதுக்கு மேல இதைப் பத்தி நாம பேசுறதே கூடாது...'' என்றான் உள்ளார்ந்த குரலில்.

அவனது கூற்றை ஒத்துக் கொள்பவள் போல் தென் றலும் வாளா இருக்க, ''இங்கிருந்து கிளம்பலாம் தேனு! நாளைக்குக் காலையில... நாம ஊரில இருந்தாகணும்!'' என்றான் கதிர், அடுத்தக் கட்டப் பணியாய்.

''ம்ம். போவலாம்.... ஆனா....'' என அவள் இழுக்க,

''என்னம்மா?''

''எதுக்கு மாமா... ஊருக்கு ஒரு பேரு வச்சிருக்கே? வந்தவுக ரெண்டு பேரும்... உன்னைய கதிர்ன்னு சொன்னாக... அய்யா அதில த்தேன் நொந்து போச்சு....''

அவளது கேள்வியில் தலையில் அடித்துக் கொண்ட கதிர், ''ஊருக்கு ஒரு பேரெல்லாம் இல்லைடி....எனக்கு வச்ச பேரு ''செங்கதிர்சோழன்'' தான்... எப்பவுமே எனக்கு அந்தப் பேரு அவ்வளவா பிடிக்காது.. ஸ்கூல்-ல எல்லாரும் கேலி பண்ணிட்டே இருப்பாங்க....''

''அதனால, பத்தாவது போகும் போது அம்மா-கிட்டச் சொல்லி... என் பேர்-ல எனக்குப் பிடிச்ச ''கதிர்''ங்கிற வார்த்தையை மட்டும் என்னோட பேரா.... ஸ்கூல்-ல மாத்திக் கொடுத்தேன்... அதுவே படிக்கிற இடம் எல்லாத்திலையும் வந்திடுச்சு..... ஆனா, ஊர்-ல என்னை சோழன்னே கூப்பிட்டுப் பழகிட்டதால இங்க யாருக்கும் தெரியாம போச்சு....''

''லூசு....லூசு.... இதுக்கெல்லாமா மனசைப் போட்டு வருத்திக்கிறது?'' என்றான் நீண்ட விளக்கமாக.

''அதில்ல.... ஊருக்கு ஒரு.....'' என்ற தென்றலை இடைமறித்து, ''ஊருக்கு ஒரு பேர்ல... ஆயிரம் கல்யாணம் பண்ணியிருக்கேன்னு நினைச்சியாக்கும்.....'' என்றான் கதிர் நமட்டுச் சிரிப்புடன்.

''அய்யே! ஆசை த்தேன்... ஊருக்கு ஒரு பொண்டாட்டி கேட்குதா?'' எனத் தென்றலுக்கும் அவனது சிரிப்பு தொத்திக் கொண்டது.

''அப்படி மட்டும் பண்ணிட்டு உன் முன்னாடி நிக்க முடியுமா? என்னை ரெண்டா வகுந்திருக்க மாட்டே?'' என்றான் கதிர் பயந்தவன் போல்.



''பெரிய பயந்தவரு.... போ மாமா...''

''பயந்தவன் தான்டி.... உனக்கு மட்டுமில்ல... உன்னோட அண்ணனுக்கு, உன்னோட அம்மாவுக்கு... எல்லாருக்குமே!'' என்றான் கதிர் சந்தோஷமாகவே.

''அண்ணனா? யாரு மாமா?'' என விழித்தவளுக்குப் பதில் சொல்லாமல், ''அதெல்லாம் போற வழியில சொல்றேன்.... நீ முதல்ல கிளம்பு.... இங்க யார்கிட்டச் சொல்லணும்?'' என அவளை அவசரப்படுத்தினான்.

''ரமாக்கா-கிட்டக்க மட்டும் சொல்லணும்... அவுக த்தேன் என்னைய இங்க கூட்டியாந்தாக....''

''யாரு ரமாக்கா? நம்ம ஊரா? ஹோ.... காசியோட அக்கா.... இல்லையா?''

''ம்ம். ஆமா ! உனக்குத் தெரியுமா?''

''காசிகிட்ட எத்தனை தடவை கெஞ்சினேன் தெரியுமா... நீ எங்க இருக்கன்னு சொல்லவே மாட்டேனுட்டா...''

''அவளைக் குத்தம் சொல்லாதே மாமா... நா த்தேன் நா இருக்க இடத்தைச் சொல்லக் கூடாது.... மீறிச் சொன்னாக்கா கொளுத்திக்கிடுவேன்னு.....''

இப்போது பொறுமையற்று அவளைக் குறுக்கிட்டான் கதிர் - ''எப்போ பார்த்தாலும் இது என்ன பேச்சுன்னு கேட்கிறேன்... கேட்கிறவங்க மனசு என்ன பாடு படும் தெரியுமா? கிறுக்கச்சி! இனி.. ஒரு தடவை இப்படிப் பேசாதே!'' என்றான் கண்டிப்புடன்.

அதில் தென்றல் அழ எத்தனிக்க, அவளது காதலனுக்கு உருகிவிட்டது.

''சரி... சரி.. சீக்கிரம் நட....'' என்றவன் ரமாக்காவின் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

தூக்கத்திலிருந்த ரமாக்காவிடம் தென்றல் கிளம்பு வதை அவர்கள் கூற, அதிகாரிகளிடம் கூற வேண்டுமே என முதலில் தடை விதித்தவர், கதிர் அவர்களது திருமணம் பற்றிச் சொன்னதும் - அதிகத் தடங்கலின்றி அனுப்பி வைத்தார்!

தென்றலின் உடைமை என்றிருந்த இரண்டு செட் உடைகளை எடுத்துக் கொண்டு, கதிருடன் கிளம்பிய வளின் மனது நிறைந்திருந்தது!

இரண்டு வருடங்களாய் அவனைப் புரிந்து கொள்ளாமல், தான் அனுபவித்த வேதனைகளுக்கு முற்றுப் புள்ளியாய் அமைந்த அந்தப் பயணத்தை அனுபவிக்கத் துவங்கி னாள்!

இரண்டு ஆண்டுகளாய் தத்தம் வாழ்வில் நடந்த அனைத்தையும் உள்ளே வைத்துப் புதைத்துக் கொள்ளா மல், இருவரும் மனம்விட்டுப் பகிர்ந்து கொள்ள, அப் பயணம் அவர்களுக்கு மறக்க முடியாததாய் இருந்தது.

முன்னெரெல்லாம் அவளது துன்பத்தை முன்னிறுத்தி, பல விஷயங்களை வெளிப்படையாய் பகிரமாலிருந்த கதிர் - இப்போது தன்மானம், சுயகவுரவம், ரோஷம், கோபம் என்று எதையும் மனதில் வைத்துக் கொள்ளா மல், தன் மனதிலிருந்த காதல் உட்பட அனைத்தையும் கொட்டி முடித்தான்!

நான்காண்டுகளாய் விக்னேஷைப் பற்றிக் கூடப் பேசியிராத கதிரின் பேச்சு, அவனது படிப்பு, வேலை யிடம், யோகா எனத் தூரமாய் பயணித்து, பிரபாவதி, மித்ரா, அவளது நோய் என அனைத்திலும் பயணித்து வந்தது!!



அவர்களது பேச்சு முடியும் தருவாயில் கொடைக் கானலும் வந்திருக்க, அங்கே அவர்களுக்காக விக்னே ஷின் வீட்டுக் கார் காத்திருந்தது.

''யாரோட பளஷர்... மாமா.''

''பிரபா அம்மா அனுப்பியிருக்காங்க....'' என்றவன், அதற்கு மேல் அவளைப் பேச அனுமதிக்காது ''சீக்கிரம் ஏறு...'' எனத் துரிதப்படுத்தினான்.

வெள்ளகவியை அவர்கள் அடைந்தபோது மணி ஆறாகியிருக்க, தென்றலின் வீட்டு வாசலில் மித்ரா, மகாராணி, பிரபாவதி மற்றும் தென்றலின் தோழிகள் சில பேர் காத்திருந்தனர்.

வண்டியை விட்டு இறங்கியவளைப் பேசக் கூட விடாமல் ''வாம்மா... நேரமாகிடுச்சு! சீக்கிரம்... சீக்கிரம்...'' எனக் கதிருக்கும் மேலாய் அவளை விரட்டி தயாராக வைத்தார், பிரபாவதி....

அழகிய அரக்குப்பட்டுடுத்தி வந்தவளின் கருத்தக் கன்னங்கள் சிவந்திருப்பது வெளிப்படையாய் மிளிர் வதற்கு அவளது காதலே காரணமோ?!

கதிரும் வெண் பட்டு வேஷ்டியில் தயாராக இருக்க, அங்கிருந்தோர் அனைவரும் பெருமாள் கோவிலுக்கு விரைந்தனர்.

அடுத்த அரை மணி நேரத்தில், தென்றலின் சங்கு கழுத்தில் கதிரின் கரங்கள் மங்கள நாணைப் பூட்டி யிருக்க, அங்கே சந்தோசம் மட்டிலுமே முழுமையாக நிறைந்திருந்தது!



# 19

அம்மையும் அப்பனும் நடு நாயகமாய் வீற்றிருந்த பொன் மஞ்சள் கயிற்றை, கதிரின் வலிய கரங்கள் தென்றலின் மென் கழுத்தைச் சுற்றி எடுத்துச் செல்ல, இருவருக்குள்ளுமே ஓர் பரவசம் ஓடி மறைந்தது!

ஆண்டுக்கணக்காய் நெஞ்சில் வேர்விட்டிருந்த காதல் அல்லவா!?

படிப்பு, வேலை, கடன், தன்மானம் எனப் பல காரணங்களால் தள்ளிப் போன இத்திருமணத்தை எண்ணி ஏங்காத நாட்கள் தான் உண்டோ?!

தங்களது நல்வாழ்விற்கென கஷ்டப்பட்ட உள்ளங்கள் அனைத்தும் விண்ணிலிருந்து வாழ்த்த, பூவுலகில் ஓர் இனிய வாழ்வைத் துவக்கினர் இருவரும்.

திருமணத்திற்கென்று வந்திருந்த ஊரார் வாழ்த்தி விட்டுச் சென்றதும், மணமக்கள் இருவரும் பிரபாவதியிடம் ஆசி வாங்க எத்தனிக்க, அந்த நேரத்திற்குச் சரியாக வந்து சேர்ந்தார் கோடீஸ்வரன்.

''கொஞ்சம் முன்னாடி வந்திருக்கக் கூடாது...'' எனக் கடிந்து கொண்டபோதும், ''சரி... சரி... ஆசீர்வாதம் பண்ணவாவது வந்தீங்களே! வாங்க!'' என்று கணவருடன் சேர்ந்து நின்றார், பிரபாவதி.



தன்னைத் தென்றலுக்கு அறிமுகப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, 'அம்மா தென்றல், என் பேரு கோடீஸ்வரன்...'' எனத் துவங்கியவரை ''தெரியும்ங்க. விக்கினேஸ் அண்ணனோட அப்பாரு! மாமா சொல்லியிருக்கு...'' என்ற சொல்லுடன் சிரிக்க வைத்தாள் தென்றல்.

தங்களைப் பணிந்து எழுந்த தம்பதியரை மனதார வாழ்த்தியவர்கள், தங்கள் பரிசென தங்க வளையல்கள் நான்கை வெளியே எடுத்ததும் ''உங்க ஆசி மட்டுமே போதும்மா... இதெல்லாம் வேண்டாம்...'' என்று சொன்னது கதிர் மட்டுமில்லை. தென்றலும் தான்!

''அடேங்கப்பா.... ஒத்த மனசு தான் ரெண்டு பேருக்கும்!'' எனக் கன்னத்தில் கை வைத்து வியந்த பிரபாவதியை முந்திக் கொண்டு, ''இது நாங்க... எங்க வீட்டுப் பெண்ணிற்குக் கொடுக்கிற பரிசு, தாய் வீட்டுச் சீதனத்தை மறுக்கக் கூடாது!'' என்றார் கோடீஸ்வரன்.

அப்போதும் கதிரின் முகத்தில் ஓர் தயக்கம் இருப்பதைக் கண்ட பிரபாவதி, ''நாங்க மனசார கொடுக்கிற பரிசை வேண்டாம்ன்னு சொல்றது.... எங்களை நீ ஒதுக்கி வைக்கிற மாதிரி...''' என்பதற்கு முன்னர்,

''சாரி மா! அதை அவ கையிலேயே போட்டு விடுங்க...'' என்ற சம்மதத்தில் முடித்தான், கதிர்.

தயங்கி நின்ற தென்றலைக் கண்ணசைவில் கையை நீட்டுமாறு சொன்னவனைப் பார்க்கப் பார்க்க, அந்தத் தாய்க்குப் பூரிப்பாய் இருந்தது!

நெஞ்சம் நெகிழ, தென்றலின் கைகளில் வளையலை அணிவித்தவர் ''அடுத்த வருஷமே.... உன்னோட வளைகாப்புக்கு நான் வளையல் அடுக்கணும்'' என்றார் ஆசியாக.

அவரது அந்த வாழ்த்தில் தென்றலின் கன்னத்தில் ஏறியிருந்த சிவப்பு மேலும் கூட, அதை ரசனையுடன் பார்த்திருந்தான் அவளது கணவன்.

தென்றலின் கன்னத்தை வருடிவிட்டு, கதிரிடம் வந்த பிரபாவதி ''குடும்ப வாழ்க்கை நல்லபடியா நடக்கணும்ன்னா காதலும் தன்மானமும் ஒரே கோட்டில் பயணிக்கக் கூடாது, கதிர்! பார்த்து நடந்துக்கோ!'' என்றார் பெரியவராக.

''கண்டிப்பாம்மா'' என்ற அவனது அழுத்தமான பதிலே - அவன் அதை உணர்ந்துவிட்டதை உணர்த்த, பிரபாவதியின் நெஞ்சில் நிம்மதி படர்ந்தது!

அதற்குள், தனது கைப்பெட்டியிலிருந்து ஓர் கவரை எடுத்த கோடீஸ்வரன் ''இது உங்க கல்யாணத்திற்கு விக்கி கொடுக்கிற பரிசு'' எனக் கூறி, ஐந்து நாள் தேனிலவுக்கான பயண விவரத்தைக் கொடுத்தார்.

முன்னர் போல் மறுக்காமல், சிரித்த முகமாக வாங்கிக் கொண்ட கதிரின் முன்னே மித்ரா வந்து நிற்க, ''தேங்க்ஸ் மித்ரா!'' என்றான் அவன் ஆத்மார்த்தமாக.

''ஹே! நோ...ஃபார்மாலிடீஸ் கதிர்!'' என்று சிரித்தவள், '' என்னை யாருன்னு தெரியுதா? உங்க மாமா சொல்லியிருக்காரா?'' என்றாள் தென்றலிடம்.

''ஓ தெரியுமே! உங்க பேரு... மித்ரா. நீங்க, மாமா, விக்கினேஸ் அண்ணே எல்லாரும் ஒட்டுக்கா படிச்சவுக....''

''சரியான திமிர்பிடிச்சவ... பிடிவாதக்காரி.. பணமிருக்கிற மிதப்பு... இதெல்லாம் கூட சொன்னாரா... உன்னோட மாமா?''



''யாத்தே! அப்படியெல்லாம் சொல்லலை... கொஞ்சம் படபடப்பா பேசுவீகன்னு தான் சொல்லுச்சு.....''

''ரொம்ப நாகரீகமா சொல்லியிருக்கார்... பரவாயில்லை! என்னைப் பத்தி வேறென்ன சொன்னாரு.... அவ்வளவு தானா?'' என வேண்டுமென்றே வம்பிழுத்தாள் மித்ரா.

அவளது வம்பு புரிய, தென்றலிடம் ஜாடை காட்டிய கதிரைக் கவனியாமல் ''நீங்களும் விக்கினேஸ் அண்ணனும் சேர்ந்தா நல்லா இருக்கும்ன்னு நினைச்ச வரைக்கும்... மாமா சொல்லியிருக்கு!'' - மாமனைப் பற்றிய பெருமிதத்தில், அங்கிருந்த அனைவரையும் வியந்து நோக்க வைத்தாள் தென்றல்.

தென்றலின் பேச்சைக் கேட்டிருந்த அனைவருமே, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, மித்ராவின் முகத்தில் பெரும் வியப்பு!

அவளது உயர்ந்த புருவங்களைப் பார்த்து நமட்டுச் சிரிப்பாய் சிரித்த பிரபாவதியைக் கண்டதும் மித்ரா சட்டென சிரிக்கவே, ''எதுனா.... தப்பாச் சொல்லிப்புட்டேனா... மாமா!'' என ஓர் பரிதாபப் பார்வையுடன் கதிரின் கையைப் பிடித்துக் கொண்டு அவனை அண்ணாந்து பார்த்த தென்றலின் வெள்ளை மனது அனைவரையும் மனம் விட்டுச் சிரிக்க வைத்தது.

அந்த சிரிப்பலை ''இது உனக்குத் தேவையா? இல்ல.... இது உனக்குத் தேவையான்னு கேட்கிறேன்...'' எனத் தனது ஆள்காட்டி விரலால் தன்னையே சுட்டிக் காட்டிக் கொண்டு, மித்ரா புலம்பியதில் பெரிதானது!

''போதும் மித்து.... விளையாட்டு!'' என்ற அப்போது முன்னே வந்த மகாராணி,

''நாங்க செஞ்ச தப்பை மன்னிக்கச் சொல்லிக் கேட்க எங்களுக்கு எந்தவிதமான தகுதியும் இல்லை.... இருந்தாலும் கேட்கிறோம்!'' எனக் கூறி, துணிகள் அடங்கிய ஓர் பெரிய பெட்டியைத் தென்றலின் அருகே வைத்து, ''இது எங்களோட பரிசு!!'' என்றார்.

''இதெல்லாம் எதுக்குங்கம்மா?! நீங்க மட்டும்... என்னைய டி.வி. பொட்டில பார்த்திட்டு மாமாவுக்கு விவரம் சொல்லாம இருந்திருந்தீங்கன்னா.... நாங்க இரண்டு பெரும் ஒத்தாளா இருந்து அவதிப் பட்டிருப்போம்...... அதுக்கும் மேலா என்ன பரிசுங்க அம்மா வர முடியும்?'' என்றாள் தென்றல், தன் கணவனின் உணர்வுகளையும் தன்னதாய் வெளிக்காட்டி!

''ஹே, இதெல்லாம் போங்காட்டம்! பிரபாம்மா கொடுத்ததை மட்டும் வாங்கிட்டீங்க... நாங்களும் தான் அம்மா வீடு! இதையும் வாங்கிக்கோங்க!'' என மித்ரா கூற, தென்றலோ கதிரின் காதை மெல்லக் கடித்தாள்.

''என்ன சொல்றா... உன் பெண்டாட்டி?'' என்ற பிரபாவதியின் கேள்விக்கு,

''ம்ம். மித்ரா பேசுறது புரியலையாம்... போங்காட்டம்ன்னா என்னன்னு கேட்கிறா....'' என்றான் கதிர் நமட்டுச் சிரிப்புடன்.

அதில் மேலும் ஓர் சிரிப்பலை பரவியதில், ''இதுக்குப் பேரு தான் காலக் கொடுமைங்கிறது! அவ பேசினதில.... முக்கால் வாசி எனக்குப் புரியல. இதில.... நான் பேசினது.... ஹ்ம்ம் கடவுளே!'' என மித்ரா அங்கலாய்க்க,



''எதுங்கக்கா புரியலை....'' என மீண்டும் பரிதாபமாய் முழித்தாள் தென்றல்.

இப்போது, தன் மனைவியின் தோளைச் சுற்றிக் கைப்போட்டு அவளைத் தன்னுடன் இறுக்கியவன் ''அவ.... சும்மா வம்பு பண்றா... நீ பயப்படாதே!'' என்றான் தெம்பூட்டுவது போல்.

இதைக் கண்ட மற்றவர்கள் ஓஹோவெனச் சிரிக்க, தென்றலின் பாடு தான் பெரும்பாடாய் போனது!

''விடு மாமா... வெட்கமா இருக்குது.... விடு மாமா'' என்ற அவளது குரல் அவளுக்கே கேட்காமல் வெளிவர, மேலும் சந்தோசம் கூடியது!

கதிரின் நண்பர்கள் வந்து சென்றதும், தென்றலின் தோழிகள் சிலர் வாழ்த்துத் தெரிவித்துவிட்டுச் சென்றனர்.

அதில் ஒருத்தியான காசி, ''என்னைய மன்னிச்சுக்குங்க யண்ணே! ரொம்பக் கடுசா பேசிப்புட்டேன்... இந்தப் புள்ள த்தேன் சொல்லவே கூடாதுன்னு என்னைய சத்தியம் பண்ணச் சொல்லி...'' என மன்னிப்பு கேட்கவும்,

''பரவாயில்லைமா... என்னைப் பத்தி நல்ல அபிப்ராயம் இல்லாத நேரத்தில... நீ நடந்துக்கிட்டது சரி தான்!'' என்றான் கதிர், புரிந்து கொண்டவனாய்.

அதில் குற்ற உணர்வு மட்டுப்படவே ''ஊருக்குப் போறதுக்கு முன்ன... எங்க வீட்டு விருந்துக்கு வாங்க'' என அவள் அழைப்பு விடுக்க,

கதிர் பதில் சொல்லும் முன்னர் ''மாமாவுக்கு வேலயிடத்தில அதிகமா விடுப்பு எடுக்க முடியாதாம்.... அதுக்காண்டி, நாங்க இன்னைக்கே ஊருக்கு ரயிலேறப்

போறோம்ன்னு சொல்லிச்சு.... அடுத்த வாட்டி வரையில வாரோம், காசி! வெருசா போறதால ரோஜாத் தோட்டத் தில கூட..... யார்கிட்டயும் சொல்லிக்க முடியாது போல... நீ சொல்லிடுதியா?'' என்றாள் தென்றல் வீட்டரசியாய்.

அதற்குப் பதிலாய் ''அடுத்த வாட்டி வரையில கண் டிப்பா வரணும்!'' என மீண்டும் அழுத்திக் கூறிய காசி,

''தோட்டத்தில யாருகிட்டச் சொல்லப் போற? அதேன்... எல்லாரும் இன்னைக்கே வந்துட்டாகளே! சுகுணாவுக்குச் சொல்லணுமாக்கும்? ஒண்ணும் தேவையில்ல... தேள் நாக்கால அது கொட்டுறதைக் கேட்கிறதுக்கா? செவண னேன்னு ரயிலேறுற சோலியைப் பாரு.....'' என்றாள் தோழியின் கண்டிப்புடன்.

அதன்பின்னர் கல்யாண விருந்து முடிந்து, ''அடுத்த விடுமுறையில் திருச்சி வரவேண்டும்'' என்ற அழைப்புடன் பிரபாவதி மற்றும் மகாராணியின் குடும்பம் கிளம்ப,

கிளம்புவதற்கு முன்னர், மணமக்களைத் தனியாக அழைத்த பிரபாவதி ''வேலைக்குச் சேர்ந்ததும் அடிக்கடி லீவ் எடுக்க முடியாதுன்னு சொல்றதால விடுறேன்... இல்லைன்னா ரெண்டு வாரத்துக்கு நம்ம வீட்டில வச்சிருந்து, தென்றல்கிட்ட உன்னைப் பத்தின எல்லா உண்மையும் சொல்லியிருப்பேன்'' என்றார் நமட்டுச் சிரிப்புடன்.

''கல்யாணமான அன்னைக்கே குடும்பத்தில குழப் பத்தை உண்டு பண்ணாதீங்கம்மா...'' எனக் கதிர் அழுவது போல் பாவனை செய்ய,

''நாங்கெல்லாம் எதுக்குடா உன் குடும்பத்தைக் குழப் பணும்? நீயே அந்த வேலையை நல்லபடியா செய்வியே?!'' எனக் கிண்டல் செய்த பிரபாவதியுடன் சேர்ந்து தென்ற லும் சிரிக்கவும்,



''அம்மா....'' எனச் செல்லமாய் முறைத்தான், பிள்ளை!

''தென்றலை நல்லா பார்த்துக்கோ! எதுனாலும் மனம் விட்டுப் பேசுங்க! ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுத்து நடந்துக்கோங்க!'' என்றதோடு அவர்கள் சென்றுவிட, தம்பதியர் இருவரும் வீட்டிற்குச் சென்றனர்.

தங்களை விட்டுச் சென்றாலும், அவர்களது ஆசியால் தங்களை இணைத்து வைத்தப் பெரியவர்களின் படங் களின் முன்னே பணிந்து எழுந்தவர்களின், கண்களில் கண்ணீரும் மனதினில் ''நாங்கள் இருவரும் ஆண்டாண் டுக்கும் இணைந்து மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என வாழ்த்துங்கள்!'' என்ற வேண்டுதலுமே நிறைந்திருந்தது.

பிள்ளைகளின் நலமே தங்களது வாழ்வென்றிருந்த பெரியவர்களும் அதற்கு மாறாகவா நினைக்கப் போகி றார்கள்! மறைந்த அனைவருமே, தெய்வத்தின் நிலை யில் நின்று - நிறைந்த வாழ்வும், குறையாத செல்வமும், வற்றாத சந்தோஷமும் பெற்று நீடுழி வாழ வாழ்த் தினர்.

நல்லோரின் ஆசியுடன் தனது சொந்த ஊரை விட்டுக் கிளம்பிய கதிரின் முகத்தில் பெருத்த நிம்மதியே இருந்தது - சொன்ன சொல்லைக் காப்பாற்றிவிட்ட நிம்மதி; நல்ல வேலையில் - அதுவும் தனது லட்சிய வேலையில் அமர்ந்துவிட்ட நிம்மதி; இனிவரும் காலமெல்லாம் கைப்பிடித்தவளை எந்தவிதமான குறையுமின்றி வைத்துக் கொள்ள முடியும் என்ற நிம்மதி!!

மணம் கொண்டவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு நடந்த தென்றலின் முகத்திலிருந்தது பெருமிதம்

அல்லாது வேறேது? படிப்பு, அழகு, பணம், அந்தஸ்து எனத் தன்னைவிட உயர்ந்தவள் ஒருத்தியை நிராகரித்து விட்டு தன்னை மணந்திருக்கும் மணாளன் கிடைக்க அவளும் தான் கொடுத்து வைத்திருக்க வேண்டாமோ?!

பரவசம் எய்திய மனதுடன் வெள்ளகவியை விட்டு வெளியேறியவர்கள் திண்டுக்கல் ரயில் நிலையத்தை அடைந்து, சென்னைக்கு ரயிலேறினர்.

அதிகாலையில் சென்னை எக்மோர் ரயில் நிலையத்தை அடைந்து அடுத்த ரயிலுக்காக சென்ட்ரல் ரயில் நிலையம் சென்றபோது, தென்றலின் பார்வை ரோட்டிலேயே தான் இருந்தது! அப்படியொரு வேடிக்கை!!

கணவனின் இழுப்பிற்கு ஆட்பட்டு மீண்டும் ஓர் ரயில் நிலையத்திற்குள் நுழைந்ததும் ''அய்யே! என்ன மாமா.. இறங்கின இடத்துக்கே திரும்பவும் வந்துட்டோம்? சாமான்... எதுனா மறந்துட்டியா?'' என்றாள் அரும்பெரும் கண்டுபிடிப்பாய்.

''என்ன அய்யே?! ஏறின இடத்துக்கே திரும்ப வரது கூடத் தெரியாம பஸ்-ல பராக்கு பார்த்திட்டு வந்தே இல்லை.... இப்ப வந்து அய்யே புய்யேங்கிற...'' என்ற கணவனின் முகத்தில் துளியும் விளையாட்டில்லாமல் கேள்வியே இருக்க, கேட்டிருந்தவள் குழம்பிப் போனாள்.

''ஹான்.... அது... அது.... ஆன்... எனக்கு என்ன தெரியும்.... இந்த ஊரைப் பத்தி... என்னைய நம்பியா வண்டியில ஏறின? முதல்ல... நானா வண்டி புடிச்சேன்? நீ தானே பஸ்-ல ஏத்தி கூட்டியாந்தே...'' என நுனியைப் பிடித்துவிட்டத் திருப்தியில் துள்ளியது கன்னியின் குரல்.



''அப்பா.... என்ன அறிவு?! என்ன அறிவு!?'' எனச் சிலாகித்தவன், ''இவ்வளவு தூரம் கூட்டிட்டு வந்த எனக்கு..... உன்னை வீட்டில சேர்க்கத் தெரியாதா?'' என்றான் சிரிப்புடன்.

''அதைத் த்தேன் கேட்குதேன்... வீட்டுக்குக் கூட்டியாராம.... இங்கிட்டு கூட்டியாந்திருக்கியேன்னு...'' என அவள் தன் கருத்திலேயே நிற்க, ''நம்ம வீடிருக்க ஊரு இதில்ல.... இன்னும் 34 மணி நேரப் பிரயாணத்துக்கு அப்புறம் தான் வரும். அங்க போறதுக்கான ரயிலேறத் தான் இங்க வந்திருக்கோம்!'' என்றான் விளக்கமாக.

''யாத்தே! முப்பது மணி நேரமா?! ரயில்லயே போவணுமா?'' என முதலில் வியந்தவள்,

''இதை நீ முன்னமே சொல்லியிருக்கலாம் இல்ல... இதேன் நாம இருக்கப் போற ஊருன்னுட்டு நா பாட்டுக்குப் பராக்குப் பார்த்திட்டு வந்தேன்.... நாலு கடை கன்னி தெரிஞ்சு வச்சுக்கணும்-ல.... அதுக்குத் த்தேன்!'' என அவனை முடிவில் குறை கூறினாள்.

''முன்னமே சொல்றதா? நூறு தடவைக்கும் மேலா சொல்லலை....''

''சொன்ன...ஆனா, தூங்கி முழிச்சதும் ஊரு வந்திருச்சுன்னு நினைச்சுப்புட்டேன்...'' என்றாள் தென்றல், அசடு வழிய...''

இதே போன்ற சுவாரஸ்யத்துடன் அடுத்து வந்த நாற்பது மணி நேரங்களும் கழிய, பிரயாணம் செய்ததற்கான களைப்பு சிறிதுமில்லாமல் இருவரும் டெஹ்ராடன் ரயில் நிலையத்தில் இறங்கினர்.

DRDO வளாகத்தினுள் நுழையும் போதே ''தேனு, போனதும் நான் வேலைக்குப் போயே ஆகணும்.... அதனால், நீ தனியா தான் இருக்கணும்... சூதானமா இருந்துக்கோ!'' எனக் கூறிய கதிரை நெருங்கி அமர்ந்து கொண்டவளின் கண்களில் மிரட்சி.

அதில் உள்ளம் கனிந்து ''என்னம்மா?'' என அவன் வினவ,

''ஒரே போலீஸ்-சா இருக்குதே மாமா! ரொம்ப திருட்டும் பொரட்டுமா இருக்குமோ?'' என அவள் அஞ்ச, மனம் விட்டுச் சிரித்தான் செங்கதிர் சோழன்.

''இங்க திருட்டுங்கிற பேச்சுக்கே இடமில்லை. பயமில்லாம இருக்கலாம்... இது நம்ம நாட்டோட தற்காப்புக்கான ஆராய்ச்சி செய்ற இடம்... அதனால பாதுகாப்பு அதிகம் போட்டிருக்காங்க... அவ்வளவு தான்!'' எனப் பொறுமையாக விளக்கியவன், ஒரு நூறு ''பத்திரம்'' மற்றும் இருநூறு ''ஜாக்கிரதையா இரு... சாயந்திரம் சீக்கிரமே வந்துடுறேன்.''

உடன் வேலைக்குக் கிளம்பிச் செல்ல, தென்றலுக்கு அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட சிறு வீடு வேடிக்கைக்கான தளமானது!

இது நாள் வரை, ஒரே அறையை வீடென்று வாழ்ந்தவளுக்கு அந்த ஒற்றைப் படுக்கையறை வீடே மாளிகையாய் தோன்றியது!

கட்டாந்தரையும், நைந்து போன கம்பளியுமாய் உறங்கியவளுக்கு அங்கிருந்த ஒற்றைக் கட்டிலும், அதில் வேயப்பட்டிருந்த பஞ்சு மெத்தையும் சொர்க்கமாய் காட்சியளித்தன!



இருந்த மூன்று செட் உடைகளை ஓர் துணி பைக்குள் அடைத்து வைத்திருந்தவளுக்கு, ''மித்ரா கொடுத்த டிரஸ் எல்லாத்தையும் இந்த அலமாரி-ல கீழ் தட்டில வச்சுக்கோ! மேல என்னோடது இருக்கட்டும்!'' என்று கணவன் கை காட்டி விட்டுச் சென்ற சுவரில் பதித்த அலமாரி-செழிப்பான வாழ்விற்கு அடையாளமானது.

பனியில் நமுத்துப் போன சிறகுகளுடன் போராடி விறகடுப்பில் சமைத்து வந்தவளுக்கு, புதிதாய் மின்னிய காஸ் அடுப்பு முற்று முதலான காட்சிப் பொருளானது!

புதிதாய் தோன்றிய பொருட்களை எல்லாம் கவனத்துடன் ஆராய்ந்து கொண்டிருந்தவளுக்கு, உணவு நேரத்தின் போது ''தேனு, இதில சாப்பாடு இருக்கு.... சாப்பிட்டுக் கொஞ்ச நேரம் தூங்கு. நான் வந்துடுறேன்'' எனத் தன் நலம் பேணி, வேலையின் நடுவே ஓடி வந்த கணவனின் மேல் காதல் பொங்கி வழிந்தது எனலாம்.

அவனது அக்கறையில் நெஞ்சம் பூரிக்க, அவன் சொல்லிச் சென்ற மாலை நேரம் கனியும் போது, மித்ரா வாங்கிக் கொடுத்ததிலேயே தனக்கு மிகவும் பிடித்திருந்த பச்சை வண்ணச் சேலை எடுத்தி, தலையைத் தளரப் பின்னிக் கொண்டு, பொன் மஞ்சள் தாலி பொன்னென மின்ன, மரகதப் பாவையாய் தயாரானாள், தென்றலாள்.

''சீக்கிரம் வந்துவிடுகிறேன்'' என்று கூறிச் சென்ற கதிர், வீட்டினுள் நுழையும் போது மணி ஏழாகிவிட, வீட்டு வாசலையே பார்த்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்டதும் ''சாரி தேனு! இரண்டு நாள் முன்னாடி முடிக்க வேண்டிய வேலை.... உன்னைத் தேடி வந்ததில

தடைப்பட்டுப் போச்சு.... அதை முடிச்சிட்டு வர நேரமாகிடுச்சு! பயந்துட்டியாம்மா?'' என்றான் வருத்தத்துடன்.

''பரவாயில்ல மாமா! துணியெல்லாம் அடுக்கி வச்சேன். அப்புறம், வாங்க வேண்டிய சமையல் சாமான்... வீட்டுக்கு வேண்டிய சாமான் அம்புட்டையும் குறிச்சு வச்சேன்... நேரம் ஓடிப் போய்டுச்சு...'' என அவள் சிரிக்க,

''சரி, நா போய் குளிச்சிட்டு வந்துடுறேன், கேண்டீன்-ல போய் சாப்பிட்டு வந்திடலாம்....'' என அவளது கன்னம் வருடியவனிடம்'' குளிச்சிட்டு வந்த மாத்திரமா... இந்தச் சாமான் அம்புட்டையும் வாங்கியாந்துடுவோம்... நாளைக்கு வீட்டிலேயே சோறு பொங்கிக் கிடலாம்! நிதமும் கடையிலேயே சாப்பிட முடியாதில்ல.. என்ன மாமா சொல்லுதே?'' எனத் தன் யோசனையை முன் வைத்தாள், மனையாள்.

''ம்ஹூம்! சாமான் வாங்கப் போனா... நேரமாகிடும்! நமக்கிருக்க ரொம்ப முக்கியமான வேலையைப் பார்க்க முடியாம போய்டும்... அப்புறம் பார்த்துக்கலாம்'' என்றவன், விழித்துக் கொண்டு நின்ற மனைவியைச் சட்டை செய்யாமல் குளியலறைக்குள் சென்று மறைந்தான்.

உணவிற்கென அலுவலக வளாகத்திலேயே இருக்கும் உணவு விடுதிக்குச் செல்லும் போதும் சரி, உணவுண்ணும் போது சரி, திரும்பி வரும்போதும் சரி'' என்ன மாமா... முக்கியமான வேலை?'' என நச்சரித்தவளிடம், வீட்டுக்குப் போனதும் உனக்கே தெரியும் என்றே மழுப்பிக் கொண்டு வந்தவனை, அவனது கைப்பேசி திசை திருப்பியது.

''உங்கண்ணன் தான்.. அன்னைக்குப் பேச முடியலைன்னு கூப்பிடுறான்....'' என்றவாறே அழைப்பை எடுத்தவன்,



''எப்படிடா இருக்கே?'' என்றான் முதல் வார்த்தையாக.

''நான் நல்லா இருக்கிறது இருக்கட்டும்... என் தங்கச்சியை நல்லா வச்சிருக்கியா? ஏதாவது வம்பு பண்ணினேன்னு தெரிஞ்சது.. மவனே!'' எனச் செல்லமாய் விழுந்த மிரட்டலின் பின்னே, தென்றலிடம் கை மாறியது கைப்பேசி.

''யண்ணே!'' என்ற ஆத்மார்த்தமான அழைப்புடன் ஆரம்பித்த உரையாடல், அவர்களது ரயில் பயணம், வீடு, உணவு என இனிமையாய் பயணித்து ''மாமா... என்னைய நல்லா வச்சிருக்கு! அதை வையாதீக... பாவம்...'' என இரு நண்பர்களுக்கும் நடுவே தூது போனாள், கதிரின் மனைவி.

இந்தப் பக்கம் கதிர் சிரித்துக் கொண்டிருக்க, அந்தப் பக்கம் விக்னேஷ்''அவனை வையக் கூடாதா? ஹ்ம்ம் கஷ்டமாச்சே... இருந்தாலும் என் தங்கச்சிக்காக.... அதுவும் என்னோட வாழ்க்கையில விளக்கேத்தி வச்ச என் தங்கச்சிக்காக....''

''நா விளக்கேத்தி வச்சேனா?''

''அதான்... மித்ராவும் நானும் சேர்ந்தா நல்லா இருக்கும்ன்னு எல்லார் முன்னாடியும் சொல்லியிருக்கியே!''

''அது.... அது நா இல்லண்ணே... மாமா த்தேன்... நா தெரியாத்தனமா வாய விட்டுப்புட்டேன்..... மன்னிச்சுக்கங்க!''

''ஆஹா... மன்னிப்பா? நீ செய்திருக்க நல்ல காரியத்துக்கு உனக்கு ஒரு பெரிய பரிசு தான் வாங்கிக் கொடுக்கணும்... நீ வேற?'' என உற்சாகமாய் பேசிய விக்னேஷ்.

''முன்னாடியே.... என்னோட ஆள்-ன்னு மித்ரா சொல்லி யிருக்கா.... இப்ப நீ சொன்னதும் சேர்ந்து அவளை நல்ல படியா யோசிக்க வைக்கும்ன்னு நினைக்கிறேன். பார்க் கலாம்'' என்றபோது அவனது குரலில் உற்சாகமிருந்தது.

''கண்டிப்பா நல்ல முடிவா சொல்லுவாக. உங்க நல்ல மனசுக்கு.... எல்லாம் நல்லதாவே நடக்கும்....'' என்ற தென்றலின் வாழ்த்தில்

''என்னைப் பாச மலர் சிவாஜி கணேசன் ரேஞ்சுக்குக் கொண்டு போய் பேசுறியேம்மா.. பேசுறியே'' எனக் கேலியில் இறங்கியவன்,

அவளது ''போங்கண்ணே! இங்கிட்டு மாமா சிரிக் குது.......''-வில் முதலில் பேசிக் கொண்டிருந்த விஷ யத்திற்குத் தாவி,

''உன் புருஷன் கொஞ்சம் நல்லவன்தான்... இருந் தாலும் அவனைக் கொஞ்சமா இறுக்கி வைக்கணும் என்ன?'' என மேலான அறிவுரையை எடுத்துவிடத் துவங்கினான்.

அதை ஆமோதிப்பவளாய் ''ஆட்டும்... ஆட்டும்..'' என மண்டையை ஆட்டிக் கேட்டுக் கொண்டிருந்த மனைவியின் கையிலிருந்து கைப்பேசியைப் பறித்த கணவன், ''போதும்டா... உன்னோட மொக்கை! எங் களுக்கு நிறைய வேலையிருக்கு... நீ அப்புறம் பேசு!'' எனக் கூறி, அழைப்பைத் துண்டித்து விட்டான்.

''அய்யே! என்ன மாமா.. நீயு!? எம்புட்டு அனு சரணையா பேசிக்கிட்டு இருந்தாக தெரியுமா... போ மாமா! அப்படியென்ன வேலை...'' என அலுத்துக் கொண்டே



வீட்டினுள் நுழைந்தவள் சுதாரிக்கும் முன்னர் அவளைக் கையில் பூப்பந்தென ஏந்தியவன், அங்கிருந்த ஒற்றை படுக்கையறைக்குள் நுழைந்தான்.

''அய்யே மாமா!'' என்றவளை மேலே பேச விடாமல், கதிரின் மறையா காதலும், சொல்லா காமமும் அணை யில்லா வெள்ளமாய் ஊற்றெடுத்து ஓடின!

''என் மேல் உனக்கு ஆசையில்லை.... உன் தாயின் வார்த்தைக்காக தான் என்னை மணக்கிறாய்!'' என்ற தென்றலின் குற்றச்சாட்டை சுக்கு நூறாய் உடைத்தெறி யும் வண்ணம், கதிரின் ஆசைகள் கரைபுரண்டோடின!

''தேனம்மா...'', ''தேனு...'' என்பதைத் தவிர வேறு வார்த்தைகள் அறியாதவன் போல், இத்தனை நாட்கள் தேக்கி வைத்திருந்த காதல் அனைத்தையும் பூ மழை யென பொழிந்தான், அவன்!!

இதுநாள் வரையிலும் ''காதல்'' என்பதை வாய்விட்டுக் கூறாத அந்தத் தன்மானச் சிங்கம், தனது படிப்பு.... வேலை... பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை தூக்கி எறிந்துவிட்டு, தன் மனைவியிடம் சிறு குழந்தையாய் உருமாறிப் போனான்.!

இருவரும் தங்களைத் தொலைத்திருந்த வேளையில்

''ஏம் மாமா... நான் கருப்பு... பத்தாவது கூட பாஸ் பண் ணலை....காசு-பணமும் அவ்வளவா கொட்டிக் கிடக்கல... பொறவு ஏன் மாமா என்னைய கட்டிக்கிட்டே?'' என்றாள் தென்றல், தன் வாழ்வின் ஆதாரத்தை அறிந்து கொள்ளும் ஆதூரத்துடன்.

''ஹ்மம்... தெரியலையே'' என்ற கதிர், சற்று நேரம் தன்னவளுள் மூழ்கி முத்தெடுத்துவிட்டு,

''காதல்-ங்கிறது அன்பு தான், தேனு! அன்பு... யாருமேல வரும்... நம்ம மேல அன்பா இருக்கவங்க மேல... என் விஷயத்தில் ஒரு எதிர்பார்ப்பில்லாம என் மேல் அன்பு செலுத்தினவ நீ தான்!''

''ஹ்ம்ம்.... அது மட்டுமில்லாம... எல்லாருக்கும் ஒரு உந்து சக்தி உண்டு... தேனு! என்னோட உந்து சக்தி நீ தான்!''

''நீ காட்டுற கள்ளம்கபடமற்ற அன்புக்கு நான் அடிமை தேனு.... உன்னோட குணத்துக்கு எந்த அழகியும் ஈடாக முடியாது. புரியுதாடி... என் மறத்தமிழச்சி!'' என்ற செங்கதிர்சோழன் அவளை மேலும் இறுக்கித் தன் வார்த்தைகளை நடைமுறைப்படுத்தினான்.

இதைவிட, ஓர் காதல் மனைவிக்கு வேறென்ன வரம் வேண்டும்!? ஏற்கனவே அவன் மீது ஆசை கொண்டு மணந்திருந்த தென்றல், அவனது இந்த இன்பத் தாக்குதலில் தன்னைத் தொலைத்து, அவனைக் கண்டு கொண்டாள்!!



# 20

* மூன்று வருடங்களுக்குப் பிறகு *

* மித்ரா - விக்னேஷின் நிச்சயத்தார்த்த விழா *

தன் மணி வயிற்றிலிருந்த சுமையைப் பற்றிய கவலையே இல்லாமல், ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்த தென்றலிடம் வந்த கதிர்,



''தேனும்மா... கொஞ்ச நேரம் உட்காரு! நீ இப்படி அலையறதைப் பார்த்தா.... எனக்குப் பயமா இருக்கு. நைட் தூங்கும் போது இங்க வலிக்குது..... அங்க வலிக்குதுன்னு என்னைத் தூங்க விடாம செய்த... உதை தான் உனக்கு!'' என்றான் கண்டிப்புடன்.

அவனது 'உதை'யைப் பற்றி அறிந்திருந்த தென்றல் உள்ளுக்குள் சிரித்தவாறே, ''எங்கண்ணே பரிசதுக்கு நா வேலை செய்யுதேன்.. நீர் என்ன கேட்கிறது?'' என்றாள் புருவம் உயர்த்தி.

''அடிக்கழுதை! எல்லாம் இந்த விக்கி பண்ற வேலை... என்னை எதிர்த்துப் பேசுறதுக்கு உனக்குப் பிரத்யேக டியூசன் எடுக்கிறான் போல...'' என்ற கதிரின் முகத்திலிருந்த சிரிப்பைத் தொடர்ந்து முதுகில் ஒரு அடி விழ, அங்கே வருகை தந்தார் பிரபாவதி.

''என்னடா? என்ன நடக்குது இங்க? எங்க வீட்டுப் பொண்ணை... மிரட்டிட்டு இருக்க மாதிரி இருக்கு?'' என்றவரிடம்,

''மிரட்டிட்டாலும்.... ஈட்டிக் காரன் மாதிரி நீங்களும் உங்க பையனும் தான் குச்சி எடுத்திட்டு வந்திடுறீங்களே! நீங்க சொல்றதைக் கேட்கிற வரைக்கும்... என்னைய உண்டு இல்லைன்னு பண்ணிட்டு.... அப்புறம் என்னவாம்?'' என அவன் குறைபட

''போடா..போடா! என்னமோ நான் சொல்றதை அப்படியே கேட்டுட்டாலும்... கல்யாணமாகி ஒரே வருஷத்தில பிள்ளை பெத்துக்கோங்கன்னு எத்தனை தடவை சொன்னேன்... கேட்டியா நீ?'' என்று தன் பங்கிற்குக் குறைப்பட்டார், அவர்.

ஆனால், இதே பிரபாவதி அம்மையாரே ''எங்க ரெண்டு பேருக்கும் ரொம்பச் சின்ன வயசும்மா. அதுவில்லாம... தென்றல் இன்னும் அவளோட படிப்பை முடிக்கலை. அவ +2 அட்லீஸ்ட் முடிக்கட்டும்'' எனத் தங்கள் வாழ்வின் அடுத்தப் பாகத்தை அவர்கள் ஒத்தி வைத்தபோது, அவர்களது பக்குவத்தில் பூரித்துத் தான் போனார்.

தாய்க்கு ஏற்ற தமையனாய் அங்கே வந்து சேர்ந்த விக்னேஷ் பேச ஆரம்பிக்கும் முன்னர், கதிர் முந்திக் கொண்டான்.

''டேய் மாப்பிள்ளை! இன்னைக்கு.... உனக்கும் மித்ராக்கும் நிச்சயம் வரைக்கும் வந்திருக்குன்னா அதுக்கு முக்கியக் காரணம் நான் தான்... என்னைத் தனியா கவனிக்கணும்... சொல்லிட்டேன்'' எனத் துவங்க,

''முக்கியக் காரணம் - நீயா? இது எப்பையிலிருந்து... என் தங்கச்சி தான்டா இந்தக் கல்யாணத்திற்கே காரணம்'' என மறக்காமல் தங்கையின் புகழ் பாடினான் விக்னேஷ்.

என்ன தான் தென்றலின் மேல் புகழைப் போட்டாலும், இந்தக் கல்யாணத்திற்கு விக்னேஷ் செய்திருக்கும் தகிடுதத்தங்கள்... எண்ணில் அடங்காதவை!!

தென்றலின் பேச்சில் லேசாய் குழம்பியிருந்த குட்டையை(மித்ராவின் மனதை) சில மாதங்கள் அப்படியே இருக்கவிட்டவன்... அடுத்த சில மாதங்களில் மேலும் குழப்பிவிட்டு.... அதில் காதலெனும் வலையை அழகாய் விரித்தான்.



அதற்கு உதவி செய்வது போல், அடுத்த வருடத்தில் மித்ராவிற்கும் விக்னேஷ் படித்துக் கொண்டிருந்த பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்க, உறவுகளை விட்டுத் தனித்திருந்த நேரத்தில் பக்குவப்பட்ட மித்ராவின் மனது அங்கிருந்த விக்னேஷை உறவாக்கிக் கொள்ள எண்ண, காதல் என்ற வலையில் இருவருமே மனதார சிக்கினர்.

இதை இரு குடும்பங்களுமே எதிர்பார்த்திருக்க, மித்ராவின் படிப்பு முடிந்த அடுத்த மாதமே திருமணத்தை உறுதி செய்யும் விழாவும் வந்தாகிவிட்டது.

அனைவரையும் சந்தோஷத்தில் ஆழ்த்திய அந்த நிகழ்ச்சியை நிறைந்த மனதுடன் கலந்து கொண்ட கதிரும் தென்றலும் கிளம்பியபோது ''பிரசவத்திற்கு ஒரு மாசம் முன்னாடியே அவளைக் கொண்டு வந்து திருச்சி-ல விட்டுடணும், கதிர். அவளோட பிரசவம்.. என் பொறுப்பு'' என அன்புடன் பேசிய மகாராணியின் அன்பில் அனைவரும் திளைத்தனர்.

தாய்மார் இருவரது அறிவுரைப்பட்டியலையும் கவனமாய் பெற்றுக் கொண்ட தம்பதியர், அன்றே வெள்ளகவி பயணப்பட்டனர் - தங்கள் வீட்டுப் பெரியவர்களுக்கான படையலுக்காக!!

திருமணம் முடிந்த அடுத்த வருடத்திலிருந்து தொடங்கிய இந்தப் பழக்கம்(படையல்), இந்த வருடமும் நடந்தேற, ஊரார் அனைவரும் வந்து மகிழ்வுடன் கலந்து கொண்டு, பெரியோரின் ஆசியையும் சிறியவர்களின் அன்பான உபசரிப்பையும் பெற்றுச் சென்றனர்.

தனது தேள் நாக்கினால் தென்றலை அவமானப்படுத்திக் கொண்டிருந்த சுகுணாவும், பெரியவர்களுக்கான படையலில் கலந்து கொள்ள, அவள் முன்னிலையில் தென்றலை இன்னும் கூடுதலாய் தாங்கினான் சோழன். ஏற்கனவே, அவளை ஒரு வேலை செய்ய விடாமல் தானே செய்தவன், சுகுணாவின் பார்வை வட்டத்தினுள் விழும்போது ''தேனும்மா...தேனும்மா'' என்று மனைவியைத் தரையில் கூட நடக்கவிடாமல் நெஞ்சுருகிப் போனான்!

அவர்களிடம் தென்பட்ட அன்னியோனியம் பெரும் பொறாமை தீயைக் கிளப்ப, அதை வெளியிட முடியாமல் தன்னுள்ளே வைத்துக் குமைந்தாள், சுகுணா!

ஆனால், அவளால் தான் என்ன செய்துவிட முடியும்!? பெரியவர்களின் ஆசீர்வாதத்தால், தென்றலும் சோழனும் ஈருடல் ஒருயுருமாய் மனம் கலந்து நிற்கையில், யாரது பொறாமையும் அவர்களின் இனிய வாழ்வைக் கெடுக்கமுடியாதே!!

இரண்டு நல்ல காரியங்களில் செய்த வேலையினால் உண்டான களைப்பைப் போக்கும் வண்ணம், பின்புறமிருந்த தோட்டத்தில் கயிற்றுக் கட்டிலைப் போட்டு அமர்ந்திருந்த கதிர் தன்னருகே படுத்திருந்த தென்றலின் கால்களைப் பிடித்துவிட்டான்.

முன்னர் போல், அவனது கைகளை விலக்கி ''வேணாம் மாமா... எனக்கு நோவலை...'' என மறுக்காமல்,

''விலா பக்கமா வலிக்குது மாமா.... அங்க பிடிச்சி விடு...'' என அவனுக்கு ஏதுவாக வளைந்து கொடுத்தாள்.



''மெல்ல தேனு.... படார் படார்ன்னு திரும்பாதேடி'' என்றவனும் தான் கொடுக்கிறேன் என்ற ''உதை''களை மறந்து, மென்மையாக பிடித்துவிட்டான் கணவனும்.

சற்று நேரத்தில், தன் தாரத்தின் அருகே படுத்து, முத்துச் சிப்பியாய் மிளிர்ந்த அவளது வயிற்றை வருடிக் கொடுத்தவனின் காதுகளில் ''மாமா...'' என்ற அழைப்பு லயிப்புடன் வந்து விழுந்தது.

அதில் '' என்ன தேனும்மா...'' என அவனும் உருக,

''மாமா.. நா ஒண்ணு கேட்பேன்... கோவிக்கக் கூடாது...'' என்றாள் மனைவி, பீடிகையுடன்.

''கோபம் வர மாதிரி ஏதோ கேட்கப் போற... ம்ம்... கேளு!'' என அவனும் அனுமதி கொடுக்க, அடுத்து வந்து விழுந்த அவளது கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை.

''மாமா... நம்ம புள்ள என்ன கலர்ல மாமா பொறக்கும்? உன்னைய மாதிரி... சிவப்பா... உசரமா... தெக்கத்தி ராசா மாதிரி...'' என அவள் நீட்டி முழக்கிக் கொண்டே போக, செங்கதிர்சோழன் வாய்விட்டே சிரித்தான்.

தன் மார்பில் தலை வைத்திருந்த மனைவியின் நெற்றியில் மெல்ல முட்டி ''ஹ்ம்ம்... பச்சை கலர்ல பிறக்கும்... யாருடி இவ! நானே... என் தமிழச்சியோட அச்சா ஒரு பெண்ணரசி வேணுன்னு ஏங்கிட்டு இருக்கேன்.. இவ ஒருத்தி!'' என்றான் இன்னமும் மறையாத சிரிப்புடன்.

கணவனின் பேச்சிலும் சிரிப்பிலும் அந்தத் தமிழ் மகளின் முகம் மலர்ந்ததில், நிறத்தைப் பார்க்காது குணத்தைப் பார்த்த அவர்களது காதல் மகரந்தமாய் மணம் பரப்பி மனதை நிறைத்தது!

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும் இணையில்லை
அவள் அப்படி ஒன்றும் கலரில்லை
ஆனால் அது ஒரு குறையில்லை

அவள் திட்டும்போதும் வலிக்கவில்லை
அந்த அக்கறைப்போல வேறு இல்லை
அவள் வாசம் ரோஜா வாசமில்லை
அவள் இல்லாமல் சுவாசமில்லை

அவள் சொந்தம் பந்தம் எதுவுமில்லை
அவள் சொந்தம் இன்றி எதுவுமில்லை
அவள் சொந்தம் இன்றி எதுவுமில்லை
எனக்கு எதுவுமில்லை.